# தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

## ஆண்டு அறிக்கை 2014

# பணி

பாவனையாளர்களின் பூரண திருப்தியை
உறுதிப்படுத்திக்கொண்டு குடிநீர் மற்றும்
துப்பரவேற்பாட்டுக்கான நிலையான
தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாட்டிற்கு சேவை புரிதல்

# நோக்கு

தொழில்நுட்ப மற்றும் சேவைச்
சிறப்பின் மூலம் இலங்கையின் அதி உன்னத பொது
வசதிகள் நிறுவனமாக விளங்குதல்

# இலக்குகள்

- நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளை விஸ்தரித்தல்
- தொழில்துறை வினைத்திறனை மேம்படுத்தல்
- வாடிக்கையாளர்களுக்கான சேவையை மேம்படுத்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கையெடுத்தல்
- தொழில்துறை வளர்ச்சிக்கான செயல் ஊக்குவிப்பாக தகவல் மற்றும் தொடர்பூட்டல் தீர்வுகளை மேம்படுத்தல்
- உயர் பொறுப்புடைமையையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதிசெய்தல்
- மனித வள அபிவிருத்தியை ஊக்குவித்தல்
- கிராமங்களுக்கும் விழிப்புநிலை சமூகங்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்கலையும் துப்பரவேற்பாட்டு வசதிகளையும் வழங்கல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நீ.வ.வ.அ. செயலாளரின் செய்தி | 06 |
| அறிக்கை பற்றிய அறிவிப்பு | 07 |
| தலைவரின் கூற்று | 08 |

**கூட்டு ஆளுகையும் புள்ளிவிபர மீளாய்வும்**

| | |
|---|---|
| பிரதான பணியாளர்கள் | 12 |
| தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள் | 16 |
| கூட்டிணைந்த திட்டம் | 17 |
| பிரதானமான செயலாற்றுகை | |
| தொழிற்பாடுகளின் பொழிப்பு | 22 |
| முதலீடுகளின் பொழிப்பு | 29 |
| ஊழியர்கள் | 33 |

**நிலைபேறான அறிக்கை**

| | |
|---|---|
| புதுத் தொழில்நுட்பத்தின் ஊடான வாடிக்கையாளர் வசதிகள் | 40 |
| கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு | 43 |
| நில நீர் | 45 |
| சமூகவியல் செயற்பாடுகள் | 46 |
| வருவாயற்ற நீர் குறைப்பு | 49 |
| வலுசக்தி முகாமைத்துவம் | 51 |
| பண்டகசாலை முகாமைத்துவம் | 52 |
| ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 53 |
| தகவல் தொழில்நுட்பம் | 56 |
| கொள்கை வகுத்தல் | 57 |
| நாட்பட்ட சிறுநீரக நோய் நிகழ்ச்சித்திட்டம் | 57 |
| காலநிலை மாற்றத் தழுவல் மற்றும் அனர்த்த ஆபத்துக்களை குறைத்தல் | 57 |
| நீர் பாதுகாப்புத் திட்டம் | 57 |

**உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

| | |
|---|---|
| நடைமுறையிலுள்ள நீர் வழங்கல் கருத்திட்டங்கள் | 60 |
| ஆரம்பிக்கப்படவுள்ள கருத்திட்டங்கள் | 94 |
| திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு | 98 |
| பிராந்திய உதவி நிலையங்கள் | 107 |

**நிதி மற்றும் கணக்காய்வு அறிக்கைகள்**

| | |
|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை | 120 |
| நிதிநிலைமை அறிக்கை | 122 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 31 ஆம் திகதி மார்கழி 2014 ஆண்டிற்கான அறிக்கை | 155 |
| சுருக்க வடிவங்கள் | 179 |
| கூட்டுத்தாபனத் தகவல்கள் உட்புற அட்டை | 182 |

# நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளரின் செய்தி



கடந்த ஆண்டுகளைப் போன்றே 2014 ஆம் ஆண்டிலும், நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சானது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் இணைந்து, நாடு முழுவதிலுமுள்ள பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வசதிகளை வழங்குதை தொடர்ந்து மேற்கொண்டுவந்தது. மாவட்ட கிராமிய நீர் வழங்கல் அலகுகளின் ஊடாக கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையின் மேம்பாட்டுக்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

ஆண்டினுள் 124,251 புதிய நீர் வழங்கல் இணைப்புகள் வழங்கப்பட்டன. இதற்கிணங்க தே.நீ.வ.வ.சபையினால் வழங்கப்படுகின்ற மொத்த குழாய்நீர் வழங்கல் இணைப்புகளின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 1,831,998 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நாட்டினுள் மொத்த குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கம் 44.3% ஆவதற்கு பங்களிப்புச் செய்தது.

2014 ஆம் ஆண்டின் இறுதியில் குழாய் சாக்கடை உள்ளடக்கமானது 1.93% ஆக காணப்பட்டது. ஆண்டினுள் 1,025 புதிய வீட்டு சாக்கடை இணைப்புகள் மற்றும் 166 வீடல்லாத புதிய சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம் நாட்டின் மொத்த சாக்கடை இணைப்புகளின் எண்ணிக்கை 15,768 ஆக அதிகரிக்கப்பட்டதோடு, மொரட்டுவை, இரத்மலானை சாக்கடைத் திட்டம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

விசேடமாக, குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயினால் (CKDu) பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குகின்ற வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்றது.
குறுகிய கால மற்றும் நடுத்தர கால செயற்பாட்டுத் திட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

தலைமை அலுவலகத்தின் உதவியோடு தே.நீ.வ.வ.சபையின் உரிய பிராந்திய உதவி நிலையங்களால் உப கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

பொதுமக்களுக்கு உயர் தரத்திலான சேவையை வழங்குவதற்கு தே.நீ.வ.வ.சபை எடுக்கின்ற முயற்சி வெற்றியளிக்கட்டுமாக எனப் பிரார்த்திக்கிறேன்.

என்.டி. ஹெட்டிஆரச்சி
செயலாளர்
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு





## தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

குடிநீர் வழங்கும் பொறுப்பு பொது வேலைகள் திணைக்களத்தின் கீழ் காணப்பட்டதோடு, 1965 ஆம் ஆண்டில் இப்பொறுப்பு நீர் வழங்கல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் 1975 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை உருவாக்கப்பட்டது.

குடிநீர் வழங்கல் மற்றும் சாக்கடை ஆகிய இரண்டு விடயங்களையும் தனித்தனியாக கையாளும் பொருட்டு 2007 ஆம் ஆண்டில் நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு தாபிக்கப்பட்டதோடு, அதன் கீழ் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை இயங்கி வருகின்றது. இவ்வமைச்சின் செயற்பரப்பினுள் வருகின்ற ஒரேயொரு நிறுவனமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை காணப்படுகின்றது.

சனத்தொகையில் அண்ணளவாக 84.6% வீதமானோர் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை பெறுகின்றனர் என்பதோடு இதில் 43.3% வீதமானவர்கள் குழாய் நீர் வழங்கல் முறைமையின் வசதியைப் பெறுகின்றனர். சனத்தொகையில் 33.4% வீதமானவர்களுக்கு தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் குழாய் நீர் முறையின் மூலம் நீர் வழங்கப்படுகின்றது.

## அறிக்கை பற்றிய அறிவிப்பு

கௌரவ நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு
“லக்திய மெதுர”,
இல. 35, சுனில் மாவத்தை
பெலவத்தை,
பத்தரமுல்லை.

கனம் அமைச்சர் அவர்களே,

<u>ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் - 2014</u>
<u>தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை</u>

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் நியமங்களுக்கமைவாக, 2014 மார்கழி 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் ஆண்டறிக்கையையும் நிதிக் கூற்றுக்களையும் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

இப்படிக்கு உண்மையுள்ள,



பொறியியலாளர் கே.ஏ. அன்சர்
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

# தலைவரின் கூற்று



தலைவரின் செய்தி

"2014 ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற 329 நீர் வழங்கல் திட்டங்களின் கீழ் 575 மில்லியன் கி.மீ. நீர் உற்பத்தி செய்யப்பட்டதோடு, 2014 ஆம் ஆண்டினுள் 124,251 புதிய இணைப்புகள் உட்பட 1,831,998 சேவை இணைப்புகளின் ஊடாக பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டது."



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 2014 ஆம் ஆண்டினுள் பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரையும் சாக்கடை வசதிகளையும் வழங்குவதன் மூலம் தேசத்திற்கு பெறுமதிமிக்க சேவையை தொடர்ந்தும் ஆற்றிவந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாரிய மற்றும் சிறிய நீர் வழங்கல் கருத்திட்டங்களை ஆரம்பித்து வைத்ததன் மூலம் தற்போதுள்ள பாவனையாளர்களுக்கு புதிய இணைப்புகளை வழங்கி சேவை மட்டத்தை மேம்படுத்துவதற்கு இயலுமாயிருந்தது.

2014 ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற 329 நீர் வழங்கல் திட்டங்களின் கீழ் 575 மில்லியன் கி.மீ. நீர் உற்பத்தி செய்யப்பட்டதோடு, 2014 ஆம் ஆண்டினுள் 124,251 புதிய இணைப்புகள் உட்பட 1,831,998 சேவை இணைப்புகளின் ஊடாக பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டது. இது 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் நாட்டின் மொத்த குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை 44.3% ஆக உயர்த்துவதற்கு பங்களிப்புச் செய்தது. 2020 ஆம் ஆண்டளவில் குழாய்நீர் வழங்கல் உள்ளடக்கத்தை 60% ஆக்குகின்ற இலக்கை அடைவதற்கான நடவடிக்கை முறையின் கீழ் இதனை சாதிக்க முடியுமாயிருந்தது.

நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மீதான மூலதன வரவு செலவுத்திட்டத்திற்கமைய 2014 ஆம் ஆண்டுக்கான ரூபா 90 மில்லியன் குறைநிரப்பு ஒதுக்கீடு உள்ளடங்கலாக ரூபா 31.82 பில்லியன் நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி நாடு முழுவதிலும் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு உள்ளடக்கத்திற்கான இலக்கை முன்னிட்டு ஆண்டு முழுவதிலும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிக்கு மேலதிகமாக, தே.நீ.வ.வ.சபையானது 2014 ஆம் ஆண்டினுள் அதன் சொந்த நிதியத்தை பயன்படுத்தி தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது.

தே.நீ.வ.வ.சபையின் வலுசக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் அதன் முறைமைகளை அளவு ரீதியிலும் தர ரீதியிலும் மேம்படுத்தி போதியளவு முன்னேற்றத்தை அடையப்பெற்றுள்ளது. தே.நீ.வ.வ.சபயின் இயந்திரவியல் மற்றும் மின்னியல் சேவைகள் பிரிவானது வலுசக்தி முகாமைத்துவ பணிகளுக்கான அனைத்து விதமான வலுசக்திக் கணக்காய்வையும் மேற்கொள்வதற்கான வலுசக்தி அளவீட்டுக் கருவிகளை முழுமையாகக் கொண்டுள்ளது.

2014 ஆம் ஆண்டானது 2012-2016 கூட்டிணைந்த திட்டத்தின் கீழ் மீளாய்வு செய்யப்படுகின்ற மூன்றாவது ஆண்டாகும். 2012-2016 கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் வகுக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடையப்பெறுவதை முன்னிட்டு தே.நீ.வ.வ.சபை தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

இலங்கை மற்றும் உலகளாவிய ரீதியில் பல்வேறு அரச நிறுவனங்களின் அண்மைக்கால போக்குகளை கருத்திற்கொண்டு தே.நீ.வ.வ.சபையானது சேவைத் திறமையை அடையும் குறிக்கோளுடன் பல்வேறான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் முறைமைகளை அறிமுகப்படுத்தியுள்ளதோடு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமையை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு தே.நீ.வ.வ.சபை மூலோபாயங்களையும் செயற்றிட்டங்களையும் அபிவிருத்தி செய்துள்ளது. இது குறுகியகால, நடுத்தரகால மற்றும் நீண்டகால திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

2014 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபையானது, காலநிலை மாற்றத் தணிப்புகள் மற்றும் அனர்த்த இடர் குறைப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டது. நீர் பாதுகாப்புத் திட்டக் குழு மற்றும் அவசர செயற்பாட்டுக் குழு நியமிக்கப்பட்டதோடு, பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அவசர செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது.

தே.நீ.வ.வ.சபையின் வெற்றிகரமான தொழிற்பாடுகளுக்கும் அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கும் பொறியியலாளர்கள் மிகக் குறிப்பிடத்தக்க தொரு பங்களிப்பை வழங்கினர். இதில், உலக சுற்றாடல் கடப்பாடுகளுக்கு இயைபான விதத்தில் சிக்கனமான தொழிற்பாட்டை அடையப்பெறுவதை நோக்கமாகக் கொண்டு திட்டமிடல், வடிவமைப்பு, பரிசோதனைகள், சாத்தியவளக் கற்கைகள், நிர்மாணிப்புகள், தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு, நடைமுறைக் கட்டுப்பாடு மற்றும் சிறப்பியல்பாக்கம், வலுசக்திப் பாதுகாப்பு ஆகிய அனைத்தும் கவனமாக கையாளப்பட்டன.

ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபையின் செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதில் கௌரவ நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரால் வழங்கப்பட்ட அனைத்து உதவிகள் தொடர்பிலும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். நீர் மற்றும் சாக்கடை வசதிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அவரது முழுமையான அனுபவங்களுடன் கூடிய நெறிப்படுத்தல்கள் வழிகாட்டல்கள் எமக்கு பெறுமதிமிக்கதாயிருந்தது. நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சிலுள்ள அனைத்து பணியாளர்களும் தேவையானபோது எமக்கு வழங்கிய ஒத்துழைப்பு, உதவிகள் மற்றும் இணைப்பாக்கத்தையிட்டு நாம் இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

எமது அனைத்துச் செயற்பாடுகளிலும் முன்னேற்றத்தை அடையப்பெறுவதற்காக நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரியின் திணைக்களத் தலைவர்கள் தொடர்ந்தும் வழங்கிய ஒத்துழைப்பையிட்டு நாம் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

நாடு முழுவதிலும் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையில் நாம் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி நல்கிய பல்தேசிய நன்கொடை வழங்குனர்கள் மற்றும் இருதரப்பு நிதி வழங்குனர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இத்துறையிலான அபிவிருத்திப் பணிகளுக்கு தே.நீ.வ.வ.சபையுடன் சேர்ந்து பங்களிப்புச் செய்வதில் அவர்கள் காட்டிய ஆர்வத்தையிட்டு நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

ஆண்டு முழுவதிலும் அனைத்து முன்னேற்றங்களையும் அடையப்பெற்றது தே.நீ.வ.வ.சபையின் பணிப்பாளர் சபையினதும் பணியாளர்களினதும் அர்ப்பணிப்பு மற்றும் கடும் முயற்சியின் பெறுபேறினாலாகும். அவர்களது அர்ப்பணிப்பும் கடும் உழைப்பும் இன்றேல் எம்மால் இதனைச் சாதித்திருக்க முடியாது. பாவனையாளர்கள் திருப்தியடையக்கூடிய வகையில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள மக்களின் ஆரோக்கியம், சமூக மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல ஆண்டுகளாக அவர்கள் எடுத்த முயற்சி காரணமாக அமையுமென நாம் எதிர்பார்க்கிறோம். அதேவேளை, தே.நீ.வ.வ.சபையின் புறத்திலிருந்து ஏதேனும் குறைபாடுகள் நேரிட்டிருப்பின் அதனையிட்டு எம்மை மன்னிக்குமாறும், மேலதிக மேம்பாட்டின் பொருட்டு அதைப் பற்றி எமக்கு அறிவிக்குமாறும் பாவனையாளர்களை நாம் வேண்டிக்கொள்கிறோம்.

பொறியியலாளர் கே.ஏ. அன்சார்
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை
2015 பங்குனி 03



"இயற்கையினால் மீள நிரப்பப்படும் அளவை
விட பல மடங்கு வேகமாக நீர் குறைந்து வருகின்றது."

மவுடி பார்லோ



# பிரதான பணியாளர்கள்

- தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை
  - பிரதிப் பொ.மு. (உள். கணக்காய்வு)
  - செயலாளர்
  - பொது முகாமையாளர்
    - முகாமைத்துவ ஆலோசனைக் குழு
    - உ.பொ.மு. (கேள்.ஒப்.)
    - உ.பொ.மு. (இணை.)
    - மேலதிக பொ.மு. (ம.வ.மு.)
      - பிரதிப் பொ.மு. (ம.வ.மு.)
        - உ.பொ.மு. (மனி. வள)
      - பிரதிப் பொ.மு. (கைத்தொழில் உற.)
        - உ.பொ.மு.(கைத். உற)
    - மேலதிக பொ.மு. (நிதி)
      - பிரதிப் பொ.மு. (செலவினம்)
      - பிரதிப் பொ.மு. (நிதி)
        - உ.பொ.மு. (நிதி, கண,)
        - உ.பொ.மு. (திறை.முகா.)
        - உ.பொ.மு. (கள. பொ.ப.)
        - உ.பொ.மு. ((மு.த.மு.)
    - மேலதிக பொ.மு. (மேல் மாகாணம்)
      - உ.பொ.மு. (மேல்)
      - பிரதிப் பொ.மு. (மேல் -தெற் கு)
        - உ.பொ.மு.அபி(மே.-தெற்)
      - பிரதிப் பொ.மு. (மேல்-மத்தி)
        - உ.பொ.மு. (வ.அ.நீ.)
        - உ.பொ.மு. (செ.ப)(மே-ம)
        - உ.பொ.மு. அபி. (மேல்-மத்)
      - பிரதிப் பொ.மு. (உற்பத்தி)
      - பிரதிப் பொ.மு. (மேல்-வடக்கு)
        - உ.பொ.மு. அபி. (மே-வட)
    - மேலதிக பொ.மு. (தென்/கிழக்கு மாகாணம்)
      - உ.பொ.மு. (தென்.கிழ).
      - பிரதிப் பொ.மு. (சப்பிரகமுவ)
        - உ.பொ.மு. அபி(இரத்தினபுரி)
        - உ.பொ.மு. அபி(கேகாலை)
      - பிரதிப் பொ.மு. (ஊவா)
        - உ.பொ.மு. அபி(ஊவா)
      - பிரதிப் பொ.மு. (கிழக்கு)
        - உ.பொ.மு. அபி(கிழ)
      - பிரதிப் பொ.மு. (தென்)
        - உ.பொ.மு. அபி(தென்)
    - மேலதிக பொ.மு. (வடக்கு/மத்திய மாகாணம்)
      - பிரதிப் பொ.மு. (மத்திய)
        - உ.பொ.மு.அபி(மத்திய)
      - பிரதிப் பொ.மு. (வட–மேல்)
        - உ.பொ.மு. அபி(வட-மேல்)
      - பிரதிப் பொ.மு. (வட - மத்திய)
        - உ.பொ.மு.அபி(வட-மத்)
      - பிரதிப் பொ.மு. (வடக்கு)
        - உ.பொ.மு. அபி(வட)
      - உ.பொ.மு. (வட/மத்)
    - மேலதிக பொ.மு. (கூட்டுறவுச் சேவைகள்)
      - பிரதிப் பொ.மு. (இயந்,மின் சேவை)
        - உ.பொ.மு. (இ.மி.சேவை)
      - பிரதிப் பொ.மு. (தகவல், தொடர்.)
        - உ.பொ.மு.(த.தொ-த.சே)
        - உ.பொ.மு.(த.தொ-ப.அ.)
      - பிரதிப் பொ.மு. (வர்த்தகம்)
        - உ.பொ.மு. (அறவீடு)
        - உ.பொ.மு. (கட்.பட்.)
      - உ.பொ.மு. (ம.வ.அ.ப.)
    - மேலதிக பொ.மு. (கழிவுநீர்)
      - பிரதிப் பொ.மு.
        - உ.பொ.மு. (சாக்.செய.)
        - உ.பொ.மு. (சாக்.கரு.)
        - உ.பொ.மு. (சா.திட்.வடி)
        - நிபுணர் (கழிவுநீர்)
      - கருத்திட்ட பணிப்பாளர்கள்
    - மேலதிக பொ.மு. (நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)
      - உ.பொ.மு. (கொள்.வ.க)
      - பிரதிப் பொ.மு. கருத்திட்டங்கள் இணைப்பு
        - உ.பொ.மு. (யப்.கரு)
      - பிரதிப் பொ.மு. (திட்டமிடல் உ. வடிவ.)
      - பிரதிப் பொது முகாமையாளர் (ஆ.அ.வ.கருத்திட்டங்கள்)
      - கருத்திட்ட பணிப்பாளர்கள்
        - உ.பொ.மு. (தி.வ வ/ம)
        - உ.பொ.மு.(கட்டமைப்பு)
        - உ.பொ.மு. (தி.வ மேல்)
        - உ.பொ.மு. (தி.வ. இ.மி.)
        - உ.பொ.மு. (தி.வ.ஆவ.)
        - உ.பொ.மு. (தி.வ.தெ/கி)
        - உ.பொ.மு. (நீர்.சுத்.)
    - மேலதிக பொ.மு. (கொள்கை, திட்டமிடல்)
      - பிரதிப் பொ.மு. (அபிவிருத்தி)
        - உ.பொ.மு.(நிலநீர்)
        - உ.பொ.மு. (அபிவிருத்தி)
      - பிரதிப் பொ.மு. (கூட்டிணைந்த திட்டம்)
        - உ.பொ.மு. ((முகா.தக.)
      - பிரதிப் பொ.மு. (கி.நீ.வ.)
        - உ.பொ.மு. (சமு.அபி)
      - உ.பொ.மு. (ஆ.அ)
      - உ.பொ.மு. (கொள்.உபா.)
      - உ.பொ.மு. (சமூகவியல்)

பணிப்பாளர் சபை

01. தலைவர்
02. துணைத் தலைவர்
03. செயற்பாட்டு பணிப்பாளர்
04. பணிப்பாளர் சபை அங்கத்தவர்
05. பணிப்பாளர் சபை அங்கத்தவர்
06. பணிப்பாளர் சபை அங்கத்தவர்
07. பணிப்பாளர் சபை அங்கத்தவர்

சபை செயலாளர்

சிரேட முகாமைத்துவம்

08. பொது முகாமையாளர்
09. மேலதிக பொது முகாமையாளர்கள்
10. பிரிவுகளுக்கான பிரதிப் பொது முகாமையாளர்கள்
11. மாகாணங்களுக்கான பிரதிப் பொது முகாமையாளர்கள்
12. கருத்திட்டப் பணிப்பாளர்களான பிரதிப் பொது முகாமையாளர்கள்

## பணிப்பாளர் சபை

01 **பொறியியலாளர் திரு. கருணாசேன ஹெட்டிஆரச்சி**
B. Sc. Eng. (Hons.), M. Sc. (Leuven)
C.Eng., MIE (SL), MIEP(SL)
**தலைவர், தே.நீ.வ.வ.ச. (2014.04.11 வரை)**

**பொறியியலாளர் ஆர். டபிள்யு. ஆர். பிரேமசிறி**
B. Sc. Eng., M.Eng. (cons), C.Eng,
MIE (SL), LLM (UK)
**தலைவர், தே.நீ.வ.வ.ச. (2014.04.17 முதல்)**

02 **திரு. கே.டீ. காமினீ குணரத்ன**
**துணைத் தலைவர், தே.நீ.வ.வ.ச.**

03 **திரு. என்.பீ. திப்பட்டுமுனுவ**
LLB, BA
செயற்பாட்டு பணிப்பாளர், தே.நீ.வ.வ.ச.

04 **டாக்டர் பீ.ஜீ. மஹீபால**
MBBS, M. Sc., MD, MBA,
FCMA, DPM, DBS, DED, , D Mgt.
Director General of Health Services Ministry of Health
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச.

05 **திரு. ஏ.கே. செனெவிரத்ன**
B. Sc. (Hons.), PG.Dip.
(Business and Financial Administration)
Additional Director General, Department of National Budget
Ministry of Finance & Planning
**சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச.**

06 **பொறியியலாளர் எஸ். பனாவென்னகே**
M. Sc., MBA, C. Eng., FIE (SL), MIET(UK)
Director & CEO, Arthur C. Clarke Institute for Modern Technologies, Ministry of Science & Technology
**சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச.**

07 **திரு. டபிள்யு.ஜீ. பிரேமலால்**
B.L.E. MA (Sociology)
Senior Assistant Secretary
Ministry of Local Government & Provincial Councils
**சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2014.06.05 வரை)**

**திரு. எஸ்.ஏ.எம்.எல். குணதிலக்க**
B.Com, M.Com
Senior Assistant Secretary
Ministry of Local Government & Provincial Councils
**சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச.**
**(2014.07.07 தொடக்கம் 31.10.2014 வரை)**

**சபை செயலாளர்**
**திருமதி டபிள்யு.பி. சந்தமாலி த சில்வா**
B.Sc. Special (Hons.)

**2014 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை 15 தடவைகள் கூடியது.**

## சிரேஷ்ட முகாமைத்துவம்

08 **பொது முகாமையாளர்**
**பொறியியலாளர் பீ.டபிள்யு.ஆர்.பாலசூரிய**
B.Sc. Eng. (Hon.), M.Sc. (UK), C.Eng., FIE (SL)

09 **மேலதிக பொது முகாமையாளர்கள்**
**பொறியியலாளர் ஜீ.ஏ. குமாரரத்ன**
**(வடிகாலமைப்பு)**
B.Sc. Eng. (Hon.), M.Sc. (UK), C.Eng.,
FIE (SL), MICE (Lond.), MIWEM (Lond.)
P.G. Dip. in Industrial Eng.

**பொறியியலாளர் டீஎஸ்.டீ. ஜயசிறிவர்தன**
**(தெற்கு/கிழக்கு)**
B.Sc. (Eng.) Hons., C.Eng., FIE (SL),
M.Phil. (Univ. of Hawaii)

**பொறியியலாளர் கே.ஆர். தேவசுரேந்திர**
**(நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)**
B.Sc. (Eng.) Hons. C.Eng. FIE (SL), P.G. Dip.,

**திரு. டீ. தொட்டவத்த (நிதி)**
B. Com. (Sp.), ACA, MA (Fin. Econ)

**பொறியியலாளர் என்.எம்.எஸ். காலிங்க (மேல்)**
B.Sc. Eng. (Hons.), C.Eng., MIE (SL),
Dip. Sanitary Eng. (Netherlands)

**திரு. ஜீ.கே. இத்தமல்கொட**
(மனித வள முகாமைத்துவம்)
B.Sc. (B. Admin). Dip. in Per. Mgt.
MA (Mgt. & Admin) London)

**பொறியியலாளர் திரு. டீ. யூ. சுமனசேகர**
**(வட மத்திய)**
(2014.08.06 முதல்)
B.Sc. (Eng.), C.Eng., FIE (SL), M.Sc. (Struct. E.) UK.,

**பொறியியலாளர் திரு. ஆர்.எஸ்.சீ. ஜோர்ஜ்**
**(கொள்கை மற்றும் திட்டமிடல்)**
B.Sc. Eng. (Hons.), C.Eng., MIE
(SL), M.Sc. (Eng.), FRG, MICE (UK)

**பொறியியலாளர் திரு. டபிள்யு.பி.ஜீ. பர்னாந்து**
**(கூட்டிணைந்த சேவைகள்)**
B.Sc. Eng., P.G. Dip. (EWREM), C.Eng., FIE (SL),

10 பிரிவுகளின் பிரதி பொது முகாமையாளர்கள்

**பொறியியலாளர் திருமதி கே.ரீ.பீ. பர்னாந்து (கருத்திட்ட இணைப்பாளர்)**
B.Sc. Eng. (Hons.), C.Eng., MIE (SL),
M.Sc. in Water & Waste Engineering (UK)

**பொறியியலாளர் எஸ்.ஜீ. ஜயவர்தன (சாக்கடை)**
B.Sc., P.G. Dip. in Sanitary Eng., MIE (SL)

**பொறியியலாளர் ஆர்.எச். ருவினிஸ் (திட்டமிடல், வடிவமைப்பு)**
B.Sc. Eng. (Hon.) ,P.G.Dip. (App. Hy)
MBA, C.Eng., FIE (SL), MIE (Aus), CP Eng.

**பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜே. ராஜ்குமார் (அபிவிருத்தி)**
C.Eng., FIE (SL), M.Sc. in Sanitory Engineering,
M.Sc. in Environmental Engineering & Management

**பொறியியலாளர் சீ.ஆர். பெரேரா (உற்பத்தி - மேல்)**
C. Eng., MIE (SL), M. Eng. (Delft)

**பொறியியலாளர் எஸ். சுமனவீர (கூட்டிணைந்த திட்டமிடல்)**
(2014.03.05 முதல்)
B.Sc.. Eng. Civil, FIE (SL), M. Eng. (Env. Management)
AIT, Bankok

**பொறியியலாளர் டபிள்யு.ஏ.என். விக்கிரமதுங்க (இயந்திர மற்றும் மின்)**
B.Sc. (Eng.), C.Eng., MIE (SL)

**பொறியியலாளர் ஜே. சந்திரதாச (தகவல் தொழில்நுட்பம்) - பதில் கடமை**
B.Sc. (Eng.), C.Eng., MIE (SL)

**திருமதி. எம். எம்.எஸ். பீரிஸ் (நிதி)**
B.Sc. (Accountancy & Finance Mgt.), ACA (SL)

**திருமதி. ஏ.பி.சிறிமா த சில்வா (செலவினம்)**
FCA

**ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன (உள்ளக கணக்காய்வு)**
B. Com (Sp.), PGDBM (Col.), ACA

**செல்வி டபிள்யு.ஏ.சீ. ஸ்ரீயானி (மனித வளம்)**
B.A. (Atrs) Special Degree (Sociology)
M.Sc. in Disaster Management, Dip. in Personal Mgt.,
Dip. in Training & Development. Member (IMSL)

**திருமதி என்.வை.எஸ். அபேகுணவர்தன (கைத்தொழில் உறவுகள்)**
(2013.08.05 முதல்)
B.A. P.G. Dip. in Management (PIM), Member (IMSL)

**திரு. ஆர்.எம்.ஏ. பண்டார (வழங்கல்)**
(2014.07.02 முதல்)
B.Sc. (Business Administration – Spl) Dip. in Purchasing and Materials Mgt.

11 மாகாணங்களுக்கான பிரதி பொது முகாமையாளர்கள்

**பொறியியலாளர் எம்.கே. ஹப்புஆரச்சி (மேல் மத்தி)**
(2014.08.26 முதல்)
C. Eng., MIE (SL), P. G. Dip. in Environmental EngineeringMgt.

**பொறியியலாளர் எம்.கே. ஹப்புஆரச்சி (மேல் தெற்கு)**
(2014.08.25 வரை)
C. Eng., MIE (SL), P. G. Dip. in Environmental EngineerinMgt.

**பொறியியலாளர் ரீ.டபிள்யு.எஸ். பெரேரா (மேல் தெற்கு)**
(2014.09.14 முதல்)
B.Sc. Eng. (Spl)., C.Eng., Master in Dev. Science, MIE (SL)

**பொறியியலாளர் கே.ஜே.வீ.ஏ. பெரேரா (கிழக்கு)**
B.Sc. Eng. FIE (SL), M.Eng., (Sanitary) IHE (Delft),
P.G. Dip. in Environmental Engineering and Management

**பொறியியலாளர் திருமதி எம்.கே. பண்டார (மேல் - வடக்கு)**
B.Sc. Eng. (Hon.), MIE (SL)
M.Eng. (Sc.) in Public Health Eng. (NSW), Australia

**பொறியியலாளர் எல்.எல்.ஏ. பீரிஸ் (மத்திய)**
B. Sc. (Eng.) Civil Engineering(University of Moratuwa - SL),
C. Eng., FIE (SL), Int. PE (SL), M. Phil (IWRM), University of Peradeniya, SL, P.G. Dip. (Water and Wastewater Eng.),
AIT, Bankgkok

**பொறியியலாளர் எம்.ஐ.ஏ. லத்தீப் (ஊவா)**
M.Sc. Eng. (Russia), C.Eng., FIE (SL), MIE (India),
PG Dip., BFA (SL)

**பொறியியலாளர் என்.ஈ.எம்.எஸ்.பீ. ஏக்கநாயக்க (வட மத்திய)**
B.Sc. (Eng.), C.Eng. MIE (SL), M.Sc. IHE (Delft)

**பொறியியலாளர் டீ.யு. சுமனசேகர (வடமேல்)**
(2014.08.05 வரை)
B.Sc. Eng. (Hon.,) M.Sc. (Netherlands),
C.Eng., FIE (SL)

**பொறியியலாளர் டீ.எப்.எஸ். த எப். குணவர்தன(வடக்கு)**
B.Sc. Eng., C. Eng., MIE (SL), M. Eng. IHE (Delft)

**திரு. ஆர்.ஏ.பீ.எஸ். மென்டிஸ் (சப்பிரகமுவ)**
B.Sc. Eng., C. Eng., MIE (SL), M. Sc. in Sanitary Eng.
(Netherland)

**பொறியியலாளர் ஜே.கே.எஸ். பத்திரன (தென்)**
(2014.04.11 (முதல்)
B.Sc. Eng., C.Eng., MIE (SL), M.Sc. (Sanitary) Delft.
(2013 செப்தெம்பர் வரை)

12 **கருத்திட்டப் பணிப்பாளர்களாக செயலாற்றுகின்ற பிரதிப் பொது முகாமையாளர்கள்**

**பொறியியலாளர் திருமதி சீ.ஜே.டீ. பெரேரா (களு கங்கை நீர் வழங்கல் கருத்திட்டம் படிநிலை 1 கட்டம்11)**
B.Sc. Eng. (Hons.), C. Eng., MIE (SL),
Dip. Sanitary Eng. (Netherlands),
Dip. Environmental Eng. (SL)

**பொறியியலாளர் ஜே.ஆர்.பி. நெதுரன (ஆ.அ.வ. உதவி ஐந்தாவது கருத்திட்டம்)**
B.Sc. Eng. (Hons.), P.G. Dip. inEnvironmental
Science & Technology (Delft), C.Eng., MIE (SL),

**பொறியியலாளர் ஆர். குலநாத (இரத்மலான மொரட்டுவ மற்றும் ஜா-எல ஏக்கல பிரதேச கழிவு நீர் அகற்றல்)**
B.Sc. Eng. C.Eng., MIE (SL).

**பொறியியலாளர் பீ.எஸ். விஜேயமான்ன (கொழும்பு பெரும்பாக புனரமைப்புக் கருத்திட்டம்)**
B.Sc. Eng. M.Eng (Hydrology and Water Resources)
IHE (Delft), Dip. in Construction Management,
C.Eng., MIE (SL).

## தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள்

| மாகாணம்/பி.உ.நி. | நீ.வ.தி.எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 50 |
| கிழக்கு | 38 |
| வட மத்திய | 26 |
| வட மேல் | 29 |
| வடக்கு | 31 |
| சப்பிரகமுவ | 19 |
| தென் | 53 |
| ஊவா | 35 |
| மேல் - மத்தி | 11 |
| மேல் - வடக்கு | 21 |
| மேல் - தெற்கு | 16 |
| மொத்தம் | 329 |



# கூட்டிணைந்த திட்டமிடல்

**“ தே.நீ.வ.வ.ச.யின் தலைமை அலுவலகம், தெலவல தொகுதி மற்றும் பெலவத்த தொகுதியின் ஒவ்வொரு பிரிவினதும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக 5S எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்பட்டது. தே.நீ.வ.வ.ச.யில் “உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளை இனங்காணல்” என்பதன் கீழ் 5S நிகழ்ச்சித்திட்டத்தை சிறந்த விதத்தில் நடைமுறைப்படுத்திய பிரிவைத் தெரிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.”**

## 2012 – 2016 கூட்டிணைந்த திட்டத்தின் அமுலாக்கல் பற்றிய நிலைமை

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டானது, எமது புதிய கூட்டிணைந்த திட்டத்தின் மூன்றாவது ஆண்டாகும். 2012 - 2016 கூட்டிணைந்த திட்டமானது பொது முகாமையாளரால் நியமிக்கப்பட்ட தே.நீ.வ.வ.ச.யின் சிரேட்ட முகாமையாளர்கள் 14 பேர் உள்ளடங்கிய விசேட குழுவொன்றினால் 5 ஆண்டு காலத்திற்காகத் தயாரிக்கப்பட்டது.

புதிய கூட்டிணைந்த திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதை முன்னிட்டான செயற்பாடுகளை தே.நீ.வ.வ.ச. தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. 2014 ஆம் ஆண்டினுள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுடன் தொடர்புடையதான கொள்கை விடயங்களை வகுத்தல், நடைமுறைகளை அமைத்தல் மற்றும் விடயங்களைத் திட்டமிடல் தொடர்பில் 2013 ஆம் ஆண்டினுள் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

தொழில்துறை வளர்ச்சிக்கான செயல் ஊக்குவிப்பாக தகவல் மற்றும் தொடர்பூட்டல் தீர்வுகளை மேம் படுத்தல் புதியதொரு இலக்காக சேர்க்கப்பட்டது. இது தே.நீ.வ.வ.ச.யினுள் தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களின் இயலளவை மேம்படுத்தும் பொருட்டாகும். வெளிவாரி வளங்களிலிருந்து சேவைகளைப் பெற்று உள்ளகப் பணிகளை மேற்கொள்வதற்கான மூலோபாயங்களும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிவாரியாக மேற்கொள்ளப்பட்ட ஊழியர் கொடுப்பனவுப் பட்டியல் முறைமை தற்போது உள்வாரியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உரிய நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை சிறப்பாக நிறைவேற்றிக்கொள்ளல் தொடர்பில் காலக்கிரமப்படி மீளாய்வினை மேற்கொள்ளல் முக்கியமானதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு முகாமையாளரினாலும் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளின் (அத்தகைய ஏழு இலக்குகள் உள்ளதோடு, ஒவ்வொன்றும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த முகாமையாளரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது) பொருட்டு கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் பற்றிய ஏற்றுக்கொள்ளத்தக்க காலாண்டு முன்னேற்றம் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. இதற்கிணங்க, கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் தொடர்பிலான 2013 ஆம் ஆண்டின் 4வது காலாண்டினதும், 2014 ஆம் ஆண்டின் 1வது, 2வது மற்றும் 3வது காலாண்டினதும் முன்னேற்ற அறிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

நீர் வழங்கல் மற்றும் சாக்கடை வடிகாலமைப்புச் சேவையின் உள்ளடக்கம் பற்றிய இலக்கு தொடர்பிலான செயற்பாடுகள் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டன. வருவாயற்ற நீர் மற்றும் வலுசக்திச் செலவைக் குறைத்தல் தொடர்பில் 2014 ஆம் ஆண்டினுள் விசேட கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். பாவனையாளர் தேவைகள் தொடர்பான சேவைகளின் மேம்பாடுகள் தொடர்பில் முன்னுரிமையளிக்கப்பட்டன.

நிறுவன ரீதியான அபிவிருத்தியை மேம்படுத்தல் ஒரு கூட்டிணைந்த இலக்காகும். தே.நீ.வ.வ.ச.யின் தலைமை அலுவலகம், தெலவல தொகுதி மற்றும் பெலவத்த தொகுதிகளில் உள்ள ஒவ்வொரு பிரிவினதும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக 5S எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்பட்டது. தே.நீ.வ.வ.ச.யில் “உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளை இனங்காணல்” என்பதன் கீழ் 5S நிகழ்ச்சித்திட்டத்தை சிறந்த விதத்தில் நடைமுறைப்படுத்திய பிரிவைத் தெரிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவு ஆகிய இரண்டும் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் பகிரங்கத்தன்மை பிரச்சினைகள் தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொண்டன. பாதுகாப்பான நீர் வழங்கல் வசதிகளைக் கொண்டிராத நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மற்றும் கிராமிய சமுதாயத்தினர் தொடர்பில் கிடைக்கத்தக்கதான வளங்களின் ஊடாக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

## குறித்துரைக்கப்பட்ட இலக்குகள் தொடர்பிலான முன்னேற்றம்

| இலக்கு | முதன்மைக் குறிக்கோள்கள் | 2014 இறுதியில் இலக்கு | 2014 இறுதியில் அடைவு |
|---|---|---|---|
| 1. நீர் வழங்கல், துப்புரவேற்பாட்டு சேவை உள்ளடக்கத்தின் விஸ்தரிப்பு | 1.1 மொத்த குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கம்<br>1.2 குழாய் சாக்கடை உள்ளடக்கம்<br>1.3 பாதுகாப்பான குடிநீர் வழங்கலைப் பெறுவதற்கான வாய்ப்பின் உள்ளடக்கம்<br>1.4 மொத்த துப்புரவேற்பாட்டுச் சேவை உள்ளடக்கம் | 47.5%<br>2.6%<br>86.8%<br>86.5% | 44.3%<br>1.98%<br>84.6%<br>86.33% |
| 2. தொழில்துறை வினைத்திறனை மேம்படுத்தல் | 2.1 வருவாயற்ற நீர் (நாடளாவிய)<br>2.2 1000 இணைப்புகளுக்கு மொத்த பணியாளர்கள்<br>2.3 மொத்த மீண்டுவரும் செலவில் வலுசக்திச் செலவு<br>2.4 மொத்த மீண்டுவரும் செலவில் பராமரிப்புச் செலவு<br>2.5 மொத்த மீண்டுவரும் செலவில் நிறுவுதலுக்கான செலவு | 28.87%<br>5.84<br>22.47%<br>4.22%<br>9.90% | 28.54%<br>5.72<br>23.29%<br>5.43%<br>11.47% |
| 3. வாடிக்கையாளர்களுக்கான சேவையை மேம்படுத்தல் மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தல் | 3.1 நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ள பொது மக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் (பாடசாலைகள்/ஏனையவை) | 100 அலகுகள் | 177 அலகுகள் |
| 4. தொழில்துறை வளர்ச்சியின் செயல் ஊக்குவிப்புக்காக தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் | 4.1 மொத்தக் கட்டணப் பட்டியல்களில் மதிப்பிடப்பட்ட கட்டணப் பட்டியல்கள்<br>4.2 சேகரிப்பு வினைத்திறன்<br>4.3 பெறத்தக்க கணக்குகள் -<br>(அ) வீட்டுப் பாவனை மற்றும் வர்த்தக நிறுவனங்கள்<br>(ஆ) அரச நிறுவனங்கள் | 5.0%<br>100%<br><br>50 நாட்கள்<br>60 நாட்கள் | 1.33%<br>100%<br><br>43 நாட்கள்<br>32 நாட்கள் |
| 5. உயர் பொறுப்புடைமை மற்றும் பகிரங்கத்தன்மையை உறுதி செய்தல் | மனித வள அபிவிருத்தி, முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் தொழில்துறை திட்டம் தொடர்பில் தொழில்துறை நடவடிக்கைகள் மற்றும் ஒட்டுமொத்த முகாமைத்துவ பரப்பினையும் அபிவிருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.<br>• நிதி ரீதியான அதிகார ஒப்படைப்பு<br>• வரவு-செலவுத் திட்டக் கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான பயிற்சி<br>• வர்த்தக தொழிற்பாடுகள் மீதான கணக்காய்வு<br>• பண்டகசாலை மற்றும் வழங்கல்கள் மீதான கணக்காய்வு<br>• காசு/காசோலைக் கொடுப்பனவுகள் மீதான கணக்காய்வு<br>• நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் மீதான கணக்காய்வு<br>• சொத்துக்களை மதிப்பிடல் | | |
| 6. மனித வள அபிவிருத்தியை மேம்படுத்தல் | 6.1 உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (பங்குபற்றியோர் எண்ணிக்கை)<br>6.2 நாட்டினுள் வெளிவாரிப் பயிற்சி (நபர்களின் எண்ணிக்கை)<br>6.3 வெளிநாட்டுப் பயிற்சி (நபர்களின் எண்ணிக்கை) | 3240<br>160<br>80 | 6791<br>194<br>174 |
| 7. கிராமிய மற்றும் குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதல் | 7.1 தே.நீ.வ.வ.ச. உதவியுடன் சமூக மைய அமைப்புகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனையோர்களால் பேணிவரப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் | 10.0% | 10.9% |

# பிரதானமான செயலாற்றுகை

“ ஆயிரம் சேவை இணைப்புகளுக்கான பணியாளர் விகிதம் 5.72 வரை குறைக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டுக்கான அதன் 5.84 இலக்கைத் தாண்டிச் சென்றது. ”

பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்குள்ள இயலுமை




ஆண்டினுள் 124,251 சேவை இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம், சனத்தொகையில் 33.40% வீதமானவர்கள் தே.நீ.வ.வ.ச.யினால் வழங்கப்படுகின்ற குழாய் மூலமான குடிநீர் வழங்கலைப் பெறுகின்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒருசில பாரிய மற்றும் சிறிய நீர் வழங்கல் கருத்திட்டங்களை செயற்படுத்தியதன் ஊடாக இருக்கின்ற வாடிக்கையாளர்களின் சேவை மட்டங்கள் மேம்படுத்தப்பட்டன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு நீர் வழங்கல் மற்றும் சாக்கடை வசதிகள் புனரமைக்கப்பட்டு மீளமைக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரங்கள் மேம்படுத்தப்பட்டன. கருத்திட்டத்தின் ஆக்கக்கூறுகள் பழுதடைந்த பயன்பாடுகளை மீளளிப்புச் செய்வதற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிராது, மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களின் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்படுதலையும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சேவை மட்டங்கள் மேம்படுத்தப்படுதலையும், சூழவுள்ள புதிய அபிவிருத்தி பிரதேங்களுக்கான சேவை விஸ்தரிப்புகளையும் உள்ளடக்கியதாயுள்ளன.

ஆயிரம் சேவை இணைப்புகளுக்கான பணியாளர் விகிதம் 5.72 வரை குறைக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டுக்கான அதன் 5.84 இலக்கைத் தாண்டிச் சென்றது.

மூன்று ஆண்டுகளும் ஏழு மாதங்களின் பின்னர் 2012 ஐப்பசி மாதத்தில் இறுதியாக நீர் கட்டணத் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளிலும் சபையானது அதன் காசுப் பாய்ச்சலை முகாமைத்துவம் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கியது. அநேகமான தொழிற்பாட்டுச் செலவுகளின் விலைகள் அதிகரித்திருந்தன. ஆதலால் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளைப் பொறுத்தவரை படுகடன் பணிக் கடப்பாடுகளை முழுமையாக ஈடுசெய்ய முடியாதிருந்தது. ஆயினும் 2011, 2012 மற்றும் 2013 இல் பொதுத் திறைசேரிக்கான மொத்த வெளிநின்ற தொகை முழுமையாகத் தீர்க்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்துவந்த கடந்த மூன்று ஆண்டுகளிலும் தே.நீ.வ.வ.ச. முறையே ரூபா 421,409,965.00, 366,802,512.00 மற்றும் 1,002,860,406.00 வரிக்கு பிந்திய இலாபத்தை பதிவு செய்தது.

ஆண்டினுள் வருவாயற்ற நீர் குறைப்பபு நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்பட்டன. மூடப்பட்ட எல்லைகள் தாபிக்கப்பட்டதன் பின்னர், கொழும்பு நகரத்தினுள்

முக்கியமான பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு, பிரதேச உட்பாய்ச்சல் அளவீடுகள் மேற்கொள்ளப் பட்டன.இரவு கால ஆய்வு, கால்வாயின் கீழ்ச் செல்லும் நீர்க் குழாய்களின் ஆய்வு மற்றும் வீட்டுக்கு வீடான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கட்புலனாகின்ற நீர்க் கசிவுகள் இனங்காணப்பட்டன. இப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்களவு வருவாயற்ற நீர் குறைக்கப்பட்டது. மேல் மாகாணத்திலும் நாடளாவிய ரீதியிலும் வருவாயற்ற நீர் முறையே 32.20% மற்றும் 28.54% ஆக குறைக்கப்பட்டது.

**பொது விடயங்கள்**

தே.நீ.வ.வ.ச.யின் செயலெல்லையின் கீழ் 329 பாரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர் வழங்கல் திட்டங்கள் இயங்குகின்றன. மேற்படி நீர் வழங்கல் திட்டங்களில் 49 திட்டங்கள் பிரதான நகரங்களை உள்ளடக்கியுள்ளதோடு, 280 திட்டங்கள் பட்டினங்கள் மற்றும் கிராமங்களை உள்ளடக்குகின்றன.

சனத்தொகையில் 3.2% வீதத்தினர் கைப்பம்பிக் குழாய்க் கிணறுகளின் மூலம் நீர் வழங்கலைப் பெறுகின்றனர். கிராமிய நீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தவரை சமூக மைய அமைப்புக்களின் ஊடாக சமூக முகாமைத்துவம் மேம்படுத்தப்படுகின்றது. முறைசார்ந்ததான மழை நீர் சேகரிப்பும் மாற்று நீர் மூலவளமொன்றாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

| | | 2013 | 2014 | வேறுபாடு% |
|---|---|---|---|---|
| **முக்கியமான புள்ளிவிபரங்கள்: நீர் வழங்கல்** | | | | |
| நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை | | 325 | 329 | 1.2 |
| குழாய் நீர் உற்பத்தி (மில்லியன் க.மீ.) | | 547 | 575 | 5.1 |
| குழாய் நீர் நுகர்வு (மில்லியன் க.மீ.) | | 382 | 411 | 7.6 |
| வீட்டு நீர் வழங்கல் இணைப்புகள் (எண்ணிக்கை) | | | | |
| | (அ) மேல் மாகாணம் | 717,819 | 764,500 | 6.5 |
| | (ஆ) ஏனைய மாகாணங்கள் | 860,021 | 928,855 | 8.0 |
| மொத்த வீட்டு நீர் வழங்கல் இணைப்புகள் | | 1,577,840 | 1,693,355 | 7.3 |
| பொது நீர்க் குழாய்கள் (எண்ணிக்கை) | | | | |
| | (அ) மேல் மாகாணம் | 834 | 518 | (37.9) |
| | (ஆ) ஏனைய மாகாணங்கள் | 2,193 | 1,261 | (42.5) |
| மொத்த பொது நீர்க் குழாய்கள் | | 3,027 | 1,779 | (41.2) |
| வீடல்லாத நீர் இணைப்புகள் (எண்ணிக்கை) | | | | |
| | (அ) மேல் மாகாணம் | 64,695 | 69,148 | 6.9 |
| | (ஆ) ஏனைய மாகாணங்கள் | 65,212 | 69,495 | 6.6 |
| மொத்த வீடல்லாத நீர் இணைப்புகள் | | 129,907 | 138,643 | 6.7 |
| (பொது நீர்க் குழாய்கள் உள்ளடங்கலாக) | | | | |
| மொத்த நீர் வழங்கல் சேவை இணைப்புகள் | | 1,707,747 | 1,831,998 | 7.3 |
| குடும்பமொன்றின் மாதாந்த சராசரி நீர் நுகர்வு | | | | |
| (க.மீற்றர் /வீட்டு இணைப்பு) | (அ) மேல் மாகாணம் | 16.90 | 17.13 | 1.4 |
| | (ஆ) ஏனைய மாகாணங்கள் | 12.46 | 12.76 | 2.4 |
| மாதாந்த சராசரி வீட்டு கட்டண பட்டியல் பெறுமதி (ரூபா) | | | | |
| | (அ) மேல் மாகாணம் | 727.37 | 735.54 | 1.1 |
| | (ஆ) ஏனைய மாகாணங்கள் | 414.79 | 435.05 | 4.9 |
| மொத்த வருமானம் (ரூபா மில்லியன் - வெற் வரியுடன்) | | 18,167 | 19,785 | 8.9 |
| மொத்த மீண்டுவரும் செலவினம் (ரூபா மில்லியன்) | | 15,363 | 19,871 | 29.3 |
| வருவாயற்ற நீர் வழங்கல் (%) | | | | |
| | (அ) மேல் மாகாணம் | 33.43 | 32.20 | (3.7) |
| | (ஆ) ஏனைய மாகாணங்கள் | 25.74 | 23.54 | (8.5) |
| | (இ) நாடளாவிய | 30.24 | 28.54 | (5.6) |
| தொ.ப.பதவியினர்/1000 இணைப்புகள் | | 4.83 | 4.78 | (1.0) |
| மொத்த பதவியினர்/1000 இணைப்புகள் | | 5.83 | 5.72 | (1.9) |
| நீர் உற்பத்திக்கான சராசரி மீண்டுவரும் செலவினம் (ரூபா/க.மீ.) | | 28.08 | 29.49 | 5.0 |
| சராசரி மொத்த செலவினம் / அலகு விற்பனை (ரூபா/க.மீ.) | | 45.39 | 47.00 | 3.5 |
| அலகொன்றுக்கான சராசரி வருமானம் (பட்டியல் /நுகர்வு) (ரூபா/க.மீ.) | | 47.60 | 48.15 | 1.2 |
| சேகரிப்பு வினைத்திறன் | | 1.01 | 1.00 | (1.0) |
| ஆழ் கிணறுகள் | (அ) தோண்டப்பட்ட | 323 | 315 | (2.5) |
| | (ஆ) வெற்றிகரமான | 288 | 268 | (6.9) |
| அபிவிருத்திச் செலவினம் (ரூபா மில்லியன்) | | 28,491.28 | 35,668,26 | 8.2 |
| | | | | |
| **முக்கியமான புள்ளிவிபரங்கள் - சாக்கடை** | | | | |
| வீட்டு இணைப்புகள் | | | | |
| | மேல் மாகாணம் | 10,281 | 11,306 | 10.0 |
| | ஏனைய மாகாணங்கள் | 886 | 886 | 0 |
| வீடில்லாத இணைப்புகள் | | | | |
| | மேல் மாகாணம் | 674 | 831 | 23.3 |
| | ஏனைய மாகாணங்கள் | 157 | 166 | 5.7 |
| வீட்டுத் திட்ட இணைப்புகள் (மொத்தம்) | | | | |
| | மேல் மாகாணம் | 2,579 | 2,579 | 0 |
| | ஏனைய மாகாணங்கள் | - | - | - |
| **மொத்த சாக்கடை இணைப்புக்கள்** | **நாடளாவிய ரீதியில்** | 14,577 | 15768 | 8.2 |

## தொழிற்பாடுகள் பற்றிய பொழிப்பு

> “ தே.நீ.வ.வ.சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரில் 58% ஆன பெரும் பகுதி மேல் மாகாணத்தின் நீர் வழங்கல் முறைமைகளான அம்பத்தலே, லபுகம, கலட்டுவாவ மற்றும் களுத்துறை கந்தான ஆகிய நான்கு ”

### நீர் வழங்கல் குடிநீர் உற்பத்தி

2014 ஆம் ஆண்டில் மொத்தமாக 575 மில்லியன் கன மீற்றர் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளின் போக்கு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரில் 58% ஆன பெரும் பகுதி மேல் மாகாணத்தின் நீர் வழங்கல் முறைமைகளான அம்பத்தலே, லபுகம, கலட்டுவாவ மற்றும் களுத்துறையில் உள்ள கந்தான ஆகிய நான்கு நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப் படுகின்றது.

### நீர் உற்பத்தி




### மாகாண ரீதியில் நீர் உற்பத்தி



## உற்பத்திச் செலவு

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்படுகின்ற உற்பத்திச் செலவு (ரூபா. மில்லியன்) பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## உற்பத்திச் செலவு




## உற்பத்திச் செலவு ரூபா/கன மீற்றர் (1000 லீற்றர் வீதம்)

| 2013 | 2014 |
|---|---|
| 45.39 | 47.00 |

உற்பத்திச் செலவு = மொத்தச் செலவு / விற்பனை செய்யப்பட்ட அலகுகள்
(மொத்த மீண்டுவரும் செலவு + உரிமையளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் கடன் வட்டி + பெறுமதி வீழ்ச்சியடைதல்) விற்பனை செய்யப்பட்ட அளவு)

| மாகாணம்/ பி.சே.நி | மாகாண/ பி.சே.நி. ரீதியில் சேவை இணைப்புகளின் எண்ணிக்கை | | | தே.நீ.வ.வ.ச. பிரதேச நிலையம் | பிரதேச ரீதியில் சேவை இணைப்புகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2013 மார்கழி இறுதியில் | 2014 மார்கழி இறுதியில் | மாற்றம் % | | 2013 மார்கழி இறுதியில் | 2014 மார்கழி இறுதியில் | மாற்றம் % |
| மேல் - மத்திய | 390,230 | 404,731 | 3.2 | முன்னுரிமை | 2,788 | 2,318 | (16.9) |
| | | | | கொழும்பு நகரம் | 134,008 | 136,194 | 1.6 |
| | | | | கோட்டே | 143,695 | 149,144 | 3.8 |
| | | | | மஹரகம | 109,739 | 117,075 | 6.7 |
| மேல் - வடக்கு | 198,230 | 221,045 | 11.4 | களனிய | 144,305 | 158,769 | 10.0 |
| | | | | கம்பஹா | 53,925 | 62,276 | 15.5 |
| மேல் - தெற்கு | 194,054 | 207,872 | 6.5 | தெஹிவல | 97,103 | 100,359 | 3.4 |
| | | | | களுத்துறை | 52,027 | 56,134 | 7.9 |
| | | | | பாணந்துறை | 44,924 | 51,379 | 14.4 |
| மத்திய | 211,940 | 224,217 | 6.8 | கண்டி வடக்கு | 78,281 | 83,685 | 6.9 |
| | | | | கண்டி தெற்கு | 67,420 | 71,644 | 6.3 |
| | | | | கண்டி கிழக்கு | 65,744 | 68,888 | 4.8 |
| வட மேல் | 58,808 | 64,030 | 9.0 | குருணாகல் | 58,808 | 64,030 | 8.9 |
| வட மத்திய | 85,912 | 91,900 | 7.0 | அநுராதபுரம் | 85,912 | 91,900 | 7.0 |
| சப்பிரகமுவ | 85,367 | 90,267 | 6.0 | இரத்தினபுரி | 37,612 | 40,422 | 7.5 |
| | | | | கேகாலை | 47,755 | 49,845 | 4.4 |
| தென் | 260,842 | 276,334 | 8.8 | அம்பாந்தோட்டை | 87,580 | 91,790 | 4.8 |
| | | | | மாத்தறை | 82,165 | 86,439 | 5.2 |
| | | | | காலி | 91,097 | 98,105 | 7.7 |
| ஊவா | 68,955 | 76,064 | 9.0 | பண்டாரவளை | 40,463 | 43,787 | 8.2 |
| | | | | மொனறாகலை | 28,492 | 32,277 | 13.3 |
| வடக்கு | 9,088 | 12,189 | 14.7 | யாழ்ப்பாணம் | 2,088 | 3,086 | 47.8 |
| | | | | மன்னார் | 5,319 | 7,353 | 38.2 |
| கிழக்கு | 144,321 | 163,349 | 15.3 | வவுனியா | 1,681 | 1,750 | 4.1 |
| | | | | அம்பாறை | 26,699 | 32,283 | 20.9 |
| | | | | திருகோணமலை | 38,680 | 41,824 | 8.1 |
| | | | | அக்கரைப்பற்று | 55,820 | 59,651 | 6.9 |
| | | | | மட்டக்களப்பு | 23,122 | 29,591 | 28.0 |
| **மொத்தம்** | **1,707,747** | **1,831,998** | **7.6** | **மொத்தம்** | **1,707,747** | **1,831,998** | **7.3** |

# இணைப்புகளை வழங்குதலானது, கொழும்பு நகரம் தவிர்ந்த (கொ.வ.ந. மற்றும் கொ.தெ.ந.) ஏற்புடைய பிராந்திய உதவி நிலையங்களுக்கு

## இணைப்புக்களின் அதிகரிப்பு




## ஆண்டுக்கான விலைப் பட்டியலிடல் மற்றும்




ஆண்டுக்கான விலைப் பட்டியலிடல் மற்றும் சேகரிப்பு ஒப்பீடு

குடும்பமொன்றுக்கான சராசரி மாதாந்த நீர் நுகர்வு (நீர் வழங்கல் இணைப்புக்கு க.மீ.)




குடும்பமொன்றின் சராசரி மாதாந்த விலைப்பட்டியல்




விலைப்பட்டியல் புள்ளிவிபரங்கள்

2010 2011 2012
2013 2014

| விபரம் | 2013 (ரூ. மில்.) | 2014 (ரூ. மில்.) |
|---|---|---|
| விலைப்பட்டியல் இலக்கு வற்றுடன் | 18,634 | 19,672 |
| உண்மை விலைப்பட்டியல் வற்றுடன் | 18,167 | 19,785 |
| சேகரிப்பு இலக்கு வற்றுடன் | 18,448 | 19,476 |
| உண்மைச் சேகரிப்பு வற்றுடன் | 18,366 | 19,871 |

## பாவனையாளர் வகுதிவாரியாக விற்பனையாகிய நீரின் தொகையும் வருமானமும் (2014)

| நுகர்வோரின் வகுதி | விற்பனையின் அளவு | | வருமானம் | |
|---|---|---|---|---|
| | கன மீற்றர் 000 | மூ | ரூபா மில்லியன் | மூ |
| நேரடி கட்டண அறவீடுகு | 295,476 | 71.06 | 11,561 | 58.21 |
| பாடசாலைகள் | 5,105 | 1.23 | 116 | 0.59 |
| தோட்டக் குடியிருப்புகள் | 3,864 | 0.93 | 136 | 0.69 |
| பொது நீர்க் குழாய்கள் மூலமான நீர் வழங்கல் | 553 | 0.13 | 10 | 0.05 |
| அரசாங்க நிறுவனங்கள், தே.நீ.வ.வ.ச. வளவுகள் | 35,014 | 8.42 | 2,446 | 12.36 |
| வர்த்தக மற்றும் கைத்தொழில் | 42,950 | 10.33 | 4,204 | 21.25 |
| சுற்றுலா ஹோட்டல்கள் | 2,624 | 0.63 | 239 | 1.21 |
| கப்பல்துறை | 121 | 0.03 | 66 | 0.33 |
| முதலீட்டுச் சபை | 7,934 | 1.91 | 551 | 2.78 |
| மத வழிபாட்டுத் தலங்கள் | 5,051 | 1.21 | 117 | 0.59 |
| உப மொத்தம் | 398,691 | 95.89 | 19,400 | 98.05 |
| மொத்த வழங்கலுக்கான விலைப்பட்டியல் | 12,291 | 2.96 | 236 | 1.19 |
| ஏனையவை | 4,810 | 1.16 | 150 | 0.76 |
| முழு மொத்தம் | 415,792 | 100.0 | 19,785 | 100.0 |

# வீடுகள், தே.நீ.வ.வ.ச. விடுதிகள், அரச விடுதிகள், கூட்டாட்சி ஆதனங்கள், வரியற்ற வீடுகள், சமுர்த்தி வீடுகள், சமுர்த்தி தொடர் வீடுகள்

# ஏனைய அனைத்து கட்டண அறவிடல் வகுதிகளும் “ஏனையவை“ என்ற வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிதி ஏற்பாடுகளை பதிலீடு செய்தலும் இவ்வகைப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் வகுதிவாரியாக உபயோகிக்கப்பட்ட நீரின் நூற்றுவீத அளவு




நுகர்வோர் வகுதிவாரியாக வருமான நூற்றுவீதம




## கழிவுநீர்

கொழும்பு பெரும்பாக கழிவுநீர்ப் பிரிவானது, தெஹிவலை – கல்கிசை மாநகர சபை ஆளுகைப் பிரதேசம், மொரட்டுவை மாநகர சபை பிரதேசம், ஜா-எல பிரதேசம், கொலன்னாவ நகர சபை ஆளுகைப் பிரதேசம் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்திலுள்ள ஒருசில அரசாங்க நிறுவனங்களின் சாக்கடை முறைமைகளின் தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. தே.நீ.வ.வ.ச.யினால் ஏறத்தாழ 15,768 கழிவுநீர் இணைப்புகள் பராமரிக்கப்படுகின்றன.

இதற்கமைய, சொய்ஸாபுர, மத்தேகொடை, ஜயவடனகம, ரத்தொழுகம மற்றும் மத்துமகேவத்தை வீடமைப்புத் திட்டங்களும் சனாதிபதி செயலகம், சபாநாயகர் இல்லம், பாராளுமன்றம் (நீர் மற்றும் கழிவுநீர்), செத்சிறிபாய (நீர் மற்றும் கழிவுநீர்), இசுருபாய (நீர் மற்றும் கழிவுநீர்), ஜயவர்தனபுர ஆஸ்பத்திரி போன்ற அரச நிறுவனங்களும் தே.நீ.வ.வ.ச.யினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.இதற்கு மேலதிகமாக கதிர்காமம்இ கிக்கடுவஇ மற்றும் கட்டான போன்ற இடங்களில் தே.நீ.வ.வ.ச.யினால் அப்பிராந்திய முகாமையாளர்களால் பிராந்திய உதவி நிலையங்களின் கீழ் கழிவுநீர் தொகுதி பராமர்க்கப்படுகின்றன.

**தற்போதைய துப்புரவேற்பாட்டு நிலைமை பற்றிய வரைபடம் (2014 இறுதியில்)**




## புதிய திட்டங்களை ஆரம்பித்து வைத்தல்

மொரட்டுவை/இரத்மலானை கழிவுநீர்த் திட்டமானது நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் கௌரவ தினேஸ் குணவர்தன அவர்களால் 2014 ஐப்பசி மாதம் 17 ஆம் திகதி, நிதியளிப்பு முகவராண்மையான SIDA வின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருந் திரளானோர்கள் முன்னிலையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

## புதிய இணைப்புக்கள்

இவ்வாண்டினுள் வழங்கப்பட்ட மொத்த கழிவுநீர் இணைப்புகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| வீட்டு கழிவுநீர் இணைப்புகள் | 1,025 |
| வீடில்லாத கழிவுநீர் இணைப்புகள் | 166 |

**நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகள்**

**(I) ஜா-எல/ஏக்கலவில் பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தை ஸ்தாபித்தல்**

ஜா-எல/ஏக்கல கழிவுநீர்த் திட்டத்திற்கான சிறந்த தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளுக்காக ஜா-எல/ஏக்கலவில் பிராந்திய முகாமையாளர் அலுவலகமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. ரத்தொழுவ கழிவுநீர்த் திட்டம் 2014 புரட்டாதி மாதத்தில் முகாமையாளரால் (ஜா-எல/ஏக்கல) கையேற்கப்பட்டதோடு எதிர்வரும் காலத்தில் பியகமவும் முகாமையாளர் (ஜா-எல/ஏக்கல)வின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படும்.

**(ii) சொய்சாபுரவில் நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத்தரமல்லாத பதவியணியினருக்கான விடுதிகள்**

இரத்மலானை, சொய்சாபுரவில் ரூபா 62.1 மில்லியன் செலவில் நிறைவேற்றுத் தரத்தினருக்கு 4 விடுதிகளையும் நிறைவேற்றுத்தரமல்லாதவர்களுக்கு விடுதிகளையும் நிர்மாணித்தல் பணி ஆரம்பிக்கப்பட்டது.

**(iii) சாக்கடைப் பிரிவுக்கான தர முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்தல்**

கழிவுநீர்ப் பிரிவுக்கான தர முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக தரக் கையேடும் நடைமுறைக் கையேடும் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அடுத்த ஆண்டில் ISO 9001:2008 சான்றுப்படுத்தலை அடையப்பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக தர வாரத்தில் ISO 9001:2008 தரச் சான்றுப்படுத்தலை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் சாக்கடைப் பிரிவின் பதவியணியினருக்கு தெலவல பயிற்சி நிலையத்தில் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது.

**ஏனைய உற்பத்தித்திறன் மேம்பாட்டு செயற்பாடுகள்**

**(I) கட்டணப் பட்டியலிடப்படாத கழிவுநீர் இணைப்புகளை கண்டுபிடித்தல் மற்றும் சட்ட ரீதியிலானதாக்குதல்**

தெஹிவளை/கல்கிசை பிரதேசத்தில் கட்டணப் பட்டியலற்ற கழிவுநீர் இணைப்புகளைக் கண்டுபிடிப்பதற்கான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அத்தகைய 693 இணைப்புகள் இனங்காணப்பட்டன. வருமான இழப்புக்காக 1-2 ஆண்டு தண்டப் பணம் அறவிடப்பட்டு அவற்றை சட்ட ரீதியிலானதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது.

**(ii) தற்போதுள்ள கழிவு நீர் அகற்றல் நடைமுறைக் கோவையை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான நாடளாவிய ரீதியிலான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

கட்டட நிர்மாணிப்புகளைச் செயற்படுத்தும்போது தற்போதுள்ள கழிவு நீர் அகற்றல் நடைமுறைக் கோவையை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் நாடளாவிய ரீதியிலான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு திட்டமிடப்பட்டது.

# தற்போதுள்ள சாக்கடைத் திட்டங்கள்

| மாகாணம்/பி.சே.நி. | சாக்கடைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 01 |
| கிழக்கு | 00 |
| வட மத்திய | 00 |
| வட மேல் | 00 |
| வடக்கு | 00 |
| சப்பிரகமுவ | 00 |
| தென் | 01 |
| ஊவா | 01 |
| மேல் மத்திய | 06 |
| மேல் வடக்கு | 02 |
| மேல் தெற்கு | 00 |
| மொத்தம் | 11 |



## முதலீடுகள் பற்றிய பொழிப்பு

> "தே.நீ.வ.வ.சபைக்கு நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்கள் தொடர்பில் மூலதனப் பணிகளின் பொருட்டு வெளிநாட்டு நிதியாக ரூபா 20,542.70 மில்லியன் வழங்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் ரூபா 5,892.13 மில்லியன் தொகையை மறுதரப்பு நிதியாக வழங்கியது."

### நிதியியல் மூலங்கள்

தே.நீ.வ.வ.சபைக்கு நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்கள் தொடர்பில் மூலதனப் பணிகளின் பொருட்டு வெளிநாட்டு நிதியாக ரூபா 20,542.70 மில்லியன் வழங்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் ரூபா 5,892.13 மில்லியன் தொகையை மறுதரப்பு நிதியாக வழங்கியது. இதற்கு மேலதிகமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்காக ரூபா 3,188.47 மில்லியன் உள்நாட்டு திரண்ட நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட நீர் வழங்கல் முறைமைகளின் மீளமைப்புக்காக ரூபா 220.00 மில்லியன் வெளிநாட்டு நிதியமாகவும் ரூபா 30.00 மில்லியன் உள்நாட்டு மறுதரப்பு நிதியமாகவும் வழங்கப்பட்டது. நீர் வழங்கல் துறை சமுதாய வசதியேற்பாட்டு நோக்கங்களுக்காக ரூபா 210.00 மில்லியன் வெளிநாட்டு நிதியும் ரூபா 1,726.00 மில்லியன் உள்நாட்டு மறுதரப்பு நிதியும் வழங்கப்பட்டது.

### மூல தன வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் ரூபா மில்லியன்




நீர் வழங்கல் மற்றும் சாக்கடை வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடு 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 2014 ஆம் ஆண்டில் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2014 இல் ரூபா 90 மில்லியன் குறைநிரப்பு ஒதுக்கீடும் உள்ளடங்களாக ரூபா 31.82 பில்லியன் மொத்த நிதி ஒதுக்கீடாக காணப்பட்ட அதேவேளை 2013 இல் ஒதுக்கீடு 34.76 பில்லியனாகும்.

## மூலதன நிதியங்களின் பயன்பாடு

2014 ஆம் ஆண்டில் மூலதன நிதியங்களின் பயன்பாடு 112.1% ஆகும். இது 2013 ஆம் ஆண்டில் 82% ஆக காணப்பட்டது. நீர் வழங்கல் துறை சமுதாய வசதியேற்பாட்டுக்காக 2012 ஆம் ஆண்டில் புதிய நிதி ஏற்பாடொன்று ஒதுக்கப்பட்டதோடு, 2014 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா 1,936.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## மூலதன நிதியப் பயன்பாடு

ரூபா மில்லியன்




## மூலதன நிதியப் பயன்பாடு பற்றிய ஒப்பீடு - 2013/2014

| விளக்கம் | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு நிதியத் தொகை (ரூபா மில்லியன்) | 19,238 | 98.0% | 26,824 | 128.0% |
| வெளிநாட்டு உதவியுடன் தொடர்புடைய உள்நாட்டு நிதியத் தொகை (ரூபா மில்லியன்) | 6,272 | 54.0% | 6,049 | 79.0% |
| உள்நாட்டுக் கருத்திட்டங்களுக்கான திரண்ட நிதியங்கள் (ரூபா மில்லியன்) | 2,981 | 82.0% | 2,795 | 87.0% |
| மொத்தம் | 28,491 | 82.0% | 35,668 | 112.1% |

## குறிப்பு

2014 இன் ஆரம்பத்தில் மொத்த மூலதன நிதிய ஒதுக்கீடு ரூபா 35,249.10 மில்லியனாகும் (உள்நாட்டு ரூபா 14,362.40 மில்லியன் + வெளிநாட்டு ரூபா 20,886.70). இது 2014 கார்த்திகை திறைசேரி இணையத்தளத்தில் ரூபா 31,819.30 மில்லியனாக (உள்நாட்டு ரூபா 10,846.60 மில்லியன் + வெளிநாட்டு ரூபா 20,972.70 மில்லியன்) குறைக்கப்பட்டது. ஆகவே மிகைச் செலவு உருவாகியது.

## நன்கொடை வழங்குனர்களால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதி உதவிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஏற்புடைய நிதியங்கள்




* பிரான்ஸ், SIDA, உலக வங்கி

### தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு

2014 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. ரூபா 1648 மில்லியனான தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டை தொடர்ந்தும் மேற்கொண்டது. மேற்படி நிதியமானது நீர் வழங்களின் தரம் மற்றும் அளவினை மேம்படுத்துவதற்கும், தே.நீ.வ.வ.ச.யின் சொத்துக்களைப் பராமரிப்பதற்கும், தொழிற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உதவிச் சேவைகளை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. அதாவது, தே.நீ.வ.வ.ச. ரூபா 80586 மில்லியனை புனரமைப்புக்காகவும், ரூபா 108.27 மில்லியனை வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கும், ரூபா 38.21 மில்லியனை குழாய் நீர் நீடிப்புக்காகவும் செலவிட்டுள்ளது. நன்கொடை உதவிகள் அல்லது பிரதானமான நிதியங்கள் கிடைக்காத நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

## இலங்கை அரச நிதியங்களின் மூலமான சிறிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு மற்றும் கருத்திட்டங்களின் மேம்பாடு

தே.நீ.வ.வ.ச.யினால் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, செலவிடப்பட்ட சில உள்நாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்கள் காணப்படுகின்றன. மேற்படி கருத்திட்டங்களின் அமுலாக்கல் உரிய மாகாணத்தின் பணியாளர்களால் மேற்பார்வை செய்யப்பட்டதோடு, பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மாகாண தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பணியாளர்களால் பொறுப்பேற்கப்பட்டது.

உள்நாட்டு நிதி உதவிகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற மூலதனப் பணிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 22 புதிய நீர் வழங்கல் திட்டங்களும், புனரமைத்து விரிவாக்கப்படுகின்ற மேலும் 22 நீர் வழங்கல் திட்டங்களும் 2014 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. நிதி ஒதுக்கீட்டில் 87% ஆண்டினுள் பயன்படுத்தப்பட்டது.

உள்நாட்டு நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அநேகமான கருத்திட்டங்கள் 6 தொடக்கம் 8 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டவைகளாகும். வருடாந்த வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் சிறிய அளவில் கிடைத்தமையின் காரணமாக இக் கருத்திட்டங்கள் நீடித்து வருகின்றன. இதன் பெறுபேறாக விலை உயர்வுக்கு அமைய இக் கருத்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு அதிகரித்துள்ளது.

அதேபோன்று, செய்யப்பட்ட வேலைகளுக்கான ஒப்பந்தகாரர்களின் கொடுப்பனவுக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு உரிய காலத்தில் உள்நாட்டு நிதியங்கள் விடுவிக்கப்படவில்லை. நிதி விடுவிக்கப்படுவதில் பல மாதங்கள் தாமதித்துள்ளதால், ஒப்பந்தகாரர்களின் பணப் பாய்ச்சலில் அது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### மாவட்ட ரீதியிலான மூலதனப் பணிகள் நிகழ்ச்சித் திட்டம் - 2014

| மாவட்டம் | நிதி ஒதுக்கீடு 2014 ரூபா மில்லியன் | நிதி ஒதுக்கீட்டுடனான கருத்திட்டங்களின் எண்ணிக்கை | நலன்பெறுனர்கள் |
|---|---|---|---|
| அம்பாறை | 256.0 | 2 | 30,000 |
| அநுராதபுரம் | 106.0 | 2 | 153,000 |
| பதுளை | 115.0 | 2 | 27,500 |
| கொழும்பு | 208.0 | 2 | 27,100 |
| காலி | 344.0 | 5 | 91,600 |
| கம்பஹா | 90.0 | 1 | 20,000 |
| களுத்துறை | 300.0 | 1 | 120,000 |
| கண்டி | 196.0 | 2 | 152,000 |
| கேகாலை | 212.0 | 3 | 55,800 |
| குருணாகல் | 219.0 | 4 | 106,185 |
| மாத்தளை | 64.0 | 2 | 37,000 |
| மாத்தறை | 62.0 | 2 | 16,000 |
| மொனறாகலை | 29.0 | 3 | 38,000 |
| நுவரெலியா | 20.0 | 1 | 15,000 |
| பொலனறுவை | 164.0 | 2 | 74,800 |
| யாழ்ப்பாணம் | 30.1 | 2 | 200,000 |
| இரத்தினபுரி | 127.4 | 6 | 139,800 |
| திருகோணமலை | 212.0 | 2 | 55,000 |
| மொத்தம் | 2,754.5 | 44 | 1,918,135 |

## 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

| பிராந்திய உதவி நிலையம் | கருத்திட்டத்தின் பெயர் |
|---|---|
| கிழக்கு | கந்தளாய் நீர் வழங்கல் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர)<br>தம்பலகாமம் நீர் வழங்கல் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர) |
| வட மத்திய | மகநெலுபேவ நீர் வழங்கல் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர)<br>தயட்ட கிருள – ஓயாமடுவ நீர் வழங்கல் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர) |
| சப்பிரகமுவ | பெல்கமடுல்ல நீர் வழங்கல் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர)<br>கிரியெல்ல நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 1 (சிறிய மற்றும் நடுத்தர) |
| தெற்கு | ருகுணுபுர நீர் வழங்கல் திட்டம் (கொரிய நிதியளிப்பின் கீழ்)<br>ஹக்மன நீர் வழங்கல் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர) |
| மேல் | நிட்டம்புவ/ வேயன்கொட நீர் வழங்கல் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர) |
| மாகாணங்களுக்கு இடையே | வடக்கு கிழக்கு முன்கூட்டிய ஆராய்வு WASH (நீர், துப்புரவேற்பாடு மற்றும் உடனலம்பேணல்) உலக வங்கியின் ஊடாக AusAID இன் கீழ்) |

# ஊழியர்கள்

## பதவியணியின் பலம்

தே.நீ.வ.வ.ச.யின் மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு கடந்த காலத்தைப் போன்று, ஊழியர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை தொடர்ந்தும் வழங்கியது. 2014 ஆம் ஆண்டினுள் 18 புதிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

| | பதவியணி | 2013 | 2013 | மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| (அ) | நிரந்தர | 9,222 | 9,513 | 3.2 |
| (ஆ) | அமைய | 18 | 15 | (16.7) |
| (இ) | ஒப்பந்த | 658 | 911 | 38.4 |
| (ஈ) | பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர் | 55 | 44 | (20) |
| | மொத்தம் | 9,953 | 10,483 | 5.3 |

வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களுக்காக ஆட்சேர்க்கப்பட்ட பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கையில் உள்ளடங்கவில்லை

2014 ஆம் ஆண்டின் இறுதியில் நிரந்தர பதவியினர்களான 9,513 பேருக்கு மேலதிகமாக, 911 ஒப்பந்த ஊழியர்களும், 15 அமைய ஊழியர்களும், 41 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்களும் 3 பட்டதாரி பயிற்சி பெறுனர்களும் காணப்பட்டனர். பெரும்பாலான ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் வெளிநாட்டு நிதி உதவியின் கீழான கருத்திட்டங்களின் பொருட்டே ஆட்சேர்க்கப்பட்டனர்.

2014 தை முதல் மார்கழி வரையிலான காலத்தினுள் பல்வேறான பதவியணியினர் வகைகளின் கீழ் 1,128 நிரந்தர ஊழியர்களும், 9 அமைய ஊழியர்களும், 665 ஒப்பந்த ஊழியர்களும் 29 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்களும் ஆட்சேர்க்கப பட்டனர். இதே காலப்பகுதியில் பணியாளர்களின் பல்வேறு வகைகளிலும் 837 நிரந்தர ஊழியர்கள், 12 அமைய ஊழியர்கள், 412 ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் 40 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் ஓய்வுபெறுதல், பதவி விலகல், பதவி விட்டு நீங்குதல், மற்றும் இறப்புகள் என்ற வகையில் நீங்கிச் சென்றனர். இதன் பெறுபேறாக மொத்த பதவியணியினர் 530 ஆல் அதிகரித்தது. 41 பொறித் தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் பின்னர் நிரந்தரமாக்கப்பட உள்ளனர்.



### பிரதான தொழில்களின்படி பதவியணியினர் பகிர்வு




### சேவை நிலையத்தின்படி பதவியணியினர் பகிர்வு




## ஊழியர்களுக்கான சலுகைகள்

- தே.நீ.வ.வ.ச.யின் ஊழியர்களுக்கு 2014.01.01 முதல் அமுலாகின்றவாறு ஐந்து சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.
- உற்பத்தித் திறன் ஊக்குவிப்புக் கொடுப்பனவு உள்ளடங்கலாக வருடாந்த மிகையூதியம் ரூபா 37,500 ஆண்டினுள் செலுத்தப்பட்டது.
- முன்னைய ஆண்டுகளைப் போன்று உபயோகிக்கப்படாத மருத்துவ லீவுக்கான பணக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்பட்டது.
- 2014 மார்ச் மாதத்தில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட உலக நீர் தின வைபவத்தில் ஊழியர்கள் அவர்களது களங்கமற்ற சேவையின் பொருட்டு பாராட்டப்பட்டனர்.
- 2014 ஆம் ஆண்டில் ஐந்நூற்று எண்பது (580) அமைய/ஒப்பந்த ஊழியர்கள் அவர்களது பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டனர்.
- சலுகைக் கட்டணத்தின் கீழ் அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.
- சேவையில் ஈடுபட்டிருந்தபோது மரணமடைந்த நிரந்த ஊழியர்களின் சார்பில் மரண உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கான தேனீர் கொடுப்பனவாக ரூபா 650 வழங்கப்பட்டது.
- அரசாங்க வங்கிகள் ஊடாக கடன் (மக்கள் வங்கியிலிருந்து வீடமைப்புக் கடன் மற்றும் இலங்கை வங்கியிலிருந்து வாகனக் கடன்) வசதிகள் வழங்கப்பட்டன.
- முன்னைய ஆண்டுகளைப் போன்று ஊழியர்களுக்கு ரூபா 5000.00 பண்டிகை முற்பணம் வழங்கப்பட்டது.
- ரூபா 637.00 வரையறைக்கு உட்பட்டவாறு செல்லிடத் தொலைபேசிக் கட்டணப் பட்டியல்களை மீளளிப்புச் செய்கின்ற வசதி சபையின் தரம் VI இல் இருந்து தரம் VIII வரை நீடிக்கப்பட்டது.
- 2014 ஆம் ஆண்டில் 69 ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 35,972,700.00 பன்னிரண்டு மாதக் கடனாகவும், 2,404 ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 699,220,925.00 பத்து மாதக் கடனாகவும் சலுகை வீதத்தின் கீழ் வழங்கப்பட்டது.
- ஊழியர்களின் (குடும்ப அங்கத்தவர்கள் உள்ளடங்கலாக) மருத்துவச் செலவுகளின் மீளளிப்புக்காக (சராசரியாக) ரூபா 54,276,343.00 உள்வாங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, தீவிர நோய்களுக்கான மருத்துவ செலவுகளும் உள்வாங்கப்பட்டது.

## பதவியணியினர் ஊதியமும் நன்மைகளும்

### 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதவியணியினர் ஊதிய ஒப்பீடு

| விபரம் | 2013 ரூபா மில்லியன் | 2014 ரூபா மில்லியன் |
|---|---|---|
| சம்பளங்கள் | 6,825 | 7,483 |
| ஊழியர் சேம நிதியத்துக்கான பங்களிப்பு | 616 | 647 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான பங்களிப்பு | 154 | 162 |
| மொத்தம் | 7,595 | 8,292 |

## மனிதவலு அபிவிருத்தியும் பயிற்சியும்

தே.நீ.வ.வ.சபையின் மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு கடந்த காலத்தைப் போன்றே ஊழியர்களுக்கு தொடர்ந்தும் பயிற்சி வாய்ப்புகளை வழங்கியது. 2014 ஆம் ஆண்டினுள் 18 புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவை, இணங்கியொழுகுதல், உள்ளக கட்டுப்பாடு மற்றும் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம், வளியூட்டல் கருவிகள் மற்றும் அழுத்தக் கருவிகளின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு, நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளின் பிரச்சினைகளை தீர்த்தல், நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளின் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல், துப்புரவேற்பாட்டு புதிய அணுகுமுறைகள் பற்றிய விழிப்புணர்வூட்டல், நவீன நீர் சுத்திகரிப்பு மற்றும் பகுப்பாய்வு ரீதியிலான தொழில்நுட்பம், மன அழுத்தத்துடன் இசைந்து நடத்தல், சாதகமான சிந்தனை மற்றும் தொழில் ஒழுக்கம், உபசரிப்பு மற்றும் வீடு பராமரிப்பு தொடர்பிலான திறன் அபிவிருத்தி, சமூக வெளிப்பாடு மற்றும் தொழில் நிலைய ஒத்துழைப்பு, அறிக்கை எழுதுதல், Spread Sheet ஐ பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளின் நீர் விதிப்பனவுகளை கையாளல், MS Access ஐ பயன்படுத்தி தரவுத் தள பயன்பாட்டை வடிவமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், AutoCAD உயர்தர பிரயோகம், MS Project ஐ பயன்படுத்தி கருத்திட்ட முகாமைத்துவம், நீர் மற்றும் சாக்கடை பக்கேஜ் கருத்திட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் பிரயோகத்துக்காக Spread Sheet ஐ பயன்படுத்தல் ஆகும்.

பின்வரும் மூன்று அணுகுமுறைகளை பின்பற்றியதன் ஊடாக ஊழியர்வகளின் அனைத்து வகுதியினருக்கும் மூப்புநிலை முகாமைத்துவம் மற்றும் நேர்வரிசை முகாமையாளர்களின் ஊடாக பயிற்சித் தேவைப்பாட்டின் முன்னுரிமைகள் இனங்காணப்பட்டு அதனடிப்படையில் பயிற்சி வழங்கப்பட்டது.

## வழக்கமான உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

2014 ஆம் ஆண்டினுள் இப் பிரிவு 175 உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியுள்ளதோடு பல்வேறு வகுதிகளையும் சேர்ந்த 6791 ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. ஒவ்வொரு வகுதியிலும் பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு: முகாமைத்துவ பணியாளர்கள் 524, நிறைவேற்றுத்தர பணியாளர்கள் 2191, மேற்பார்வைத்தர பணியாளர்கள் 1317, எழுதுவினைஞர் மற்றும் சம தரத்தைச் சேர்ந்த பணியாளர்கள் 1410 மற்றும் தொழிற்பாட்டுப் பணியாளர்கள் 1349.

இக்காலகட்டத்தினுள் பின்வரும் விடயங்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.

அளவீடு தொடர்பிலான சிவில் பொறியியல் தராதர முறை (CESMM), குழாய்வழிகள் மற்றும் கட்டமைப்புகளுக்கான மதிப்பீடுகளை தயாரித்தல், பெறுகை முகாமைத்துவம், கேள்விப்பத்திர மதிப்பீடு, நிர்மாணிப்பு மேற்பார்வை, வருவாயற்ற நீர் குறைப்பு – கட்டம் 1 நீர் பாய்ச்சல் மானிகள் மற்றும் நீர் மட்ட மானிகள், LD கருவிகள் மற்றும் வருவாயற்ற நீரை அளவிடுதல், வருவாயற்ற நீர் குறைப்பு, பிரதான குழாய்களில் நீர் அழுத்தக் குறைவு, எரிவாயு மூலம் குளோரீனிடும் கருவிகளின் பராமரிப்பு மற்றும் திருத்தம், நீர் பாதுகாப்புத் திட்டம் பற்றிய விழிப்புணர்வூட்டல், IEE வயரின் ஒழுங்குவிதி, மின் பிறப்பாக்கிகளின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு, நீர் சுத்திகரிப்பு நடைமுறை, கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் வடிவமைப்பு மற்றும் கழிவுநீர் வடிவமைப்பு முறைமை, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, இலங்கை கடற்படைக்கான நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் தொழிற்பாடு, பராமரிப்பு மற்றும் நீர் விநியோக முறைமை, மனஅழுத்தத்துக்கு இசைந்துசெல்லல், வர்த்தக நடைமுறை, பொது திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம், வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம், நிர்வாக நடைமுறை, 5S எண்ணக்கரு பற்றிய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம், விளைவுத்தாக்கம்மிக்க தொடர்பாடல் மற்றும் தொலைபேசி ஒழுங்குமுறை பற்றிய புதியோர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம், கருத்திட்ட கணக்கீடு, வர்த்தக நடைமுறை மற்றும் கணக்கீட்டு முறைமை, கணக்கீட்டு முறைமை, மானி வாசித்தல் தொழிற்பாடு, உபசரிப்பு மற்றும் வீடு பராமரிப்பு பற்றிய திறன் அபிவிருத்தி, கனனி மற்றும் வின்டோஸ் 7 இயக்க முறைமை பற்றிய அறிமுகம்,

Word-Processing நிகழ்ச்சித்திட்டத்தை பயன் படுத்தி ஆவணங்களை உருவாக்குதலும் கை யாள்தலும், Spreadsheets ஐ பயன்படுத்தி களஞ்சியப்படுத்தலை ஒழுங்குசெய்தலும் தரவுக ளைக் கையாள்தலும், தரவு முகாமைத்துவத்துக்காக Spreadsheets ஐ பயன்படுத்தல், மின்னஞ்சல் முகாமைத்துவம், திறந்த அடிப்படையிலான மென்பொருட்களின் அறிமுகப்படுத்தல், கனணி பற்றிய பிரச்சினைகள் மற்றும் பராமரிப்பு, AutoCAD 2010 ஐ பயன்படுத்தி கனணியின் உதவியோடு வரைபடங்கள் மற்றும் வடிவமைப்புகளை மேற் கொள்ளல், AutoCAD உயர்தர வடிவங்கள், ArcGIS, Microsoft Access, Microsoft Project மற்றும் AutoCAD 2010 ஐ பயன்படுத்தி கருத் திட்டங்களின் விளைவுத்தாக்கம் மிக்கதான முகாமைத்துவம்,

## நாட்டினுள் ஏனைய நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட பயிற்சிகள்

மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு உள்நாட்டுப் பயிற்சி நிறுவனங்களினூடாக 194 ஊழியர்களுக்கு மொத்தம் 3,111 பயிற்சி நாட்களை உள்ளடக்கியதாக வெளிவாரிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களால் நடத்தப்பட்ட முதுமாணி மற்றும் பட்டப் பின்படிப்பு பாடநெறிகள், தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம், வர்த்தக முகாமைத்துவம் பற்றிய தேசிய பாடசாலை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், வீடமைப்பு, திட்டமிடல் மற்றும் நிர்மாணிப்பு நிலையம், உயர் நிர்மாணிப்புப் பயிற்சிக் கல்லூரி ஆகிய நிறுவனங்களால் நடத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளும் உள்ளடங்குகின்றன. மேலும் மனித வள முகாமைத்துவம், வழங்கல் தொடர் முகாமைத்துவம், நிர்மாணிப்பு முகாமைத்துவம், தொழில்நுட்ப மற்றும் மின்னியல் துறைகள்,இயந்திர தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு ஆகிய குறுகிய கால பாடநெறிகக்கும் ஊழியர்கள் ஆற்றுப்படுத்தப்பட்டனர்.

## 2014 ஆம் ஆண்டினுள் பின்வரும் புதிய பயிற்சி/ நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயலமர்வுகளுக்கு அலுவலர்கள் ஆற்றுப்படுத்தப்பட்டனர்.

அவையாவன, பொறியியலாளர்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி – IESL தேசிய அபிவிருத்தியில் கருத்திட்ட முகாமையாளர் ஒருவரின் வகிபாகம் - இலங்கை கருத்திட்ட முகாமைத்துவ நிறுவனம், அறிக்கை எழுதுதல் - IESL, போக்குவரத்து முகாமைத்துவம் - CETRAC, தேசிய தொழிலாளர் சட்டங்கள் கருத்தரங்கு – BASL, விவசாய இரசாயனம் பற்றிய கருத்தரங்கு - இலங்கை இரசாயன நிறுவனம், அளவீடு தொடர்பிலான சிவில் பொறியியல் தர நியமம் - ICTAD, நில நீர் முகாமைத்துவம் - நீர் வளச் சபை, வசதியேற்பாட்டு முகாமைத்துவம் - IIESL, கட்டங்களுக்கு அலுமினியம் பயன்படுத்தப்படுதல் - ICTAD, நிர்மாணிப்புகளின் காரணமாக ஏற்படும் சுற்றாடல் மாசடைதலும் அதன் தணிப்பும் - ICTAD, காலநிலை மாற்றத் தழுவல் தொடர்பில் பயிற்றுவிப்பவர்களுக்கு பயிற்சியளித்தல் - இலங்கை நீர் பங்காளர், தமிழ் மொழி நிகழ்ச்சித்திட்டம் - தேசிய மொழிகள் மற்றும் கல்வி நிறுவனம், சிறப்புத் தேர்ச்சிக்கான புத்தாக்கத் தொழில்நுட்பம் - IESL, HS Code பற்றிய கருத்தரங்கு – கொழும்பு கடல் வாணிபக் கல்லூரி, தரநியம எண்ணக்கரு தொடர்பிலான மதியுரை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - NL&DB

## வெளிநாட்டுப் பயிற்சி/உத்தியோகபூர்வ விஜயங்கள் குறுகியகால நட்புறவுப் புலமைப்பரிசில்

குறகியகால நட்புறவு புலமைப் பரிசில் மற்றும் சுற்றுப்பயணம் - தே.நீ.வ.வ.ச.யின் 39 ஊழியர் களுக்கு ADB மற்றும் NUFFIC, JAICA, ITEC, KOICA, AUSAID மற்றும் சிங்கப்பூர் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பின் நிதி உதவியுடன் குறுகிய கால இருதரப்பு நட்புறவு புலமைப் பரிசிலின் கீழ் வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கருத்திட்டங்களின் ஊடாக 129 அலுவலர்களுக்கு கப்பலேற்றலுக்கு முன்னரான பரிசீலனை விஜயங்கள், தொழிற்சாலை பரிசீலனைகள், ஒப்பந்த கலந்துரையாடல்கள், இரட்டை நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றுக்கான உத்தியோகபூர்வ விஜயங்க ளுக்கு மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு வசதிசெய்து கொடுத்தது.

### நீண்டகால நட்புறவு புலமைப் பரிசில்

2014 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச.யின் பொறியியலாளர்கள் பின்வரும் நீண்ட கால வெளிநாட்டு முழு நேர கற்கை மற்றும் இணையத்தின் ஊடான நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நட்புறவுப் புலமைப் பரிசில்களைப் பெற்றனர்.

**(அ)** நெதர்லாந்து நட்புறவு புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தினால் அனுசரணை வழங்கப்பட்ட நகர நீர் துப்புரவேட்பாட்டு நிபுணத்துவம் தொடர்பிலான துப்புரவேற்பாட்டுப் பொறியியல் பற்றிய விஞ்ஞான முதுமாணி பாடநெறி.

**(ஆ)** யப்பான் மற்றும் உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நீர் முகாமைத்துவம் மற்றும் நீர் தர முகாமைத்தும் பற்றிய முதுமானிப் பட்டம்

**(இ)** நெதர்லாந்து நட்புறவு புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தினால் நிதியளிக்கப்பட்ட நீர் வள முகாமைத்துவத்தில் நீர் முகாமைத்துவ நிபுணத்துவம்

**(ஈ)** மேலும், துப்புரவேற்பாட்டுப் பொறியியல் மற்றும் துப்புரவேற்பாடு தொடர்பிலான தொழில்சார் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறியை இணையத்தின் அடிப்படையில் கற்பதற்கான ஆறு பகுதியளவு புலமைப் பரிசில்கள் IHE நெதர்லாந்தில் இருந்து கிடைக்கப்பெற்றது. பாடநெறிக் கட்டணத்தில் 50% ஐ பில் அன்ட் மிலிந்த கேட்ஸ் மன்றம் நன்கொடையாக வழங்குவதற்கும் மிகுதியை தே.நீ.வ.வ.ச. செலுத்துவதற்குமான புரிந்துணர்வு உடன்படிக்கை IHE க்கும் தே.நீ.வ.வ.ச.க்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

### பணியிலிருக்கும்போதே பயிற்சி

தொழில்பயிலுனர்களுக்கு பணியிலிருக்கும்போதே பயிற்சி வழங்கப்பட்டது. (பட்டப்படிப்பு மாணவர்கள், விசேட தொழில்பயிலுனர்கள், NDT/HNDE மாணவர்கள், அருங்கலைகள் பயிலுனர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்கள், கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் (A.A.T.), வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை (NAITA) ஆகியன.

### உள்ளக பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி பற்றிய சுருக்கம்

| இல. | பயிற்சியின் விதம் | திட்டமிடப்பட்டது | முன்னேற்றம் | நூற்றவீதம் | மனித நாட்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | வழக்கமான உள்வாரிப் பயிற்சி | 3,000 | 6,791 | 226% | 12,643 |
| 2. | வெளிநாட்டுப் பயிற்சியும் விஜயமும் | 80 | 174 | 218% | 3,833 |
| 3. | உள்நாட்டு வெளிவாரிப் பயிற்சி | 160 | 194 | 121% | 3,111 |
| 4. | வெளி நிறுவனங்களால் நடத்தப்பட்டசெயலமர்வுகள்/சமர்ப்பணங்கள் | 240 | 530 | 221% | 530 |
| | மொத்தம் | 3,480 | 7,689 | 221% | 20,117 |

### உள்ளக பதவியணியினருக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் பற்றிய சுருக்கம்




### வெளிவாரி நிறுவனங்களால் பயிலுனர்களுக்காக வழங்கப்பட்ட பணியிலிருக்கும்போதான பயிற்சி பற்றிய சுருக்கம்

| இல. | வகுதி | எண்ணிக்கை | நாட்கள் |
|---|---|---|---|
| 01 | பட்டதாரி மாணவர்கள் | 64 | 27,324 |
| 02 | தொழில்நுட்ப பயிலுனர்கள் | 97 | |
| 03 | கணக்கீட்டு பயிலுனர்கள் | 05 | |
| 04 | எழுதுவினைஞர் மற்றும் ஏனைய பயிலுனர்கள் | 41 | |
| | மொத்தம் | 207 | |



“நீர் என்பது பொதுவானதொரு மரபுரிமையாகும், அதன் பெறுமதியை அனைவரும் புரிந்துகொள்ளல் வேண்டும். நீரை கவனமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துதல் ஒவ்வொருவருடைய கடமையாகும்.”



## புதுமையான தொழில்நுட்பத்தின் ஊடாக வாடிக்கையாளர் வசதிகள்

"சிறந்த வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்கின்ற வகையில் தொழிற்பாட்டு வினைத்திறன், சேவைத் தரம் மற்றும் வாடிக்கையாளர் கவனிப்புச் சேவைகளை மேம்படுத்துவதற்காக மேற்படி தோற்றம்பெற்று வருகின்ற தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதில் தே.நீ.வ.வ.ச. குறிப்பிடத்தக்க முயற்சியை மேற்கொண்டது."

புதுமுறைகாணல் அரச சேவையை மேம்படுத்துவதில் முக்கியமானதொரு காரணியாகும். மேம்படுத்தப்பட்ட அரச சேவை வழங்கல் பொறிமுறையின் இயக்க சக்தியாக தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் அரசாங்கத்தின் எண்ணக்கருவாக உள்ளதால், புவித் தகவல் முறைமை (GIS), SCADA முறைமை, குறுகிய செய்திச் சேவை மற்றும் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பம் ஆகிய தொழில் நுட்பங்கள் உலகளாவிய ரீதியில் பொதுப் பயன்பாட்டுத் துறையில் புத்தாக்கத் தீர்வுகளாகப் பயன்படுத்தப் படுகின்றன. இப் புதிய போக்குடன் இணைந்து செல்கின்ற வகையில் ஆண்டு முழுவதிலும் வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்கின்ற வகையில் தொழிற்பாட்டு வினைத்திறன், சேவைத் தரம் மற்றும் வாடிக்கையாளர் கவனிப்புச் சேவையை மேம்படுத்துவதற்காக மேற்படி தோற்றம்பெற்று வருகின்ற தொழில்நுட்பத்தைப் பிரயோகிப்பதில் தே.நீ.வ.வ.ச. குறிப்பிடத்தக்க முயற்சியை மேற்கொண்டது.

### அழைப்பு நிலையத்தை மேம்படுத்தல்

அழைப்பு நிலையத் தீர்வானது வாடிக்கையாளர் கவனிப்புத் தொலைபேசி இலக்கம் 1939 ஊடாக வாடிக்கையாளர்களுக்கு அவர்களது முறைப்பாடுகளை செய்வதற்கு வசதியளிப்பதோடு, நாடளாவிய ரீதியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள களப் பதவியணியினரின் ஊடாக இம் முறைப்பாடுகள் தொடர்பில் வினைத்திறன்மிக்க விதத்தில் நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. இது நிறுவனத்தின் வாடிக்கையாளர் கவனிப்புச் சேவையில் மிக முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. மேற்படி வசதியானது தொடர்ந்து பிரச்சித்திபெற்ற வருவதோடு 100,000 க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் ஆண்டினுள் அழைப்பு நிலையத்தின் மூலம் ஏற்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அழைப்பு நிலையத் தீர்வுகளில் பிரதானமானதொரு அம்சமாக குறுகிய செய்திச் சேவை (SMS) மற்றும் மின்அஞ்சல் காணப்படுவதோடு, வாடிக்கையாளர் களுக்கு உடனடியாக பின்ஊட்டலை வழங்கக் கூடியதாகவும், முறைப்பாடு பற்றிய விபரங்களை களப் பணியாளர்களுக்கு அறிவித்து அவர்களது உடனடியான கவனத்தை ஈர்க்கக் கூடியதுமான முதன்மையானதொரு தொடர்பாடல் முறையாக உள்ளது. அத்துடன் மேற்படி முறையானது முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய முன்னேற்றத்தைக் கண்டறிகின்ற அதேவேளை இவ்விடயம் தொடர்பில் வினைத்திறன்மிக்க தீர்வுகளை மேற்கொள்ளக்கூடிய சிறந்த முகாமைத்துவ தகவல் மூலமாகவும் சேவையாற்றுகின்றது.

ஆண்டினுள் SMS ஊடாக வாடிக்கையாளர் விழிப்புச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களை அனுப்புதல், மேம்படுத்தப்பட்ட அழைப்பு வரிசை முகாமைத்துவம், அழைப்பு நிலைய தொழிற்பாடுகளை இணைத்தின் மூலம் கண்காணித்தல் போன்ற பல்வேறு புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டு இத் தீர்வு முறை மேம்படுத்தப்பட்டது. நீர் வழங்கல் இடைநிறுத்தம், இணைப்புத் துண்டிப்பு அறிவித்தல்களை அனுப்புதல் ஆகியன பற்றிய விழிப்புச் செய்திகளை SMS செய்திகளின் ஊடாக வாடிக்கையாளரின் செல்லிடத் தொலைபேசிக்கு நேரடியாக அனுப்புவதற்கு இத் தீர்வு முறையை பிராந்திய பணியாளர்கள் பயன்படுத்துகின்றனர்.

### வாடிக்கையாளர் பட்டயம்

மிகச் சிறந்த வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்யும் பொருட்டு, புதிய இணைப்புகள், கட்டணப் பட்டியல்/கொடுப்பனவுப் பிரச்சினைகள் ஆகிய மிக முக்கியமான வாடிக்கையாளர் உதவிச் சேவைகளை வழங்குவதற்கு எடுக்கின்ற உயர்ந்தபட்ச கால எல்லை தொடர்பில் வழிகாட்டல்களை அமைத்து உயர்மட்ட அர்ப்பணிப்பைக் காட்டுகின்ற வகையில் தே.நீ.வ.வ.ச. வாடிக்கையாளர் பட்டயமொன்றை அமுல்படுத்தியுள்ளது. ஒருசில பிராந்திய அலுவலகங்களில் புதிய இணைப்புகளுக்கான தலத்திலான செலவு மதிப்பீடு, கொடுப்பனவைச் செய்து 7 நாட்களினுள் இணைப்பை வழங்குதல், ஒரு நாளில் சேவை இணைப்பை வழங்குவதற்கான தெரிவு ஆகியன மிகச் சிறந்த வாடிக்கையாளர் திருப்தியை உறுதிப்படுத்தும் பொருட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாகும்.

## உத்தியோகபூர்வ இணையத்தளம்

நிறுவனத்தின் தற்போதைய பிரதிமையைப் பிரதி பலிக்கக்கூடிய வகையில் தே.நீ.வ.வ.ச.யின் உத்தி யோகபூர்வ இணையத்தளம் தொடர்ந்து இற்றைப் படுத்தப்பட்டது. நிறுவனத்தைப் பற்றிய இற் றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குகின்ற அதேவேளை, வாடிக்கையாளர் இடைச் செயற் பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு ஒருசில இடைச்செயற்பாட்டு சேவைகள் இணையத்தளத்திற்கு ஒருங்கிணைக்கப்பட்டன. விண்ணப்பப் படிவங்கள், சேவைக் கோரல் படிவங்கள், துண்டுப் பிரசுரங்கள், வெளியீடுகள் ஆகியவற்றை பாவனையாளர்களால் பதிவிறக்கம் செய்யக்கூடியதாக உள்ளது. முக்கியமான நிகழ்வுகள், அறிவித்தல்கள், செய்திகள் ஆகியன பற்றிய விபரங்கள் நாளாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றன.

கேள்விப்பத்திர அறிவித்தல்கள், தொழில் வாய்ப்புகள், கொள்வனவு வழங்கல் அறிவித்தல்கள் ஆகியன இத்தளத்தில் உள்ள மிகப் பிரபல்யமான பிரிவுகளாகும். பாவனையாளர் பின்ஊட்டல்கள் மற்றும் முறைப்பாடுகள்/மனக்குறைகளை சமர்ப்பிப்பதற்கான வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. மிக விளைவுத்தாக்கமிக்க உள்ளடக்க இற்றைப்படுத்தல் நடைமுறை வசதிகளை ஏற்பாடு செய்யும் பொருட்டு திறந்த இணையத்தள வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி முறையியலைப் பயன்படுத்தி உள்ளடக்க முகாமைத்துவத் தீர்வுகளுக்கு அதனை மாற்றக்கூடியதான விதத்தில் இணையத்தளத்தை மேம்படுத்துவதற்கான ஒருசில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடன் அட்டைகளைப் பயன்படுத்தி இணையத்தின் ஊடாக நீர் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை பெறுவதற்கான வசதியேற்பாடுகளை புதிய இணையத்தளம் கொண்டுள்ளது.

## இணையத்தினூடான பாவனையாளர் கவனிப்பு சேவை

வாடிக்கையாளர்களுக்கு நுகர்வு முறை, கட்டணப் பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், நிலுவைத் தொகைகள் ஆகியவற்றை பார்வையிடக் கூடிய விதத்தில் பாவனையாளர்களுக்கு வசதியேற்பாடு செய்வதற்கான இணைத்தினூடான வாடிக்கையாளர் கவனிப்புச் சேவையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு தே.நீ.வ.வ.ச. நடவடிக்கையெடுத்துள்ளது. செல்லுபடியான நீர் சேவைக் கணக்கை கொண்டுள்ள பாவனையாளருக்கு இணையத்தினூடான சேவையைப் பெறுவதற்கு இச் சேவையில் பதிவு செய்துகொள்ள முடியும். பாவனையாளர்களுக்கு அவர்களது நீர் சேவைக் கணக்கு பற்றிய பல்வேறான விபரங்களை வழங்குகின்ற அதேவேளை, பாவனை யாளர்களால் கடன் அட்டைகளையும் வேறு தெரிவுகளையும் பயன்படுத்தி இணையத்தினூடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் இச்சேவை இடமளிக்கின்றது. நவீன கைத்தொழில் நடைமுறைகளுடன் இணங்கிச் செல்கின்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இது சுய-சேவை இணையச் சேவையொன்றாகும். மேற்படி முறைமையானது பிரத்தியேகத்தன்மையையும் தகவல் பாதுகாப்பையும் பேணுகின்ற வகையில் கடும் பாதுகாப்புக் கட்டுப்பாட்டுடன் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தீர்வு முறையானது ஆரம்பித்துவைக்கப்பட்டு புதிய உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## ஏனைய நிறுவனங்களுடனான கூட்டி ணைந்த சேவைகள்

தே.நீ.வ.வ.ச. அதன் தெரிவு செய்யப்பட்ட ஒருசில சேவைகளை லங்காகேட் இணையத்தினூடான ஓர் இடத்திலான அரச சேவைகள் அரங்கில் கூட்டிணைப்பதற்கு தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைக்கு (ICTA) விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. அரச முன்னெடுப்புகளை மீள்இயக்குவதன் கீழ் ICTA தே.நீ.வ.வ.சபையுடன் கூட்டிணைந்து இணைய சேவையொன்றை அபிவிருத்தி செய்துள்ளது. இந்த வசதியானது நீர் சேவைக் கணக்கை கொண்டுள்ள பிரசைகளுக்கு நுகர்வு பற்றிய விபரங்கள், கட்டணப் பட்டியல், கொடுப்பனவு விபரங்கள் ஆகியவற்றுடன் நிலுவைக் கட்டணப் பட்டியல்களின் கொடுப்பனவுகளை இணையத்தினூடாக செய்வதற்கும் வசதிகளை வழங்குகின்றது.

தே.நீ.வ.வ. சபையானது அதன் சமூக பொறுப்புகளை நிறைவேற்றுகின்ற வகையில், அனைத்து அரச நிறுவனங்களுக்குமான முழுமையான குறைகேள் முகாமைத்துவ முறைமையொன்றைத் ஸ்தாபிப்பதற்கு அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சுக்கு உதவியளித்துள்ளது. இந்த நோக்கத்திற்காக தே.நீ.வ.வ.சபையானது ஆலோசனை இயலளவுடன் கூடிய நிபுணத்துவத்தை வழங்கியுள்ளதோடு தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை அபிவிருத்தி செய்துள்ளது. மேற்படி முறைமையானது, அரசாங்கத்தின் ஆரம்ப குறைகேள் முகாமைத்துவத் தீர்வாக அமைவதற்கு எதிர்பார்க்கின்றது. தற்போது சில நிறுவனங்கள் பொதுமக்களின் முறைப்பாடுகள் பற்றி நடவடிக்கை

எடுப்பதற்கு இந்த முறைமையை பயன் படுத்துகின்றன.

## கொடுப்பனவுத் தெரிவுகளுக்கான அனுசரணை

தற்போது தே.நீ.வ.வ.சபையானது கட்டணப் பட்டியல்களின் கொடுப்பனவுகளை மேற்கொள் வதற்கு பாவனையாளர்களுக்கு பல்வேறான தெரிவுகளை வழங்குகின்றது. தே.நீ.வ.வ.ச. உத்தியோகபூர்வ இணையத்தளம், லங்காகேட் சேவை மற்றும் பிரசித்திபெற்ற பல்வேறான வங்கிச் சேவைகள் உள்ளடங்கிய இணையத்தினூடான கொடுப்பனவுத் தெரிவுக்கு மேலதிகமாக, காகில்ஸ், கீல்ஸ், லாப்ஸ் ஆகிய பிரசித்திபெற்ற சிறப்புச் சந்தைத் தொகுதிகளால் நடாத்தப்படுகின்ற பிரசித்திபெற்ற சில்லறை வர்த்தக நிலையகளின் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் பாவனையாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய கொடுப்பனவுக ளைத் திரட்டுவதற்கு தே.நீ.வ.வ.சபையுடன் செய்து கொள்ளப்பட்ட சட்ட உடன்படிக்கையொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் தே.நீ.வ.வ.சபையின் சொந்த சேகரிப்புக் கரும பீடங்கள் காணப்படுவதோடு, பீபல்ஸ் பார்க் போன்ற பொது இடங்களிலும் வசதியான இடங்களிலும் கட்டண சேகரிப்புக்கான ஒருசில கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

பாவனையாளர்களின் வசதியைக் கவனத்திற்கொண்டு, செல்லிடத் தொலைபேசி சேவைகளின் ஊடாகவும் eZ Cash முறைமைகள், m Cash முறைமைகள் ஊடாக வும் தே.நீ.வ.வ.சபையின் சார்பில் கொடுப்பனவுகளைச் சேகரிப்பதற்கு தே.நீ.வ.வ.ச. சட்ட ரீதியான உடன்படிக்கைகளின் கீழ் அதிகாரம் அளித்துள்ளது.

Kiosks, Teller machines போன்ற கொடுப்பனவு அட்டை முறைகளைப் பயன்படுத்தி அதே இடத்தில் கொடுப்பனவுகளை சேகரிப்பதற்கான வசதியான கொடுப்பனவு வசதிகளை ஸ்தாபிப்பதற்கு ஒருசில தனியார் தரப்பினர்களுக்கும் தே.நீ.வ.வ.ச. இணக்கம் தெரிவித்துள்ளது.

## பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச் சித்திட்டம்

பாவனையாளர் குழுக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாவனையாளர் சங்கங்களை இலக்காகக் கொண்டு பொதுசன தொடர்புப் பிரிவு பல்வேறான கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. நீரை பாதுகாத்தல், சுற்றாடல் துறை, நீர்நிலைகளைப் பாதுகாத்தல் ஆகியன தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப பட்டது. நீர் சேவை தொடர்பிலான பல்வேறான துறைகள் தொடர்பில் இலக்குக் குழுக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பொருட்டு "ஜலய" எனும் பெயரி லான காலாண்டு பத்திரிகையொன்று வெளியிடப் பட்டது.

பொதுமக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற் படுத்தும் பொருட்டு நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சினதும் பல்வேறான ஏனைய ஆர்வம்காட்டும் தரப்பினர்களினதும் வழிகாட்டலின் கீழ் தே.நீ.வ.வ.சபையினால் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. உலக நீர் தின விழா, சமுதாய நீர் மாநாடு, SACOSAN மாநாடு ஆகியன அத்தகைய ஒருசில நிகழ்ச்சிகளாகும்.

# கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாடு

## கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத்துறையின் செயலாற்றுகையும் பிரதானமான செயற்பாடுகளும்

### AusAID நிதியளிப்பிலான வடக்கு கிழக்கு WASH கருத்திட்டம்

• அவுஸ்திரேலிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை (AusAID) மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மோதலுக்குப் பிந்திய குடியேற்றங்களில் முன்னோடி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு (WASH) நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கியின் ஊடாக தே.நீ.வ.வ.சபைக்கு அமெரிக்க டொலர் 2.01 மில்லியன் நன்கொடையை வழங்கியதோடு, 2014 இல் இது பூர்த்தி செய்யப்பட்டது.

**அ)** மகாதிவுல்வெவ, நாமல்வத்த, நாவற்சோலை மற்றும் கிளிவெட்டி ஆகியன திருகோணமலை மாவட்டத்தில்

**ஆ)** தலைமன்னார் கிராமம், பாலம்பிட்டி, மதகிராமம், கூலங்குளம் மற்றும் கோணாச்சி ஆகியன மன்னார் மாவட்டத்தில்

• 3000 வீடு சார்ந்த இணைப்புகளில் 2300 வீட்டு இணைப்புகள் நிறைவடைந்தன.
• இவற்றுக்கு மேலதிகமாக, 517 வீட்டு மலசலகூட அலகுகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன.

## கிராமிய நீர் வழங்கல் பற்றிய பிரதான தரவுத்தளம்

தபால் மூலம் வினாக் கொத்துகளை அனுப்புவதன் மூலமும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் அங்கத்தவர்களுடனும், ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடனும் செயலமர்வுகள் நடத்தப்பட்டதன் மூலமும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் தொழில்நுட்பத் தகவல்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் அமைவிடத் தரவுகளைத் திரட்டுவதற்காக மாவட்ட கிராமிய நீர் வழங்கல் திட்ட அலகுகளுக்கு மத்தியில் 5 GPS கருவிகள் விநியோகிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டினுள் பின்வரும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் கள விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டன.

• 2014 தை மாதத்தில் NEP – WASH கருத்திட்டத்தில் மஹதிவுல்வெவ மற்றும் நாமல்வத்த நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் எம்பிலிபிட்டியவில் சுவதிவி சமுதாய முகாமைத்துவ நீர் வழங்கல் திட்டங்கள்.

• கொழும்பு BMICH இல் உலக நீர் தினம் - 2014 ஐ முன்னிட்டான தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. இந்த வைபவத்திற்கு சமாந்திரமாக, தேசிய மட்டத்திலான சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் மாவட்ட கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் போட்டிகள் நடத்தப்பட்டன.

• கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் தரவுத் தளத்தை இற்றைப்படுத்துவதற்காக இருப்பிலுள்ள நீர் மற்றும் துப்புரவேற்பாடு பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியம் மற்றும் கிராம எழுச்சி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

• உலக வங்கி நிதியத்தின் கீழ் மாவட்டங்களுக்கு அளிக்கப்படுகின்ற அடுத்த கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டங்களின் கருத்திட்ட தயாரிப்பு வேலைகளுக்காக உலக வங்கி உத்தியோகத்தர்களுடன் இணக்கம் ஏற்படுத்திக்கொள்ளப்படல்.

• தே.நீ.வ.வ.சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவுடன் கிராமிய அடிப்படையிலான அமைப்புகளால் முகாமை செய்யப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களின் குளோரீனிடல் பம்பிகள் அபிருத்தி செய்யப்பட்டு வருகின்றதோடு, நிலையான நீர் பாய்ச்சலுக்கான கருவிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

• தே.நீ.வ.வ.சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவுடன் கிராமிய அடிப்படையிலான அமைப்புகளால் முகாமை செய்யப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களின் குளோரீனிடல் பம்பிகள் அபிருத்தி செய்யப்பட்டு வருகின்றதோடு, நிலையான நீர் பாய்ச்சலுக்கான கருவிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

• Plan Sri Lanka வினால் வெளியிடப்பட்ட பின்வரும் நூல்களை வரைவதற்கும் தொகுப்பதற்குமான உதவிகள் வழங்கப்பட்டன – WASH வசதிகளுக்கான ஆரம்பப் பாடசாலை கைநூல், RWH முறைமையை பாடசாலைகளில் தொழிற்படுத்துவதற்கான கைநூல்.

• CBO களால் முகாமை செய்யப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களின் நீர் பாதுகாப்புத் திட்ட கண்காணிப்புக்கான கருவியாகப் பயன்படுத்துவதற்கான WHO வழிகாட்டல்களின் அடிப்படையிலான சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டு சிங்களத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டது.

• புத்தளம், பொலனறுவை, கேகாலை மற்றும் அம்பாறையில் ஒருநாள் CBO மன்றக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

• தள விஜயங்களை மேற்கொண்டு களுத்துறை, இரத்தினபுரி, கம்பஹா, புத்தளம், குருணாகல், கேகாலை, அநுராதபுரம், அம்பாறை மற்றும் மொனறாகலையில் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் அடையாளங்காணப்பட்டன.

• நடைமுறையிலுள்ள ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஒரு பகுதியாக CBO க்களின் அறவீட்டுக் கட்டமைப்புகள் பற்றிய தரவுகள் திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. கிராமிய நீர் வழங்கல் திட்ட செயலமர்வுகளின் திட்டமிடலும் உபாயங்களும

## கிராமிய நீர் வழங்கல் திட்ட செயலமர்வுகளின் திட்டமிடலும் உபாயங்களும்

• மாவட்ட RWS அலகுகளின் பணியாளர்களுக்கு பங்குனி மாதத்தில் வாரியபொலவில் இரண்டு நாள் வதிவிட செயலமர்வு நடத்தப்பட்டது.

• கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாடு தொடர்பில் புதிய அணுகுமுறைகள் மற்றும் மூலோபாயங்களைப் பற்றி விழிப்புணர்வூட்டுவதற்காக கார்த்திகை மாதத்தில் MD&T யில் தே.நீ.வ.வ.சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு ஒரு நாள் செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

## நீர் வளம் மற்றும் சமுதாயம் தொடர்பான மூன்றாவது சர்வதேச மாநாடு - 2014 ஆவணி 24-26

• 2014 ஆவணி 24 முதல் 26 வரை இலங்கையின் மத்திய மாகாணத்தின் பல்லேகலயில் அமைந்துள்ள சர்வதேச பௌத்த கற்கை நிலையத்தில் நீர் வளம் மற்றும் சமுதாயம் தொடர்பிலான சர்வதேச மாநாடு நடைபெற்றதோடு, இதற்கு RWS பிரிவு பல வகைகளிலும் பங்களிப்புச் செய்தது.

**இந்த மாநாட்டிற்கு சமாந்திரமாக பின்வரும் நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.**

• கண்டி KCC யில் பாடசாலை மாணவர்கள் மற்றும் தரப்பினர்களின் பங்குபற்றுதலுடனான கண்காட்சி

• மத்திய மாகாண பாடசாலை மாணவர்களுக்கு மத்தியிலான ஓவியப் போட்டி

• மிகவும் வெற்றிகரமான CBO களை தெரிவு செய்வதற்கான போட்டி

• CBO அங்கத்தவர்களுக்கு மத்தியிலான பொது அறிவுப் போட்டி

• பங்குபற்றுனர்களுக்கான தொழில்நுட்ப கள விஜயங்கள்

•மாநாட்டின் இறுதியில் செங்கடகல பிரகடனம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

## தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பின் நிதி உதவியின் கீழான சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாடு

2014 ஆம் ஆண்டினுள் சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்களுக்கான பம்பிகளை பதிலீடு செய்வதற்காக NCWT இல் இருந்து நிதியங்கள் கிடைத்தோடு, ஆண்டினுள் பின்வரும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அநுராதபுரம், பொலனறுவை, மாத்தளை, கண்டி, நுவரெலியா, கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு மாவட்டங்களின் 36 கிராமிய அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்களுக்கு 50 புதிய பம்பிகளைப் பதிலீடு செய்து பொருத்துவதற்காக ரூபா 44.0 மில்லியன் கிடைத்தது. 36 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான 50 பம்பிகளில் 17 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு 25 பம்பிகள் பொருத்தப்பட்டன.

## SACOSAN IV – 2014 நிகழ்ச்சித்திட்டம்

SACOSAN -IV இன் பிரதானமான குறிக் கோள்களில் ஒன்றாக காணப்படுவது மலசல கூடங்களை வழங்குவதன் மூலம் முழுமையான துப்புரவேற்பாட்டு வசதிகளை அடையப்பெறுத லாகும். அம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, நுவரெலியா, பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைப் பிரதேசங்களிலில் 762 குடும்பங்களினதும் 06 பாடசாலைகளினதும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கும் அவசியமான துப்புரவேற் பாட்டுத் தேவைகளை அடைவதற்கான உரிய தரத்தினைக் கொண்ட துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள 10 முன்பள்ளிகளினதும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு இத்திட்டத்தின் கீழ் முன்மொழி யப்பட்டுள்ளது. 762 வீட்டு மலசலகூட அலகுகளில் 562 பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 06 பாடசாலைக ளுக்கும் 10 முன்பள்ளிகளுக்கான துப்புரவேற்பாட்டு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மேற்படி இலக்கை அடையப்பெறும் நோக்கத்துடன், இலங்கை அரசாங்கம் ரூபா 18.5 மில்லியன் தொகையை நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சுக்கு ஒதுக்கியுள்ளது.

# நிலக்கீழ் நீர்

நிலக்கீழ் நீர் பிரிவானது மத்திய மயப்படுத்தப்பட்ட புலனாய்வுப் பிரிவுடன் மாகாண ரீதியில் பகிரப்பட்ட ஒன்பது பிராந்திய நிலக்கீழ் நீர் அலகுகளுடன் செயற்பட்டு வருகின்றது.

2014 ஆம் ஆண்டினுள், நிலக்கீழ் நீர் செயற் பாடுகளுடன் தொடர்புடைய பணிகளாக, ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடப்பட்ட கிணறுகளை நிர்மாணித்தல், நீரோட்டம் மற்றும் கிணறுகள் பற்றிய மதிப்பீடு, ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடப்பட்ட கிணறுகளை நீர் பாய்ச்சி சுத்தமாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல், கைப்பம்பிகள் மற்றும் உலோக நீக்கப் பொறி களைப் பொருத்துதல், கைப்பம்பிக் குழாய்க் கிணறுகளின் திருத்தங்கள் மற்றும் புனரமைப்பு, கைப்பம்பி குழாய்க் கிணறுகளின் பராமரி புக்கான 3 மட்டங்களிலான முறைமை களை நடைமுறைப்படுத்தல், கற்பாறை தோற்றப்பாடு கள் மற்றும் நீரோட்ட அளவீடுகள், நிலக்கீழ் நீர் கற்கைகள் மற்றும் கண்காணிப்பு ஆகியன மேற்கொள்ளப்பட்டன. 2014 ஆம் ஆண்டினுள் ஒருசில நிலக்கீழ் நீர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

மேற்படி செயற்பாடுகளின் கீழ் 687 நீரியல் பரி சோதனைகள், 302 துளையிடல்கள் (ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடப்பட்ட கிணறுகள்), 112 கைப்பம்பி பொருத்தல்கள், 845 கைப்பம்பிக் குழாய் கிணறுத் திருத்தங்கள் மற்றும் புனரமைத்தல்கள், 427 நீர் பாய்ச்சி சுத்தம் செய்தல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், 221 பம்பிப் பரிசோதனைகள், 6 நீர் பீற்றுவிசை செயற்பாடுகள், 2 கற்பாறை தோற்றப்பாடுகள், 3 நீர் பாய்ச்சல் அளவீட்டு நடவடிக்கைகள் ஆகியன 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.

## ஆண்டினுள் இடம்பெற்ற பொதுப் பிரச்சினைகள்/ விசேட நிகழ்வுகள்

ஆண்டின் வரட்சிக் காலகட்டத்தினுள் 62 புதிய கைப்பம்பிகள் பொருத்தப்பட்ட கிணறுகளை நிர்மாணித்தல், கைப்பம்பி பொருத்தப்பட்ட கிணறுகளின் 774 திருத்தங்கள், மற்றும் 6 புனரமைப்புகள் மற்றும் 318 ஆழமான கிணறுகளை நீர் பாய்ச்சி துப்புரவு செய்தல் ஆகியன பூர்த்தி செய்யப்பட்டன. நீர் தரத்தையும் அதேபோன்று நீரின் அளவையும் உயர்த்துவதற்காக ஆறு CBO களால் பராமரிக்கப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களில் CEAயுடன் இணைந்து நீர் இறங்கல் முகாமைத்துவச் செயற்பாடுகளில் ஈடுபடல்.



மினுவன்கொட நீர் வழங்கல் திட்டத்துக்கான நிலக்கீழ் நீர் அபிவிருத்திக்கான கிணறு நிர்மாணித்தல்;.

## புதிய/எதிர்கால ஈடுபாடுகள்.

இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக நிலக்கீழ் நீர் பம்பிக் கிணறுகளின் ஆயுட் காலம் படிப்படியாக குறைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆதலால், பம்பிக் கிணறுகள் மற்றும் பம்பி நீர் வழங்கல் திட்டங்களுக்கான கண்காணிப்புப் பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது. அத்துடன், நீரோட்டங்களை செயற்கை ரீதியாக மீள்செறிவூட்டுதல் தொடர்பிலான கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## வேறு முக்கியமான/தொடர்புடைய விடயங்கள்

நிலக்கீழ் நீர் பிரிவின் அனைத்து ஊழியர்களினதும் ஒத்துழைப்புடன் அலுவலக தோற்றத்தை மேம்படுத்தல் இடம்பெற்றது. TWIS இன் நிலக்கீழ் நீர் மற்றும் புலனாய்வுப் பிரிவின் ஆரம்பத் தரவுகளைப் பதிவு செய்வதற்காக இருப்பிலுள்ள தரவுத்தள தோற்றுவாய் மாற்றப்படடு புதிய தோற்றுவாய் உருவாக்கப்பட்டது. வாரியபொல நிலக்கீழ் நீர் பிரிவு “பாதுகாப்பான வேலைத்தலம்” சிறப்புச் சான்றிதழை பெற்றது.

## சமூகவியல் செயற்பாடுகள்

### சமுதாய தேவைகள் மற்றும் எதிர் பார்ப்புகளை பிரதிபலிக்கின்ற வகையில் கருத்திட்டங்களை மதிப்பிடல்

• நகர நீர் வழங்கல் திட்டங்களின் திட்ட மிடல்களின்போது மற்றும் முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது நலன்பெறுனர்கள் ஈடுபடுவதற்கான மூலோபாயங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. பிராந்திய உதவி நிலையங்கள் தொடர்பிலான சமூக பொருளாதார தாக்கங்கள் பற்றிய கற்கைகள் பூர்த்தி செய்யப பட்டுள்ளன.

• ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் PAC அறிக்கையின் சமூக பொருளாதார பகுதியை மதிப்பீடு செய்தல் மற்றும் அவசியங்களையும் தேவைப்பாடுகளையும் நியாயப்படுத்தல்.

• வடக்கு, சப்பிரகமுவ, கிழக்கு, ஊவா, தெற்கு மற்றும் மத்திய பிராந்திய உதவி நிலையங்களுக்கான சாத்தியக்கூறுக் கற்கைகளின் சமூக பொருளாதார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

• நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டங்கள் தொடர்பிலான தீர்மானங்களில் தலையீடு செய்யும் நோக்கத்துடன் அபிவிருத்தி நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் உள்;ராட்சி சபைகளில் மக்களின் முனைப்புடனான ஈடுபாட்டையும் பங்கேற்பையும் மேம்படுத்தல். (BOPA கருத்திட்டம், தெற்கு பிராந்திய உதவி நிலையம், சப்பிரகமுவ பிராந்திய உதவி நிலையம்)

### நீர் பாதுகாப்புத் திட்டம் (WSP) மற்றும் நீர் தரக் கண்காணிப்பு (WQS)

நீர் வழங்குனர்கள் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற நீரின் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொறுப்புக்கூறவேண்டியவர்களாவர். நீர் பாதுகாப்புத் திட்டத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளில் சமூக வியலாளர்களின் வகிபாகமானது, ஒவ்வொரு நீர் வழங்கல் கருத்திட்டத்தினதும் இடர்களையும் ஆபத்துக்களையும் மதிப்பிடுவதில் முக்கியமான தாயுள்ளது.

• நீர் பாதுகாப்புத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் உதவியளிக்கப்பட்டது.

• நீர் பாதுகாப்புத் திட்டம் தொடர்பில் பகிரங்க விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன.

• நீரேந்து பிரதேச முகாமைத்துவ நடவடிக் கைகளை நடைமுறைப்படுத்துவதில் உதவியளிக் கப்பட்டது.

• நீரேந்து பிரதேச முகாமைத்துவம் தொடர்பில் சமுதாய கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள் ளப்பட்டன.

நீர் வழங்கல் கருத்திட்டங்களின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் துரிதப்படுத்துவதற்குமாக தரப்பினர்களுக்கும் நீர் வழங்கல் கருத்திட்ட குழு வினருக்கும் விழிப்புணர்வூட்டல்களை வழங்குதல் முக்கியமாகும். ஆதலால்,

• O&M முகாமையாளர்களையும் RWS அலகுகளையும் இணைப்பாக்கம் செய்ததன் மூலம் WSP நடவடிக்கைகளுக்கு வசதியேற்பாடு செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமாக WQS மற்றும் WSP தொடர்பிலான தேசிய மதியுரைச் செயலமர்வுகள் குறித்த தரப்பினர் களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டதோடு உதவிச் சேவைகள் வழங்கப்பட்டன.

• எஹலியகொட மற்றும் கண்டியிலுள்ள ஒவ்வொரு RSC களிலிருந்தான WSP களினதும் மதிப்பீட்டாளர்களுக்கு நீர் பாதுகாப்புத் திட்டம் தொடர்பிலான சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பூட்டான் மற்றும் நேபாளத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

• மேற்கு பிராந்திய உதவி நிலையங்களின் நகர நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் CBO க்களுக்காக நீர் தரக் கண்காணிப்பு படிவங்கள் தயாரிக்கப்பட்டு பிரச்சினைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

• மேற்கு பிராந்திய உதவி நிலையங்களில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலான நீர் தர கண் காணிப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டு நீர் தர கண் காணிப்பு தொடர்பிலான கூட்டங்கள் நடத்தப்பட்டன.

• தெற்கு பிராந்திய உதவி நிலையத்தின் கீழ் உள்ள சமுதாய அடிப்படையிலான அமைப்புகளில் சமுதாய அணிதிரட்டல் நடைமுறையுடன் கூடியதாக நீர் தரம் தொடர்பிலான பிரச்சினைகள், நீர் பற்றாக்குறை, தொழில்நுட்ப மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

• அரச அலுவலகளின் உதவியோடும் (மத்திய, சப்பிரகமுவ, தெற்கு பிரதேச சேவை நிலையங்கள்) தரப்பினர்களின் பங்குபற்றுதலுடனும் மூன்று மாதங்களுக்கு ஒரு தடைவ WQS கூட்டங்கள் நடத்தப்பட்டன.

• தங்கல்ல நீர் வழங்கல் திட்டத்தை தெரிவு செய்து அம்பாந்தோட்டை மாவட்டத்தில் WSP நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டதோடு தெற்கு பிராந்திய உதவி நிலையத்தில் WSP தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்புணர் வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப் பட்டதுடன் கள விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டன.

• தென்மாகாண WSP குழு மற்றும் மாவட்ட மட்ட WQS குழு ஸ்தாபிக்கப்பட்டது.

## சமுதாய முகாமைத்துவ நீர் வழங்கல் திட்டங்களின் திட்டமிடலும் வசதியேற்பாடு செய்தலும்

• சமுதாய அடிப்படையிலான அமைப்புகளால் முகாமை செய்யப்படுகின்ற திட்டங்களில் தொழிற் பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. பௌதீகப் பண்புகள் தொடர்பிலான தரவுகள் மற்றும் தகவல்களை தயாரித்தல் மற்றும் பராமரித்து வருதல், பொருளாதாரக் கண்ணோட்டம், சமூக உட்கட்டமைப்பு, மக்கள் பரம்பல், ஆண், பெண் சமூகநிலைப் பிரச்சினைகள், வறுமை, பிராந் திய சமூகவியலாளர்களின் உதவியுடன் பிராந்திய மட்டத்தில் பொறிமுறையொன்றைத் ஸ்தாபிப்பதன் மூலம் தேசிய மட்டத்தில் அரச சார்பற்ற அமைப்பு கள் துறையின் பலம் மற்றும் இயலளவு, அத்துடன் கிராமிய நீர் வழங்கல் துறையின் கீழ் வெளிப் படுத்தல் விஜயங்களை மேற்கொள்வதன் ஊடாக சமுதாய அடிப்படையிலான அமைப்புகளால் முகாமை செய்யப்படுகின்ற திட்டங்களில் வலை யமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

## இயலுமை வளர்ச்சியும் பயிற்சியும்

• தலைமை அலுவலகத்திலுள்ள சமூகவியலாளர் களுக்கு சில விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

## சமுதாய சேவை ஈடுபாட்டு நடைமுறை

• பாவனையாளர்களிடமிருந்து நீர் கட்டணப் பட்டியல் நிலுவைகளை சேகரிப்பதற்கான நடமாடும் சேவை/அழைப்பு முறைமையை நடத்துதல், மேற்கு பிராந்திய உதவி நிலையத்தில் நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்காக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

• மேற்கு பிராந்திய உதவி நிலையத்தில் தெஹிவலை மற்றும் மொரட்டுவையின் குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புகளில் வீதி நாடகங்கள் நடத்தப்பட்டன.

• மத்திய பிராந்திய நிலையத்தில் சுகாதார கண்ணோட்டம், அபிவிருத்திப் போக்கு மற்றும் சுற்றாடல் ரீதியில் கவனம் செலுத்துதல் ஊடாக உத்தேச கருத்திட்ட பிரதேசத்தின் சமூக பொருளாதார நிலைமைகள் தொடர்பில் குறிப்பாக அத்தியாயம் 3 முதல் 5 வரையிலான முன் சாத் தியப்பாட்டு அறிக்கையை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பு செய்ததன் மூலம் உதவியளிக்கப்பட்டது.

• மத்திய பிராந்திய உதவி நிலையத்தின் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தரப்பினர்களுடன் நீர் தரக் கண்காணிப்புக் கூட்டங் கள் நடத்தப்பட்டதோடு இணைப்பாக்கம் செய்யப் பட்டது.

• மத்திய பிராந்திய உதவி நிலையத்தில் நீரேந்து பிரதேச முகாமைத்துவம், நீரை சேமித்தல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் பாடசாலை விழிப் புணர்வூட்டல் மற்றும் கிராமிய அடிப்படையிலான அமைப்புகளை விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

• மத்திய, தெற்கு மற்றும் சப்பிரகமுவ பிராந்திய உதவி நிழலையங்களின் பிரதேச செயலகங்களின் அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், இயசாயனவியலாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

• யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் கருத்திட்ட பணியாளர்களுக்கும் தரப்பினர்களுக்கும் “ஆண், பெண் சமூகநிலை செயற்பாட்டுத் திட்டம் - 2014” தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

• கிராம மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்பான சேவாலங்காவுடன் சேர்ந்து சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வூட்டல், நீரை பேணிப் பாதுகாத்தல்

மற்றும் சுற்றாடல் பேணல் பற்றிய விழிப்புணர்வூட்டல் தொடர்பில் இணைப்பாக்கம் செய்தலும் ஒழுங்கு செய்தலும் மேற்கொள்ளப்பட்டது. (யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம்)

• சுகாதாரம், நீரைப் பேணிப் பாதுகாத்தல், சுற்றாடல் பேணல் தொடர்பில் பத்திரங்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் குடைகளை தயாரித்து பகிர்ந்தளித்தலை அரச சார்பற்ற அமைப்புகளுடன் நேர்ந்து இணைப்பாக்கம் செய்யப்பட்டது. (யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம்)

## பாவனையாளர் கவனிப்பு

• நிறுவன அபிவிருத்தி தொடர்பிலான விடயங்களைக் கலந்துரையாடுவதற்கான மாதாந்த கூட்டங்களை நடத்தும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலும் தர வட்டம் தாபிக்கப்பட்டது.

• WASH செயற்பாடுகள் தொடர்பில் பாவனையாளர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும் பொருட்டு துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டன. (மேற்கு பிராந்திய உதவி நிலையம்)

## சேவை உள்ளடக்க மேம்பாடு

• ஒவ்வொரு பிராந்திய உதவி நிலையத்தினதும் சேவை உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

• 400,000 நீர் இணைப்புக் கருத்திட்டங்களின் OICs களுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதில் பங்கேற்றல்.

## வருவாயற்ற நீரைக் குறைத்தல்

நீர் வளங்கள் பற்றாக்குறையின் காரணமாக உலகில் நீர் பெறுமதியானதொரு வளமாக மாறி வருகின்றது. நீர் வளங்களை பாதுகாத்தலும், தொடர்ச்சியான முகாமைத்துவ நடைமுறைகளின் ஊடாக நீர் வளத்தை சேமித்தலும் உலகளாவிய தேவையாக காணப்படுகின்றது. உண்மை யாதெனில், குழாய்களின் சீர்குலைவுகள், குழாய் திருத்த வேலைகளின் தரக் குறைவான தன்மை, தரக் குறைவான பொருட்கள், தரக் குறைவான பொருத்துதல்கள் மற்றும் வேலையாட்கள், தரக் குறைவான நிர்மாணிப்பு நடைமுறைகள், அனுமதியற்ற நுகர்வு மற்றும் பொது நீர்க் குழாய்கள் காணப்படுதல் ஆகியன இலங்கையில் அதிக சதவீதத்திலான வருவாயற்ற நீருக்கு காரணமாக அமைவதால் உற்பத்தி செய்யப்படுகின்ற நீரின் அளவு வருமானத்தை உருவாக்குவதில்லை. வருமானத்தை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்யாத நீரைப் பாதுகாப்பதில் பெரும் வகிபாகத்தை வகிக்கின்ற வருவாயற்ற நீர் பிரிவின் மீது இதன் பொறுப்புச் சுமத்தப்படுகின்றது. எமது வளங்களை சேமிப்பதன் மூலம் மேற்கு மத்தியில் வசிப்பவர்களுக்கு சமமானதும் நம்பகத்தன்மை யானதுமான குடிநீர் வசதிகளை வழங்குவதன் மூலம் 2020 ஆம் ஆண்டில் வருவாயற்ற நீரை மேற்கு மத்திய பிரதேசத்தில் 30% க்கு குறைவாகவும் கொழும்பு நகரத்தில் 18% க்கு குறைவாகவும பேணிவருவதற்காக கட்டணமற்ற அங்கீகரிக்கப்பட்ட நீர் நுகர்வு மற்றும் அனுமதியற்ற நீர் நுகர்விலிருந்து உருவாகின்ற இழப்பை குறைத்தல் தொடர்பில் பிரதி பொது முகாமையாளர் (மேல் - மத்திய) பிர தேசத்தில் செயற்படுகின்ற வருவாயற்ற நீர் பிரிவு கவனம் செலுத்தி வருகின்றது.

### 1.0 அறிமுகம்

புதிய குடியிருப்புகள் மற்றும் வர்த்தகக் கட்டிடங்கள் தொடர்ச்சியாக நிர்மாணிக்கப்பட்டு வருவதால் கொழும்பு நகர்சார் பிரதேசங்களில் நீருக்கான கேள்வி படிப்படியாக அதிகரித்து வருகின்றது. நவீன வாழ்க்கைமுறையுடன் சேர்ந்து நீர் நுகர்வு முறை மாற்றமடைந்து வருதல் கேள்வி அதிகரிப்புக்கான ஒரு காரணியாகும். எனவே விரைவாகக் குறைந்து வருகின்ற இருப்பிலுள்ள வளங்களைக் கொண்டு கேள்வியை நிறைவு செய்தல் ஒரு சவாலாகும். இலவச நீர் குழாய்களின் ஊடாக இடம்பெறுகின்ற நீர் இழப்பைக் குறைத்தல், நீரின் அனுமதியற்ற நுகர்வைக் குறைத்தல் மற்றும் வருவாயற்ற நீரைக் குறைத்தல் தொடர்பில் கொள்கைகளை வகுத்தல் தொடர்பில் வருவாயற்ற நீர் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது. இந்த அணுகுமுறையின் கீழ் குறிப்பிடத்தக்களவு சாதனைகள் அடையப் பெற்றுள்ளன. கொழும்பு நகர் பிரதேசத்தில் உள்ள அனைத்து இலவச பொது நீர் குழாய்களுக்கும் மானிகள் இடப்பட்டுள்ளன. தற்போது இந்த மாற்றத்தின் மூலமான மாதாந்த வருமானம் அண்ணளவாக ரூபா 0.6 மில்லியனாக உள்ளது. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் குறைந்த சேவையைப் பெறுகின்ற குடியிருப்புகளில் கட்டணம் அற விடப்படாத அனுமதியற்ற நுகர்வு இருக்காது.

தே.நீ.வ.வ.சபையின் வளங்களைப் பயன்படுத்தி வருவாயற்ற நீருக்கான முகாமையாளர் கைநூல் அபிவிருத்தி செய்யப்பட்டது. இது பல தசாப் தங்களாக நிலைபேண்தகு தன்மையை முன்னிட்டு பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட முழுச் சபையினதும் நன்மைக்கான சர்வதேச தரத்தைக் கொண்டதாகும்.

பிரதேசவாரியாக வருவாயற்ற நீர் கண்காணிப்பு ஆரம்பிக்கப்பட்டதோடு, ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வருவாயற்ற நீர் கணிப்பீடு மேற்கொள் ளப்படுகின்றது. இரவு கால அவதானிப்புகளை மேற்கொண்டு கசிவுகளைக் கட்டுப்படுத்தல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதோடு வாரத்தின் கடமை நாட்களில் ஏறத்தாழ 300 கட்புல கசிவுகள் அடையாளம்காணப்பட்டதோடு கண்டுபிடிப்புக ளுக்காக அதிக பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

தே.நீ.வ.வ.ச.யின் வளங்களைப் பயன்படுத்தி ஊடக பிரசாரத்திற்காக முன்மொழிவுகள் வழங்கப் பட்டுள்ளன. கொழும்பு நகரத்தின் வருவாயற்ற நீர் வீதம் 2008 இல் 53% இல் இருந்து 2014 இல் 46% வரை குறைவடைந்துள்ளமை முன்னேற்றகரமான குறைவைக் காட்டுகின்றது.

### 2.0 குறைந்த வருமானம் பெறும் தோட்டக் குடியிருப்புகளுக்கான நீர் வழங்கல் (USS)

### 2.1 ரன்திய நிகழ்ச்சித்திட்டம்

பொது நீர்க் குழாய்களின் இணைப்பைத் துண்டித்தல் மற்றும் சலுகை அடிப்படையில் தனிப்பட்ட இணைப்புகளை குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்குதல் “ரன்திய” நிகழ்ச்சித்திட்டம் என அழைக்கப்படுகின்றது.

தனியான நீர் இணைப்புகளைப் பெறுவதிலுள்ள நன்மை யாதெனில், சுகாதார நிலைமை மேம் பாடடைதலும் வாழ்க்கைத் தரம் உயர்வடை தலுமாகும். 2014 ஆம் ஆண்டினுள் 70

பொதுக் குழாய்கள் துண்டிக்கப்பட்டு 698 இணைப்புகள் வழங்கப்பட்டன. 1990 முதலட இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 884 குறைந்த வருமானம் பெறும் தோட்டக் குடியிருப்புகளில் வசிக்கின்ற அண்ணளவாக 23,900 குடும்பங்கள் நன்மைபெற்றன.

## 2.2 பாவனையாளர் சங்கம் (கட்டணமற்ற அங்கீகரிக்கப்பட்ட நீர் பாவனையை குறைத்தல் - இலவச நீர்)

நீர் மானிகளைப் பொருத்துவதன் மூலம் மேற்படி பொது நீர் குழாய்களிலிருந்தான நுகர்வை அளவிடுவதற்கான புதியதொரு நிகழ்ச்சித்திட்டம் 2011 இல் ஆரம்பித்துவைக்கப்பட்டதோடு, பாவனையாளர்களை இனங்காண்கின்ற மற்றும் குழாய்களை பராமரிக்கின்ற சங்கங்களும் அமைக்கப்பட்டன. நீர் பாவனைக்கு பெயரளவிலான கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இந்நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட சங்கங்களிலிருந்து மாதத்திற்கு 147,900 கன மீற்றர் பாவனைக்கான மாதாந்த கட்டணப் பட்டியல்கள் கிடைக்கப்பெற்றதோடு, இது கொழும்பின் நீர் பாவனையில் 5% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**கட்டணமற்ற அங்கீகரிக்கப்பட்ட நீர் பயன்பாட்டைக் குறைத்தல்**




## 3.0 அங்கீகாரமற்ற நீர் பயன்பாட்டைக் குறைத்தல்

அங்கீகாரமற்ற நுகர்வை இனங்காண்பதற்கு பல்வேறான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளைப் பரிசோதித்தல், திட்டமிடப்பட்டவாறு தெரிவு செய்யப்பட்ட வர்த்தக ரீதியிலான இடங்களை அங்கீகாரமற்ற நீர் பயன்பாடு தொடர்பில் பரிசோதித்தல், முழுக் கொழும்பு நகரத்தையும் உள்ளடக்குகின்றவாறு திட்டமிடப்பட்ட செயல் முறையின் கீழ் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் அனைத்து வளவுகளையும் பரிசோதித்தல் ஆகியன பிரயோகிக்கப்பட்ட ஒருசில முறைகளாகும்.

2014 ஆம் ஆண்டினுள் மாத்திரம் 1,521 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூபா 54.77 மில்லியன் அறவிடப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்ட 75 இடங்களில் ரூபா 100,000/- க்கு மேற்பட்ட தொகை செலுத்தப்பட்டு ரூபா 22 மில்லியன் ஈட்டப்பட்டது.

| அங்கீகாரமற்ற நீர் பாவனையை கண்டுபிடித்தல் | | | | |
|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 |
| பரிசோதிக்கப்பட்ட வளவுகள் (எண்ணிக்கை) | 21,994 | 13,619 | 13,343 | 12,812 |
| கண்டுபிடிக்கப்பட்ட இணைப்புகள் (எண்ணிக்கை) | 1,477 | 1,166 | 1,166 | 1,512 |
| அறவிடப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | 56.23 | 43.23 | 69.64 | 54.77 |

## 4.0 வருவாயற்ற நீர் முகாமைத்துவம்

கொழும்பு நகரத்தில், முக்கியமான சில பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு மூடிவிடப்பட்ட எல்லைகள் தாபிக்கப்பட்டதன் பின்னர் நீர்ப் பாய்ச்சல் மற்றும் அழுத்த அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. கட்புலனாகின்ற கசிவுகளை அடையாளம்காணும் பொருட்டு இரவுகால பரிசோதனைகள், மதகுப் பரிசோதனைகள் மற்றும் வீட்டுக்கு வீடு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி பிரதேசங்களில் வருவாயற்ற நீர் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டது. மேற்படி நடைமுறையில் பின்வரும் செயற்பாடுகளும் உள்ளடங்கியிருந்தன.

- கசிவுகளை இனங்காணல்
- நீர்ப் பாய்ச்சல் மற்றும் அழுத்த அளவீடு
- ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பிரதேச பொறியியலாளர் வாரியாக வருவாயற்ற நீரை கண்காணித்தல்
- அமைவிட நிலக்கீழ் தகவல்கள்
    - I. வால்வு அமைவிடங்களை இனங்காணல்
    - II. நிலக்கீழ் நீர் குழாய்களை இனங்காணல்
- பல்வேறு அணுகுமுறைகளின் ஊடாக கசிவுகளை மதிப்பாய்வு செய்தல்

## 5.0 வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீர் குறைப்பின் கீழ் கொழும்பு நீர் வழங்கல் சேவை மேம்பாட்டுக்கருத்திட்டத்தின் முனைப்புடனான பங்களிப்

பயன்படுத்தும் நோக்கத்தில் அறிவுப் பகிர்வு, கற்றல் மற்றும் பயிற்சிக்கான இயலுமை மேம்பாடு ஆகியவற்றை பொறுத்தவரை முக்கியமாகும்.

இச் சூழமைவினுள் புதிய மூலோபாயங்கள் தழுவப்பட்டதன் மூலம் 2008 இல் 54% ஆக காணப்பட்ட வருவாயற்ற நீர் 2014 இல் 46% ஆக குறைக் கப்பட்டது.

## 6.0 சாதனைகள்

- வருவாயற்ற நீர் வீதத்தின் தொடர்ச்சியான கண் காணிப்பின் பொருட்டு பிரதேச பொறியியலாளர்கள் ஸ்தாபிக்கப்படுதல்

- கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீர் 46% ஆக குறைக்கப்படுதல்

- குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புகளில் கட்டணமற்ற அங்கீகரிக்கப்பட்ட நீர் பாவனை ஒழிக்கப்படுதல்

- இலவசமான பொது நீர் குழாய்கள் வருமானம் ஈட்டுபவையாக மாற்றப்பட்டதன் மூலம் ஆண்டு தோறும் ரூபா 7 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை மேலதிக வருமானம் ஈட்டப்படுதல்

- 2007 இல் தயாரிக்கப்பட்ட "குத்தகைக் குடியிருப்புத் தோட்டங்கள் பெயர்ப் பட்டியல்" இற்றைப் படுத்தப்படல்

- கொழும்பு நகரத்தில் முறைமை அழுத்த மேம்பாடு

## வலுசக்தி முகாமைத்துவம்

தே.நீ.வ.வ.ச. பிரதானமாக நீர் சுத்திகரிப்பு மற்றும் நீர் இறைத்தல் நடவடிக்கைகளுக்கான மின்சாரத்தின் பொருட்டு வருடாந்தம் ரூபா 3.6 பில்லியனை செல விடுவதோடு, தே.நீ.வ.வ.சபையானது மின்சார சபையின் மிகப் பெரிய வாடிக்கையாளராகவும் உள்ளது.

தே.நீ.வ.வ.சபையின் வலுசக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமானது உறுதியான முன்னேற்றத்தை அடைந்துள்ளதோடு கடந்த சில ஆண்டுகளாக செயற்பாடுகள் தர ரீதியிலும் அளவு ரீதியிலும் உயர் மட்டத்திற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது. தே.நீ.வ.வ.ச.யின் வலுசக்தி முகாமைத்துவத்திற்கான அனைத்து வித வலுசக்திக் கணக்காய்வுகளையும் மேற்கொள்வதற்கான வலுசக்தி அளவீட்டுக் கருவிகளை இயந்திரவியல் மற்றும் மின்னியல் சேவைகள் பிரிவு முழுமையாகக் கொண்டுள்ளது.

அறவீட்டு வகை திருத்தங்களின் மூலமான சேமிப்புகள், முதன்மையான இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள் மற்றும் கடந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ஏனைய வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதன் மூலம் உயர் திரட்சியிலான வலுசக்தி மற்றும் செலவின சேமிப்பு நடைபெற்றது. 5 ஆண்டுகளை விட பழைமையான நடைமுறைப் படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் நீக்கப்பட்டதன் பின்னர் 2004 முதல் 2014 வரை வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக வருடாந்த சேமிப்பு தொடர்ந்தும் ரூபா 366.8 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் 28 நீர் வழங்கல் திட்டங்களில் வலுசக்திக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, வலுசக்திக் கணக்காய்வு விதப்புரைகளின்படி மதிப்பிடப்பட்ட முதலீடான ரூபா 69.5 மில்லியனை முதலீடு செய்வதன் மூலம் வருடாந்தம் மதிப் பிடப்பட்ட ரூபா 17.65 மில்லியன் வலுசக்தியை சேமிக்கலாம்.

2014 ஆம் ஆண்டில் வலுசக்தி சேமிப்பு செயற்பாடுகளுக்கான விசேட நிதி ஒதுக்கீடாக ரூபா 107.5 மில்லியன் ஒதுக்கப்பட்டமை தே.நீ.வ.வ. சபையின் வலுசக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அடையப்பெற்ற பாரியதொரு சாதனையாகும். 2014 ஆம் ஆண்டினுள் ரூபா 106.8 மில்லியன் பெறுமதியான முதலீட்டுக் கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் மொத்தம் 59.2 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டு பதிநான்கு (14) வலுசக்தி வினைத்திறன் மேம்பாட்டு கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக வருடாந்தம் ரூபா 30.7 மில்லியன் சேமிக்கப்படும். இது இயந்திரவியல் மற்றும் மின்னியல் சேவைகள் பிரிவு மற்றும் பிரதேச இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு ஆகிய இரண்டினதும் வலுசக்தி வினைத்திறன் முன்னெடுப்புகளை உள்ளடக்கியதாகும்.

மேற்படி வருடாந்த சேமிப்புகளுக்கு மேலதிகமாக, ரூபா 104.7 மில்லியன் பெறுமதியான மேலும் 21 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் கட்டத்தில் உள்ளதோடு, இதன் பெறுபேறாக வருடாந்தம் ரூபா 27.18 மில்லியனை சேமிக்கலாம். மேற்படி 21 கருத்திட்டங்களையும் 2015 ஆம் ஆண்டின் 2வது காலாண்டினுள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க் கப்படுகின்றது.

தே.நீ.வ.வ.ச.யின் மேலுமொரு மிகப் பாரிய வலுசக்தி முதலீடான ரூபா 90 மில்லியன் முதலீட்டின் மூலம் ரூபா 8.9 மில்லியன் வருடாந்த வலுசக்தி சேமிப்பை மேற்கொள்ளக் கூடியதான கெத்ஹேன/பேருவளை பம்பி பதிலீடு செய்தல் மற்றும் பம்பி நிலையத் திட்ட அமைப்பை மீள்ஏற்பாடு செய்கின்றதான கருத்திட்டம் நடைமுறைப்படுத்தல் கட்டத்தில் உள்ளது.

வலுசக்தி தரநியம நிகழ்ச்சித்திட்ட அறிமுகப்படுத்தலின் மூலம் வலுசக்தி மேம்பாட்டு செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு ஏற்கனவே முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. புதிய முன்மொழிவுகளுக்கான வலுசக்தி தழுவல் நிகழ்ச்சிட்டம் மற்றும் தே.நீ.வ.வ. சபையின் பணியாளர்களுக்கான வலுசக்தி விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடல் கட்டத்தில் உள்ளன.

## வழங்கல் மற்றும் பண்டகசாலை முகாமைத்துவம்

தே.நீ.வ.வ.சபையின் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த தொழிற்பாட்டில் வழங்கல் மற்றும் பண்டகசாலை முகாமைத்துவமானது மிக முக்கியமானதொரு விடயமாகும். தே.நீ.வ.வ.சபையின் தொழிற்பாட்டுக்குத் தேவையான பொருட்கள் தயார் நிலையில் உள்ளதோடு பொருட்களின் கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தலைப் பொருத்தவரை சரியான கொள்வனவுக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கடைப்பிடித்து வருகின்றது.

எவ்விதத் தடையுமின்றி நாடளாவிய ரீதியில் தே.நீ.வ.வ.சபையின் மிருதுவான செயற்பாட்டுக்குத் தேவையான இரசாயனங்கள் மற்றும் இணைப்புப் பொருட்களை எம்மால் வழங்க முடியுமாயிருந்தது. மேலும், 400,000 இணைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் இணைப்புப் பொருட்களில் அண்ணளவாக 50%ஐ கொள்வனவு செய்வதற்கு எம்மால் இயலுமாயிருந்தது.

எமது களஞ்சியங்களில் உள்ள உயர் பெறுமதியைக் கொண்ட கையிருப்புகளை கவனத்திற்கொண்டு களஞ்சிய முகாமைத்துவ நடவடிக்கைகள் தலைமை அலுவலகத்தினாலும் உரிய பிராந்திய உதவி நிலையங்களாலும் நெருங்கியிருந்து மேற்பார்வை செய்யப்பட்டும் இணைப்பாக்கம் செய்யப் பட்டும் வந்தது. 2014 ஆம் ஆண்டினுள், வருடாந்த அகற்றல் நடைமுறையின் ஊடாக அநேகமான களஞ்சியங்களில் காணப்பட்ட உற்பத்தித் திறனற்ற கையிருப்புகளில் குறிப்பிடத்தக்க அளவை குறைத் துக்கொள்வதற்கு எமக்கு இயலுமாயிருந்ததோடு, அது ஏறத்தாழ 30 மில்லியன் ரூபாவாகும். ஏனைய பிராந்திய உதவி நிலையங்களில் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு வசதியான வாறு தே.நீ.வ.வ.சபையின் நாடு முழுவதிலுமுள்ள களஞ்சியங்களில் கிடைக்கக் கூடியதாயுள்ள பயன்படுத்தப்படாத பொருட்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய இறுவட்டு (CD) மற்றும் சிறு நூலொன்றை தயாரித்து விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளையும் நாம் மேற்கொண்டோம்.

தே.நீ.வ.வ.சபையின் பிரதான களஞ்சியம் மத்திய களஞ்சியமாக செயற்படுவதோடு 2014 ஆம் ஆண்டினுள் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

## பொல்பித்திகமவில் குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடிநீர் மற்றும் சமையல் நோக்கங்களுக்காக பாதுகாப்பான நீர் வழங்கல்

30 குழிக் கிணறுகள், 4 குழாய்க் கிணறுகள் மற்றும் ஒரு நீரூற்றிலிருந்து ஏறத்தாழ 500 குடும்பங்களுக்கு அரச சார்பற்ற அமைப்புகளால் குழாய் நீர் வழங்கப்படுகின்ற ஒரு பிரதேசத்தை இக்கற்கை உள்ளடக்குகின்றது. இந்த ஆராய்ச்சியின் இலக்கு யாதெனில், மேலே குறிப்பிடப்பட்ட 35 நில நீர் மூலங்களின் நீர் தரத்தை பற்றியும் குறிப்பிட்ட சமுதாயத்தினரின் சமூக முறையைப் பற்றியும் கற்கை செய்தலும் ஒப்பீடு செய்தலுமாகும். நீர் தரப் பரிசோதனையானது, பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் அளவீடுகளையும், கன உலோகம், ஆசனிக் மற்றும் சோடியம் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது. இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப் பட்ட செலவு ரூபா 0.6 மில்லியனாக காணப்பட்டது. இக்கற்கையின் கள வேலைகள் பூர்த்தி செய் யப்பட்டதோடு, அறிக்கை எழுதுதல் ஆரம்ப கட்டத்தில் உள்ளது. பரிசோதனைப் பெறுபேறுகள் கையடக்க நீர் தர எல்லையான SLS 614-1983 உடன் ஒப்பீடு செய்யப்பட்டது.

## வடமேல் மாகாணத்தில் குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயை குறைப்பதற்காக மழை நீர் சேகரிப்பு

சேவை வழங்கப்படாத சமுதாயங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு உதவும் முகமாக மழை நீர் சேகரிப்பு மற்றும் பவுசர் மூலம் வழங்கப்படுகின்ற சுத்திகரிக்கப்பட்ட நீர் ஆகியவற்றை தே.நீ.வ.வ.சபை முன்மொழிகின்றதோடு, முன்னோடி நடவடிக்கையாக பொல்பித்திகம பிரதேசத்தில் வசிக்கும் நோயாளர்களுக்கு 2000 லீற்றர் கொள்ளளவைக் கொண்ட 154 பிளாஸ்ரிக் தாங்கிகள் 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இக்கருத்திட்டத்துக்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 10.91 மில்லியனாகும். இக்கருத்திட்ட மானது, நிலைபேண்தகு தன்மையை உறுதி செய்வ தற்காக திட்டமிடப்பட்ட கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பின்தொடர் நடவடிக்கையையும் உள்ளடக்குகின்றது. 154 மழை நீர் தாங்கிகளை பொருத்துதல் பூர்த்தியடைந்துள்ளதோடு, மழை நீர்த் தரம் உள்ளடங்கலாக நீர் தரப் பகுப்பாய்வு நடைபெற்று வருகின்றது. முன்மொழிவின் பிரகாரம் நீர் தரப் பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின்னர் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



பொல்பித்திகமவில் மழை நீர் சேகரிப்பு முன்னோடித் திட்டம்

## இலங்கையில் வீடு சார்ந்த நீர் சுத்திகரிப்புக்காக (HWT) திரவ சோடியம் ஹைபோகுளோரைட் (NaOCl) இரசாயன தொற்றுநீக்கி

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவானது, முன்னோடி அடிப்படையில் தொற்று நீக்குவதற்காக NaOCl ஐ பயன்படுத்துதல் தொடர்பில் ஆட்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக வீடு சார்ந்த கள ஆய்வொன்றை மேற்கொண்டது. ஆரம்ப நடவடிக்கையாக, பாதுக்க, அகுரெஸ்ஸ, கலிகமுவ மற்றும் வவுனியா பிரதேசங்களில் குடிநீர் நோக்கத்துக்காக கிணற்று நீரை மாத்திரம் பயன்படுத்துகின்ற 20 வீடுகளில் கள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் நுண்ணுயிர் பரிசோதனைகளுக்காக ஆய்வுகூட மட்டத்தில் தயாரிக்கப்பட்ட வீடு சார்ந்த NaOCl திரவம் கள மட்டத்தில் பரிசோதிக்கப்பட்டது. நான்கு கள விஜயங்களின்போது நீர் தரத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்தைப் பயன்படுத்தி NaOCl தொடர்பிலான பாவனையாளர் அபிப் பிராயங்கள் பெறப்பட்டன. கள ஆய்வு மற்றும் நீர் தர பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டது. கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபா 0.8 மில்லியனாகும். பொதுவாக அங்கே பரிசோதிக்கப்பட்ட கிணற்று நீரில் நுண்ணுயிர்களின் தரத்தில் மேம்பாட்டைக் காணக்ககூடியதாக இருந்தது.

## யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் கழிவு எண்ணையினால் மாசடைந்துள்ள நில நீர் தரத்தின் நிலைமை பற்றிய பகுப்பாய்வு தொடர்பான ஆராய்ச்சிக் கற்கை

சுன்னாகம் மின்வலு நிலையம் கழிவு எண்ணெய்யை நேரடியாகவே நிலத்தில் கொட்டியுள்ளதால் இது சுற்றிலுமுள்ள கிணறுகளின் நில நீருடன் கலந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

சுன்னாகத்தின் நீரோட்டங்களில் கழிவு எண்ணைய் எவ்வளவு தூரத்துக்கு ஊடுருவியுள்ளது என்பதை பற்றி ஆய்வு செய்தல் இந்த ஆராய்ச்சியின் குறிக்கோளாகும். கிணறு ஆய்வின் ஊடாக, மாசடைந்துள்ள இடத்திலிருந்து பல்வேறு தூரங்களைக் கொண்டதான அடிப்படையில், சுன்னாகம் மின்வலு நிலையத்தை சுற்றிலுமுள்ள பிரதேசங்களிலிருந்து முன்மொழிவின் பிரகாரம் 100 கிணறுகளின் அமைவிடங்கள் தெரிவு செய்யப்பட்டதோடு, மாசடைந் துள்ள பிரதேசத்தின் தூரத்தை கண்டறிவதற்காக மேலதிக 50 கிணறுகளின் அமைவிடங்கள் தெரிவு செய்யப்பட்டன. 2013 கார்த்திகை முதல் 2014 ஐப்பசி வரை மாத இடைவெளிகளின்படி 150 கிணறுகளிலிருந்து நில நீர் மாதிரிகள் பெறப்பட்டன. மொத்தம் 226 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நீர் மாதிரிகளின் பகுப்பாய்வு வடக்கு மற்றும் மத்திய பிராந்திய உதவி நிலையங்களின் ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்டது. மொத்த அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபா 2.71 மில்லியனாகும். வரைவு அறிக்கை உள்ளடங்கலாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## களட்டுவாவ மூல நீருக்கான முன் சுத்திகரிப்பு காரணியாக பொருத்தமான ஒட்சிசன் காரணி தொடர்பிலான ஆராய்ச்சிக் கற்கை

முன்குளோரினிடாது சேதனமற்ற பொருட்களின் ஒட்சிசனூட்டல் காரணிக்கான மாற்று முறையியலொன்றை கண்டறிவதற்கு இந்த முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு முன்சுத்திகரிப்பிற்காக ஒட்சிசனூட்டற் காரணியாக பொட்டேசியம் பர்மங்கனேட்டை (KMnO4) பயன்படுத்துதல். மொத்த அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபா 0.8 மில்லியனாகும். களட்டுவாவ நீர்த் தேக்கத்தின் நீர் தர மாற்றங்களை அறிவதற்கான தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டதோடு, அமோனியா, இரும்பு மற்றும் நிறம் போன்ற அளவீடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன. நீரிலுள்ள அமோனியா, இரும்பு மற்றும் மங்கனீசுக்களின் வித்தியாசமான மட்டங்களில் உயர்மட்ட செறிவைக் கண்டறிவதற்காக pH இன் வித்தியாசமான மட்டங்களுக்காக KMnO4 இன் வித்தியாசமான செறிவுகள் தீர்மானிக்கப்பட்டன. தொற்றுநீக்கி துணைஉற்பத்தியான தைஹலோமெதனீஸ் (THM) க்கான ஒன்பது நீர் மாதிரிகளின் பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டதோடு, எஞ்சியுள்ள பதினொரு மாதிரிகளும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன.

## செல்லிடத் தொலைபேசியின் ஊடாக குறிப்பிட்ட நீர்த் தேக்கங்களில் இணையத்தின் ஊடாக நீர் மட்டத் தரவுகளை தொலைவிலிருந்து பெறுதல் மற்றும் உயர்த்தப்பட்ட நில நீர்த் தேக்கங்களின் நீர் மட்டத்தைக் கண்காணிக்கின்ற முறை பற்றிய முன்னோடிக் கற்கை

மேற்படி முன்னோடிக் கற்கையின் பிரதானமான குறிக்கோள், குறிப்பிட்டதொரு காலக் கட்டத்திற்கு கணனியில் தொலைவிலிருந்து நீர்த்தேக்க மட்டத்தை களஞ்சியப்படுத்தி வைத்தலும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தலுமாகும். நீர் மட்டத்தை உணர்வதற்காக நீர்த்தேக்கத்தில் Ultra Sonic Level Sensor வைக்கப்பட்டுள்ளதோடு, அவசியமானதொரு காலகட்டத்தினுள் LCD காட்சிப் பலகைக்கும் அதேபோன்று கணனிக்கும் நுண் கட்டுப்பாட்டுக் கருவியின் ஊடாக வெளியீட்டு வோல்டேஜ் கடத்தல் நடைபெறுகின்றது. சேகரிக்கப்பட்ட தரவுகள் தரவுப் பகுப்பாய்வின் பொருட்டு MS Excel க்கு மாற்றப்படுகின்றதோடு கேள்வி மாற்றம் பற்றிய வரைபடங்கள் பெறப்படும். அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபா 0.84 மில்லியனாகும் என்பதோடு கருத்திட்டம் பூர்த்தியடைந்துள்ளது.

## கூட்டு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி

இந்த உற்பத்தியானது தே.நீ.வ.வ.சபையின் ஒருசில ஊழியர்களின் குழு வேலையாகும் என்பதோடு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டு, திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவினால் வரையப்பட்டு, மத்திய வேலைத் தளத்தினால் அமைக்கப்பட்டுப் பொருத்தப்பட்டதாகும். இறுதியாக ஏற்புடைய பிராந்தியங்களின், கள சீர்செய்தல்கள், நிர்மாணிப்பு, பம்பிகளை வழங்கிப் பொருத்துதல், இரசாயனமிடல் மற்றும் தேவையான கட்டடங்கள், மேற்பார்வை, தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்பு ஆகிய உதவிகளுடன் பூர்த்தி செய்யப்பட்டது. நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்ற 11 பொறித்தொகுதிகளின் நிலைமைகள் வருமாறு: அநுராதபுரம் புனித நகரம், தம்புத்தேகம மற்றும் சிதுல்பவ்வவில் பொறித் தொகுதியின் பொருத்துதல்கள் பூர்த்தி செய்யப்பட்டன, கிளிநொச்சியில் பொறித்தொகுதி இயங்கி வருகின்றது, நீலபொலவில்

நிலைமைகள் வருமாறு: அநுராதபுரம் புனித நகரம், தம்புத்தேகம மற்றும் சிதுல்பவ்வவில் பொறித் தொகுதியின் பொருத்துதல்கள் பூர்த்தி செய்யப்பட்டன, கிளிநொச்சியில் பொறித்தொகுதி இயங்கி வருகின்றது, நீலபொலவில் நிர்மாணிப்பு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது, சீதாவக்க கைத்தொழில் பேட்டையில் பொறித் தொகுதியை பொருத்துதல் அநேகமாக பூர்த்தியடைந்துள்ளது, மீரிகம முதியோர் இல்லத்தின் பொறித் தொகுதிக்கான இறுதி அறிக்கை பிராந்திய சேவை நிலையத்திற்கு (மேற்கு வடக்கு பிராந்தியம்) கையளிக்கப்பட்டது, முத்துகண்டியவுக்கான பொறித்தொகுதியின் வடிவமைப்பு பூர்த்தி செய்யப் பட்டு பிராந்திய உதவி நிலையத்திற்கு ஒப்படைக் கப்பட்டது, யட்டியன்தொட்ட பொறித் தொகுதிக்கான வடிவமைத்தல் நடைமுறை ஏற்பாடு செய்யப்பட்டு பிராந்திய உதவி நிலையத்துடன் கலந்துரை யாடப்பட்டது மற்றும் உல்ஹிட்டியாவ பொறித் தொகு திக்கான வடிவமைப்புக் கட்டம் நடைபெற்று வருகின்றது.

## காரணம் கண்டறியப்படாத குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய்க்குத் தீர்வாக மீள் ஊடுகலப்பு (RO) சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

நீர் சுத்திகரிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற அநேகமான வீடு சார்ந்த வடிகட்டல்கள் மற்றும் முறையியல்கள் துணிக்கை காரணிகளை மாத்திரமே அகற்றுகின்றன. மனிதனுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியதான, நீரில் கரைந்துள்ள நச்சு இரசாயனப் பொருட்கள் அல்லது அனேகமான கன உலோகங்களை வீடு சார்ந்த நீர் வடிகட்டல்கள் உள்ளடங்கிய மரபார்ந்த முறைகள் மற்றும் உயர் வடிகட்டல்கள் (Ultra-filtration) போன்ற நவீன வடிகட்டல் முறைகள் அகற்றுவதில்லை. பிந்திய முறை யாதெனில், மீள் ஊடுகலப்புத் தொழில்நுட்பம், அயன் பரிமாற்ற முறை மற்றும் உள்ளீர்ப்பு முறை ஆகியனவாகும். பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட மீள் ஊடுகலப்பு முறையானது ஒரே தடவையில் அனைத்து நச்சு மாசாக்கல் காரணிகளிலும் 95% க்கு மேற்பட்டவற்றை அகற்றுகின்றது. இதன் அடிப்படையில், தம்பலகொல்லாவ, பராக்ரமபுர, போகஹவெவ, கங்கிலிகனதராவ, அம்பகஸ்வெவ, விஜயபாபுர, வஹமல்கொல்லாவ, இஹல எல்லவெவ மற்றும் 18வது மைல் கட்டை ஆகிய இடங்களில் 13 சுமு பொறிகள் பொருத்தப்பட்டன. இவை தே.நீ. வ.வ.சபையினால் அண்மித்திருந்து மேற்பார்வை செய்யப்படுகின்றது. மேலும், தம்பலகொல்லாவ பிர தேசத்தில் சுமு பொறித் தொகுதி பொருத்தப்பட்டதன் பின்னர் வினாக்கொத்தொன்றை பயன்படுத்தி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதோடு, மக்கள் இந்த நீரை குடிப்பதற்கும் மற்றும் சமையல் நோக்கங்களுக்கும் பயன்படுத்துவதில் திருப்தி கண்டுள்ளனர் என்பது இதன் மூலம் வெளிப் படுத்தப்பட்டது.

## நிலையான பிரதான கருவியை பொருத்து தல் (நிலையான அளவுக் கருவிகள்)

குறைந்த செலவில் நிலையான இரசாயன அளவு வீதத்தை பேணிவரும் பொருட்டு கலத்தினுள் அமுத்தத்தின் சமநிலைக்கான காற்றூட்ட ஏற்பாடுடன் கூடிய மூடிய கலத்துடன் கூடிய கருவியொன்று வெற்றிகரமாக பரிசீலிக்கப்பட்டது. கிராமிய நீர் வழங்கல் பிரிவுகளின் எண்ணக்கருவின் அடிப்படையில் ஆராய்ச்சிப் பெறுபேறுகள் கிராமிய நீர் வழங்கல் பிரிவுகளுடனும் பிராந்தியங்களுடனும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

## 2014-2015 ஈராண்டு நீர் பாதுகாப்புத் திட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

இந்நிகழ்ச்சித்திட்டங்கள் ஊவா மற்றும் கிழக்கு பிராந்திய உதவி நிலையங்களில் பாடசாலை மாணவர்கள், பங்குதாரர்கள், சமுதாய அடிப்படை யிலான அமைப்புகள், விவசாயிகள் மற்றும் தே.நீ.வ.வ.சபையின் பணியார்களை உள்ளடக்கிய தாக மேற்கொள்ளப்பட்டன. பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களில், மாணவர்களுக்கு மத்தியில் நீரினால் ஏற்படக்கூடிய நோய்களைக் குறைத்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச் சித்திட்டங்களின் கீழ் நீர் நிலைகள் மாசடைதலைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் பிரதானமாகக் கலந் துரையாடப்பட்டது.

# தகவல் தொழில்நுட்பம்

கடந்த பல தசாப்தங்களாக தகவல் தொழில்நுட்ப முறைமையின் பயன்பாட்டில் தொடர்ச்சியான அதிகரிப்பையும், அரச நிறுவனங்களின் சேவை மட்டங்களின் தொழிற்பாட்டு மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுக்கான தீர்வுகளையும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளின் பொருத்தமான பயன்பாட்டின் மூலம் சேவை மட்டங்களில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை பொறுத்தவரை, ஒருசில மிக முக்கியமான அரச நிறுவனங்களில் அண்மைக் காலத்தில் பல வெற்றிகரமான சம்பவங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

மேற்படி காரணியை புரிந்துகொண்டு மற்றும் இலங்கையின் பல்வேறு அரச நிறுவனங்களின் மற்றும் உலகளாவிய தற்போதைய போக்கை கவனத்திற்கொண்டு, தே.நீ.வ.வ.சபையானது நிறுவனத்தினுள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலைமையை மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதோடு, சேவைத் திறனை அடையும் குறிக்கோளுடன் தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் முறைமைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அண்மிய கடந்த காலத்தில், தே.நீ.வ.வ.சபை தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்களவு முதலீட்டை மேற்கொண்டதோடு, தொழிற்பாட்டு வினைத்திறனையும் சேவைத் தரத்தையும் மேம்படுத்துவதற்காக புதிய தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது.

## தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

இரத்மலானை தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கலைத்திறன்மிக்க தரவு நிலையமொன்றையும் தே.நீ.வ.வ.ச. கொண்டுள்ளது. தரவு நிலையமானது அனைத்து துணைக் கருவிகள் மற்றும் பாகங்களுடன் சேர்ந்த 30 நடுத்தர சேவர்கள் தொகுதியை கொண்டுள்ளது. தலைமை அலுவலகத்தின் உள்ளக பிராந்திய வலையமைப்பானது பிரசித்திபெற்ற வகைகளை சேர்ந்த கருவிகளை உள்ளடக்கியுள்ளது. (உதா:- CISCO). முழுத் தலைமை அலுவலகத் தொகுதியையும் உள்ளடங்கியதான கட்டமைப்பு ரீதியிலான கேபல் இணைப்பு முறைமைக்கு மேலதிகமாக, கையடக்கக் கருவிகள் மற்றும் மடிக் கணனிகளுக்கு உதவுகின்ற வகையில் கட்டிடத்தின் மிக முக்கியமான பகுதிகளில் நவீன வை-பை வலையமைப்பையும் கொண்டுள்ளது. அலுவலக தேவைகளுக்காக மத்தியமயப் படுத்தப்பட்ட 8 mbps குத்தகைக்கு பெறப்பட்ட இணைப்புகளும் ADSL வசதிகளைக் கொண்ட புரோட்பேன்ட் இணையத்தள இணைப்புகளும் உள்ளன.

IP VPN வசதியானது தற்போது தலைமை அலுவலகம் முதல் பிரதேச பொறியியலாளர் மட்டம் வரை அனைத்து பிரதான அலுவலகங்களையும் உள்ளடக்கியுள்ளது. அனைத்து பிரதான அலுவலகங்களும் தற்போது இடைஇணைப்புகளைக் கொண்டுள்ளதோடு பிராந்திய மட்டத்திலான பயனாளிகளுக்கு தலைமை அலுவலகத்தில் அல்லது இணைக்கப்பட்டுள்ள எந்தவொரு அலுவலகத்திலுமுள்ள தீர்வுகளுக்கும் முறைமைகளுக்கும் நேரடியாக அணுகக் கூடியதாக உள்ளது. தலைமை அலுவலகத்திலும் பிராந்திய அலுவலகங்களிலுமுள்ள தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள் தகவல் தொழில்நுட்ப தீர்வுகளின் பிரச்சினைகளற்ற வசதியேற்பாட்டுக்காக தகவல் தொழில்நுட்ப வன்பொருள்களையும் உட்கட்டமைப்பையும் பராமரிக்கின்றனர்.

தற்போது தே.நீ.வ.வ.சபையானது அதன் நாளாந்த தொழிற்பாடுகளுக்காக பெரும் எண்ணிக்கையிலான மென்பொருள்களை பயன்படுத்துகின்றது. மிகச் சிறந்த தீர்வானது கட்டண அறவீட்டு முறைமைக்கும் பொதுப் பேரேட்டு முறைமைக்குமானதாகும்.

இந்த இரண்டு மிக முக்கியமான தீர்வுகளுக்கு மேலதிகமாக, தே.நீ.வ.வ.சபையானது இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற கடன் திட்டத்தின் கீழான பாரிய தகவல் தொழில்நுட்ப வலுவூட்டல் கருத்திட்டத்தின் ஊடாக முழுமையான தொழில் முயற்சி ரீதியான வளங்கள் திட்டமிடல் தீர்வொன்றையும் (ERP) கொண்டுள்ளது. மொத்தத் தீர்வு முறையும் மிக முக்கியமான வியாபாரத் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய 11 பாரிய மென்பொருள் மொடியுல்களை கொண்டுள்ளது. இந்திய மென்பொருள் தீர்வு வழங்குனர் (Cooptions Technologies Ltd.) ஒருவரால் அபிவிருத்தி செய்யப்பட்ட தீர்வு 2010 இல் தே.நீ.வ.வ.சபைக்கு கையளிக்கப்பட்டது. தே.நீ.வ.வ.சபையின் தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள், பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை (IMS) மனித வள முகாமைத்துவம் (HMR), சம்பளக் கொடுப்பனவு முறைமை (PAY) போன்ற இத்தகைய தீர்வுகளின் பல மொடியுல்களை ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளது. ஏனைய மொடியுல்களின் அமுல்படுத்தல் முயற்சியானது நடைபெற்று வருகின்றது.

இதற்கு மேலதிகமாக தே.நீ.வ.சபை அதன் நாளாந்த தொழிற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமாக ஏனைய பல சிறிய அளவிலான மென்பொருள் முறைமைகளைப் பயன்படுத்தி வருகின்றது.

மிகப் பிந்திய நடைமுறையான இ-அரச எண்ணக் கருவுக்கு இசைந்து செல்கின்ற வகையில் தே.நீ.வ.வ.சபையானது, பல்வேறு இணையத்தள சேவைகளுக்கு வசதியேற்படுத்துகின்ற விரிவான இணையதளத்தையும் ஆரம்பித்துள்ளது.

# கொள்கை வகுத்தல்

ஆண்டினுள் நீர் பாதுகாப்புத் திட்டத்தின் நடைமுறைப் படுத்தல் நடைபெற்றுவந்தது.

- உலக சுகாதார அமைப்பின் நிபுணர்களின் உதவி யோடு கொழும்பில் நகர நீர் பாதுகாப்புத் திட்டங்களின் பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

- நீர் பாதுகாப்புத் திட்ட தேசிய யாப்புச் செயலமர்வு நடத்தப்பட்டது.

- 3 நீர் பாதுகாப்புத் திட்டங்களின் பிரதான பயிற்று விப்பாளர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியளிக் கப்பட்டது.

- உலக சுகாதார அமைப்புடன் இணைந்து சர்வதேச நீர் பாதுகாப்புத் திட்ட மதிப்பீட்டுப் பயிற்சி அமைர்வு நடத்தப்பட்டது.

## குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய் (CKDu) நிவாரண நிகழ்ச்சித்திட்டம்

காரணம் அறியப்படாத குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய் (CKDu) இலங்கையின் வடமத்திய மாகாணத்திலும், வடமேற்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளிலும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பரவி வருகின்றது. சில பிரதேசங்களில் சனத்தொகையில் 5 தொடக்கம் 10 சதவீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதோடு நோய் அதிகரித்து வருகின்றது. அநுராதபுரத்தில் மாத்திரம் 18,000 குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய்ச் சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு வருடாந்தம் 200 க்கு மேற்பட்ட மரணங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில், வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு மாகாணங் களுக்கும் இந்நோய் பரவி வருதல் அவதானிக் கப்பட்டுள்ளது.

தே.நீ.வ.வ.ச. குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயி னால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கான மூலோபாயத்தையும் செயற்திட்டத்தையும் அபிவிருத்தி செய்துள்ளது. இது குறுகியகால, நடுத்தரகால மற்றும் நீண்டகால திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இச் செயற் திட்டங் கள் குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய் பற்றிய பாராளுமன்ற உப குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டமானது, அநுராதபுரம், பொலனறுவை, பதுளை, மொனறாகலை, அம்பாறை, திருகோணமலை, குருணாகல், மாத்தளை மற்றும் வவுனியா மாவட்டங்களில் குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்குகின்றது.

2014 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டத்துக்கான தே.நீ.வ.வ.சபையின் நிதி ஒதுக்கீடு ரூபா 1100 மில்லிய னாகும். நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒத்துழைப்புடன் குறுகியகால செயற்பாட்டுத் திட்டத்தின் தொடர்ச்சி பூர்த்தி செய்யப்பட்டது. ஏற்புடைய பிராந்திய உதவி நிலையங்களின் ஊடாக உப கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, தலைமை அலுவலகத்திலுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினதும், கிராமிய நீர் வழங்கல் பிரிவினதும், வரைபடமாக்கல் பிரிவினதும், அபிவிருத்திப் பிரிவினதும் வளங்கள் பயன்படுத்தப்பட்டன.

## காலநிலை மாற்றத் தழுவல் மற்றும் அனர்த்த ஆபத்துகளைக் குறைத்தல்

மேற்படி தலைப்பானது, சுற்றாடல் அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் நீர் மற்றும் துப்புர வேற்பாட்டுக் கூட்டங்கள் ஆகியவற்றில் பல்வேறு வடிவங்களில் கலந்துரையாடலுக்கு உட்படுத் தப்பட்டுள்ளது.
அத்துடன் அவுஸ்திரேலிய தலைமைத்துவ விருது (2012) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மற்றும் Water Links Yarra Valley பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் (2014) கீழ் உரிய நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளன. ஒரு பாரிய பெறுபேறாக நீர் பாதுகாப்புத் திட்டக் குழு மற்றும் அவசர பதிலிறுப்புக் குழு நியமிக்கப் பட்டுள்ளது. நீர் தொடர்புறுத்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அவசர பதிலிறுப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது.

## நீர் பாதுகாப்புத் திட்டங்கள் (WSPs)

2014 பங்குனி மாதத்தில் தென் மாகாணத்தில் நீர் பாதுகாப்புத் திட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப் பட்டது. 2014 வைகாசி மாதத்தில் உலக சுகாதார அமைப்பின் சர்வதேச நிபுணர் ஒருவரின் உதவியோடு கொழும்பில் பயிற்றுவிப்பவர்களுக்கு பயிற்சியளிக் கின்ற நிகழ்ச்சித்திட்டமொன்று மிக விரிவான விதத்தில் நடத்தப்பட்டது.

2014 புரட்டாதி மற்றும் ஐப்பசி மாதத்தில் பாங்கொக், தாய்லாந்து மற்றும் இந்தியாவின் நாக்பூரில் உலக சுகாதார அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரதான பயிற்றுவிப்பாளர் அமர்வின் ஊடாக மூன்று தேசிய பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை வலுப் படுத்தப்பட்டது.



“நீர் மலைகளின் உச்சியிலிருந்து பாய்ந்து வருகின்றது. நீர் நிலத்தின் ஆழத்திலிருந்து ஊற்றெடுக்கின்றது. அதிசயமான விதத்தில் நீர் எம்மை வந்தடைவதோடு அனைத்து உயிர்களையும் உயிர்வாழச் செய்கின்றது.”



# நடைமுறையிலுள்ள நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் நிறைவேற்றப்பட்ட பாரிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு/விரிவாக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்



| | கருத்திட்டத்தின் பெயர் | | நிதியளிப்பு நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | களுகங்கை நீ.வ.க.–படிநிலை 1–கட்டம் 11 | - | ஜ.ச.கூ.மு |
| 2 | கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புத் திட்டம் | - | ஜ.ச.கூ.மு |
| 3 | கொழும்பு வடக்கு நகர நீ.வ.க. – கட்டம் 11 | - | ஜ.ச.கூ.மு |
| 4 | கண்டி பெரும்பாக நீ.வ.க. படிநிலை 1 – கட்டம் 11 | | ஜ.ச.கூ.மு |
| 5 | கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி | | ஜ.ச.கூ.மு |
| 6 | கிளிநொச்சி புனரமைப்பு நீ.வ.தி. | | ஜ.ச.கூ.மு |
| 7 | அநுராதபுரம் வடக்கு நீ.வ.தி. | | ஜ.ச.கூ.மு |
| 8 | தம்புளை பெரும்பாக நீ.வ.தி. - கட்டம் 1 | | இந்தியா |
| 9 | இரண்டாம் நிலை நகரங்களின் கிராமிய சமுதாய அடிப்படையிலான நீ.வ. மற்றும் துப்புரவேற்பாட்டுத் திட்டம் | | ஆ.அ.வ. |
| 10 | உலர் வலய நீ.வ. மற்றும் துப்புரவேற்பாடு | | ஆ.அ.வ. |
| 11 | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம் | | ஆ.அ.வ. |
| 12 | கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேன்பாட்டு முதலீட்டு திட்டம் | | ஆ.அ.வ |
| 13 | யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேங்களில் யுத்தத்திற்குப் பின்னரான சமுதாய அடிப்படையிலான நீ.வ. மற்றும் துப்புரவேற்பாட்டின் மேம்பாடு | | ஆ.அ.வ. |
| 14 | ருகுணுபுர நீர் வழங்கல் திட்டம் | | கொரியா |
| 15 | அம்பாறை மாவட்டத்தில் சேவை வழங்கப்படாத பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111 | | அவுஸ்திரேலியா |
| 16 | திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைந்த நீ.வ.க. | | பிரான்ஸ் |
| 17 | கொலன்ன / பலாங்கொடை நீ.வ. விரிவாக்கம் | | பெல்ஜியம் |
| 18 | லபுகம கலட்டுவான நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி | | ஹங்கேரி |
| 19 | பதுளை, ஹன்வெல்ல மற்றும் எல்ல நீர் வழங்கல் | | யூ.எஸ். எக்சிம் |
| 20 | கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவனடகொட நீர் வழங்கல் | | சீனா |
| 21 | இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் | | ஸ்பெய்ன் |

## வெளிநாட்டு நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

### ஜ.ச.கூ.மு. உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

### 1. களுகங்கை நீர் வழங்கல் கருத்திட்டம் படிநிலை 1 – கட்டம் 11 மற்றும் கொழும்பு பெரும்பாக பிரதேசத்தின் வருவாயற்ற நீர் குறைப்பு

களுகங்கை நீர் வழங்கல் கருத்திட்டம் படிநிலை 1 – கட்டம் 1 2008 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. க.நீ.வ.க. படிநிலை 1 – கட்டம் 11 இற்கான விபரமான வடிவமைத்தல் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 2009 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது.

கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்தின் தென் பகுதியில் அதிகரித்துவரும் குடி நீருக்கான கேள்வியை நிறைவு செய்தல் இக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். கெஸ்பாவ, பிலியந்தல, ஜம்புரலிய, கும்புக்கே மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 300,000 மக்கள் நலன்பெறுனர்களாவர்.

இக்கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 10,846 மில்லியனாகும். கந்தானையில் நாளொன்றுக்கு 60,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 1,000/800 மி.மீ. விட்டமுடைய 14.7 கி.மீ. நீளமான பிரதான DI அனுப்பல் குழாய், 450/400 மி.மீ. விட்டமுடைய 6.7 கி.மீ. நீளமான இரண்டாம்நிலை பிரதான நீர் குழாய், கெஸ்பாவ, ஜம்புரலிய, கும்புக்கே மற்றும் வெல்மில்ல பிரதேசங்களில் 1500 கி.மீ. கொண்ட நான்கு உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்களை நிர்மாணித்தல் (ஒவ்வொன்றும் 1000 கி.மீ.), பாணந்துறை – கிரிபேரிய மற்றும் கெஸ்பேவ – கிழக்கு/மேற்கு பிரதேசத்தில் 420 கி.மீ. நீளமான புதிய விநியோகக் குழாய்களை நிர்மாணித்தல். கொழும்பு நகரத்தில் புறக்கோட்டை, ஆட்டுப்பட்டித் தெரு, கொட்டாஞ்சேனையின் ஒரு பகுதி, மருதானை மற்றும் கொம்பனித் தெருவில் CI குழாய்களை பதிலீடு செய்வதன் மூலம் கொழும்பு CBI பிரதேசத்தில் வருவாயற்ற நீரைக் குறைத்தல். ஆகியன கருத்திட்டத்தின் ஆக்கக்கூறுகளாகும். இவற்றிற்கு மேலதிகமாக பிரதேச உதவி நிலையத்திற்கான (W/S) கும்புக்கேவில அலுவலகக் கட்டடம், பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (பிலியந்தல) மற்றும் நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம் அத்துடன் ˙ விடுதிகள் ஆகியனவும் JICA கடனின் சேமிப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்டன.

கந்தான நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நிர்மாணிப்பு, விநியோகக் குழாய்களை இடுதல், பாணந்துறை, கிரிபேரிய, கெஸ்பேவ கிழக்கு/மேற்கு பிரதேசங்களில் குழாய் நீடிப்பு மற்றும் கொழும்பு CBI பிரதேசம், கொட்டாஞ்சேனை, மருதானை மற்றும் கொம்பனித் தெரு பிரதேசங்களில் விநியோக முறைமையின் புனரமைப்பு நடைபெற்ற வருகின்றன.

2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 95.72% மற்றும் 90.44% ஆகும்.



கஹட்டவெலவில் (கெஸ்பேவ – பண்டாரகம வீதி) குழாய் பாலம;

### 2. கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புக் கருத்திட்டம்

இது கொழும்புப் பிரதேசத்தின் பாதுகாப்பான குடி நீர் வழங்கலின் சேவை மட்டத்தை மேம்படுத்துவதற்கான ஒரு புனரமைப்புக் கருத்திட்டமாகும். மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை எய்தும் நோக்கத்துடன் பல பாரிய கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதோடு இக் கருத்திட்டமும் அவ்வாறானதொரு பாரிய கருத்திட்டமாகும். இக் கருத்திட்டம் கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்தின் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான தே.நீ.வ.வ.சபையின் நீண்டகால உபாய வழிமுறையை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு கருத்திட்டமாகும். மொத்த செலவு மதிப்பீடு ரூபா 4785 மில்லியனாகும். கொழும்பு மாநகர சபைப் பிரதேசம் மற்றும் கொட்டிகாவத்தை – முல்லேரியா பிரதேசத்தின் நீர் வழங்கல் முறைமையை புனரமைத்து மேம்படுத்துதல் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

**கருத்திட்டமானது பின்வரும் ஆக்கக்கூறுகளை கொண்டுள்ளது,**

I) மாளிகாகந்த நீர்தேக்கம் - எதிர்கால மற்றும் அவசர நிலைமைகளுக்காக களஞ்சியப்படுத்தல் கொள்ளளவை அதிகரிக்கச் செய்து கொழும்பு மத்திய பிரதேசத்தின் நீர் முறைமையை மேம்படுத்தல்.

ii) எளி ஹவுஸ் நீர்தேக்கம் - எதிர்கால மற்றும் அவசர நிலைமைகளுக்காக களஞ்சியப்படுத்தல் கொள்ளளவை அதிகரிக்கச் செய்து கொழும்பு வடக்கு பிரதேசத்தின் நீர் முறைமையை மேம்படுத்தல்.

iii) கொதட்டுவ நீர் கோபுரம் - கொட்டிக்காவத்த முல்லேரியாவ பிரதேசத்தின் நீர் முறைமையை மேம்படுத்தல்.

iv)அம்பத்தலே தொடக்கம் கொத்தட்டுவ வரையிலான (IDH) அனுப்பல் கொள்ளள தொடர்பான பணியாளர்களின் வை அதிகரிக்கச் செய்தல்

v) வருவாயற்ற நீரைக் குறைத்தல், சட்ட விரோத நீர் இணைப்புகளை குறைத்தல், தெமட்டகொட பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானத்தைப் பெறும் சனத்தொகையினரின் வாழ்க்கைத் தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தல்.

vi) கொழும்பு நகர சபை சாக்கடை பணியாளர்கள்/தே.நீ.வ.வ.சபையின் நீர் வேலை பணியாளர்களுக்கான அலுவலக வசதிகளை மேம்படுத்தல்.

2014 ஆம் ஆண்டின் இறுதியில் இக் கருத்திட்டம் முறையே 92% மற்றும் 96% பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

## 3. கொழும்பு வடக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11

கொழும்பு வடக்கு நகரங்களுக்கான நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டில் 600,000 சனத்தொகையினருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதியுள்ளதோடு, நீர் கேள்வி எதிர்வு கூறலானது நாளொன்றுக்கு 180,000 க.மீ. ஆகம்.

JBIC யினால் வழங்கப்பட்ட ODA கடன் உதவியுடன் கருத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதோடு, மதிப்பீட்டுச் செலவு அண்ணளவாக ரூபா 6,500 மில்லியனாகும். 2012 ஆம் ஆண்டில் மூல விடயப்பரப்பு நிறைவு செய்யப்பட்டதோடு, மேலதிக வேலைகளை 2015 ஆனி மாதத்தில் நிறைவு செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் கட்டம் 11 மஹர, பியகம, கனேமுல்ல, ராகம, வெலிசர, முத்துராஜவெல, பமுனுகம, கந்தான, ஜா-எல மற்றும் ஏக்கல பிரதேசங்களை உள்ளடக்கிய விநியோக முறைமையை உள்ளடக்கியுள்ளதோடு ஏக்கல மற்றும் கந்தானவில் இரண்டு நில நீர்த்தேக்கங்கள், தெல்கொடவில் உயர்த்தப்பட்ட சமநிலை நீர்த்தேக்கம், கடவத்தையில் பிராந்திய உதவி நிலையம் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. தே.நீ.வ.வ.சபையின் பாவனையாளர் சேவை அலகை அமைப்பதற்கான சில அலுவலகக் கட்டிடங்களை நிர்மாணித்தலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மூல விடயப்பரப்புக்கு அமைய விநியோக குழாயின் நீளம் 400 கி.மீ. க்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் 1600 கி.மீ. பயன்பெறத்தக்கதாக இடப்பட்டிருந்தது

## 4. கண்டி பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் படிநிலை 1 – கட்டம் 11

கண்டி பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் 1997 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. பிரதான திட்டத்தை தயாரித்தல், விபரமான வடிவமைப்பு அதேபோன்று படிநிலை 1 கட்டம் 1 இன் கீழ் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், கட்டம் 11 படிநிலை 1 மற்றும் கட்டம் 11 இன் எஞ்சிய வேலைகள் JICA நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய கட்டம் 1 படிநிலை 1 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2007 ஐப்பசியில் பூர்த்தி செய்யப்பட்டது. கட்டம் 1 படிநிலை 1 இன் கீழ் உள்வாங்கு நிலையம், நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, 4 சேவை நீர்த்தேக்கங்கள், 3 பம்பி நிலையங்கள், 25 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்கள் மற்றும் 15 கி.மீ. நீளமான விநியோகக் குழாய்கள், நிர்மாணிக கப்பட்டதோடு, இது கண்டி நகரத்தினதும் அதனைச் சுற்றிலுமுள்ள 281,000 சனத்தொகையினருக்கு நன்மையளித்தது. மேற்படி கட்டம் 1 படிநிலை 1 இன் வேலைகளுக்கான செலவு யென் 3,679 மில்லியன்களும் ரூபா 1,086 மில்லியன்களுமாகும்.

2007 இல் இரண்டாவது கட்டத்தின் 1வது படிநிலை எட்டு பொதிகளாக JICA நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த பரப்பெல்லையானது 8 சேவை நீர்த்தேக்கங்கள், 3 பம்பி நிலையங்கள், 19 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய கள், 78 கி.மீ. நீளமான விநியோகக் குழாய்கள், பின்நோக்கிய நீர்ப்பாய்ச்சல் மீட்பு வசதிகள், 12 பணியாளர் விடுதிகள் ஆகியவற்றின் நிர்மாணிப்பு மற்றும் நீர் பொருத்தப் பரிசோதனை ஆய்வுகூட நிர்மாணிப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இது அக்குரண, பூஜாபிட்டிய, ஹாரிஸ்பத்துவ, தும்பனே மற்றும் கங்கவத்த கோரளை பிரதேச சபைப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு நன்மையளித்தது.

2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்படி JICA கடன் நிதியத்தின் சேமிப்பைக் கொண்டு மேலதிக ஒப்பந்த பக்கேஜுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கிணங்க தே.நீ.வ.வ.சபையினால் மடவல, ரஜபிஹில்ல மற்றும் கொபல்வத்த பிரதேசங்களின் நீர் வழங்கல் வசதிகளை மேம்படுத்தவும் அதேபோன்று வருவாயற்ற நீர் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இயலுமாயிருந்தது. மேற்படி கட்டம் 11 படிநிலை 1 க்கான மொத்த திருத்தப்பட்ட ஒப்பந்த செலவு யப்பான் யென் 4,634 மில்லியன் மற்றும் ரூபா 1,122 மில்லியன் ஆகுமென்பதோடு நன்மைபெற்ற சனத்தொகை 269,300 ஆகும். ஆரம்ப ஒப்பந்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் வேலைகளின் பௌதீக முன்னேற்றம் 97.05% ஆகுமென்பதோடு நிதியியல் முன்னேற்றம் 150.97% ஆகும். மேற்படி பிரதான ஒப்பந்தத்துக்கு மேலதிகமாக, “நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகள்”, “நீர் பொருத்தப் பரிசோதனை ஆய்வுகூடத்தை ஸ்தாபித்தல்” ஆகியவற்றுடன் தொடர்புடைய சிறிய ஒப்பந்தங்களும் மேலே குறிப்பிடப்பட்ட பிரதான ஒப்பந்த விடயங்களின் பிரதேச நிதித் தொகைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன.



## 5. கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திக் கருத்திட்டம்

அம்பாறை பிரதேசத்தின் ஏறத்தாழ 209,270 மக்களுக்கு இக் கருத்திட்டம் சேவையாற்றுகின்றது. மகாவலி கங்கை, கொண்டுவட்டுவான் மற்றும் ரம்புக்கன் ஓயா நீர்த் தேக்கம் நீர் வளங்களாக உள்ளன. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 6,526 மில்லியனாகும். கொண்டுவட்டுவானிலிருந்து கல்முனை வரையிலான பிரதான அனுப்பல் குழாய், பொத்துவிலுக்கான விநியோக முறைமை, உஹன, தமன மற்றும் ஹிங்குரானவிலுள்ள சுனாமி வீடமைப்புத் திட்டங்களுக்கான நீர் வழங்கல் திட்டங்கள் ஆகியன முன்னுரிமை அடிப்படையில் கருத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள உப கருத்திட்டங்களாகும்.

பௌதீக முன்னேற்றம் 95.44% மற்றும் நிதியியல் முன்னேற்றம் 64.79% கொண்டதாக வேலைகள் முன்னேற்றம் கண்டு வருகின்றன. மேலும், ஆரம்ப விடயப்பரப்புக்கு மேலதிகமாக பிரதேசத்தின் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் கருத்திட்ட குறிக்கோள்களுக்கு பங்களிப்புச் செய்கின்ற வகையில் கருத்திட்டத்தில் இனங் காணப்பட்ட விடயங்களுக்கு சேமிப்புகளைப் பயன்படுத்தி JICA வின் விருப்பத்துடன் பானம பிரதேசம் மற்றும் அரந்தலாவ பிரதேசத்தை உள்ளடக்கியதாக இரண்டு புதிய வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அலுவலகக் கட்டிடமும் விடுதிகளும் பயன்பாட்டுக்காக தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவுக்கு கையளிக்கப்பட்டது. பொத்துவில் (48 கி.மீ.), ஹிங்குரான (85 கி.மீ.), உஹன (25 கி.மீ.), தமன (75 கி.மீ.), சம்மாந்துறை (16 கி.மீ.), மகாஓயா (57 கி.மீ.) மற்றும் இறக்காமம்/தீகவாப்பிய (9 கி.மீ.) விநியோக முறைமை தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவுக்கு கையளிக்கப்பட்டதோடு ஏற்கனவே 3,150 க்கு மேற்பட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## 6. கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு

ஆயுதப் போராட்டத்தின் போது கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் சேதமடைந்தது. இத் திட்டத்தின் புனரமைப்பு வேலைகள் ரூபா 1,417 மில்லியன் மொத்த மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட்டன. சேதத்திற்கு உள்ளான சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மற்றும் உள்வாங்கு நிலையத்தின் சிவில் கட்டுமானங்கள் ரூபா 20 மில்லியன் மேலதிக வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டுடன் புனரமைக்கப்பட்டன. சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் கொள்ளளவு நாளொன்றுக்கு 3,800 கன மீற்றர்களாகும் என்பதோடு இக் கருத்திட்டத்தின் கீழ் சேவையாற்றுவதற்கு இலக்கிடப்பட்ட சனத்தொகை கிளிநொச்சி மற்றும் பரந்தன் பிரதேசத்திலுள்ள 40,000 பேர் ஆகும்.

உள்வாங்கு நிலையத்தின் பராமரிப்பு மற்றும் மின்னியல் வேலைகள், காற்றூட்டல் கருவி, மெதுவான மணல் வடிகட்டல் மற்றும் மேலுயர்த்தப்பட்ட பம்பி நிலையம், கிளிநொச்சி மற்றும் பரந்தனில் 1000 கன மீற்றர் மற்றும் 450 கன மீற்றர் மேலுயர்த்தப்பட்ட கோபுரங்கள், 98 கி.மீ. நீளமான HDPE பிரதான அனுப்பல் குழாய், 42 கி.மீ. விநியோக பிரதான குழாய், வன்மை அகற்றும் வடிகட்டல் மற்றும் உள்வாங்கு கோபுரம் ஆகியன கருத்திட்டத்தின் ஆக்கக்கூறுகளாகும்.

உற்பத்தித்திறன் மேம்பாட்டுச் செயற்பாடுகள் மற்றும் கருத்திட்டத்தின் முழுமொத்த நிலவரமானது கிளிநொச்சி மற்றும் பரந்தன் நீர் கோபுர சிவில் வேலைகளை நிறைவு செய்தலாகும். நீர் சுத்தி கரிப்புப் பொறித்தொகுதியின் வேலைகளில் 80% மற்றும் குழாய்களை இடும் வேலைகளில் 55.39% பூர்த்தியடைந்துள்ளன.

2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் கருத்திட்டத்தின் முழுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன் னேற்றம் முறையே 71.38% மற்றும் 26.18% ஆகம்.

## 7. அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத் திட்டம்

பல் மற்றும் எலும்புக்கூட்டு புளோரோசியா நோய் மற்றும் குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய்க்கு (CKDu) உள்ளாகக் கூடிய அதிக ஆபத்தைக் கொண்ட பாதுகாப்பற்ற நில நீரைப் பயன் படுத்துகின்ற மக்களைக் கொண்ட அநுராதபுரம் வடக்கில் 2034 ஆம் ஆண்டளவில் 280,000 சனத் தொகையினருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கு வதற்கான நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணித்தல். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் யப்பான் யென் 5,166 மில்லியன் மற்றும் ரூபா 2,786 மில்லியனாகும்.

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத் திட்டத்துக்கான மதியுரை ஒப்பந்தம் சீவோட்டர் கன்சல்டன்ட்ஸ் பிரைவேட் லிமிட்றெட் மற்றும் ஈஎம்எல் கன்சல்டன்ட்ஸ் பிரைவேட் லிமிட்றெட்டுடன் என்ஜேஎஸ் கன்சல்டன்ட்ஸ் நிறுவனத்திற்கு 2014 ஆனி 13 ஆம் திகதி வழங்கப்பட்டது.

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டத்தில் இரண்டு பிரதான ஒப்பந்த பக்கேஜுகள் (தொகுதி ஏ மற்றும் தொகுதி பி) உள்ளன. தொகுதி பி ஒப்பந்த பக்கேஜுக்கான (அனுப்பல், உப அனுப்பல் மற்றும் விநியோக பிரதான குழாய்கள்) ஒப்பந்தகாரர்களின் முன் தகைமைகளை அறிவதற்காக 2014 புரட்டாதி 24 ஆம் திகதி உள்ளூர் பத்திரிகைகளில் விளம் பரங்கள் செய்யப்பட்டதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2014 கார்த்திகை 4 ஆம் திகதி முடி வுறுத்தப்பட்டது. ஒப்பந்தகாரர்களால் 8 விண்ணப் பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு விண்ணப் பங்களை மதிப்பீடு செய்தல் நடைபெற்ற வருகின்றது.

தொகுதி ஏ ஒப்பந்த பக்கேஜுக்கான (உள்வாங்கு வசதி, நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, நீர் களஞ்சியப்படுத்தல் கட்டுமாணங்கள், தொழில்நுட்ப, மின்சார மற்றும் கட்டிட வேலைகளிக்கான நிர்மாணிப்புகள்) ஒப்பந்தகாரர்களின் முன் தகை மைகளை அறிவதற்காக 2014 மார்கழி 24 ஆம் திகதி உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்யப்பட்டதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2015 மாசி 6 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டது.

தொகுதி ஏ மற்றும் தொகுதி பி யின் விபரமான வடிவமைத்தல்கள் முறையே 35% மற்றும் 55% நிறைவடைந்துள்ளன. இரண்டு ஒப்பந்த பக்கேஜுக ளினதும் நிர்மாணிப்பு வேலைகளை 2015 இல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## இந்திய உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

## 8. தம்புள்ளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1

தம்புளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1 2012 பங்குனி மாதத்தில் ஆரம்பிக் கப்பட்டது. தம்புளு ஓயா (இப்பன்கட்டுவ நீர்த் தேக்கம்) நீர் மூலமாகும் என்பதோடு, நாளொன்றுக்கு 65,000 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 32,000 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையாகத் தன்னியக்கமாக்கப்பட்ட சுத்திகரிப்புப் பொறித் தொகுதியுடன் 2,500 கன மீற்றர் தெளிந்த நீர்த் தடாகம், மொத்தம் 7,850 கன மீற்றர்களைக் கொண்ட 7 நில நீர்த் தேக்கங்கள் மற்றும் 2 உயர்த்தப்பட்ட கோபுரங்கள், 0.7 கி.மீ. நீளமான 900 மி.மீ. விட்டத்தைக் கொண்ட சுத்திகரிக்கப்படாத DI நீர் அனுப்பல் குழாய், 71.5 கி.மீ. நீளமான 450 மி.மீ. தொடக்கம் 250 மி.மீ. வரையான DI பிரதான அனுப்பல் குழாய்கள் மற்றும் 218 கி.மீ. நீளமான 280 மி.மீ. தொடக்கம் 63 மி.மீ. விட்டத்தைக் கொண்ட uPVC விநியோக பிரதான குழாய்கள் ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 13,629 மில்லிய னாகும். கருத்திட்டத்தின் திருத்தப்பட்ட பூர்த்தி செய்யப்பட இலக்கிடப்பட்ட திகதி 2015 ஆனி 30 ஆகும். இக்கருத்திட்டத்தின் மூலம் மொத்தம் 65 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடக்கப்படும்.

நிர்மாணிப்புகளின் முன்னேற்றம் - சுத்திகரிக்கப்படாத நீர் உள்வாங்கு நிலையம் 62.7%, நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி 60.1%, கோபுரங்கள் மற்றும் நீர்த் தேக்கங்கள் 64.6%, அனுப்பல் வலையமைப்பு 61.69% மற்றும் விநியோக வலையமைப்பு 25.4% ஆகம்.

2014 இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 64.4% மற்றும் 84.6% ஆகும்.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

### 9. இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமியசமூக மைய நீர் வழங்கல் மற்றும துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம் ஆ.அ.வ நான்காவது கருத்திட்டம்)

வறுமைத் தணிப்பின் பொருட்டு இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிக் குப் பங்களிப்புச் செய்தல் மற்றும் வறிய மக்கள் பாதுகாப்பான குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளைப் பெற்றுக்கொள்வதை முன்னேற்றுவதன் மூலம் மனித அபிவிருத்தியை மேம்படுத்துதலும், இதன் மூலம் நீரை அடிப்படையாகக் கொண்டு உருவாகின்ற நோய்களைக் குறைத்தல் மற்றும் இச் செயற்பாட்டுக்காகச் செலவழிக்கப்படுகின்ற வளங்க ளின் தொகையைக் குறைத்தல் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்தமான இலக்காகும். நான்கு நகரங்கள் (மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, மூதூர் மற்றும் பொலனறுவை) மற்றும் வட மத்திய மாகாணத்தின் மத்திய பிரதேசம் மற்றும் கிழக்கு மாகாணம் ஆகியவற்றின் 832,500 மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும், 171,500 மக்களுக்கு துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதலும், நீர் துறை நிறுவனங்களின் இயலளவைக் கட்டியெழுப்புதல் மூலம் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பான நீர் வழங்குதலை அதிகரிக்கச் செய்தல் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

உண்மையான செலவை ஈடுசெய்யும் பொருட்டு கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு அமெரிக்க டொலர் 175.2 மில்லியனில் இருந்து அமெரிக்க டொலர் 263.26 மில்லியன் டொலர் வரை திருத்தப்பட்டது. மூலக் கடன்களின் ஊடாகவும் நான்கு ஏனைய குறைநிரப்புக் கடன்களின் ஊடாகவும் ADB கருத்திட்டச் செலவில் அமெரிக்க டொலர் 149.1 மில்லியனுக்கு பங்களிப்புச் செய்கின்றது. திருத்தப்பட்டவாறான அட்ட வணையின்படி கருத்திட்டம் 2015 பங்குனி மாதத்தில் பூர்த்தியடையவுள்ளது. கருத்திட்டத்தின் விபரம் மற்றும் வெவ்வேறு இடங்களின் நிலைமை மற்றும் ஆக்கக்கூறுகள் சுருக்கமாக கீழே குறிப் பிடப்பட்டுள்ளன.



**உள்வாங்கும் நிலையகத்தில் நடைபெறும் கட்டுமான வேலை**

### (I) நகர நீர் வழங்கல் மற்றும் துப்புர வேற்பாட்டு ஆக்கக்கூறு

**அம்பாந்தோட்டை மாவட்டம்:**
கருத்திட்டத்தின் மூலம் அம்பாந்தோட்டை மாவட்டத் தில் நாளொன்றுக்கு 120,000 கன மீற்றர் கொள்ள ளவைக் கொண்ட உள்வாங்கு நிலையமொன்றை நிர்மாணிப்பதன் மூலம் நாளொன்றுகீகு 15,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியை நிர்மாணித்து 133,000 மக்களுக்கு நாளொன்றுக்கு 15,000 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படும். எக்கஸ்ஸ, போலான, பெல்லகஸ்வெவ, மிரிஜ்ஜவில, மற்றும் கேலியபுர ஆகிய இடங்களில் புதிய 05 நீர் கோபுரங்கள், 3,500 கன மீற்றர் மற்றும் 1,250 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட தெளிந்த நீர்த் தடாகங்கள், அம்பலாந்தோட்டையில் வளவே கங்கைக்கு குறுக்காக உவர் நீர்த் தடையொன்று மற்றும் 158 கி.மீ. நீளத்தைக் கொண்ட விநியோக குழாய்கள் ஆகியவற்றை பிரதானமான அம்சங்கள் உள்ளடக்கியிருக்கும். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 5,490 நலன்பெறுனர்களுக்காக 1098 வீட்டு மலசல கூடங்களை வழங்குதலும் திப்புர வேற்பாட்டு அம்சங்களில் உள்ளடங்கியிருக்கும். அம்பாந்தோட்டை மாவட்ட வேலைகளின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 6,038 மில்லியனாகும்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அனைத்து வேலை களும் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது இயங்கி வருகின்றது. உவர் நீர்த் தடையின் குறைபாடுகள் 2014 ஆம் ஆண்டினுள் ஒப்பந்தகாரரால் திருத்தி யமைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் நிதியங்கள் கிடைத்ததன் பின்னர் பிரதான வேலைகள், சுத்திகரிப்புப் பொறித் தொகுதி ஆகியவற்றின் நிர்மாணிப்புகள் மற்றும் உவர் நீர்த் தடை நிர்மாணிப்பு ஆகியவற்றுக்காக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள இறுதிக் கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

## மட்டக்களப்பு மாவட்டம்:



மட்டக்களப்பில் அமைந்துள்ள சுத்திகரிப்பு தொகுதி

இக்கருத்திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளொன்றுக்கு 100,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையமொன்றை நிர்மாணிப்பதன் மூலம் நாளொன்றுக்கு 40,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை வழங்கி மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிடப்பட்ட 246,000 மக்களுக்கு நாளொன்றுக்கு 40,000 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படும். செங்கலடி, ஏறாவூர், இருதயபுரம், விமானப் படை வளவு, கல்லடி, காத்தாண்குடி மற்றும் ஆரயம்பதி ஆகிய இடங்களில் 07 புதிய நீர் கோபுரங்கள், 7,000 கன மீற்றர் மற்றும் 2,500 கன மீற்றர் கொண்ட தெளிந்த நீர்த் தடாகங்கள், 55 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்கள் மற்றும் 100 கி.மீ. புதிய விநியோகக் குழாய்களின் நீடிப்பு உள்ளடங்கலாக 375 கி.மீ. நீளமான விநியோகக் குழாய்கள் ஆகியன மட்டக்களப்பு பிரதேசத்துக்கான கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆஸ்பத்திரி மற்றும் சிறைச்சாலையின் பொருட்டு நாளொன்றுக்கு 460 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சாக்கடை சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மற்றும் 6,935 நலன்பெறுனர்களுக்கு துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குகின்ற 1,387 வீட்டு மலசல கூடங்கள் ஆகியவற்றை வழங்குதலும் துப்புரவேற்பாட்டு அம்சங்களில் உள்ளடங்குகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் வேலைகளுக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 12,483 மில்லியனாகும்.

மட்டக்களப்பின் வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதோடு தற்போது தொழிற்பட்டு வருகின்றது. சடுதி நீர் வடிகால் முறைமையும் பூர்த்தி செய்யப்பட்டு உரிய உள்ளூரதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

## பொலனறுவை மாவட்டம்:

இக்கருத்திட்டத்தின் மூலம் பொலனறுவை மாவட்டத்தில் நாளொன்றுக்கு 60,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையமொன்றை நிர்மாணிப்பதன் மூலம் நாளொன்றுக்கு 13,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை வழங்கி திட்டமிடப்பட்ட 85,000 மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படும். கல்லேல்ல, பெந்திவெவ, மற்றும் சேவாகம ஆகிய இடங்களில் 3 புதிய நீர் கோபுரங்கள், 1,700 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட தெளிந்த நீர்த் தடாகம், 33 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்கள், 139 கி.மீ. நீளமான விநியோக குழாய் ஆகியவற்றை பிரதானமான அம்சங்கள் உள்ளடக்கியிருக்கும். துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறுகளின் கீழ் 1,965 நலன்பெறுனர்களுக்காக 393 வீட்டு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன.

பொலனறுவை மாவட்டத்தின் வேலைகளுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரூபா 5,331 மில்லியனாகும். அனைத்து வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளதோடு, இத் திட்டம் தற்போது தொழிற்பட்டு வருகின்றது.

## திருகோணமலை மாவட்டத்தின் (மூதூர் நீ.வ.தி) :

திருகோணமலை மாவட்டத்தின் (மூதூர் பிரதேசம்) கருத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 40,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையமொன்றை நிர்மாணிப்பதன் மூலம் நாளொன்றுக்கு 8,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை வழங்கி திட்டமிடப்பட்ட 52,000 மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படும். மூதூர் நகரம், பலத்தோப்பூர் மற்றும் படலிபுரம் ஆகிய பிரதேசங்களில் 3 புதிய நீர்க் கோபுரங்கள், 3,000 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட தெளிந்த நீர்த் தடாகம், 60 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட நில நீர்த் தேக்கமொன்று, 20 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்கள் மற்றும் 127 கி.மீ. நீளமான விநியோகக் குழாய்கள் ஆகியவற்றை பிரதானமான அம்சங்கள் உள்ளடக்கியிருக்கும். 6,670 நலன்பெறுனர்களுக்காக 1,334 வீட்டு மலசலகூடங்கள் வழங்குவதை துப்புரவேற்பாட்டு அம்சங்கள் கொண்டிருக்கும்.

திருகோணமலை மாவட்ட வேலைகளுக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 3,593 மில்லியனாகும்.

மூதூரில் சடுதி நீர் வடிகாலமைப்பு முறைமை ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டு உரிய உள்ளூரதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டது. மூதூர் நீர் வழங்கல் திட்டத்தின் பிரதான வேலைகளும் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுபிரிவுக்கு 2014 கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி கையளிக்கப்பட்டது. 2014 மார்கழி இறுதியில் நடைபெற்ற அண்மைக்கால வெள்ளப் பெருக்கின் காரணமாக சுத்திகரிக்கப்படாத நீர்க் குழாய்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் திருத்தப் பட்டு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மூன்று மாத பரீட்சார்த்த தொழிற்பாட்டையும் பரிசோதனையையும் மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரருக்கு தேவைப்பட்டது.

மூதூர் பிரதேசத்தில் இடப்பட்டுள்ள விநியோக குழாய்களில் நீர் பீறிட்டுப் பாய்ச்சல் மற்றும் தொற்று நீக்குதல் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. தோப்பூர் பிரதேசத்தில் இடப்பட்டுள்ள விநியோக குழாய்களில் நீர் பீறிட்டுப் பாய்ச்சல் மற்றும் தொற்று நீக்குதல் வேலைகள் ஒப்பந்தகாரரால; மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. 2014 மார்கழி இறுதியில் நடைபெற்ற வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட சேதத்தின் காரணமாக உள்வாங்கு நிலையத்திலிருந்து நீரை பம்பி செய்ய முடியா திருந்ததால் இவ்வேலைகள் தாமதமடைந்தன.

## (ii) கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறு அநுராதபுரம் மாவட்டம்:

அநுராதபுரத்தின் கருத்திட்டம் 166,168 நலன்பெறுனர்களுக்கு 84 குழாய் நீர் திட்டங்கள், 8,620 நலன்பெறுனர்களுக்கு 1,456 பொது மற்றும் தனிப்பட்ட கிணறுகள், 8,895 நலன்பெறுனர்களுக்கு 1,779 மழை நீர்த் தாங்கிகள், 4,125 நலன் பெறுனர்களுக்கு 55 குழாய்க் கிணறுகள் ஆகியவற்றை வழங்குவதோடு, துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறின் கீழ் 44,935 நலன்பெறுனர்களுக்கு 8,987 வீட்டு மலசலகூடங்களை வழங்குகின்றது. அனுராதபுரத்தின் வேலைகளுக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 877 மில்லியனாகும்.

அனைத்து வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளதோடு, விரிவாக்கல் வேலைகளை தொடர்ந்து மேற்கொள்ளும் பொருட்டும், திட்டங்களின் அண்மித்த மேற்பார்வை மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் அனைத்துத் திட்டங்களும் பிராந்திய உதவி நிலையத்திற்கு (வடக்கு மத்திய) கையளிக்கப்பட்டன.

### பொலனறுவை மாவட்டம்:

பொலனறுவை மாவட்டத்தில் கருத்திட்டத்தின் மூலம் 95,506 நலன்பெறுனர்களுக்கான 51 குழாய் நீர் திட்டங்கள், 15,930 நலன்பெறுனர்களுக்கான 3,138 தோண்டப்பட்ட கிணறுகள் (புனரமைப்பு வேலைகள் உள்ளடங்கலாக), 6,205 நலன்பெறுனர்களுக்கான 1,241 மழை நீர் தாங்கிகள், 450 பேர்களுக்கான 6 குழாய்க் கிணறுகள் வழங்கப்படும். 45,110 நலன்பெறுனர்களுக்கான 9,022 வீட்டு மலசல கூடங்களை வழங்கும் துப்புரவேற்பாட்டு அம்சமும் உள்ளது. பொலனறுவை மாவட்ட வேலைகளுக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 939 மில்லியனாகும்.

### மட்டக்களப்பு மாவட்டம்:

மட்டக்களப்பில் கருத்திட்டத்தின் மூலம் 5,070 நலன்பெறுனர்களுக்கான 78 தோண்டப்பட்ட கிணறுகள், 3,000 நலன்பெறுனர்களுக்கான 40 குழாய்க் கிணறுகள் மற்றும் 100 நலன்பெறுனர் களுக்கான 20 மழை நீர் தாங்கிகள் வழங்கப்படும். 1,465 நலன்பெறுனர்களுக்கான 293 வீட்டு மலசல கூடங்களை வழங்குகின்ற துப்புரவேற்பாட்டு அம்சமும் உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வேலைகளுக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 47 மில்லியன் ஆகம்.

## (iii) நிறுவனப் பலப்படுத்தல் ஆக்கக்கூறு

இந்த ஆக்கக்கூறின் பிரதானமான குறிக்கோள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டுச் செயற்பாட்டை மேம் படுத்துவதாகும். நிதி முகாமைத்துவத்தை மேம் படுத்துவதற்கான நடைமுறையாக்கல் மூலோபாயங்கள், ஆதனப் பதிவேட்டு முகாமைத்துவம், மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல் ஆகியவற்றை வேலைகள் உள்ளடக்குகின்றன. கருத்திட்ட ஆக்கக்கூறுகளுக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 372 மில்லியனாகும். இந்த ஆக்கக்கூறின் கீழான அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 10. உலர் வலய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம் (A.D.B 5 வது கருத்திட்டம்)

வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களின் உலர் வலய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான மேம்பாட்டுக் கருத்திட்டத்தை தே.நீ.வ.வ.ச. நடைமுறைப்படுத்துகின்றது. இக் கருத்திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார், சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய நகரங்களுக்கு மேம்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்படும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 21,232.90 மில்லியனாகும். 2014 மார்கழி மாத இறுதியில் ஒட்டுமொத்தமான பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 62.64% மற்றும் 35.34% ஆகும். 2013 ஆம் ஆண்டில் 21 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டதோடு மேலும் 04 ஒப்பந்தங்கள் 2014 இல் கையளிக்கப்பட்டன.

### வவுனியா:

வவுனியாவுக்கு இக் கருத்திட்டத்தின் கீழ் பேராறுக்கு குறுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற 3.83 மில்லியன் நீர்த் தேக்கத்தின் மூலம் நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதியொன்று வழங்கப்படும்.மேற்புற நீர் ஒப்பந்தத்தின் கீழ் பேறாறு நீர்ததேக்க அணைக் கட்டின் நிர்மாணிப்பு மற்றும் பாலத்தின் நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது. நிலக் கீழ் மற்றும் மேற்புற நீர் ஒன்றாக சேர்க்கப்பட்டு நாளொன்றுக்கு 9,800 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீர் 109,432 மக்களுக்கு வழங்கப்படும். நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 3 புதிய நீர்கோபுரங்கள், ஒரு நீர்த் தேக்கம், 137 கி.மீ. நீளமான விநியோக குழாய்கள் ஆகியன இதன் பிரதானமான அம்சங்களாகும். வவுனியாவில் 2 பொது மலசல கூடங்கள் மற்றும் 500 வீட்டு மலசல கூடங்களை வழங்குதலும் துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறின் கீழ் உள்ளதோடு இவை அநேகமாக பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

### மன்னார்:

மன்னார் முருங்கன், வங்காலை மற்றும் திருகேதீஸ்வரத்திற்கு நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்காக 10 துழையிடப்பட்ட கிணறுகளை அபிவிருத்தி செய்தல் மன்னா் மேம்படுத்தல்களில் உள்ளடங்குகின்றன. திட்டமிடப்பட்ட 55,000 சனத்தொகைக்கு முழுமையாக சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்கும் பொருட்டு 33 கி.மீ. அனுப்பல் குழாய்கள் மற்றும் 100 கி.மீ. விநியோக முறைமையுடன் கூடியதாக ஒரு புதிய நீர்க் கோபுரமும், இரண்டு நிலக் கீழ் நீர்த் தேக்கங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. நான்கு பொது மலசல கூடங்களும் 330 வீட்டு மலசல கூடங்களும் நிர்மாணிப்புக் கட்டத்தில் உள்ளன. சுத்திகரிப்பு வசதி, நீர் களஞ்சியப்படுத்தல் கட்டமைப்பு, பொது மலசலகூடங்கள் மற்றும் விநியோக முறைக்கான DI, HDPE மற்றும் PVC குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டன. சுத்திகரிப்பு வசதி மற்றும் பொது மலசலகூடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. குழாய்களை இடுதல் 75% பூர்த்தியடைந்துள்ளது. நீர் களஞ்சியப்படுத்தல் கட்டமைபின் நிர்மாணிப்புகள் நடைபெற்று வருகின்றன.

### சிலாபம்:

சிலாபத்தில், தெதுரு ஓயாவிலிருந்து பெறப்படுகின்ற நீரை சுத்திகரித்து நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீரை 91,000 மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பிங்கிரிய பிரதேசத்தில் 12,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி, 2 நீர்த் தேக்கங்கள், 43 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்கள், 153 கி.மீ. நீளமான விநியோக குழாய்கள் ஆகியவற்றை திட்டத்தின் பிரதான அம்சங்கள் கொண்டிருப்பதோடு, துப்புரவேற்பாட்டுத் துறையின் கீழ் 02 பொது மலசல கூடங்கள் மற்றும் 500 வீட்டு மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. சுத்திகரிப்பு வசதி மற்றும் குழாய்களை இடும் இரண்டு ஒப்பந்தங்களில் அநேகமானவை பூர்த்தியடைந்துள்ளன. உள்வாங்கு நிலையம் மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நிர்மாணிப்பு நடைபெற்ற வருகின்றது. சிலாபத்திலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு வேலைகள் கேள்விப்பத்திரம் கோரும் கட்டத்தில் உள்ளது.

### புத்தளம்:

புத்தளம் நீர் வழங்கல் திட்டமானது, நாளொன்றுக்கு 15,000 கன மீற்றர் உள்வாங்கலை உள்ளடக்கியுள்ளதோடு கலா ஓயாவிலிருந்து நீர் பெறப்படும். 197,000 மக்களுக்கு சேவையாற்றப்படவுள்ளது. உத்தேச திட்டமானது 2 நீர்த் தேக்கங்கள், 7 பம்பி நிலையங்கள், எழுவான் குளத்திலிருந்து புத்தளம் வரை 40 கி.மீ. நீளத்திற்கான அனுப்பல் குழாய், நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும். துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறானது, புத்தளம் நகரத்தில் மற்றும் நகர்சார் பிரதேசத்தினுள் 2 பொது மலசல கூடங்கள் மற்றும் 500 வீட்டு மலசல கூடங்களை நிர்மாணித்தலை உள்ளடக்கியிருக்கும்.

சுத்திகரிப்பு வசதி மற்றும் பொது மலசலகூடங்கள் பூர்த்தியடைந்து வருகின்றன. குழாய் இடும் ஒப்பந்தங்கள் நடைபெற்று வருகின்றன. உள்வாங்கு நிலையம் மற்றும் எழுவான்குளத்தில் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிர்மாணித்தல் அட்டவணைப்படுத்தப்பட்டதை விட பின்தங்கியதாக நடைபெற்று வருகின்றது. தற்போதுள்ள நீர் சுத்தி கரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு வேலைகள் கேள்விப்பத்திரம் கோரும் கட்டத்தில் உள்ளது.

## 11. யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம் (A.D.B 6 வது கருத்திட்டம்)

இக் கருத்திட்டம், யாழ்ப்பாண நகரத்திலும், நகர்சார் பிரதேசங்களிலும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சில சிறிய நகரங்களிலும் உள்ள 689,000 மக்க ளுக்கான குடி நீர் வழங்கல் வசதிகளை மேம்படுத் தும். கருத்திட்டமானது யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலக் கீழ் நீர் மூலங்களுக்கு மேலதிகமாக கிளிநொச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள இரணமடு குளத்திலிருந்து நீரைப் பெறுவதற்கு எதிபார்க் கின்றது. குடிநீருக்காக இரணமடு வாவியிலிருந்து நீரைப் பகிர்ந்துகொள்வதில் ஏற்பட்ட சமூகப் பிரச்சி னையின் காரணமாக, நீர் மூலமாக மருதங்கேணி கடற் பிரதேசத்திலிருந்து (மிகச் சாத்தியமான இடம்) மாற்று வழிமுறையாக கடல் நீரைப் பெறுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அத்துடன் குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கான தொழிற்பாட்டு ஒப்பந்தத்துடன் கூடியதாக வடிவமைத்து நிர்மாணிக்கின்ற அடிப படையில் உள்வாங்கு நிலையம், மிதக்கவிடப்படும் பிரதான நீர் குழாய் உள்ளிட்ட கடல் நீர் உவர்ப்பு நீக்கல் பொறித்தொகுதியும் முன்மொழி யப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 18,328 மில்லியனாகும். கருத்திட்ட பொறியியல் மற்றும் நிறுவன மதியுரை (PEIC) ஒப்பந்தம் 2012 மார்கழி மாதத்தில் வழங்கப்பட்டது. யாழ்ப்பாண மாநகரப் பிரதேசம் தவிர்ந்த நீர் வழங்கல் தொடர்பிலான அநேகமான வடிவமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. 15உயர்த்தப்பட்ட கோபுரங்க ளின் நிர்மாணிப்பு மற்றும் நீர் விநியோக வலையமைப்பின் வழங்கல் மற்றும் இடுதல் (பக்கேஜ் 1) கையளிக்கப்பட்டுள்ளதோடு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுத்திகரிக்கப்பட்ட நீர் அனுப்பல் பிரதான குழாய் (பக்கேஜ் 1 மற்றும் 2), மற்றும் ஏனைய நீர் விநியோக வலையமைப்புகள் (பக்கேஜ் 2,3) பெறுகை நடைமுறைக் கட்டத்தில் உள்ளன. சாக்கடை வேலைகள் தொடர்பிலான எண்ணக்கரு ரீதியிலான வடிவமைப்பு (JMC நீரேந்து பிரதேசம் 1 மற்றும் 2) நடைபெற்று வருகின்றது. சாக்கடை வேலைகளுக்கான EIA 2014 மார்கழி 3 ஆம் திகதி CEA க்கு சமர்ப்பிக்கப்பட்டது. இரணமடு வாவியின் நீர் பகிர்ந்துகொள்ளல் பிரச்சினையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை விட பின்தங்கிய நிலையில் கருத்திட்டத்தின் முன்னேற்றம் உள்ளது. நீர் பகிர்ந்துகொள்ளல் பிரச்சினையின் காரணமாக இவ்வாண்டின் முதல் அரைப் பகுதியில் பல பக்கேஜுகளின் கையளிப்பு இடை நிறுத் தப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் மூலம் அடையப்பெற்ற பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 32% மற்றும் 22% ஆகம்.

## 12. கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம் (GCWWMIIP)

1800 களில் குழாய் நீர் வழங்கலைப் பெற்ற ஒருசில ஆசிய நகரங்களில் கொழும்பும் ஒன்றாகும். விநியோக வலையமைப்பின் பல பகுதிகள் 100 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டவையாகும். அதிகரித்து வருகின்ற நீருக்கான கேள்வியை நிறைவு செய்வ தற்கான பல கருத்திட்டங்கள் உள்ள போதிலும், 41.7% பௌதீக ரீதியிலான இழப்புகள், 3% நிர்வாக ரீதியிலான இழப்பு, 3% அங்கீகாரமற்ற நுகர்வு மற்றும் 0.5% குத்தகைக் காணிகளுக்கான இலவச நீர் வழங்கல் உள்ளடங்கிய 48.2% அதிகூடிய வருவாயற்ற நீரின் (NRW) பெறுபேறாக, வலையமைப்பில் குறிப்பிடத்தக்களவு புனரமைப்பு நடைபெறவில்லை. நகரத்தின் ஒருசில பகுதிகளில் நீர் அழுத்தம் கூடிக்குறைவடைதலும் இடைக்கிடையான நீர் வழங்கலும் பொதுவாக இடம்பெறுகின்றது. நாளொன்றுக்கான 290,000 கன மீற்றர் நீர் வழங்கலில் அரைவாசி நீர் இழக்கப்படுவதோடு, எந்தவித வருமானத்தையும் ஈட்டித்தருவதில்லை. இது அவசர அடிப்படையில் வருவாயற்ற நீரைக் குறைப்பதை கட்டாயப்படுத்துகின்றது.

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகா மைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், கொழும்பு நகரத்தில் நீர் கிடைப்பதை அதிகரிக்கச் செய்தலும் நீர் வழங்கல் சேவையில் மேம்படுத்தப்பட்ட வினைத்திறனுமாகும். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகள் யாதெனில், மேம்படுத்தப்பட்ட விநியோக முறைமை, 18% க்கு குறைவாகக் குறைக்கப்பட்ட வருவாயற்ற நீர், நீர் சுத்திகரிப்பு மற்றும் அனுப்பலில் வலுசக்திச் சேமிப்பு, கொழும்பு கிழக்கு நகர் பிரதேசத்தில் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை அதிகரித்தல் மற்றும் தே.நீ.வ.வ.ச.யில் நிறுவன ரீதியிலான மறுசீரமைப்பு ஆகியனவாகும்.

GCWWMIIP இன் குறிக்கோளானது கொழும்பு நீர் வழங்கல் சேவை மேம்பாட்டுக் கருத்திட்டம் மற்றும் அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் வலுசக்திச் சேமிப்புக் கருத்திட்டம் எனும் இரண்டு கருத்திட்டங்களின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படும்.

கொழும்பு நகரத்தின் நீர் வழங்கல் வலையமைப்பு புனரமைப்புக் கருத்திட்டம் மற்றும் ஏனைய அதுசார்ந்த வேலைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) நிதியளிப்புச் செய்யும். அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டத்துக்கு பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை (AFD) கூட்டாக நிதியளிப்புச் செய்யும். கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு ADB/AFD – டொலர் 234 மில்லியன் மற்றும் இலங்கை அரசாங்கம் - டொலர் 85 மில்லியன் ஆகும்.

## 13. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி கருத்திட்டத்தின் யுத்தத்திற்கு பின்னரான பிரதேசங்களில் சமுதாய அடிப்படையிலான கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்பாடு செய்தல்



கருத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதன் (IWSS) ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் வருவதற்காகவும் குடியமர்ந்துள்ள மக்களுக்காகவும் யுத்தத்திற்கு பின்னரான கிராமிய சமுதாயத்தினரின் வறுமையைக் குறைத்தல் மற்றும் வாழக்கைத் தரத்தை மேம்படுத்துதலுமாகும். இக்கருத்திட்டத்திற்கு ADB/JFRP - ரூபா 254 மில்லியனும் இலங்கை அரசாங்கம் ரூபா 33 மில்லியனும் நிதியளிப்புச் செய்கின்றது.

மேலுள்ளவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்காக கருத்திட்டமானது, கிராமிய (IWSS) வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல், தொழிற்பாடு மற்றும் பராமரிப்புக்காக உள்;ர் கிராமிய அடிப்படையிலான அமைப்புகளின் (CBO) இயலளவை கட்டியெழுப்புதல், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ்ப்பாண அலுவலகத்தில் கிராமிய நீர் வழங்கல் அலகை ஸ்தாபித்தல், நலன்பெறும் சமுதாயத்தினரிடையே சிறந்த சுகாதாரம் தொடர்பிலான விழிப்புணர்வை மேம்படுத்தல், நீர் பேணல் பழக்கங்களை விருத்தி செய்தல், வருமானம் மற்றும் வாழ்வாதார உதவிகளை வழங்கல் ஆகியவற்றை மேற்கொள்ளும்.

அனைத்து செயற்பாடுகளும் மத்திய, மாகாண மற்றும் உள்ளூர் அதிகார சபை மற்றும் உள்நாட்டு சமுதாயத்தினரின் ஆலோசனைகளுடன் கூடியதாக மேற்கொள்ளப்படும்.

அரசாங்கத்தின் நடைமுறையிலுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்ட பிரதேசத்தின் அபிவிருத்திப் பங்குதாரர்களின் ஆதங்கங்களைக் கருத்திற்கொண்டு கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கருத்திட்டத்தின் விடயப்பரப்பானது, 2500 வறிய கிராமிய குடும்பத்தினருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல், 645 வறிய கிராமிய குடும்பங்களுக்கு நச்சுத்தடை தாங்கிகளுடன் கூடிய புதிய குறைந்த செலவிலான துப்புரவேற்பாட்டு முறைமை, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு பற்றி 200 பேருக்கு பயிற்சியளித்தல், வடிவமைப்பு, நிர்மாணிப்பு, தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்பு உள்ளடங்கிய நிதி முகாமைத்துவம், சுகாதார விழிப்புணர்வூட்டல் மற்றும் நீர் வழங்கல் தொடர்பில் 1,900 குடும்பத்தினருக்கு கல்வியூட்டல், கருத்திட்ட நிர்மாணிப்புகளுடன் இணைக்கப்பட்டதான பணத்துக்கு வேலை செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் 1,000 பேரை ஈடுபடச் செய்தல் ஆகியனவாகும்.

கருத்திட்ட செயற்பாடுகள் 2013 தை 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, 2014 ஆனி 30 ஆம் திகதி அளிப்புகள் முடிவுறுத்தப்பட்டன. விடயப்பரப்பு மாற்றமடைந்ததன் காரணமாகவும் (நெடுந்தீவுக்கு RO பொறித் தொகுதியை வழங்குதலும் பொருத்துதலும்) மேலதிக பிரதேசங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் காரணமாகவும் (அக்கராயன் மற்றும் இயக்கச்சி), அளிப்பானது 2015 புரட்டாதி வரை நீடிக்கப்பட்டது.

அக்கராயன், மாதகல் மற்றும் சந்தாய் நீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படும் கட்டத்தில் உள்ளதோடு நெடுந்தீவு RO பொறித்தொகுதியின் வழங்கல் மற்றும் வட்டகச்சி கோபுர நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 80% ஆகவும் நிதியியல் முன்னேற்றம் 50% ஆகவும் உள்ள நிலையில் செயற்பாடுகள் முன்னெடுத்து வரப்படுகின்றன.

## கொரிய உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

## 14. ருகுணுபுர நீர் வழங்கல் கருத்திட்டம்



உள்வாங்கு நிலையம்

இக் கருத்திட்டமானது அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை பெரும்பாகம் மற்றும் மகாவலி அபிவிருத்திப் பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக திட்டமிடப்பட்டதாகும்.

இது ஏறத்தாழ 112,000 மக்களுக்கு குடிநீரையும், அதற்கு மேலதிகமாக வர்த்தக மற்றும் கைத்தொழில் நீர் தேவைப்பாடுகளையும் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளது. அதற்கிணங்க 2025 ஆம் ஆண்டில் நீருக்கான மொத்தக் கேள்வி நாளொன்றுக்கு 35,000 க. மீற்றர்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் நிபந்தனையுடன் கூடிய அங்கீகாரத்துடன் தேவையான சுத்திகரிக்கப்படாத நீரை உள்வாங்குவதற்காக நீர் மூலங்களில் நான்கு நீர் மூலங்களான கடவர வாவி, வளவே கங்கையின் லியனகஸ்தொட்ட அணைக்கட்டு, ரிதியகம வாவி மற்றும் கச்சிலிகல் ஆறு ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கருத்திட்டத்தின் 1 வது கட்டத்துக்கு, ஆரம்பத்தில் ரிதியகம வாவியிலிருந்து நாளொன்றுக்கு 17,500 கன மீற்றர் நீரை விடுவிப்பதற்கு விவசாயிகளுடனான உடன்படிக்கையின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. மீதியுள்ள தேவைப்பாடு ஆரம்ப விடுவிப்பின் தாக்கத்தை அவதானித்த பின்னர் இரண்டு ஆண்டுகளினுள் விடுவிக்கப்படவுள்ளது.
உத்தேச கருத்திட்டம் இரண்டு படிநிலைகளில் நடைமுறைப்படுத்தப்படும். கருத்திட்டத்தின் முதலாவது கட்டம் கருத்திட்டத்தின் முழு இயலளவுக்குமான அனுப்பல் மற்றும் விநியோக முறைமையை உள்ளடக்கியுள்ள அதேவேளை, நாளொன்றுக்கு 17,500 கன மீற்றர் கொள்ளளவுக்கான உள்வாங்கு நிலையம் மற்றும் சுத்திகரிப்பு வேலைகளை உள்ளடக்கியுள்ளது. 2011 மாசி 10 ஆம் திகதி கட்டம் 1 ஆரம்பிக்கப்பட்டதோடு, ஆறு மாதங்களுடன் கூடிய திருத்தப்பட்டவாறான வேலைத் திட்டத்துக்கமைய 2014 கார்த்திகையில் நீடிப்பு நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தியடையவுள்ளன.

கட்டம் 1 க்கான மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 13,131.32 மில்லியனாகும். (வெளிநாடு - ரூபா 8,653.54 மில்லியன், உள்நாட்டு ரூபா 4,477.78 மில்லியன்) மேற்படி ருகுணுபுர நீர் வழங்கல் கருத்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.

## அவுஸ்திரேலிய உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டம்

## 15 அம்பாறை மாவட்டத்தின் சேவை வழங்கப்படாத பிரதேசங்களுக்கான ஒழுங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111

இக் கருத்திட்டம் அம்பாறை மாவட்டத்தின் சேவை வழங்கப்படாத பிரதேசத்தில் வசிக்கும் ஏறத்தாழ 200,000 மக்களுக்கும் அதேபோன்று மொனறாகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் ஒருசில பகுதிகளுக்கும் சேவையாற்றவுள்ளது. நாளொன்றுக்கு 27,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, உள்வாங்கு நிலையம், உயர்த்தப்பட்ட கோபுரம் (கோணேஷபுரம் மற்றும் பக்கிஎல்ல 1,000 கன மீற்றர், நாமல் ஓயா, இங்கினியாகல, சென்றல் கேம்ப் 750 கன மீற்றர், தொட்டமா 600 கன.மீற்றர்), நீர்த்தொட்டி (ஹிமிதுராவ 2,500 கன மீற்றர், பரகஹகெலே, தடயந்தலாவ மற்றும் கொனாகொல்ல 1,600 கன மீற்றர்), 100 கிலோ மீற்றர்களுக்கான DI பிரதான அனுப்பல் குழாய்களை வழங்கல் மற்றும் இடுதல் மற்றும் விநியோக முறைக்கான PE குழாய்கள் மற்றும் பொருத்துதல்களை வழங்கல் மற்றும் இடுதல் (ஏறத்தாழ 900 கிலோ மீற்றர்) ஆகியன கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகளாகும். இக்கருத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 40,000 புதிய இணைப்புகளை வழங்க முடியும் என்பதோடு கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 19,920 மில்லியனாகும்.

இக்கருத்திட்டத்திற்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தின் ஆக்கக் கூறுகளின் கீழான உள்நாட்டு நிதியில் பற்றாக்குறை காணப்பட்டது. அவசர நிதித் தேவைகளை பெறும் பொருட்டு இலங்கை அரசாங்கத்திற்கும் ANZ/EFIC க்கும் இடையிலான தற்போதைய கடனை 10% ஆல் மேம்படுத்துவதற்கு திறைசேரிக்கு சிபாரிசு செய்யப் பட்டுள்ளது. எவ்வாறாயினும் வெளிநாட்டுக் கடனை மேம்படுத்தாது இலங்கை அரச நிதியங்களிலிருந்து அவசியமான அவசர நிதியத் தேவைகளை வழங்குவதற்கு திறைசேரி இணங்கியுள்ளது. 2014 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு (இலங்கை அரச) நிதியங்களின் ஒதுக்கீடு அதிகரிக்கப்படவுள்ளது. 2015 ஆம் ஆண்டுக்காக உள்நாட்டு நிதியங்கள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. இலங்கை அரசாங்க நிதியத்தின் கீழான வேலைகள் இடைநிறுத் தப்படலாம்.

2014 மார்கழி இறுதியில் கருத்திட்டம் 81% பௌதீக முன்னேற்றத்தையும் 75% நிதியியல் முன்னேற் றத்தையும் அடைந்துள்ளது.

## பிரான்ஸ் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம்

## 16. திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம

கந்தளாய் நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியின் உற்பத்திக் கொள்ளளவை நாளொன்றுக்கு 54,000 கன மீற்றர் (நாளொன்றுக்கு12 மில்லியன் கலன்கள்) வரை அதிகரிப்பதும் அதன் மூலம் திருகோணமலை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் முழுப்பிர தேசத்தினதும் சேவை மட்டத்தை அதிகரிக்கச் செய்தலுமே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போதுள்ள திருகோணமலை நீர் வழங்கல் திட் டத்தை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் இக் கருத்திட்டத்தின் செயற்பரப்பாகும். திருகோணமலை நகரமும் பட்டினமும், கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, குச்சவெளி மற்றும் ஈச்சிளம்பத்து பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய 330,000 மக்கள் இக்கருத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவார்கள்.

மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 4,200 மில்லியனில் பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை (AFD) யூரோ 10 மில்லியனையும், பிரான்ஸ் நிதி அமைச்சு (RPE) யூரோ 12.5 மில்லியனையும், இலங்கை அரசாங்கம் ரூபா 1,003 மில்லியனையும் நிதியிடுகின்றது. மரபு ரீதியான சுத்திகரிப்பு முறையுடன் கூடியதாக மகாவலி கங்கை நீர் வளமாக உள்ளது.

கருத்திட்ட ஆக்கக்கூறுகள் சுருக்கமாக பின்வருமாறு: புதிய உள்வாங்கும் நிலையமொன்றையும் பம்பி நிலையமொன்றையும் அல்லை கந்தளாய் பாலத் துக்கு அருகில் நிர்மாணித்தல், புதிய பிரதான சுத்திகரிக்கப்படாத நீர்க் குழாய்களை இடுதல், நீர் விநியோக முறைமையின் மேம்பாடு, கந்தளாய் நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியின் புனரமைத்தல், விரிவாக்கல் மற்றும் நீர்த் தேக்கங்களின் பராமரிப்பு வேலைகள், மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு பெறுகைகள் (SCADA) முறைமையை அறிமுகப்படுத்தல்.

தற்போது இத்திட்டம் நாளொன்றுக்கு 5.5 மில்லியன் கலன்களை உற்பத்தி செய்கின்றது. 180,000 பேருக்கு 36,000 புதிய இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன. திருகோணமலை பெரும்பாக ஒருங் கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் உற்பத்தி நாளான்றுக்கு 12 மில்லியன் கலன்களாக அதிகரிக்கப்படும், 2025 ஆம் ஆண்டு வரை 330,000 மக்களுக்கு 69,000 இணைப்புகளை வழங்கக் கூடியதாக இருக்கும்.

அனைத்து செயற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதோடு, முறைமையை தொழிற்படுத்தும் பொருட்டு தொழிற பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவுக்கு கையளிக கப்பட்டுள்ளது.

## 17. பெல்ஜியத்தின் உதவியுடன் மேற் கொள்ளப்பட்ட கருத்திட்டம் கொலொன்ன/ பலாங்கொடை நீர் வழங்கல் கருத்திட்டம்



கொலன்னவுக்கான புதிய நீர் வழங்கல் திட்டத்தின் வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பு மற்றும் பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம் ஆகியன இரண்டு பிரதான ஆக்கக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது. அவை பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம் மற்றும் கொலொன்னவுக்கான புதிய நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்பு ஆகியனவாகும்.

கருத்திட்டத்திற்கு இலங்கை அரசாங்கத்தினாலும் பெல்ஜியம் அரசாங்கத்தினாலும் நிதியளிக்கப் படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு இலங்கை ரூபாய் 4,658 மில்லியனாகும். பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்துக்கு இலங்கை ரூபாய் 2,056 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை எஞ்சிய தொகை கொலொன்ன நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2014 இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 87% மற்றும் 74% ஆகும்.

தற்போதைய பற்றாக்குறையை நிறைவு செய்யும் வகையில் 8,000 குடும்பங்களுக்கு புதிய இணைப் புகளை வழங்குவதன் மூலம் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை விஸ்தரிப்பதற்கு உத்தேச பலாங் கொடை நீர் வழங்கல் திட்டத்துக்கான விரிவாக்கத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைப் பொறுத்தவரை, இந்த ஆக்கக்கூறானது பலாங்கொடை பிரதேச சபைப் பிரதேசம், பலாங்கொடை நகர சபைப் பிரதேசம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இம்புல்பே பிரதேச சபைப் பிரதேசத்தின் ஒரு பகுதியிலுள்ள 40,000 மக்களினதும், வர்த்தக மற்றும் கைத்தொழில் ரீதியிலான நீருக்கான கேள்வியை நிறைவு செய்யும். இதற்கிணங்க, 2030 ஆம் ஆண்டளவில் நீருக்கான மொத்தக் கேள்வி நாளொன்றுக்கு 7000 கன மீற்றர்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, தற்போதுள்ள பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத் திற்கான உள்வாங்கு நிலையம் அமைந்துள்ள வளவே கங்கையின் வெலிஹாரனவிலிருந்து இதற்கான நீர் உள்வாங்கப்படும். தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு மேலதிகமாக பின்வரும் ஆக்கக்கூறுகள் நிர்மாணிக்கப்படும். அவையாவன, நீர் உள்வாங்கும் கிணறு (நாளொன்றுக்கு 7,000 கன மீற்றர்), நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி (நாளொன்றுக்கு 7,000 கன மீற்றர்), ஜயந்திமாவத்தை மற்றும் பங்கியாவத்தையில் இரண்டு நில நீர்த் தேக்கங்கள் (முறையே 1,500 கன மீற்றர்கள் மற்றும் 750 கன மீற்றர்கள்), 0.7 கி.மீற்றர் தூரத்திற்கு சுத்திகரிக்கப்படாத நீர் பம்பிக் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல், 4.6 கி.மீற்றருக்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் அனுப்பல் பிரதான குழாய்களை வழங்கல் மற்றும் இடுதல் அத்துடன் 12.1 கி.மீ. விநியோக வலையமைப்பை வழங்கல் மற்றும் இடுதல் ஆகியனவாகும்.

உத்தேச கொலொன்ன நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் கொலொன்ன பிரதேச சபைப் பிரதேசத்தின் 40,000 மக்களுக்கு ஆண்டு முழுவதிலும், எம்பிலிபிட்டிய பிரதேச சபைப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கு மழை காலத்திலும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆதலால், வர்த்தக மற்றும் கைத்தொழில் கேள்விக்கு மேலதிகமாக 8,000 புதிய இணைப்புகள் வழங்கப்படும். 2030 ஆம் ஆண்டளவில் மொத்த நீருக்கான கேள்வி நாளொன்றுக்கு 7000 கன மீற்றர்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, இதற்கான நீர் 3 மீற்றர் உயரமும் 25 மீற்றர் நீளமும் கொண்ட அணை யொன்றை கட்டுவதன் மூலம் விஜேரியாவிலுள்ள எரபோருவ ஆற்றிலிருந்து உள்வாங்கப்படும். மேலும், நீர்ப்பாசனத் திணைக்களமும் கமநல அபிவிருத்தித் திணைக்களமும் குறிப்பிட்ட அணைக்கட்டின் நீரோட்டத்திலிருந்து ஏறத்தாழ 1,500 ஏக்கர் நெற் செய்கைக்காக நீரைப் பெறுகின்றன. ஆதலால், குறிப்பாக வரட்சிக் காலத்தில் நீரைப் பகிர்ந்து கொள்வதற்காக நீர்ப்பாசனத் திணைக்களமும், கமநல அபிவிருத்தித் திணைக்களமும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டுள்ளது.



மண் பரிசோதனை

இக்கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஆக்கக்கூறுகள் நிர்மாணிக்கப்படும். 3 மீற்றர் உயரமும் 25 மீற்றர் நீளமும் கொண்ட அணைக்கட்டு, நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி (நாளொன்றுக்கு 7000 கன மீற்றர்), மடுவன்வெல மற்றும் பனாமுரேயில் 2 நில நீர்த் தேக்கங்கள் (முறையே 1,000 கன மீற்றர் மற்றும் 500 கன மீற்றர்), 1.6 கிலோ மீற்றர் நீளத்துக்கு சுத்திகரிக்கப்படாத நீர் அனுப்பல் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல், எரபோருவ SWTP யிலிருந்து எம்பிலிபிட்டிய உயர்த்தப்பட்ட நீர் கோபுரம் வரை 32 கிலோ மீற்றர் தூரத்துக்கு சுத்திகரிக்கப்பட்ட பிரதான நீர் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் அத்துடன் 19.5 கிலோ மீற்றர் நீளத்துக்கு விநியோக முறைமையை வழங்கல் மற்றும் இடுதல்.

2014 ஆம் ஆண்டினுள் அநேகமான சிவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு, கொலொன்ன மற்றும் பலாங்கொடை உள்வாங்கு நிலையம், கொலொன்ன சுத்திகரிக்கப்படாத பிரதான நீர்க் குழாய், கொலொன்ன மற்றும் பலாங்கொடை விநியோகம் போன்ற ஒருசில பாரிய ஆக்கக்கூறுகள் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும், தொழில்நுட்ப மற்றும் இலத்திரனியல் பொருத்தல்கள் இவ்வாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

## 18.ஹங்கேரிய உதவியுடன் மேற்கொள் ளப்பட்ட கருத்திட்டங்கள்

### லபுகம – கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் புனரமைப்பு

ஹங்கேரிய அரசாங்கத்திலிருந்தும் இலங்கை அரசாங்கத்திலிருந்தும் நிதியளிப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஒரேயொரு புனரமைப்புக் கருத் திட்டம் இதுவாகும். லபுகம சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட கருத்திட்ட செலவு யூரோ 16,714,045 ஆகுமென்ப தோடு, கலட்டுவாவா சுத்திகரிப்புத் தொகுதிக்கான செலவு யூரோ 17,383,906 ஆகும்.

இக்கருத்திட்டம் லபுகம மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் இனங்காணப் பட்ட ஆக்கக்கூறுகளுக்கான அனைத்து புதுப்பித்தல் வேலைகளையும் புதிய நிர்மாணிப்பு வேலைகளையும் உள்ளடக்குகின்றது. கருத்திட்டம் 2013 ஐப்பசி 21 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, கருத்திட்ட காலம் 36 மாதங்களாகும்.

லபுகம மற்றும் கலட்டுவாவவில் நடைபெறாதிருந்த புதுப்பித்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் ஒருசில பூர்த்தி செய்யப்பட்டன. அங்கீ கரிக்கப்பட்ட வடிவமைப்புக்கிணங்க புதிய நிர் மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புகள் கிடைக்கப் பட்டதன் பின்னர் செயற்பாட்டின் எஞ்சிய வேலைகள் ஆரம்பிக்கப்படும். தே.நீ.வ.வ.சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்தும் அதேபோன்று உற்பத்திப் பிரிவிலிருந்தும் அங்கீகாரமும் அபிப்பிராயம் தெரிவித்தலும் கிடைத்துள்ளது. பாரிய பிரச்சினைகள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை என்பதால், கருத்திட்டத்தின் பிரதான நிகழ்ச் சித்திட்டத்துக்கமைய வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கருத்திட்டம் எவ்வித கஷ்டங்களும் இன்றி நடைபெற்று வருவதோடு, 2014 கார்த்திகை இறுதி வரை, பௌதீக முன்னேற்றம் 24.98% ஆகவும் நிதியியல் முன்னேற்றம் 30.30% ஆகவும் காணப்பட்டது.

## 19. ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கை அரசாங்கத்தின் உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

### பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

இக்கருத்திட்டம், குழாய் நீர் வழங்கல் திட்டத்தை அபிவிருத்தி செய்து கருத்திட்ட பிரதேசத்திற்கு பாதுகாப்பானதும் நம்பக் கூடியதுமான நீரை வழங்குவதன் மூலம் பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல அபிவிருத்திப் பிரதேசங்களுக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. கருத்திட்டத்தின் இலக்கு, பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல அபிவிருத்தித் திட்டத்தின் மிருதுவான மற்றும் உரிய நேரத்திலான நடைமுறைப்படுத்தலுக்கு உதவியளிதலும் கருத்திட்ட பிரதேசத்தில் கைத் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்க ளிப்புச் செய்தலுமாகும்.

கருத்திட்ட காலம் 42 மாதங்களாகும் என்பதோடு கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 10,396.48 மில்லியனாகும். இக்கருத்திட்டத்திற்கு ஐக்கிய அமெரிக்காவும் இலங்கை அரசாங்கமும் நிதியளிப்புச் செய்கின்றது. இக்கருத்திட்டத்தின் மூலம் பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஏறத்தாழ 101,000 குடும்பங்கள் நலன்பெறவுள்ளனர்.

வடிவமைப்பு வேலைகளில் 90% பூர்த்தியடைந் துள்ளன. அணைக்கட்டு பிரதேசத்தை தவிர காணி கொள்ளல் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்து உள்ளன. எல்ல – கும்பல்வெல வீதியில் குழாய் இடும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

## 20. சீன உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

### கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்

கட்டம் 1 இன் கீழ் பஸ்னாகொட நீர்த் தேக்கத்தை வடிவமைத்துக் கட்டும் அடிப்படையில் நிர்மாணித்தல், நாளொன்றுக்கு 85,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையத்தை நிர்மாணித்தல், நாளொன்றுக்கு 56,700 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட பம்பி நிலையத்தை நிர்மாணித்தல். பஸ்னாகொட உள்வாங்கு நிலையத்திலிருந்து கரஸ்னாகல நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி வரை சுத்திகரிக்கப்படாத பிரதான நீர் குழாயை நிர்மாணித்தல், 1,500 கன மீற்றர் தெளிந்த நீர்த் தேக்கத்துடனான நாளொன்றுக்கு 54,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப பொறித்தொகுதியை நிர்மாணித்தல், உயர்த்தப்பட்ட பம்பி நிலையம், இரசாயன நிலையம், தொழிற்சாலை, ஆய்வுகூடம், நாளொன்றுக்கு 81,000 கன மீற்றர் வரை கொள்ளளவை நீடிக்கக்கூடியதான ஏற்பாடுகளுடன்

கூடியதாக கரஸ்னாகலவில் களஞ்சியம் மற்றும் அலுவலக வசதிகள் ஆகியவற்றை கட்டம் 11 உள்ளடக்கியுள்ளது.நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலுள்ள உயர்த்திய பம்பி நிலையத் திலிருந்து உயர்மட்ட நீர்த் தேக்கத்திற்கு சுத் திகரிக்கப்பட்ட பிரதான நீர் அனுப்பல் குழாயை நிர்மாணித்தல், நாளொன்றுக்கு 10,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட உயர்மட்ட நீர்த் தேக் கத்தை நிர்மாணித்தல், உயர்மட்ட நீர்த் தேக்கத்திலிருந்து தற்போதுள்ள மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள நீர் கோபுரங்களுக்கு 1100 மி.மீ. தொடக்கம் 150 மி.மீ. வரை விட்டத்தைக் கொண்டதான (DI) சுத்திகரிக்கப்பட்ட பிரதான நீர் ஈர்ப்புவிசை அனுப்பல் குழாயை ஏறத்தாழ 100 கி.மீ. தூரத்திற்கு இடுதல், புவி புதிதாக முன்மொழியப்பட்டுள்ள 1,500 கன மீற்றர் கொள்ளள வைக் கொண்ட 5 நீர் கோபுரங்களை நிர்மாணித்தல், 90 மி.மீ. தொடக்கம் 400 மி.மீ. வரையான விட்டத்தைக் கொண்ட பிரதான விநியோக குழாய்களை (DI/uPVC) 630 கி.மீற்றர்களுக்கு இடுதல், கம்பஹா முகாமையாளர் அலுவலகம் (500 சதுர மீற்றர்), பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (200 சதுர மீற்றர்), விடுதிகள் (150 சதுர மீற்றர்), நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம் (150 சதுர மீற்றர்) மற்றும் ஆய்வுகூடம் (50 சதுர மீற்றர்) ஆகியவற்றை நிர்மாணித்தல் கட்டம் 11 இன் கீழ் உள்ளடக்கப்படுகின்ற ஏனைய ஆக்கக்கூறுகளாகும்.

2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி ஐந்து இடங்களில் திறப்பு விழாக்கள் நடத்தப் பட்டமை இவ்வாண்டினுள் நடைபெற்ற விசேட சம்பவங்களாகும். விநியோக மற்றும் அனுப்பல் குழாய்கள் அத்துடன் கோபுரம்.்.நீர்த் தேக்கம் ஆகியவற்றின் வடிவமைப்புக்காக வடிவமைப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. குழுக்களால் வலையமைப்பு வடிவமைப்பு வேலைகள் கண் காணிக்கப்பட்டதோடு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் கருத்தியல் ரீதியிலான வடிவமைப்பு மீளாய்வு செய்யப்பட்டது.

கரஸ்னாகல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகு திக்கான புவித்தொழில்நுட்ப பரிசோதனைகளும் மினுவன்கொட, நைவல மற்றும் ரன்பொகுனுகமவில் உள்ள நீர் கோபுரங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. 630 கி.மீற்றர் விநியோக குழாய்களின் நீளத்துக்கு மதிப்பாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டன. குழாய் வலையமைப்பு வடிவமைப்பு மற்றும் நீர் கோபுர வடிவமைப்புக்கான வடிவமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## ஸ்பானிய உதவியுடன் மேற் கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

### 21.இரத்தினபுரி பெரும்பாக ஒருங்கிணைப் பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம்

தற்போதுள்ள பாவனையாளர்களுக்கு வழங்கப் படுகின்ற சேவைகளை மேம்படுத்துதலையும் அதே போன்று புதிய பிரதேசங்களுக்கு நீர் வழங்கலை நீடிப்பதையும் இக்கட்டம் மேற்கொள்ளும். இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இரத்தினபுரி, குருவிட்ட மற்றும் பெல்மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளின் 43 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் அண்ணளவாக 80,000 சனத்தொகையினருக்கு குடிநீரை வழங்குதல் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இக்கட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகள் யாதெனில், களுகங்கை ஆற்றில் நாளொன்றுக்கு 13,000 கன மீற்றர் கொள்ளளவுக்கு பொருத்தமான உள்வாங்கு நிலையமொன்றை நிர்மாணித்தல், உள்வாங்கு நிலையத்திலிருந்து புதிய நீர் சுத்தி கரிப்புப் பொறித்தொகுதிக்கு 1.9 கி.மீற்றர் நீளமும், 400 மி.மீ. விட்டத்தையும் கொண்ட சுத்திகரிக்கப்படாத பிரதான DI பம்பிக் குழாயை இடுதல், நாளொன்றுக்கு 13,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியையும் பொம்பகெலே யில் பம்பி நிலையத்தையும் ஸ்தாபித்தல், சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்து புதிய நகர நீர்த் தேக்கத்துக்கு 3.8 கி.மீ. நீளத்தையும் 300 மி.மீ. விட்டத்தையும் கொண்ட DI சுத்திகரிக்கப்பட்ட நீர் அனுப்பல் பிராதான குழாயை இடுதல், இரத்தினபுரி புதிய நகரத்தில் பிராந்திய உதவி நிலைய அலுவலகத்தை நிர்மாணித்தல், இரத்தினபுரி புதிய நகரத்தில் 01 விடுதியை (176 சதுர மீற்றர்) நிர்மாணித தல், இரத்தினபுரி புதிய நகரம், முவகம மற்றும் பொம்பகெலேயில் 09 விடுதிகளை நிர்மாணித்தல்,

மொத்த மதிப்பீட்டுச் செலவு கட்டம் 1 க்கு ரூபா 4,308.6 மில்லியனும் கட்டம் 11 க்கு ரூபா 5,6663.52 மில்லியனும் ஆகும். வர்த்தக ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதோடு கடன் உடன்படிக்கை கைச் சாத்திடப்படவுள்ளது.

2014 மார்கழி வரை ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 56.7% மற்றும் 73.8% ஆகும்.

# நடைமுறையிலுள்ள சாக்கடைக் கருத்திட்டங்கள்

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கீழ் நிறைவேற்றப்படும் பாரிய சாக்கடைக் கருத்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு/விரிவாக்கத்தின் கீழ் இருந்த வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்

| | கருத்திட்டங்கள் | நிதியளிப்பு முகவராண்மை |
|---|---|---|
| 1 | கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவம; | ADM |
| 2 | இரத்மலான/மொரட்டுவை மற்றும் ஜா-எல/ஏக்கல பிரதேசத்துக்கான கழிவுநீர் அகற்றல் முறைமை | SIDA |
| 3 | கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவம | JICA |
| 4 | கொழும்பு பெரும்பாகத்தில் வீட்டு சாக்கடை இணைப்புகளை அதிகரித்தலும் வலையமைப்புக்கு புறம்பான துப்புரவேற்பாட்டு தீர்வுகளும் | ADB |
| 5 | குருணாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு | சீனா |
| 6 | கதிர்காமம் கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம; | ஆஸ்திரியா |
| 7 | யாழ்ப்பாண மாநகர சாக்கடைக் கருத்திட்டம் | ADB |



## வெளிநாட்டு நிதியளிப்புச் சாக்கடைக் கருத்திட்டங்கள்

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

### 1.கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்

கொலன்னாவை, தெஹிவலை மற்றும் கல்கிசை மாநகர பிரதேசத்தில் அமைந்துள்ள ஆறு கழிவுநீர் பம்பி நிலையங்களின் புனரமைப்பை இக் கருத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1.1 பில்லியனாகும். கருத்திட்ட காலம் 2010 தொடக்கம் 2015 வரையிலாகும். பௌதீக வேலைகள் 2014 இல் ஆரம்பிக்கப்படாது. இதன் மூலம் தற்போதுள்ள சாக்கடை இணைப்புகளின் நீடிப்பை, வரைபடமாக்கல் பிரிவுடன் சேர்ந்து வரைபடமாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இக் கருத்திட்டத்திற்கான கேள்விப் பத்திரங்கள் 2012 மார்கழியில் கோரப்பட்டதோடு, 2013பங்குனி மாதத்தில் விலைக் கேள்விகள் திறக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் மதிப்பீடுகள் இடம்பெற்றதோடு, அதிக பதிலிருப்பைக் காட்டிய விலைக் கேள்வியாளர்களுடன் விலை பற்றிய பேச்சுவார்த்தைகள் அட்டவணைப்படுத்தப்பட்டன. 2014 இல் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது.

## சுவீடன் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

### 2. இரத்மலானை/மொரட்டுவை மற்றும் ஜா-எல/ஏக்கல பிரதேசங்களுக்கான கழிவுநீர் அகற்றல் முறைமை

இது ஜா-எல/ஏக்கல மற்றும் இரத்மலானை/மொரட்டுவை ஆகிய இரண்டு கைத்தொழில் பிரதேசங்களிலும் உருவாகின்ற கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படுவதை ரூபா 17,471 மில்லியன் செலவில் நடைமுறைப்படுத்துகின்ற ஒரு கருத்திட்டமாகும். நிர்மாணிப்பு வேலைகளுக்காக அமெரிக்க டொலர் 93.75 மில்லியன் கடனையும், நிர்மாணிப்பு மேற்பார்வை ஒப்பந்தத்திற்கு SEK 56.21 மில்லியன் அளிப்பையும் SIDA வழங்குகின்ற அதேவேளை இலங்கை அரசாங்கம் மருதரப்பு நிதியாக ரூபா 5,122 மில்லியனையும் வழங்குகின்றது.

7,250 கன மீற்றர் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் ஜா-எலவில் கூட்டிணைந்த குழாய் சேகரிப்பு முறைமையுடன் கூடியதான 3 பம்பி நிலையங்களின் நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்டு 2012 மாசி மாதத்தில் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவுக்கு கையளிக்கப்பட்டது. இவ்வசதிகள் தற்போது 97 தொழிற்சாலைகளுக்கும், 25 வர்த்தக நிலையங்களுக்கும், 1326 வீடுகளுக்கும் சேவை வழங்கி இயங்கிவருகின்றதோடு, 2014 தை முதல் கார்த்திகை வரை ரூபா 37 மில்லியனை வருமானமாகப் பெற்றுள்ளது.

JV ஒப்பத்திற்கான பிரதான பங்குதாரர் வங்குரோத்தடைந்ததாக பிரகடனப்படுத்தப்பட்டதன் காரணமாக ஒப்பந்தத்தை முடிவுறுத்த நேரிட்டமையால் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் பூர்த்தி செய்யப்படவிருந்த கருத்திட்டத்தின் ஏனைய செயற்பாடுகள், கடுமையாக தடைப்பட்டன. முன்னைய ஒப்பந்தகாரரால் கவனிக்கப்படாது விடப்பட்டிருந்த வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எடுத்த முயற்சியின் காரணமாக கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியுடன் நான்கு பம்பி நிலையங்களையும், இரத்மலானை/மொரட்டுவையில் 27 கிலோ மீற்றர் சேகரிப்பு முறைமையையும் பூர்த்திசெய்து 2014 ஐப்பசி 17 ஆம் திகதி ஆரம்பித்து வைப்பதற்கு தே.நீ.வ.வ. சபையினால் இயலுமாயிருந்தது. மேற்படி வசதிகள் தற்போது 82 தொழிற்சாலைகளுக்கும் 198 வீட்டுப் பாவனையாளர்களுக்கும் அதேவேளை சொய்ஸாபுர வீடமைப்புத் திட்டத்திலிருந்து மாற்றப்பட்ட 2,200 இணைப்புகளுக்கும் சேவை வழங்கி இயங்கி வருகின்றது.

எவ்வாறாயினும், இரத்மலான தொழிற்பாடுகளை நிலைபெறச் செய்யும் பொருட்டு 27 கிலோ மீற்றர்களான தற்போது சேகரிப்பு முறைமையை 39.2 கிலோ மீற்றர்களாக நீடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டுள்ள சேகரிப்பு முறைமையின் பாதிக்கப்பட்ட பகுதிகளை பூர்த்தி செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதன் மூலம் தற்போது இயலுமாயிருக்கின்ற 130 தொழிற்சாலைகளுக்கான இணைப்பை 218 வரை நீடிப்பதற்கு முடியுமாயிருக்கும். இதற்கிணங்க கடன் உடன்படிக்கையின் கீழ் செலவிடப்படாதிருந்த நிதியைப் பயன்படுத்தி, 2015 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் ஒப்பந்தத்தை யதார்த்தமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் பெறுபேறாக 2014 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 91.16% மற்றும் 89.74% ஆகும்.

## JICA உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

### 3. கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்

கண்டி நகரத்தில் மிக சிக்கலான விதத்தில் நடைபெறுகின்ற கழிவு நீரகற்றலினால் கண்டி வாவி, மெத எல அத்துடன் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களின் பிரதான குடிநீர் வளமாயுள்ள மகாவலி கங்கை மாசடைந்துள்ளது. இதற்கான ஒரு நிரந்தர தீர்வைக் காணும் பொருட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கண்டி நகரத்திற்கான கழிவு நீரகற்றல் முறைமையொன்றை அமுலாக்குவதற்கு முன்மொழிந்துள்ளது. உத்தேச திட்டத்தின் மூலம், நகரத்தின் 732 ஹெக்றயார்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவு நீர், பின்னர் 92 கிலோ மீற்றர் நீளமான குழாய் வலையமைப்பொன்றின் ஊடாக நாளொன்றுக்கு 14,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு அனுப்பப்படும்.

இக் கருத்திட்டம் 2018 இல் பூர்த்திசெய்யப்படும். இக் கருத்திட்டத்தின் மூலம் நகரத்தில் வசிப்பிடத்தைக் கொண்டுள்ள 55,000 மக்களும் நாளாந்தம் கண்டிக்கு வருகைதரும் 150,000 மக்களும் பயனடைவார்கள்.

சுத்திகரிக்கப்பட்ட பொறித்தொகுதி சுற்றாடலுக்கு திருப்பி விடுவிக்கின்ற சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் குறித்துரைகசுப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய பின்வரும் அளவில் கழிவுகள் உள்ளடங்கியிருக்கும் என்பதை உறுதிசெய்யும்: உயிரியல் ஒட்சிசன் கேள்வி (BOD) (5 நாட்களில் 20 $^{0}$C) 20 mg/l க்கு குறைவாயிருத்தல், மொத்த இடைநிறுத்தப்பட்ட திண்மங்கள் 20 mg/l க்கு குறைவாயிருத்தல், இரசாயன ஒட்சிசன் கேள்வி 250 mg/l, மொத்த நைதரசன் 10 mg/l க்கு குறைவாயிருத்தல், மலத்திலுள்ள பற்றீரியாக்கள் (அநேகமாக ஒவ்வொரு 100 மில்லி லீற்றருக்கான எண்ணிக்கை) 40 க்கு குறைவாயிருத்தல்.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 22,585 மில்லியனாகும். JICA கடனான யப்பானிய யென் 14,087 மில்லியனும் அரசாங்க திரண்ட நிதியமான ரூபா 4060 மில்லியனும் வரிகள், தீர்வைகள், வீதி அதிகாரசபைக் கொடுப்பனவுகள் மற்றும் காணி கொள்ளல் ஆகிய செலவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, பிரதான பம்பி நிலையம், சுத்திகரிக்கப்பட்ட கழிவகற்றல் முறைமை, சேற்று வண்டல் உலர்த்தல் மேடை ஆகியவற்றின் நிர்மாணிப்பு மற்றும் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் கருவிகளை வழங்கல் தொடர்பிலான கருத்திட்டத்தின் பக்கேஜ் 1 க்கான ஒப்பந்தத்தை யப்பானின் M/S JFE Engineering Corporation க்கு வழங்குவதற்கு 2014 கார்த்திகை 23 ஆம் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

கருத்திட்டம் 11 இன் சாக்கடைப் பெட்டி, சாக்கடைக் கிளை ஆகியவற்றின் வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்புக்கான ஒப்பந்தத்தின் வடிவமைப்புப் பணிகளில் 75% மற்றும் சேவை இணைப்புகள், பம்பி நிலைய வடிகால் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு கருவிகளின் வழங்கல் ஆகியன கொரியாவின் M/S KOLON குளோபல் கோபரே'ன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, 2015 தையில் ஆரம்பிக்கப்படவிருந்த ஒப்பந்தத்துக்கான ஈடுபடுத்தல் செயற்பாடுகளை ஒப்பந்ததாரர் ஆரம்பித்துள்ளார்.

கருத்திட்ட பிரதேசத்தில் ஒவ்வொரு கழிவுநீர் அகற்றல் வளவினதும் துல்லியமான தரவுத்தளத்தை வைத் திருப்பதற்கான ஆதன இணைப்புக்கான மதிப்பாய்வை கருத்திட்ட முகாமைத்துவ அலகு பூர்த்தி செய்துள்ளதோடு, 11,500 வளவுகள் உள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளது. பக்கேஜ் 111 - ஆதன இணைப்புகளின் பரீட்சார்த்தத்துக்கான வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பின் பெறுகைகள் நடவடிக்கை 2014 ஐப்பசி 16 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டு, JICA இணக்கப்பாட்டுக்கு கீழ்பட்டவாறு, ஆகக் குறைந்த மதிப்பீட்டு விலைக் கேள்வியை சமர்ப்பித்த M/S Squire Mech Engeering Pvt Ltd க்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்காக அமைச்சரவைக்கு சிபாரிசு செய்வதற்கு SCAPS தீர்மானித்தது.

விலை முன்மொழிவுக்கும் கையளித்தல் முன்மொழிவுக்குமான JICA வின் இணக்கம் 2014 கார்த்திகை 25 ஆம் திகதி கிடைக்கப்பெற்றது. எவ்வாறாயினும் ஒப்பந்த பெறுமதியை ஈடு செய்வதற்கு கிடைத்துள்ள கடன் தொகை போதியாதில்லை. ஆதலால் ஒப்பந்தத்தை கையளித்தல் தாமதமாகியது.

கருத்திட்டத்துக்கான சுற்றாடல் அங்கீகாரத்தின் கீழான தேவைப்பாடுகமைக்கமைய, நடைமுறைப் படுத்தலின்போதும் அதேபோன்று கருத்திட்ட பராமரிப்புக் காலகட்டத்திலும் சுற்றாடல் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கிணங்க சுற்றாடல கணகாணிப்பு ஒப்பந்தத்துக்கான ஆலோசனைச் சேவை M/S Resources Development Consultants Ltd. க்கு வழங்கப் பட்டது.

ஒப்பந்த உடன்படிக்கை 2013 கார்த்திகை 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதோடு, ஒப்பந்தம் 2013 மார்கழி 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்ட பிரதேசத்தின் சுற்றாடல் நிலைமை பற்றிய அடிப்படை கற்கை 2014 ஐப்பசி 07 ஆம் திகதி பூர்த்தி செய்யப் பட்டது. கருத்திட்ட ஒப்பந்தத்துக்கான சுற்றாடல் முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அடிப்படைத் தரவுகள் பயன்படுத்தப்படும்.

ஏற்புடைய சுற்றாடல் தர பிரமாணங்கள் அளவிடப்பட்ட தன் பின்னர் ஒவ்வொரு ஆறு மாதத்திலும் அடிப்படைத் தரவுகள் இற்றைப்படுத்தப்படும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் JICA வுக்கும் இடையிலான KCWMP தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் முன்மொழியப் பட்டுள்ளவாறு, கருத்திட்ட செயற்பாடுகள் தொடர்பாக தரப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும் பொருட்டு பொதுசன தொடர்பு இயக்கமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது. இது கருத்திட்ட பிரதேசத்தில் சாதகமானதொரு சூழலை உருவாக்குவதன் மூலம் கருத்திட்டத்துக்கு நன்மையளிக்கும் என்பதோடு, எவ்வித இடையூறு களும் இன்றி கருத்திட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உதவியாயமையும். கருத்திட்ட ஆலோசகர்களால் பொதுமக்கள் தொடர்பு இயக்கம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுமக்கள் தொடர்பு இயக்கத்தை நடை முறைப்படுத்துவதற்காக ஆலோசகர்களால் M/S HELPO எனப்படும் பொதுமக்கள் தொடர்புக் கம்பனி தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, ஒப்பந்த உடன்படிக்கை 2014 ஐப்பசி 01 ஆம் திகதி கைச் சாத்திடப்பட்டது. பொதுமக்கள் தொடர்பு இயக்கம் 2014 ஐப்பசி 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, ஒரு சில செய்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## GPOBA நிதியளிப்பிலான சாக்கடைக் கருத்திட்டம்

## 4. கொழும்பு பெரும்பாகத்தில் வீட்டு சாக்கடை இணைப்புகளை அதிகரிக்கச் செய்தலும் வலையமைப்புக்குப் புறம்பான துப்புரவேற்பாட்டுத் தீர்வுகளை மேம் படுத்துதலும் (உலக வங்கி நிதியளிப்பு - GPOBA)

இக் கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள், விருத்திசெய்யப்பட்ட துப்புரவேற்பாட்டு முறைகளின் ஊடாக சேவை பெறுகின்ற வறியவர்களின் வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தலும் அவர்களால் வெளியேற்றப்படுகின்ற வீடு சார்ந்த கழிவு நீர் சுத்திகரிக்கப்படாது நகர நீரோட்டங்களில் கலப்ப தற்கு முன்னர் பயனுறுதியான விதத்தில் முகா மைத்துவம் செய்தலாகும்.

கருத்திட்டத்தின் இரண்டாம் நிலைக் குறிக்கோள் யாதெனில், வறியவர்களின் வீடுகளுக்கு விருத்தி யடைந்த துப்புரவேற்பாட்டு வசதிகளை பெற்றுக கொடுக்கும் பொருட்டு புதியதொரு தோற்றத்திலான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தலாகும். கருத் திட்ட பிரதேசமானது, தே.நீ.வ.வ.ச.யின் மூலம் சாக்க டைச் சேவை வழங்கப்படுகின்ற கொழும்பு பெரும்பாக பிரதேசத்தை உள்ளடக்கியுள்ளது.

தே.நீ.வ.வ.ச. மற்றும் சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை (SIDA) மூலம் இதற்கான உதவியைக் கோரி ஒருங்கிணைந்த முன்மொழிவொன்று GPOBA க்கு சமர்ப்பிக்கப்பட்டது. நன்கொடை நிதியளிப்பு உடன்படிக்கை GPOBA மற்றும் நிதி அமைச்சினால் கைச்சாத்திடப்பட்டது.

இக் கருத்திட்டத்தின் கட்டம் 11 இன் கீழ் தெஹிவலை /கல்கிசை மாநகர சபை பிரதேசம், மொரட்டுவை நகர சபை பிரதேசம், கொலொன்னாவ மற்றும் ஜா-எல பிரதேச சபைப் பிரதேங்களில் வசிக்கின்ற, தற்போது திருப்திகரமற்ற குழி மலசல கூடங்கள், செயற்படாத நச்சுத்தடை மலக்குழிகள் உள்ள அல்லது துப்பர வேற்பாட்டு வசதிகள் அறவேயற்ற 5,015 வறிய குடும்பங்கள் நன்மை பெறுவார்கள். மூன்றாண்டு காலத்தினுள் இக் கருத்திட்டத்தை பூர்த்தி செய்வ தற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,339 மில்லியனாகும்.

தெஹிவல/கல்கிசை, ஜா-எல/ஏக்கல, இரத்மலானை, மொரட்டுவை மற்றும் கொலொன்னாவ பிரதேசங்களின் வீடுகளுக்கு நேரடி இணைப்புகளை வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1,475 சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 31% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

(மொரட்டுவை, தியவரபுர வீடமைப்புத் திட்டத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறையின் கீழ் 64 சாக்கடை இணைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டன. இது சாக்கடை இணைப்புகள், வலையமைப்பு முறைமை, சுத்திகரிப்பு பொறித் தொகுதி, பம்பி நிலையம் மற்றும் அழுத்த சக்தி மூலத்தை உள்ளடக்கியுள்ளது.)

சாக்கடை வலையமைப்பு, பம்பி நிலையம் மற்றும் அழுத்த சக்திமூலம் உள்ளடங்கியதாக 1,500 வீட்டு இணைப்புகளுக்கான பம்பி முறையுடன் கூடிய படோவிட்ட எளிமைப்படுத்தப்பட்ட நீடிப்புக்கான கேள் விப்பத்திரத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட தோடு 2014 தையில் வேலைகள் ஆரம்பிக்கப்படும். மேலும், 3,500 க்கு மேற்பட்ட சாக்கடை இணைப்பு களை வழங்கக் கூடியதான மேலும் 2 கருத்திட் டங்களுக்கான விபரமான வடிவமைத்தல்கள் மற்றும் ஆவண ரீதியிலான மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்ட தோடு இரத்மலானை, வீரசேன சில்வா மாவத்தையி லுள்ள சுனாமி வீடமைப்புத் திட்டத்திற்கான 328 இணைப்புகளுக்கான DEWAT முறைமைக்கான கேள்விப்பத்திரம் திறக்கப்பட்டது.

## 5. சீன உதவியின் கீழான கருத்திட்டம் குருணாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் சாக்கடை கருத்திட்டம்

குருணாகல் நகரத்திலும் அதனைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் தற்போது 150,000 மக்கள் இணைக் கப்பட்டுள்ளனர். கடந்த இரண்ட தசாப்தங்களினுள் அதிகரித்த வர்த்தக மற்றும் கைத்தொழில் செயற்பாடுகளுடன் கூடியதாக நகரைச் சுற்றிலும் நகர சனத்தொகையில் வேகமான வளர்ச்சி காணப்பட்டது. எவ்வாறாயினும் போதியளவு குடிநீர் வழங்கலும் பாதுகாப்பான கழிவுநீர் அகற்றல் முறைமையும் இல்லாதிருந்தமையின் பெறுபேறாக கடும் சுற்றாடல் பிரச்சினையும் பொதுமக்கள் கொந்தளிப்பும் காணப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள குடிநீர் வழங்கலை மேம்படுத்துவதற்கும் (பக்கேஜ் ஏ) சாக்கடை முறைமையொன்றை அறிமுகப் படுத்துவதற்கும் (பக்கேஜ் பீ) திட்டமிடப்பட்டது.

தற்போதுள்ள இரண்டு சீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளும் நாளொன்றுக்கு 6,750 கன மீற்றர் நீரை மாத்திரமே உற்பத்தி செய்வதோடு இது எவ்விதத்திலும் போதுமானதல்ல. ஆதலால், தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி நாளொன்றுக்கு 9,000 கன மீற்றரை பெறக்கூடியவாறு விரிவாக்கப்படும் அதேவேளை நாளொன்றுக்கு 5,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட மேலுமொரு நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியொன்று நிர் மாணிக்கப்படும். வரண்ட காலகட்டத்தில் தெதுரு ஓயா (நீர் வளம்) வற்றி விடுவதால் வரட்சிக் காலத்தில் நீரைப் பெறுவதற்காக பரந்தளவில் ஆற்றுக்கு குறுக்காக அணையொன்றை கட்டி நீர்த் தேக்க மொன்றைக் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

பக்கேஜ் A க்கான கருத்திட்ட ஆக்கக்கூறுகள், தெதுறு ஓயாவுக்கு குறுக்காக அணை கட்டுதல் (100 மீற்றர்), உள்வாங்கு கட்டமைப்பு, பம்பி நிலையம், சுத்திகரிக்கப்படாத பிரதான குழாய் (8.5 கி.மீ.), நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி (நாளொன்றுக்கு 5,000 கன மீற்றர்), இரசாயனக் கட்டிடம், மீள் நீர்பாய்ச்சும் வசதி, வண்டல் கழிவுகளை அகற்றும் முறைமை, நீர் கோபுரம் (1,500 கன மீற்றர்), நில நீர் களஞ்சியத் தாங்கி (750 கன மீற்றர்), சுத்திகரிக்கப்பட்ட நீர் அனுப்பல் குழாய்கள் (8 கி.மீ.) மற்றும் விநியோக வலையமைப்பு (110 கி.மீ.).

கருத்திட்டத்தின் பக்கேஜ் B, குருணாகல் மாநகர சபைப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்கும் அடுத்துள்ள பிரதேசங்களின் ஒரு பகுதிக்கும் சாக்கடை வதிகளை வழங்கும். சாக் கடைக் கருத்திட்டமானது, 134 கிலோ மீற்றர் நீளத்துக்கு சாக்கடை/குழாய் புவி ஈர்ப்புவிசை சாக்கடை வலையமைப்பு, பிரதான விசைக் குழாய், இணைப்புக் குழாய்கள் மற்றும் நாளொன்றுக்கு 4,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட மத்திய சாக்கடை சுத்திகரிப்புப் பொறித் தொகுதி ஆகிய வற்றை உள்ளடக்கும். கருத்திட்டத்தின் பின்னர் உடனடியாக 3,500 தனிப்பட்ட வீட்டு இணைப்புகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. இக் கருத்திட்டத் தின் கீழ் குருணாகல் போதனா வைத்தியசாலையில் உள்ள வெளிவாரி சாக்கடை முறைமை புனரமைக்கப்படும்.

கருத்திட்ட முகாமைத்துவ அலகு 2013 இல் ஸ்தாபிக்கப்பட்டது. காணி கொள்ளல் வேலைகளின் 98.2% பூர்த்தியடைந்துள்ளது. கருத்திட்டத்தின் சுற்றா டல் தாக்க மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் China Machinery Engineering Corporatio (CMEC) க்கு வழங்கப்பட்டதோடு ஒப்பந்தகாரரை வேலைத்தளத திற்கு அழைத்து வேலைகளை மதிப்பாய்வு செய்த லும், ஆரம்ப பரிசோதனைகளும் ஆரம்பிக்கப்பட்டது. விபரமான வடிவமைத்தல் நடைபெற்று வருவதோடு 95% பூர்த்தியடைந்துள்ளது. 2014 கார்த்திகை மாத இறுதியில் DI மற்றும் PE குழாய்கள் வேலைத் தளத்திற்கு விநியோகிக்கப்பட்டதோடு, நிர்மாணிப்புகள் 2015 தையில் ஆரம்பிக்கப்படும். 2014 மார்கழி இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 19.2% ஆகும். கருத்திட்டம் 2017 மாசியில் பூர்த்தி செய்யப்படவுள்ளது. சாக்கடை சுத்திகரிப்புப் பொறித் தொகுதி அமைந்துள்ள இடத்தைப் பற்றி பொதுமக்கள் முறைப்பாடுகள் எழுந்ததோடு இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒருசில விழிப்புணர் வூட்டல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## ஆஸ்திரிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம்

## 6. கதிர்காம கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

மாணிக்க கங்கை மற்றும் சுற்றறிலுமுள்ள சுற்றாடல் மேலும் மாசடைவதை தடுக்கும் பொருட்டு நகர எல்லைப் பிரதேசங்களில் உள்ள யாத்திரிகர் ஓய்வுகூடங்கள், ஹோட்டல்கள், கடைகள், வீட்டு அலகுகள் மற்றும் அலுவலகங்களுக்கு குழாய்வழி சாக்கடை வசதிகளை வழங்குவதற்கு உத்தேச கருத்திட்டம் கவனம் செலுத்தியுள்ளது. சாக்கடை வலையமைப்பை விஸ்தரிப்பதன் மூலம் தற்போதுள்ள முறைமையை தரமுயர்த்துதலையும் இயந்திரவியல் காற்றூட்டல் கருவியை பொருத்துதவன் மூலம் சாக்கடை சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை மேம படுத்தலையும், கதிர்காமத்துக்கு வருகை தருகின்ற பெருமளவு சனத்தொகையினருக்கு வசதியளிக்கும் பொருட்டு தற்போதுள்ள நாளொன்றுக்கு 750 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நாளொன்றுக்கு 3,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்டதாக தரமுயத்துதலும் பிரதான விடயப் பரப்பில் உள்ளடங்கியுள்ளது. இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு Uni Credit Bank Austria AG நிதியளிப்புச் செய்கின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 2,040 மில்லிய னாகும்.

கருத்திட்ட வேலைகள் 2014 ஆவணியில் ஆரம் பிக்கப்பட்டன. ஆவணி 2016 இல் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நலன் பெறுனர்களின் எண்ணிக்கை 15,000 ஆகும். 7 பம்பி நிலையங்களை பம்பிகளுடனும், தேவையான மின் கருவிகளுடனும் கூடியதாக பொருத்துதல், 16.5 கி.மீ. நீளமான சாக்கடை குழாய் வலையமைப்பு, காற்றூட்டல் நீரேரியுடன் கூடியதாக நாளொன்றுக்கு 3000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஆகியவற்றை கருத்திட்ட ஆக்கக்கூறு உள்ளடக்குகின்றது.

தற்போது, ஆரம்ப வடிவமைப்புகள் பூர்த்தி செய் யப்பட்டுள்ளன. குழாய் வலையமைப்பின் விபரமான வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட அண்மித்த நிலையிலுள்ளது. சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் வடிவமைப்பு பூர்த்தி செய்யப்படவுள்ளது. 2014 ஐப்பசி மாதத்திலிருந்து ஒப்பந்தகாரர் ஏற்கனவே வேலை களில் ஈடுபட்டுள்ளார்.

# இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

**2014 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு/ விரிவாக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்**

| மாகாணம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 05 |
| கிழக்கு | 08 |
| வடமத்திய | 05 |
| வடமேல் | 05 |
| வடக்கு | 01 |
| சப்பிரகமுவ | 09 |
| தெற்கு | 04 |
| ஊவா | 06 |
| மேல் | 09 |
| **மொத்தம்** | **52** |

● நீர் வழங்கல் கருத்திட்டம்
● சாக்கடைக் கருத்திட்டம்



## இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

### மத்திய மாகாணம்

#### குண்டசாலை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11

இது குண்டசாலை, பலகல்ல, திகன, அரத்தன, வாவின்ன மற்றும் பன்னில பிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 130,000 மக்களுக்கு சேவையாற்றுவதற்கான ஒரு விரிவாக்கல் திட்டமாகும். நாளொன்றுக்கு 30,000 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளம் மகாவலி கங்கை/ஹுலுகங்கை ஆகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு 2013 இல் திருத்தப பட்டதோடு திருத்தப்பட்டவாறான மதிப்பீட்டுச் செலவு ரூபா 1,685 மில்லியன் ஆகும். தற்போது அரத்தன சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து நாளொன்றுக்கு 18,000 கன மீற்றர் நீர் பெறப்படுகின்றது. நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மேம்பாடு, குழாய்களை இடுதல் மற்றும் இயந்திரவியல் மற்றும் இலத்திரனியல் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 89% மற்றும் 93% ஆகும்.

### பலாபத்வெல நீர் வழங்கல் கருத்திட்டம்

இது சுதுகங்கையை நீர் வளமாகக் கொண்டு பலாபத்வெல மற்றும் கோட்டேகொட பிரதேசங்களின் ஏறத்தாழ 22,000 மக்களுக்கு சேவையாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள விரிவாக்கல் திட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 150 மில்லியனாகும். மாத்தளை நீர் வழங்கல் திட்டத்திலிருந்து பலாபத்வெலயில் அமைந்துள்ள நில நீர்த் தேக்கத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் பாய்ச்சப்பட்டு, அங்கிருந்து 8 கிலோ மீற்றர் நீளமான பிரதான பம்பிக் குழாய்களின் மூலம் நீர் விநியோகிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விநியோக குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல், அத்துடன் இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள் நடைபெற்று வருகின்ற அதேவேளை பம்பி நிலைய நிர்மாணிப்புகள் முடிவடைந்துள்ளன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 97% மற்றும் 99% ஆகம்.

### மாத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம்

இது மாத்தளை நகரம் மற்றும் சுற்றுப்புறங்களின் ஏறத்தாழ 30,000 மக்களுக்கு சேவை வழங்குகின்ற தற்போதுள்ள திட்டத்தை புனரமைக்கின்றதான ஒரு திட்டமாகும். நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் கொள்ளளவையும் முழுமையான சுத்திகரிப்பையும் கொண்ட தற்போதுள்ள சுத்திகரிப்புப் பொறித் தொகுதியுடன் கூடிய இதன் நீர் வளம் சுதுகங்கை ஆகும்.மொத்த மதிப்பீட்டுச் செலவினமான ரூபா 385 மில்லியன் 2013 ஆம் ஆண்டில் ரூபா 525 மில்லியனாக திருத்தப்பட்டது. மேற்படி மேம்பாட்டின் கீழ் புதிய உள்வாங்கு நீர்த் தேக்கமொன்றையும் பம்பி நிலையமொன்றையும் நிர்மாணித்தல், சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை விரிவாக்குதல், பம்பிகள் மற்றும் விநியோக முறைமையின் மேம்பாடு ஆகியன ஊடாக கொள்ளளவை நாளொன்றுக்கு 16,000 கன மீற்றர்கள் வரை மேம்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. கும்பியன்கன வீதியில் குழாய்களை இடுதல் பூர்த்தியடைந்துள்ளது. சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, உள்வாங்கு நிலையத்தின் மேம்பாடுகள் மற்றும் இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 93% மற்றும் 94% ஆகம்.

### மாரஸ்ஸன நீர் வழங்கல் கருத்திட்டம்

இது மாரஸ்ஸன நகரம் மற்றும் அதனைச் சுற்றிலுமுள்ள புதிய நலன்பெறுனர்களான 25,000 மக்களுக்கு சேவையாற்றுகின்ற, மா-ஓயாவிலிருந்து நீரைப் பெற்று முழுமையான சுத்திகரிப்பு முறையுடன் கூடிய ஒரு விரிவாக்கல் திட்டமாகும். சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் கொள்ளளவு நாளொன்றுக்கு 5,000 கன மீற்றராகும். 2013 இல் திருத்தியமைக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 339 மில்லியனாகும். பிரதேசத்தின் துரிதமாக வளர்ந்து வரும் நீருக்கான கேள்வியை நிறைவு செய்வதற்கு தற்போதைய நாளொன்றுக்கான 2,200 கன மீற்றர் கொள்ளளவு போதியதாயில்லை. ஒட்டுமொத்தமாக இங்கு 3,500 சேவை இணைப்புகள் உள்ளன. மைலப்பிட்டிய மற்றும் பொத்கொட வலயங்களுக்கான குழாய் வழங்கல் மற்றும் இடுதல் நடைபெற்று வருகின்றது. 2012 இல் விநியோக மேம்பாடும் ஆரம்பிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 93% மற்றும் 96% ஆகும்.

### தலவாக்கலை/ லிந்துலை நீர் வழங்கல் கருத்திட்டம்

தலவாக்கலை மற்றும் லிந்துலை பகுதியிலுள்ள ஏறத்தாழ 15,000 மக்களுக்கு சேவை வழங்குகின்றதான இது தற்போதுள்ள திட்டத்தின் விரிவாக்கமாகும். “கிரேட் வெஸ்ரன்“ மற்றும் நானுஓயா இதன் நீர் வளமாக உள்ளது. திருத்தப்பட்டவாறான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 352 மில்லியனாகும் என்பதோடு நிதியிடும் மூலங்களாக இலங்கை அரசாங்கமும் இலங்கை மின்சார சபையும் (மீள அறிவிடத்தக்க) விளங்குகின்றன. இதன் மூலம் நாளொன்றுக்கு 1650 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட (பகுதியளவு சுத்திகரிப்பு) நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நாளொன்றுக்கு 2,500 கன மீற்றர் உற்பத்திக் கொள்ளளவைக் கொண்டதாக விரிவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான உள்வாங்கு அமைப்பின் மேம்பாடு, காற்றூட்டற் கலம், கழிவு நீர் சுத்திகரிப்பு, படிமங்களுடான வடிகட்டல் மற்றும் அழுத்த வடிகட்டல் ஆகியவை உள்ளடங்கியுள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக மேல் கொத்மலை நீர் மின்சக்திக் கருத்திட்டத்தின் காரணமாக மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு தற்போதுள்ள விநியோக முறைமையை விஸ்தரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. உள்வாங்கு நிலைய அணைக்கட்டு, பம்பி நிலையம் மற்றும் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் நிர்மாணிப்பு பூர்த்தியடைந்துள்ளது. இரசாயன மீள்பயன்பாடு மற்றும் உள்வாங்கு பம்பிகளை பொருத்துதல் நடைபெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 92% மற்றும் 92% ஆகும்.

### வடமத்திய மாகாணம்

### மெதிரிகிரிய நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1

இது மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவில் ஏறத்தாழ 72,000 நலன்பெறுனர்களுக்கு நீர் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு புதிய திட்டமாகும். நாளொன்றுக்கு 9,000 கன மீற்றர்களைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு, படிமங்களுடனான வடிகட்டல், துரித மணல் வடிகட்டல் மற்றும் தொற்றுநீக்குதலுடன் கூடியதான இதன் நீர் வளமாக கவுடுள்ள குளம் விளங்குகின்றது. கழிவு சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றலின் பொருட்டு கெட்டியாக்கலும் கழிவு உலர்த்தல் மேடைகளும் முன்மொழியப்பட்டுள்ளன. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 638 மில்லியனாகும். மொ.ம.செ. 2013 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டதோடு திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 919 மில்லியனாகும். கவுடுள்ள குளத்திலிருந்து பாதுகாப்பான குடிநீரை வழங்குவதை இத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. இக் கருத்திட்டமானது உள்வாங்கு நிலையம், சுத்திகரிக்கப்படாத நீர் இறைக்கும் முறைமை, 02 நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகள், நீர் கோபுர களஞ்சியப்படுத்தல் வசதிகள், அனுப்பல் முறைமை மற்றும் விநியோக முறைமையை உள்ளடக்கியுள்ளது. உள்வாங்கு நிலையத்தின் நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு விநியோக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் கோபுரங்கள், அனுப்பல் குழாய்களின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 85% மற்றும் 98% ஆகும்.

### மின்னேரிய நீர் வழங்கல் கருத்திட்டம்

இது மின்னேரிய, கிரிதலே மற்றும் ஹிங்குரக்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 69,000 மக்களுக்கு நீர் வழங்குகின்ற தற்போதுள்ள திட்டத்திற்கான ஒரு விரிவாக்கமாகும். நாளொன்றுக்கு 10,900 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட துரித மணல் வடிகட்டல் மற்றும் தொற்றுநீக்கி முறையுடன் கூடிய சுத்திகரிப்பு நடைமுறையைக் கொண்டதான இதன் நீர் வளமாக மின்னேரிய குளம் விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 100 மில்லியனாகும். மின்னேரியா மற்றும் ஹிங்குரக்கொடை நீர் வழங்கல் திட்டமானது முழு பிரதேச செயலகப் பிரதேசத்திற்குமான ஒரேயொரு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியாகிய மின்னேரியா நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்து இயங்கிவருகின்றது. உள்வாங்கு அமைப்பின் கொள்ளளவினை நாளொன்றுக்கு 13,600 கன மீற்றர் வரை அதிகரிக்கச் செய்தலை கருத்திட்டத்தின் விடயப்பரப்பு உள்ளடக்கியுள்ளது. தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் விரிவாக்கமானது, வண்டல் வடிகட்டல் தடாகம், துரித மணல் வடிகட்டல், களஞ்சியப்படுத்தல் வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் பொறியியல் மற்றும் மின்னியல் கருவிகளைப் புதிதாக பொருத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. சுத்திகரிப்புப் பொறித்தொகுதியினதும் விநியோகக் குழாய்களினதும் மேம்பாடு அநேகமாக பூர்த்தியடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 97% மற்றும் 112% ஆகும்.

## மஹநெலுபேவ நீர் வழங்கல் கருத்திட்டம்

இது மஹநெலுபேவ பிரதேசத்தின் 2,855 மக்களுக்கு நீர் வழங்குவதற்கான தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கமாகும். கருத்திட்ட காலம் இரண்டு ஆண்டுகளாகும் என்பதோடு, கருத்திட்ட அம்சம் விநியோக மேம்பாடு மட்டுமேயாகும். இக் கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப் பட்டது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக முன்னேற்றம் முறையே 100% ஆகும் (கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது) மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 130 மில்லியனாகும்.

## இபலோகம நீர் வழங்கல் கருத்திட்டம்

இது இபலோகம ரணவிரு கிராமம் மற்றும் இபலோகம பிரதேச சபை பிரதேசத்தின் 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள ஏறத்தாழ 18,000 நலன்பெறுனர் களுக்கு சேவை வழங்குவதற்கான ஒரு புதிய திட்ட மாகும். நாளொன்றுக்கு 13,500 கன மீற்றர் கொள்ள ளவுடன் கூடிய சுத்திகரிப்புப் பொறித் தொகுதியையும் இபலோகம மற்றும் கெகிராவயின் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான உள்வாங்கு நிலையத்தையும் கொண்டுள்ளது. கலாவெவ நீர் வளமாகும். பிரதானமான சுத்தி கரிக்கப்படாத நீர் பம்பிக் குழாயின் மொத்த நீளம் 4 கிலோ மீற்றர்களாகும் என்பதோடு பிரதான அனுப்பல் குழாயின் நீளம் 4 கிலோ மீற்றர்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு இலங்கை அரச நிதியளிப்பின் கீழ் ரூபா 798 மில்லியனாகும். உள்வாங்கு நிலையம் மற்றும் ரணவிரு கிராமத்திற்கான சாக்கடை முறைமை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சுத்திகரிப்புப் பொறித் தொகுதியினதும் நீர் கோபுரங்களினதும் நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. விநியோக முறைமை பூர்த்தி செய்யப்படவுள்ளது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 96% மற்றும் 95% ஆகம்.

## தயட்ட கிருள 2013 (ஓயாமடுவ நீர் வழங்கல் திட்டம்)

இக் கருத்திட்டத்தின் மூலம் 2 ஆண்டுகளினுள் அநுராதபுரம், மகவிலச்சி மற்றும் தந்திரிமலை பிர தேசத்தின் 27,500 மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, இதன் மொத்தச் செலவு ரூபா 830 மில்லியனாகும். இதன் மூலம் தந்திரிமலை நீர் வழங்கல் திட்டம் மற்றும் ஓயாமடுவ நீர் வழங்கல் திட்டத்தை மேம் படுத்துவ தற்கு முன்மொழியப்பட்டுள்ளது. விஹாரக முன நீர் வழங்கல் கருத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. தந்திரிமலை நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் ஓயாமடுவ சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 83% ஆகம்.

## கிழக்கு மாகாணம்

## கந்தளாய் - (அக்போபுர) நீர் வழங்கல் கருத்திட்டம்

இது திருகோணமலை மாவட்டத்தின் அக்போபுர நகரம், பட்டுகச்சி, சீனித் தொழிற்சாலை வீதி, பாதியகம ஆகியவற்றின் 8,000 நலன்பெறுனர்களின் நாளாந்தத் தேவைப்பாட்டை நிறைவு செய்கின்ற ஒரு கருத்திட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 275 மில்லியனாகும். 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 82% ஆகுமென்பதோடு வேலைகளின் மூல விடயப்பரப்புகள் பூர்த்தியடைந்துள்ளதோடு, அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்களின் மேலதிக தேவைப்பாடுகள் தொடர்பிலான வேலைகள் நடைபெற்று வருவதோடு 2015 ஆம் ஆண்டுக்காக ரூபா 5 மில்லியன் கிடைத்துள்ளது.

## தம்பலகாமம் நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் திருகோணமலை மாவட்டத்தின் 96வது மைல் கல், கல்மெட்டியாவ, மல்லிபத்தான, சாரக் நகர், மீரா நகர், கோவிலடி ஆகிய பிர தேசங்களின் 30,000 நலன்பெறுனர்களுக்கு பாது காப்பான குடிநீரை வழங்குவதற்குக கருதியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 95 மில்லியனாகும். பிரதான விநியோக குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் பூர்த்தியடைந் துள்ளதோடு இவ்விடயம் மூல அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 89% ஆகுமென்பதோடு 2015 ஆம் ஆண்டுக்காக நிதி ஒதுக்கீடுகள் எதுவும் இடம்பெற வில்லை.

## சேருநுவர நீர் வழங்கல் கருத்திட்டம்

இது சேருநுவர கல்லாறு மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள சுமேதங்கபுர, சேருநுவர, மகவெலிகம, தங்கநகர், காவஞ்சிபுரம் ஆகிய பிரதேசங்களின் 9,500 நலன்பெறுனர்களுக்கு சேவையாற்றுவதற்காக முன்மொழியப்பட்டுள்ள ஒரு புதிய கருத்திட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 110 மில்லியனாகும். 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 96% ஆகும். 2015 ஆம் ஆண்டுக்காக எவ்வித நிதி ஒதுக்கீடும் இடம்பெறவில்லை என்பதோடு எஞ்சிய வேலைகள் உள்நாட்டு வங்கிகளின் நிதியளிப்பின் கீழான திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

## தெஹியத்தகண்டிய நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1 மற்றும் 11

தெஹியத்தகண்டியவின், கதிராபுர, பக்மீதெனிய, ரிதீஎல்ல, சந்துன்புரவின் 16,000 புதிய நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கலை நீடிப்பதற்கு இக் கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 300 மில்லியனாகும் என்பதோடு மூல விடயப்பரப்பின் அநேகமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. மேலதிக தேவைப்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 91% ஆகும் என்பதோடு 2015 ஆம் ஆண்டுக்காக ரூபா 10 மில்லியன் கிடைத்துள்ளது.

## கந்தளாயில் இருந்து தம்பளகாமம் வரையிலான பிரதான அனுப்பல் குழாய்

கந்தளாய் நீர் வழங்கலிலிருந்து தம்பலகாமம் நீர்த் தேக்கத்திற்கு இக் கருத்திட்டத்தின் மூலம் நீர் அனுப்பப்படுகின்றது. பிரதான அனுப்பல் குழாயின் மொத்த நீளம் 40 கி.மீ. ஆகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு 1,397.80 மில்லியன் ஆகும் என்பதோடு அநேகமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. 2014 மார்கழி இறுதியில் பௌதீக முன்னேற்றமும் நிதியியல் முன்னேற்றமும் முறையே 98% மற்றும் 90% ஆகும் என்பதோடு எஞ்சியுள்ள வேலைகள் மற்றும் தக்கவைத்துக்கொள்வதற்காக ரூபா 76 மில்லியன் கிடைத்துள்ளது.

## வடினகல/வான் எல நீர் வழங்கல் திட்டம்

ஜயந்திபுர, பனசல்கொடல்ல, சூரன்பல மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள 14,000 நலன்பெறுனர்களுக்கு சேவையாற்றுவதற்கு இத்திட்டம் உத்தேசித்துள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 808.50 மில்லியனாகும். 2014 மார்கழி இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 50% மற்றும் 24% ஆகும் என்பதோடு எஞ்சிய வேலைகளுக்கு ரூபா 152 மில்லியன் கிடைத்தது.

## குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயுள்ள பிரதேசங்களுக்கான நீர் வழங்கல் கருத்திட்டம்

- இக்கருத்திட்டம் புதிய நலன்பெறுனர்களுடன் கூடியதாக தெஹியத்தகண்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு பாதுகாப்பான நீர் வழங்கலை நீடிப்பதையும், சூரியபொக்குன, புஸ்ஸெல்லவின்ன கிராம அலுவலர் பிரிவுக்கு புதிய குழாய் நீடிப்பு வேலைகளுடன் கூடியதாக குறித்த கிராமிய நீர் வழங்கல் திட்டங்களிலிருந்தும் மற்றும் சந்துன்புர புதிய நலன்பெறுனர்களுடனும், லிஹினியாகம மற்றும் மாவனவெல கிராம அலுவலர் பிரிவு (சந்தனாபுர, லிஹினியாகம மற்றும் மாவனவெல கிராமிய நீர் வழங்கல் திட்டம்) புனரமைப்பு வேலைகளுடனும், பாதுகாப்பான நீா வழங்கலை நீடிப்பதற்கு கருதியுள்ளது. மொத்த நலன்பெறுனர்கள் 8,711 ஆகும். அம்பாறை மாவட்டத்தில் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 60 மில்லியனாகும். பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 10% மற்றும் 8% ஆகம்.
- இத்திட்டம் 1,820 புதிய நலன்பெறுனர்களுடன் கூடியதாக கோமரன்கடவெல பிரதேச செயலாளர் பிரிவுக்கு பாதுகாப்பான நீர் வழங்கலை நீடிப்பதையும், புதிய குழாய் நீடிப்பு வேலைகள் மற்றும் சிவில் வேலைகளுடன் கூடியதாக பக்மீகம கிராமிய நீர் வழங்கல் திட்டத்திலிருந்து பக்மீகம கிராம அலுவலர் பிரிவுக்கு பாதுகாப்பான நீர் வழங்கலை நீடிப்பதையும் கருதியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 30 மில்லியனாகும் என்பதோடு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 70% மற்றும் 60% ஆகம்.

CKD பாதிப்புக்கு உள்ளாகிய பிரதேசங்களின் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் மற்றும் கிராமங்களில் RO பொறித்தொகுதிகளை பொருத்துதல்.

### சமுதாய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியம்

இக்கருத்திட்டம் புதிய நலன்பெறுனர்களுடன் கூடியதாகவும், குழாய் நீடிப்பு மற்றும் சிவில் வேலைகளுடன் கூடியதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பான நீர் வழங்கலை நீடிப்பதை கருதியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 183 மில்லியனாகும் என்பதோடு வேலைகள் நடைபெற்று வருகின்றன. பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 80% ஆகும்.

## வடமேல் மாகாணம்
## மஹவ/ வாரியபொல/ நிக்கவெரட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்

இது பிரதேசத்திலுள்ள 45,000 குடும்பங்களுக்கு சேவையாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஒரு புதிய கருத்திட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 996 மில்லியனாகும். நிக்கவெரட்டிய மற்றும் மஹவ கருத்திட்டத்தின் ஒரு பகுதி பூர்த்தியடைந்துள்ளதோடு தற்போது தொழிற்பட்டு வருகின்றது. நிக்கவெரட்டிய /மஹவ திட்டத்தின் கொள்ளளவு நாளொன்றுக்கு 6,500 கன மீற்றர்களாகும் என்பதோடு மாகல்ல வாவி நீர் வளமாகும். இத்திட்டம் முழுமையான சுத்திகரிப்பு வசதியைக் கொண்டுள்ளது. வாரியபொல திட்டத்தின் நிர்மாணிப்புகள் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டன. முழுமையான சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் கொள்ளளவு நாளொன்றுக்கு 2,000 கன மீற்றர்களாகும். மாகுரு ஓயா நீர் வளமாகும். 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 99% மற்றும் 92% ஆகும். இக் கருத்திட்டத்தை 2015 இல் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### இப்பாகமுவ நீர் வழங்கல் திட்டம்

இது இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் 11 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு குடிநீர் வசதியை வழங்குவதற்கான புதியதொரு நீர் வழங்கல் திட்டமாகும். இக்கருத்திட்டத்தின் மொத்த நலன்பெறுனர்கள் 7,400 பேர்களாவர். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 239 மில்லியனாகும். சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் கொள்ளளவு நாளொன்றுக்கு 15,000 கன மீற்றர்களாகும்.

2014 மார்கழி இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 33% மற்றும் 75% ஆகும்.

## தம்பதெனிய நீர் வழங்கல் திட்டம்

இது தம்பதெனிய பிரதேச செயலாளர் பிரிவில் 70 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்ற புதியதொரு நீர் வழங்கல் திட்டமாகும் என்பதோடு மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 796 மில்லியனாகும். கருத்திட்டத்தின் மொத்த நலன்பெறுனர்கள் 51,835 பேர்களாவர். இத்திட்டத்தின் கொள்ளளவு நாளொன்றுக்கு 4,500 கன மீற்றர்களாகும். 2014 மார்கழி இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 32% மற்றும் 15% ஆகம்.

## திவுல்கனே நீர் வழங்கல் திட்டம்

இக் கருத்திட்டத்தின் ரூபா 47 மில்லியனான மொத்த மதிப்பீட்டுச் செலவில் திவுல்கனே மற்றும் தலுபொதகம கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தோண்டப்பட்ட கிணற்றின் மூலம் குழாய் நீர் வழங்கப்படும். கருத்திட்டத்தின் நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 1,800 பேர்களாவர். 2014 மார்கழி இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 88% மற்றும் 55% ஆகம்.

## தயட்ட கிருள 2014 (குருணாகல்)

இக்கருத்திட்டம் தயட்ட கிருள 2014 கண்காட்சிக்கு நீர் வழங்குவதையும், வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரிக்கான நீர் வழங்கல் வசதிகளை மேம்படுத்துவதற்கும் குளியாப்பிட்டி நகர நீர் வழங்கல் திட்டத்துக்கான விநியோக முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கும் கருதியுள்ளதோடு, இதற்கான செலவு ரூபா 830 மில்லியனாகும். 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 90% ஆகும்.

## சப்பிரகமுவ மாகாணம்
## எம்பிலிப்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்

இது நிந்தகம்பெலஸ்ஸ, எம்பிலிபிட்டிய, புதிய நகரம், பல்லெகம, உடகம, கலிகெடியார, ஹல்மில்லகெட்டிய, யோதகம, கம்புகொடஆர, மொரகெட்டிய, ஹிங்குர, துங்கம, கெட்டகல்ஆர பிரதேசத்தின் 84,000 நலன்பெறுனர்களுக்கு சேவையாற்றுவதற்குக் கருதியுள்ள சுத்திகரிப்புப் பொறித் தொகுதியுடன் கூடியதான, தற்போதுள்ள திட்டத்தின் விரிவாக்கமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 607.89 மில்லியனாகும். உள்வாங்கு நிலையம் மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நிர்மாணிப்பு பூர்த்தியடைந்துள்ளது. உயர்த்தப்பட்ட பம்பி பொருத் தப்பட வேண்டியுள்ளது. 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 95% மற்றும் 75.3% ஆகும். கருத்திட்டம் ஏற்கனவே கையளிக்கப்பட்டது..

## உடவளவை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1 மற்றும் 11

இது தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டத்தின் ஒரு விரிவாக்கமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 974 மில்லியன் ஆகும். கொலம்பகே ஆர, நிந்தகம்பெலஸ்ஸ, ரஞ்சாமடம, திம்புல்கெட்டிய, உடவளவ, யாய 2, அந்தழுவ, மதுவன்வெல, பனஹதூவ, ரத்கரவ்வ, கங்கயாய, சன்கபால, மிரிஸ்வல்பொத்த, மஹகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 62,500 பேர் மொத்த நலன்பெறுனர்களாவர். 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 99% மற்றும் 71.9% ஆகும். கருத்திட்டம் ஏற்கனவே கையளிக்கப்பட்டது.

## கொடகவல நீர் வழங்கல் கருத்திட்டம்

இது கொடகவல, கொஸ்னாதொட்ட, கலஹிட்டியாவ, மாசிம்புல மற்றும் சுற்றுபுறத்திலுள்ள பிரதேசங்கள், எல்பிட்டிய, பலவின்ன கிழக்கு, கொடகவெல வராயாய, பல்வின்ன மேற்கு, பல்வின்ன வடக்கு, கோம்பிட்டிய, மாவத்தலந்த, மெத்தகம, ரிதீவெல்ல, தம்பவின்ன, கபுஹேனதென்ன, பலவின்ன கிழக்குஈ மாவத்தலந்த மல்வத்த ஆகிய பிரதேசங்களின் 22,500 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதியுள்ள ஒரு புதிய கருத்திட்ட மாகும். நாளொன்றுக்கு 4,500 கன மீற்றர் கொள்ளள வுடன் கூடிய சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் முழுமையான சுத்திகரிப்பைக் கொண்ட இதன் நீர் வளம் ரக்வான கங்கை ஆகும். நீர் வாங்கு நிலையம், நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, களஞ்சியத் தாங்கி மற்றும் விநியோக முறைமை ஆகியன கருத்திட்ட பிரதான ஆக்கக்கூறுகளாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 288 மில்லியனாகும். 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 98% மற்றும் 78.5% ஆகும்.

## கலிகமுவ நீர் வழங்கல் கருத்திட்டம்

தற்போது கலிகமுவ நகரத்தில் குழாய் மூலமான நீர் வழங்கல் கிடையாது. இக்கருத்திட்டமானது, நாளொன்றுக்கு 5,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட புதிய உள்வாங்கு நிலையத்தை அலவ்வவில் நிர்மாணித்தல், நாளொன்றுக்கு 5,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட மரபு ரீதியான நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியை நிர்மாணித்தல், 225 கன மீற்றர் மற்றும் 1,800 கன மீற்றர் கொள்ளள வைக் கொண்ட நில நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல், பம்பி நிலையத்தை நிர்மாணித்தல், 12 கிலோ மீற்றர் நீளமான DI பிரதான நீர்க் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல், தற்போதுள்ள விநியோக வலையமைப்பை மேம்படுத்தல் மற்றும் பம்பிகளைப் பொருத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 841 மில்லியனாகும் என்பதோடு கலிகமுவ நகர் உள்ளிட்ட ஹெலமட, வேரகொட, பலாபொலுவ, பல்லபான, உடபாகே, நாபெரியாவ, அரந்தர மற்றும் போயகம பிரதேசத்தைச் சேர்ந்த 30,800 மக்கள் இதன் மூலம் பயனடைய உள்ளனர். 2014 ஆம் ஆண்டின் இறுதி யில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 15% மற்றும் 53.3% ஆகம்.

## நிவித்திகல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தின் வட்டபொத, சிதுருபிட்டிய, துத்திரிபிட்டிய, ஹல்கந்த லிய, நிவித்திகல, யக்தெஹிவத்த ஆகிய பிரதேசங் களிலுள்ள 14,500 நலன்பெறுனர்களுக்கு பாது காப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 154.3 மில்லியனாகும். திட்டத்தின் பிரதானமான ஆக்கக் கூறுகளான உள்வாங்கு நிலையம், களஞ்சியத் தாங்கி, பிரதானமான பம்பிக் குழாய்கள் மற்றும் விநியோகக் குழாய்களின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. நிதி ஒதுக்கீடுகளிலான பிரச்சினைகள் காரணமாக அநேகமான வேலைகள் தாமதமடைந் துள்ளன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 82% மற்றும் 58.6% ஆகும்.

## பெல்மடுல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பிரதேசத்திலுள்ள இஹல போப்பிட்டிய, பெல்மடுலுகம, பெல்மடுல்ல நகரம், பஹல போபிட்டிய, கூட்டபிட்டிய, கனேகம, கொடகம, ரில்ஹேன, உடதுல, தெனவக்க, உடகட, பனாவென்ன பொரள, மொரதொட்ட, நுகவெல கிழக்கு, நுகவெல மேற்கு, கட்டங்கே, கொடகெதன, வெல்லந்துர, யாஇன்ன மற்றும் நாரன்கொட பிரதேசத்தின் 22,500 நலன் பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 384 மில்லியனாகும். 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 93.7% ஆகும். விடயப்பரப்பின் மூல வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

## யட்டியன்தோட்ட நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் மூலம் கேகாலை மாவட்டத்தின் யட்டியன்தொட்ட நகரம், பேருஸ்எல்ல, மஹவில மற்றும் பஹல கொராகொட பிரதேசத்தின் 9,400 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 166 மில்லிய னாகும். உள்வாங்கு நிலைய மேம்பாட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. நிதி ஒதுக்கீடுகள் காரணமாக குழாய்களை இடும் வேலைகள் தாமதமடைந்துள்ளன. 2014 இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் 88% ஆகம்.

## கிரிஎல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டத்தின் மூலம் இரத்தினபுரி மாவட்டத் தின் இடன்கொட மற்றும் கிரிஎல்ல பிரதேசத்தின் 8,000 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. மொத்த மதிப் பீட்டுச் செலவு ரூபா 205 மில்லியனாகும். இக் கருத்திட்டத்தின் கட்டம் 1 பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் (கட்டம் 1) பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 18% ஆகும்.

## மடொல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டமானது அவிசாவலை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் விகும்சிங்ஹகம கிராம அலு வலர் பிரிவின் மடொலவுக்கு குழாய் நீரை வழங்குகின்றது. கருத்திட்ட நலன்பெறுனர்களின் எண் ணிக்கை 2,000 ஆகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 132 மில்லியனாகும். 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 20% மற்றும் 29.4% ஆகும்.

## தென் மாகாணம்
## ஹக்மன நீர் வழங்கல் கருத்திட்டம்

உத்தேச ஹக்மன நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஹக்மன பிரதேசத்தின் நராவெல்பிட்ட, கோன்கல, பேருவேவெல, முருதமுராயவிலுள்ள பிரதேசங்க ளைச் சேர்ந்த 10,000 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது. இக் கருத்திட்டம் 2010 – 2012 காலகட்டத்தினுள் அமுலாக்கப்படும். நாளொன்றுக்கு 1,800 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் பகுதியளவு சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்ற இதன் நீர் மூலமாக துளையிடப்பட்ட கிணறு விளங்குகின்றது. உள்வாங்கு நிலைய மேம்பாடு, புதிய நீர் சுத்தி கரிப்புப் பொறித் தொகுதி, அனுப்பல் மற்றும் விநியோகக் குழாய்கள், பம்பிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஆகியன பிரதானமான கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும். கருத்திட்டத்தின் ஆரம்ப மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 383 மில்லியனாகும். 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 68.3% ஆகம்.

## கோனாபீனுவல நீர் வழங்கல் கருத்திட்டம்

கோனாபீனுவல பிரதேச செயலாளர் பிரிவின் 21 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றவாறு விநியோக முறைமையொன்றை நடைமுறைப் படுத்தல் இக்கருத்திட்டத்தின் விடயப்பரப்பாகும். கருத்திட்டத்தின் நலன்பெறுவோர்களின் எண்ணிக்கை 20,825 ஆகுமென்பதோடு மொத்த மதிப்பீட்டுச் செலவு 349 மில்லியனாகும். உள்நாட்டு வங்கிகளின் மூலம் நிதியளிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இக்கருத்திட்டம் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டதோடு 2 ஆண்டுகளினுள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது. பத்தேகம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தை நீடிப்பதன் மூலம் ஜின் கங்கையை நீர் வளமாகக் கொண்டு முழுமையான சுத்திகரிப்பு வசதிகள் நிர்மாணிக்கப்படும். முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFP) தயாரிக்கப்பட்டு வருவதோடு, நிதியிடல் ஏற்பாடுகள் அண்மையில் பிரதான நிதி ஒதுக்கீட்டிலிருந்து உள்நாட்டு வங்கிகளுக்கு மாற்றப்பட்டது. PVC குழாய்களை வழங்குதல் பூர்த்தியடைந்துள்ளது. 2014 மார்கழி இறுதியில் அடையப்பெற்றிருந்த பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 14% மற்றும் 9% ஆகும்.

### பத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் 33,800 நலன்பெறுனர்களுக்கு குழாய் நீரை வழங்குவதோடு மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 441 மில்லியனாகும். அம்பேகம, வேவெல் தெனிய, பட்டகெட்டிய, கனேகம, பத்தேகம மற்றும் பொரளுகந்த ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கு கின்து. 2014 மார்கழி இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 46% மற்றும் 58.6% ஆகும்.

## கதிர்காமம் நீர் வழங்கல் கருத்திட்டம்

கதிர்காம பிரதேச செயலாளர் பிரிவில் விநியோக முறைமையை நடைமுறைப்படுத்தல் கருத்திட்டத்தின் விடயப்பரப்பாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 123.8 மில்லியனாகும் என்பதோடு, UNIHA மூலம் நிதியளிக்கப்படும். கருத்திடட்த்திற்கான நீர் வளம் கதிர்காம ஆறு (மாணிக்க கங்கை) ஆகும். மொத்தம் அண்ணளவாக 24,000 நலன்பெறுனர்களுக்கு சேவை வழங்கப்படும். 2008 ஆம் ஆண்டில் ஆஸ்திரிய நிதியளிப்பின் கீழ் UNIHA கருத்திட்டத்தின் மூலம் கதிர்காம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி விஸ்தரிக்கப்பட்டது. அதற்கிணங்க, கதிர்காம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் கொள்ளளவு நாளொன்றுக்கு 8,000 கன மீற்றர்கள் வரை அதிகரிக்கப்பட்டது. மழைக்காலத் தில் நீரின் கலங்கியதன்மை அதிகரிப்பதன் காரண மாக எதிர்பார்க்கப்பட்ட கொள்ளளவை பொறித் தொகுதியின் மூலம் அடைய முடியாதுள்ளது. ஆதலால், பின்வரும் கருத்திட்ட ஆக்கக்கூறுகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக கதிர்காம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை தரமுயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பழைய உள்வாங்கு நிலையத்தின் விரிவாக்கம் - கதிர்காமம் நீர் வழங்கல் திட்டம். தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகு தியின் விரிவாக்கம் - தற்போதுள்ள வண்டல் தாங்கியின் மேம்பாடு, துணிக்கையாக்கல் கருவியின் நிர்மாணிப்பு, இரசாயன கூடத்தின் நிர்மாணிப்பு, கதிர்காம நீர் வழங்கல் திட்டத்தின் இரண்டு மெதுவான மணல் வடிகட்டலுக்கான வடிகட்டல் ஊடகத்தை வழங்குதலும் இடம்பெறச் செய்தலும். 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 61% மற்றும் 54% ஆகும்.

### ஊவா மாகாணம்
## ஒஹிய நீர் வழங்கல் கருத்திட்டம்

ஹின்னாரங்கல்ல, கலேதண்ட, வெலிமடை, லன்தெகம, சந்தமதுாவ, மிராஹவத்தை, குருதலாவ, மஹதென்ன, வெலிமடை நகரத்தின் தம்பவின்ன மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த 10,000 மக்களுக்கு சேவையாற்றுவதற்குக் கருதியுள்ள இது ஒரு புதிய திட்டமாகும். நாளொன் றுக்கு 4,000 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளம் உமா ஓயாவாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 264.7 மில்லியனாகும் என்பதோடு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 99% மற்றும் 95% ஆகும். நிதி ஒதுக்கீடுகள் உரிய காலத்தில் கிடைக் காமையால் கொடுப்பனவுகள் தாமதமடைந்ததன் காரணமாக ஒப்பந்தகாரர் நிதி ரீதியான நெருக்கடி களை எதிர்நோக்கினார்.

## மொனராகலை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11

இது மொனறாகலை, ஹுலந்தாவ இடதுபுறம், ஹுலந்தாவ வலதுபுறம், முப்பன, ஜயசேனகம, மதுரங்கெட்டிய மற்றும் சிறிகலவை உள்ளடக்கிய மொனராகலை நகரம் மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 10,000 மக்களுக்கு சேவையாற்றுகின்றதான தற்போதுள்ள திட்டத்தின் ஒரு விரிவாக்கமாகும். நாளொன்றுக்கு 2.850 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய பகுதியள விலான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளம் G-Lon தோட்டத்தினூடாக வருகின்ற ஒரு நீரோட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 154.8 மில்லியனாகும் என்பதோடு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 102.6% ஆகம்.

## அம்பகஸ்தோவ நீர் வழங்கல் கருத்திட்டம்

கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளமாக போம்புருஎல்ல விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 382 மில்லியனாகும். நிதியங்கள் கிடைக்காமையால் கருத்திட்டத்தில் தாமதம் ஏற் பட்டது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 96% மற்றும் 87.7% ஆகும்.

### வெல்லவாய நீர் வழங்கல் கருத்திட்டம்

இது மொனறாகலை மாவட்டத்திலுள்ள வெல்லவாய, குடாஒய, ஹந்தபான்கல, யாலபோவ, வருணகம, தெல்லுல மற்றும் அதில்லவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 6,000 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்குக் கருதியுள்ள ஒரு கருத்திட்ட மாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 250 மில்லியனாகும் என்பதோடு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன் னேற்றம் முறையே 96% மற்றும் 71% ஆகம்.

### படல்கும்புற நீர் வழங்கல் கருத்திட்டம்

இது மொனறாகலை மாவட்டத்தில் படல்கும்புற, அழுபொத்த, நக்கல, கராவில, எல்ல, ஹிந்திகுல, தன்வத்த, அமதிரியாய பிரதேசங்களை உள்ளடக்கிய படல்கும்புர பிரதேசத்தின் 22,000 நலன்பெறுனர் களுக்கு நீர் வழங்குவதற்கு கருதியுள்ள ஒரு கருத்திட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 124.4 மில்லியனாகும். 2014 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 94.7% ஆகும்.

### புத்தள நீர் வழங்கல் திட்டம

தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனறா கலை பிரதேசத்தின் 38,250 நலன்பெறுனர்களுக்கு நீர் வழங்குவதற்கு இக் கருத்திட்டத்தின் மூலம் கருதப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 295 மில்லியனாகும். 2014 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 98% ஆகும். இக் கருத்திட்டம் பூர்த்தியடைந்துள்ளது.

### மேல் மாகாணம்
### கிரிந்திவலை நீர் வழங்கல் கருத்திட்டம்

இது, கிரிந்திவலை பிரதேசத்தின் 8,000 மக்களுக்கு சேவையாற்றுவதற்காகத் திட்டமிடப்பட்ட ஒரு கருத் திட்டமாகும். கருத்திட்ட காலம் 5 வருடங்களாகும். முழுமையான சுத்திகரிப்புடன் கூடியதாக களனி கங்கை இதன் நீர் வளமாக உள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 198 மில்லியனாகும். நாளொன்றுக்கு 2,750 கன மீற்றர் நீரை வழங்கக் கூடிய புதிய சுத்திகரிப்புப் பொறித் தொகுதி பூகொடையில் தற்போதுள்ள சுத்திகரிப்புப் பொறித் தொகுதி அமைந்துள்ள இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருவ தோடு உற்பத்தி நடைபெற்று வருகின்றது. உள்வாங்கு நிலையத்தின் எஞ்சியுள்ள வேலைகள், பூகொடவி லுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் திருத்த வேலைகள் மற்றும் குழாய் இடும் வேலைகள் பூர்த்தி யடைந்துள்ளன. வண்டல் கழிவுகளை உலர்த்தும் மேடைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 99% மற்றும் 99% ஆகும்.

### நிட்டம்புவ – வேயங்கொட நீர் வழங்கல் கருத்திட்டம்

இது நிட்டம்புவ, திஹாரிய, வராண மற்றும் கல கெடிஹேன பிரதேசங்களின் 15,000 நலன்பெறு னர்களுக்கு குடிநீர் வழங்குவதற்காகத் திட்ட மிடப்பட்ட ஒரு விரிவாக்கல் கருத்திட்டமாகும். அத்தனகலு ஓயாவிலிருந்து நீர் உள்வாங்கப்பட்டு நாளொன்றுக்கு 3,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் ஊடாக முழுமையாக சுத்திகரிக்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 210 மில்லிய னாகும். கருத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டு உற்பத்தி நடைபெற்று வருகின்றது. வண்டல் கழிவுகளை அகற்றும் முறைமை பூர்த்தியடைந் துள்ளது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 99% ஆகம்.

### கட்டுநாயக்க நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 1 மற்றும் 11

இக் கருத்திட்டம் கட்டுநாயக்க - சீதுவை நகரசபைப் பிரதேசத்தின் 27 கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் கட்டான பிரதேச சபையின் ஒரு பகுதியைச் சேர்ந்த 65,000 நலன்பெறுனர்களுக்கு சேவையாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது. ரத்தொளுவ நீர் வழங்கல் திட்டத் தின் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி நாளொன் றுக்கு 4,500 கன மீற்றர்கொள்ளளவைக் கொண் டுள்ளதோடு, கொழும்பு வடக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் இதற்கான நீரை வழங்குகின்றது. விரிவாக்கப்பட்ட ரத்தொழுகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான நீர் வளமாக தண்டுகம் ஓயா உள்ளதோடு, களனி வலது கரை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான நீர் வளமாக களனி கங்கை விளங்குகிறது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 470 மில்லியனாக திருத்தப்பட்டுள்ளது. மேற்படி நீர் வழங்கல் திட்டம் இரண்டு கட்டங்களில் ஆரம்பிக்கப் பட்டதோடு விநியோக முறைமை 2014 மாசி 05 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 83% ஆகும்.

## ரத்துபஸ்வல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக்கருத்திட்டம் ரத்துபஸ்வலவிலுள்ள 28 கிராம அலுவலகள் பிரிவு, பெலும்மஹர, நெதுகமுவ மற்றும் வெலிவேரிய பிரதேசத்திலுள்ள 53,409 மக்களுக்கு சேவையாற்றுவதற்காக அவசரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. குறுகியகால முன்மொழிவாக, கொழும்பு வடக்கு நகர கருத்திட்டத்தின் அனுப்பல் மற்றும் விநியோக குழாய்களை நீடிப்பதன் மூலமும் யக்கல நீர் வழங்கல் திட்டத்தின் விநியோக குழாய்களை நீடிப்பதன் மூலமும் நீர் வழங்கப்படு கின்றது. இக் கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 800 மில்லியனாகும் என்பதோடு, 140 கி.மீற்றர்களான புதிய விநியோக முறைமை மற்றும் 110 கி.மீற்றர்களுக்கு குழாய் இடுதல் பிராந்திய உதவி நிலையத்தின் (மேல் - வடக்கு) நிர்மாணிப்புப் பிரிவால் பூர்த்தி செய்யப் பட்டுள்ளது. 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 85% மற்றும் 53% ஆகும்.

.

## உடமாப்பிட்டிகம நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1

இது தொம்பே பிரதேச செயலாளர் பிரிவின் 6 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 9,500 மக்களுக்கு சேவை யாற்றுவதற்காக திட்டமிடப்பட்ட ஒரு கருத்திட்ட மாகும். கொழும்பு வடக்கு நகர கருத்திட்டத்தின் அனுப்பல் மற்றும் விநியோகக் குழாய்களை நீடிப்பதன் மூலம் களனி வலது கரை நீர் சுத்திகரிப் புப் பொறித் தொகுதியிலிருந்து டிக்கருத்திட்டம் நீரை வழங்குகின்றது. கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 75 மில்லியனாகும். இக் கருத்திட்டம் 2014 மார்கழி05 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு நிரப்பல் குழாய்களை இடுதல் நடைபெற்று வருகின்றது. இக்கருத்திட்டத்தின் நிர்மாணிப்பு வேலைகள் பிரதேச சேவை நிலையத் தின் நிர்மாணிப்புப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது. 2014 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 30% ஆகும்.

## ஜல்தர - ரனால நீர் வழங்கல் கருத்திட்டம் - படிநிலை 1 கட்டம் 1 மற்றும் 11

நிதி நெருக்கடிகளின் காரணமாக மேற்படி கருத்திட்டத்தின் கட்டங்கள் படிப்படியாக நிறுத்தப் பட்டதோடு, மீண்டும் கட்டம் 1 அகற்றப்பட்டது. படிநிலை 1 கட்டம் 1 ஜல்தர மற்றும் ஹென்பிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கு கின்றது. படிநிலை 1 கட்டம் 11 ஆட்டிகல கிழக்கு, ஆட்டிகல மேற்கு, பானலுவ மற்றும் பட்டவெல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்குகின்றது. கடுவலை மற்றும் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய மேலும் 27 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை படிநிலை 11 உள்ளடக்குகின்றது. படிநிலை 1 கட்டம் 1 இன் கீழ் 7,646 மக்களுக்கும், படிநிலை 1 கட்டம் 11 இன் கீழ் 10,273 மக்களுக்கும், படிநிலை 11 இன் கீழ் 92,118 மக்களுக்கும் 2030 ஆம் ஆண்டளவில் சேவையாற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. படிநிலை 1 கருத்திட்டத்திற்கு சேவை வழங்குவதற்கு லபுகம நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கொழும்பு நகரத்திற்கு நீர் வழங்குகின்ற அனுப்பல் குழாயிலிருந்து லோலெவல் வீதியின் எம்புல்தெனிய சந்தியிலிருந்து நீர் பெறப்படும். இக்கருத்திட்டத்தின் படிநிலை 1 கட்டம் 1 2010 இல் பூர்த்தி செய்யப்பட்டது. படிநிலை 1 கட்டம் 1 க்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 103 மில்லியனாகும். படிநிலை 1 கட்டம் 11 இன் வடிவமைத்தல் மற்றும் கொள்வனவு வழங்கல் நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ள தோடு, கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 96% ஆகும். படிநிலை 1 கட்டம் 11 க்கான மொத்த செலவு மதிப்பீடு ரூபா 114 மில்லியனாகும். 2014 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்ட செலவு ரூபா 283 மில்லியனாகும். கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

## களுத்துறை ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11

இத் திட்டம் பயாகலை, மக்கொன, பேருவளை, தர்கா நகர், பெந்தோட்டை மற்றும் அழுத்கம பிரதேசங்களின் ஏறத்தாழ 210,000 மக்களுக்கு நீர் வழங்கலை நீடிக்கும் பொருட்டு வடிவமைக்கப் பட்டுள்ளது. கருத்திட்டம் 2006 இல் ஆரம்பிக்கப் பட்டது. நாளொன்றுக்கு 56,250 கன மீற்றர் கொள்ளளவு மற்றும் முழுமையான சுத்திகரிப்புடன் கூடியதான இதன் நீர் வளமாக களுகங்கை உள்ளது. திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,366 மில்லியனாகும்.

களுத்துறையின் தென் பிரதேசத்திற்கான விநியோக முறைமையை மேம்படுத்தல் கட்டம் 11 இன் பிரதான மான குறிக்கோளாகும். சென்றல் சந்தியிலிருந்து மக்கொன வரை 9 கி.மீற்றர் நீளத்திற்கு 600 மி.மீ. DI/HDPE பிரதான அனுப்பல் குழாய்களை இடுதல், மக்கொன தொடக்கம் பேருவளை வரை 5 கி.மீ. நீளத்திற்கு 600 மி.மீ. DI/HDPE பிரதான அனுப்பல் குழாய்களை இடுதல் மற்றும் பேருவளை தொடக்கம் தர்கா நகர் வரை பிரதான அனுப்பல் குழாய்களை இடுதல் பூர்த்தியடைந்துள்ளது. களுத்துறை பிரதேசத்தின் விநியோக முறைமையை பலப்படுத்து வதற்கு மேலதிகமாக குறிப்பாக கிளேடிஸ்வத்தை, ஏக்கர் 80 மற்றும் மக்கொனவுக்கான குழாய்களை

இடுதல் மற்றும் மக்கொன பம்பி நிலையத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 92% மற்றும் 82% ஆகும்.

### வட மாகாணம்
### மடு நீர் வழங்கல் கருத்திட்டம்

மடு தேவாலயத்தின் ஏறத்தாழ 450,000 பக்தர்களுக்கு நீர் வழங்கல் வசதிகளை வழங்குதல் இக்கருத் திட்டத்தின் குறிக்கோளாகும். 2014 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 90% ஆகும்.

## இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக் கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சாக்கடைக் கருத்திட்டங்கள்

### மேல் மாகாணம்

#### பத்தரமுல்ல அக்குரெகொடவில் உள்ள பாதுகாப்புத் தலைமையக கட்டிடத் தொகுதிக்கு கழிவுநீர் அகற்றல் முறைமையொன்றை நிர்மாணித்தல்

பிரவேச வாயிலுடன் கூடிய பம்பி நிலையம், துண்டு துணிக்கைகள் மற்றும் மணல் கட்டிகளை அகற்று கின்ற வசதி, காற்றூட்டல் தாங்கி, படியும் தாங்கி, வண்டல் சேறுகளை பம்பி செய்யும் நிலையம், வண்டல் சேற்றை கட்டியாக்கல், வண்டல் சேற்றை உலர்த்தும் மேடை, கொம்போஸ்ட் வடிகட்டல், முதிர்ச்சிநிலை தடாகம், விரிவாக்க அறை, அலு வலக கட்டிடம், கட்டுப்பாட்டு அறை மற்றும் மின் இயந்திர வியல் பொருத்தல்கள் ஆகியவற்றுடன் கூடியதாக நாளொன்றுக்கு 1200 கன மீற்றர் கொள் ளளவைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியை நிர்மாணிப்பதை வேலைகள் உள் ளடக்குகின்றன. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 437 மில்லியனாகும் என்பதோடு, 2014 மார்கழி இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 50.27% மற்றும் 12.69% ஆகும்.

## கொலொன்னாவயில் கழிவு நீர் சேகரிப்பு மற்றும் அனுப்பரை தரமுயர்த்துதல்

458 கி.மீ. நீளத்தையும் 315 மி.மீ. விட்டத்தையும் கொண்ட HDPE ஈர்ப்பு விசை சாக்கடை பிரதான குழாய்களை 08 கொங்கிறீட் வடிகால் அறைகளுடன் கூடியதாக புவக்கஸ்வத்த சந்தியிலிருந்து KP2 பம்பி நிலையம் வரை வழங்குதல் மற்றும் இடுதலையும், 40 கி.மீற்றர் நீளத்திற்கு 250 மி.மீ. விட்டமுடைய HDPE குழாய்களை சலமுல்ல வீடமைப்புத் திட்டத்தி லிருந்து KP1 பம்பி நிலையம் வரை 4 கொங்கிறீட் வடிகால் அறைகள் மற்றும் சுரங்க குறுக்குப் பாதையுடன் கூடியதாக வழங்குவதையும் இடுதலை யும், புவக்கஸ்வத்த சந்தியிலிருந்து KP2 பம்பி நிலையம் வரை 458 நீளத்திற்கு வீதியின் நிரந்த மீள்ஸ்தாபித்தலையும் வேலைகள் உள்ளடக்கி யுள்ளன. 2014 மார்கழி இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 64.2% மற்றும் 26.05% ஆகும்.

## ஆரம்பிக்கப்படவுள்ள கருத்திட்டங்கள்

### நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

#### அநுராதபுரம் வடக்கு பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 1

இக் கருத்திட்டம் அநுராதபுரம் மாவட்டத்தின் ஹொரவப்பத்தானை, கஹட்டகஸ்திகிலிய, கெபிதிகொல்லாவ, மதவாச்சி மற்றும் ரம்பேவ பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள 179 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்குகின்றது. மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அனுராதபுரத்தின் மேல் எல்லையில் கொழும்புலிருந்து 300-350 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. கருத்திட்டத்தின் மொத்த உள்ளடக்க பிரதேசம் ஏறத்தாழ 2,354 சதுர கிலோ மீற்றர்களாகும் (2,34,500 ஹெக்ரயார்கள்).

கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள், ஹொரவப்பத்தானை, கஹட்டகஸ்திகிலிய, கெபிதிகொல்லாவ, மதவாச்சி மற்றும் ரம்பேவ பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு பாதுகாப்பான குழாய்வழி நீரை வழங்குதலாகும் என்பதோடு, குறைந்த தரத்திலான குடிநீரின் காரணமாக சுகாதாரத்தில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதன் மூலம் அவர்களது சுகாதார மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலாகும். 2030 ஆம் ஆண்டளவில் நலன்பெறும் சனத்தொகையினரின் எண்ணிக்கை 271,526 ஆகும். இக்கருத்திட்டத்திற்கு அவுஸ்திரேலியா நிதியுதவி வழங்குவதோடு, இது நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வசிக்கும் பிரதேசங்களின் மக்களுக்கு பெரும் நிவாரணமளிப்பதாக உள்ளது.

### மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் திட்டம்

மாத்தளை மாவட்டத்தில் குழாய் மூலமான குடிநீர் வழங்கல் 27% உள்ளடக்கத்தை மாத்திரமே கொண்டுள்ளதோடு, வாந்திபேதி போன்ற நீரினால் பரவக்கூடிய நோய்கள் பொதுவாகவுள்ளன. மாத்தளை மாவட்டத்தில் குடிநீரின் அளவும் குறிப்பாக குடிநீரின் தரமும் எப்போதுமே ஒரு பாரிய பிரச்சினையாக தொடர்ந்து வருகின்றது. தற்போதைய நீருக்கான கேள்வியான நாளொன்றுக்கு 55,000 கன மீற்றருக்கு பதிலாக தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த கொள்ளளவு நாளொன்றுக்கு 22,500 கன மீற்றர்களாகும். இது புதிதாக வீட்டு மற்றும் வர்த்தக நீர் இணைப்புகள் வழங்கப்படுவதை இயலாமற் செய்துள்ளது.

மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டமானது மாத்தளை, ரத்தொட்ட, உக்குவெல, பல்லெபொல, யட்டவத்த, நெலுவ மற்றும் அம்பன்கங்க கோரளை ஆகிய ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இந்த ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளும் 260 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றது. இக் கருத்திட்டத்தின் மூலம் இப் பிரதேசங்களைச் சுற்றிலுமுள்ள ஏறத்தாழ 325,507 மக்கள் நன்மை பெறுவார்கள். இக் கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 26,954 மில்லியனாகும். இக் கருத்திட்டம் பிரான்ஸ் நிதி உதவியோடு மேற்கொள்ளப்படும்.

### பொல்கஹவெல, பொத்துஹர, அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

தற்போதுள்ள பொல்கஹவெல மற்றும் அலவ்வ நீர் வழங்கல் திட்டம் அதன் உச்ச இயலளவுடன் தொழிற்பட்ட போதிலும் தற்போதைய கேள்வியில் 33% ஐ மாத்திரமே நிறைவு செய்கின்றது. புதிய நீர் இணைப்புக்காக காத்திருப்போர் பட்டியலில் பெரும் தொகையான வதிவோர் பதிவு செய்துகொண்டுள்ளனர். ஆதலால் இந்த இரண்டு திட்டங்களையும் ஒன்றிணைத்து ஒரு திட்டமாக மேம்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அலவ்வ, பொல்கஹவல, வீரம்புகெதர, இம்புல்கஸ்தெனிய, நாம்மல, குருணாகல், மாஸ்பொத்த மற்றும் மல்லவபிட்டிய ஆகிய எட்டு பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாகும். இப்பிரிவுகள் 222 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்குகின்றன.

இக் கருத்திட்டத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் 260,000 சனத்தொகையினர் நலன்பெறுவார்கள். மேலும், இது பொல்கஹவெல ஏற்றுமதித் தயாரிப்பு வலயத்திற்கான நம்பகத்தன்மையுடன் கூடிய நீர் வழங்கலை உறுதி செய்யும் என்பதோடு, அது எதிர்கால முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதாயிருக்கும். கருத்திட்டத்தை இந்திய நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

## அளுத்கம, மத்துகம மற்றும் அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள் களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை, தொடங்கொட, பேருவல, மத்துகம, அகலவத்த மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் களுத்துறை மற்றும் பேருவலையின் நகரசபைப் பிரதேசம் மற்றும் காலி மாவட்டத்தில் பெந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றுக்கு குடிநீர் வழங்குதலாகும். களுத்துறை நீர் வழங்கல் திட்டத்துக்கான தற்போதுள்ள நீர் மூலம் போதுமானதாக இல்லை என்பதோடு, எதிர்கால கேள்வியை நிறைவு செய்யக்கூடிய வகையில் விரிவாக்கவும் முடியாதுள்ளது. களுத்துறை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் உவர்ப்பு நீர் பிரச்சினையைத் தவிப்பதற்காகவும் இக் கருத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டின் வரட்சிக் காலத்தில் பாவனையாளர்கள் உவர்ப்பு நீரைப் பெறுதல் இங்குள்ள பிரச்சினையாகும்.

2030 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தின் மூலம் 573,500 மொத்த சனத்தொகையினருக்கு சேவையாற்றப்படவுள்ளது.

---

## சாக்கடைக் கருத்திட்டங்கள்

### மேல் மாகாணம்

### ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயின் கழிவுநீர் சேகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஸ்ரீ ஜயவர்தனபுரவின் துரித அபிவிருத்தியைத் தொடர்ந்து, அநேகமான அபி விருத்தி செய்யப்பட்ட காணிகள், வீடமைப்புத் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் பிரதான வீதி நெடுகிலும் வர்த்தக அபிவிருத்திக்காகவும் துண் டாடப்பட்டுள்ளது. கட்டிடட்ங்களுக்கான காணித் துண்டுகளின் அளவு குறைவடைந்துள்ளமையா லும், காணிகளுக்கு பக்கத்தில் ஆழமற்ற கிணறுகள் உள்ளதாலும், வழங்கப்பட்டுள்ள கட்டடக் காணித் துண்டுகளில் ஒழுங்கான நச்சுத்தடை தாங்கிகளை ஸ்தாபித்தல் சிரமமாக காணப்படுகின்றது.

காணித் தேவைகளை நிறைவு செய்வதற்காக தாழ் பிரதேசங்களும் நிரப்பப்பட்டு வருகின்றன. இது சதுப்பு நிலங்களிலும் நீர் வழிகளிலும் உள்ள நீர் பரவுவதை அதிகரிக்கச் செய்துள்ளதோடு வெள்ளப் பெருக்குக்கும் பங்களிப்புச் செய்கின்றது. நில நீர் மட்டம் அதி கரிப்பதைத் தொடர்ந்தும், மண்ணின் ஊடுறுவும் தன்மை குறைவாயுள்ளமையாலும், குறைவாகச் செயற்படுகின்ற நச்சுத்தடை (கழிவு நீர் சேகரிக்கும் தொட்டி) தாங்களிலிருந்தும் நிலத்தில் உறிஞ்சப்படும் குழிகளிலிருந்தும் பெருமளவிலான கழிவுநீர் பக்கதிலுள்ள வடிகாண்களிலும் அதேபோன்று அருகிலுள்ள நில மேற்பரப்பு நீரிலும் ஒன்றுசேர்வதன் மூலம் இறுதியாக நில நீர் மூலங்களை மாசடையச் செய்கின்றது.

ஆதலால், வெலிகட – ராஜகிரிய பிரதேசம் அதேபோன்று ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகர சபைப் பிரதேசம், கடுவெல பிரதேச செயலாளர் பிரதேசத்தின் பகுதிகள் மற்றும் மஹரகம நகரசபைப் பிரதேசம் ஆகியவற்றில் இடம்பெறுகின்ற துரித அபிவிருத்தியை முன்னிட்டு இப்பிரதேசங்களின் கழிவுநீர் அகற்றல் தேவையை நிறைவு செய்யக் கூடியவாறு மத்தியமயப்படுத்தப்பட்ட சாக்கடை முறைமையொன்றின் தேவை அவசியமாகக் காணப்படுகின்றது. இதன் மூலம் ஏறத்தாழ 28,000 சாக்கடை இணைப்புகளை வழங்க எதிர்பார்க்கப்படுவதோடு, மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 40,542 மில்லியனாகும்.

### நீர்கொழும்பு கழிவுநீர் அகற்றல் முறைமை

நீர் கொழும்பு, இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் உள்ள பாரிய கரையோர நகரமொன்றாகும். 2004 மார்கழியில் சுனாமியினால் அழிவுக்குள்ளாகியதோடு, தற்போதுள்ள தலத்திலான துப்புரவேற்பாட்டு உட்கட்டமைப்புகளின் இயக்க முடியாதிருந்த பல அம்சங்கள் செயற்படுத்தப்பட்டன. நகரத்தில் தொடர் ச்சியாக அதிகரித்து வருகின்ற சனத்தொகையின் பெறுபேறாக காணி கிடைப்பனவில் பெரும் அழுத்தம் ஏற்படுத்தப்பட்டு கட்டிடங்களுக்கான காணித் துண்டுகளின் அளவுகள் குறைவடைந்துள்ளன. இதன் காரணமாக நச்சுத்தடை (கழிவு நீர் சேகர்க்கும் தொட்டி) தாங்கிகளின் கழிவுகளை அகற்றுதல் தொடர்பான பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. இதன் மூலம் 15,154 சாக்கடை இணைப்புகளை வழங்குவ தற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 16,477 மில்லியனாகும்.

## மஹரகம மற்றும் பொரலெஸ்கமுவ கழிவுநீர் அகற்றல் முறைமை

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம், தேசிய புற்றுநோய் நிறுவனம் போன்ற பல முக்கியமான தேசிய நிறுவனங்கள் மஹரகம பிர தேசத்தில் அமைந்துள்ளது. மஹரகம பிரதேச சபை, மஹரகம மற்றும் பொரலஸ்கமுவ நகரங்கள் ஆகியவற்றின் துரித அபிவிருத்திக்கான தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டும் சுற்றாடல் மேலும் மாசடைவதைத் தடுக்கும் பொருட்டும் மத்தியமயப் படுத்தப்பட்ட சாக்கடை முறைமையொன்று அத்தியா வசியமாயுள்ளது.

இரம்மலான-மொரட்டுவை கழிவுநீர அகற்றல் கருத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இரத்மலான மொரட்டுவை சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு மஹரகம பொரலஸ்கமுவவின் கழிவுநீர் பாய்ச்சப்படுகின்றது. இதன் மூலம் 5000 சாக்கடை இணைப்புகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படு கின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 5,125 மில்லியனாகும்.

## தெஹிவல/கல்கிசை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

தற்போது தெஹிவல/கல்கிசை பிரதேசத்தின் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு சாக்கடை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்றது. ஆதலால் ஏனைய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் கெஸ்பாவ பிரதேச செயலாளர் பிரிவின் பக்கத்திலுள்ள மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இக்கருத்திட்ட பிரதேசத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இரத்மலான பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய ரெம்பல் வீதியிலிருந்து தெஹிவலை வரையிலான நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின், முன்னர் இரத்மலான மொரட்டுவை சாக்கடை கருத்திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் சேர்க்கப்படாதிருந்த பிரதேசங்கள் இக்கருத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற மதிப் பிடப்பட்ட மொத்த பரப்பளவு அண்ணளவாக 919 ஹெக்ரயார்களாகும் என்பதோடு, 2040 ஆம் ஆண்டள வில் எதிர்வுகூறப்பட்ட சனத்தொகையனா 184,306 இல் 75% சனத்தொகையான 138,230 க்கு சேவையாற்ற எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு 23,575 மில்லியன் ஆகும்.

## களனி/பேலியகொடை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

களனி பிரதேச சபை மற்றும் பேலியகொட நகர சபை நாட்டின் உட்பகுதியில் மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் கொழும்பு – கண்டி வீதி நெடுகிலும் அமைந்துள்ளது. இலங்கையின் வர்த்தக மத்திய நிலையமான கொழும்புக்கான புகுவழியாக துரிதமாக அபிவிருத்தியடைந்துவரும் பிரதேசமாக இது காணப்படுகின்றது. களனி பிரதேச சபை மற்றும் பேலியகொட நகர சபை ஆகிய இரண்டும் கழிவகற்ற லுக்காக நச்சுத்தடை (கழிவு நீர் சேகரிக்கும் தொட்டி) தாங்கிகளையும் குழி மலசலகூடங்களையும் பயன் படுத்துகின்து. கால்வாய்களுக்கும் சதுப்பு நிலங்களுக்கும் பக்கத்திலுள்ளவர்கள் கழிவுகளை நேரடியாகவே நீர் வழிகளுக்க அகற்றுவதால் சுற்றாடல் மாசடைந்து சுகாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றது. ஆதலால் சாக்கடைச் சேவைக கான கேள்வி அதிகளவில் இங்கு காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் நில நீர் மட்டம் மிக உயர்விலேயே உள்ளது.

களனி பிரதேச சபை மற்றும் பேலியகொட நகர சபையினால் சேகரிக்கப்படுகின்ற கழிவுநீர் பம்பி நிலைய வலையமைப்பின் மூலம் நீளமான கடல் வெளியேற்றக் குழாய் மூலம் கடலுக்கு அகற்றப்படு கின்றது. களனி பிரதேச சபை மற்றும் பேலியகொட நகர சபை பிரதேசத்தின் 2043 இல் எதிர்வுகூறப்பட்ட சனத்தொகை 227,700 ஆகுமென்பதோடு, ஆண்டு வளர்ச்சி வீதம் 1.1% ஆகும். கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 12,766 ஆகுமென்பதோடு எதிர்பார்க்கப்படும் இணைப்பு 15,569 ஆகும்.

## வடமேல் மாகாணம்
## சிலாபம் கழிவுநீர் அகற்றல் முறைமை

சிலாபம் கொழும்பிலிருந்து 75 கி.மீ. வடக்காக அமைந்துள்ள சனநெருக்கடி மிக்க நகரமொன்றாகும் என்பதோடு, தேங்கு, இறால் மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றதாகும்.

சிலாபத்தின் புவிப்பண்பியலின் சமதரையான நிலைமையின் காரணமாக, இனங்காணப்பட்ட வடிகாலமைப்பு முறையொன்று இங்கு காணப்படுவ தில்லை. ஆயினும் நான்கு பிரதான மழைநீர் வடிகால் கால்வாய்கள் நேரடியாகவே கடலுக்கு விடப்படுகின்றது. கால்வாய் மட்டங்களில் உள்ள தவறுகளின் காரணமாக வடிகால் முறைமை குறிப் பாக சவாலானதாக உள்ளது. நீரேரியின் நீர் நகரப் பிரதேசங்களில் பிரதான வடிகால்களின் ஊடாக உள்நோக்கி பெருக்கெடுக்கின்றது.

சிலாபம் நகர சபை தாங்கிகளிலிருந்தும் குழிகளி லிருந்தும் சேகரிக்கின்ற கழிவுகளை நேரடியாகவே நில மேற்பரப்பில் அகற்றுகின்றது. ஆதார வைத்தியசாலையிலிருந்து கழிவு நீர் நேரடியாக கடலுக்கும் புகையிரத வீதிக்கும் இடையே அமைந் துள்ள தடாகமொன்றுக்கு அகற்றப்படுகின்றது.

முன்மொழியப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் நாளொன் றுக்கு 1000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதியுடன் 500 மீற்றர் நீளமான கடல்வழிக் குழாய் முன்மொழியப் பட்டுள்ளது. கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 3,776 மில்லியனாகும் என்பதோடு 1050 வீடுகள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படும்.

### புத்தளம் கழிவுநீர் அகற்றல் முறைமை

புத்தளம் கொழும்புக்கு வடக்கே 125 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சிறிய மற்றும் சனநெருக்கடி மிக்க நகரமொன்றாகும் என்பதோடு உப்பு மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பிரசித்திபெற்றதாகும். புத்தளம் நீரேரி இலங்கையில் மிகப் பெரிய நீரேரிகளில் ஒன்றாகும். நுரைச்சோலை நிலக்கரி நீர் மின் நிலையம் புத்தளத்திலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் கற்பிட்டி தீபகற்பத்தில் அமைந்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் நாளொன் றுக்கு 1000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதியுடன் 500 மீற்றர் நீளமான கடல்வழிக் குழாய் முன்மொழியப் பட்டுள்ளது. கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 4,025 மில்லியனாகும் என்பதோடு 1250 வீடுகள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படும்.

## தென் மாகாணம்

### காலி கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

காலி, இலங்கையின் தெற்குக் கரையோரத்தில் உள்ள பாரிய கரையோர நகரமொன்றாகும். 2004 மார்கழியில் சுனாமியினால் அழிவுக்குள்ளாகியதோடு, தற்போதுள்ள தலத்திலான துப்புரவேற்பாட்டு உட் கட்டமைப்புகளின் இயக்க முடியாதிருந்த பல அம்சங்கள் செயற்படுத்தப்பட்டன. தற்போதுள்ள (2007 இல் மதிப்பிடப்பட்ட) 97,360 சனத்தொகை 2030 ஆம் ஆண்டளவில் அண்ணளவாக 120,600 ஆக அதிகரிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. இதன் மூலம் 11,402 சாக்கடை இணைப்புகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 13,325 மில்லியனாகும்.

### அம்பாந்தோட்டை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

சர்வதேச துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான அதிக சாத்தியத்தன்மையைக் கொண்டுள்ள இயற்கைத் துறைமுகத்துடன் இணைப்பட்டதான பொருளாதார மத்திய நிலையமாக அம்பாந்தோட்டை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. முன் மொழியப்பட்டுள்ள உட்கட்டமைப்புகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், கைத்தொழில் வலயம் மற்றும் நிர்வாக மத்திய நிலையம், சர்வதேச மாநாட்டு நிலையம், தாவரவியல் பூங்கா, சர்வதேச விளையாட்டுக்கள் தொகுதி மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. கருத்திட்டம் நிதிசார் பேச்சுவார்த்தைக்காக காத் திருக்கின்றது. இதன் மூலம் 9,034 சாக்கடை இணைப்புகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. துறைமுக வளவுகளில் அமைக்கப் பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு சேவையாற்றும் பொருட்டு அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திப் பிரதேசத்தில் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 11,519 மில்லியனாகும்.

## கிழக்கு மாகாணம்

### காத்தன்குடி கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

காத்தன்குடி, கிழக்கு மாகாணத்தின், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு நகரத்துக்கு தெற்கே 7.0 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கரையோர நகரமொன்றாகும் என்பதோடு 18 கிராம உத்தி யோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 3.89 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. உலகப் பிரசித்திபெற்ற பெரும் சுற்றுலாக் கவர்ச்சியைக் கொண்ட பாசிகுடா கடற்கரை கருத்திட்ட பிரதேசத் திற்கு அண்மையிலேயே அமைந்துள்ளது.

காத்தான்குடியிலிருந்து மட்டக்களப்பை நோக்கிய தாக 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கல்லடியில் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. கல்லடி நகரத்தை உள்ளடக்கியதாக தனியான சாக்கடை வலையமைப் பையும் இக்கருத்திட்டம் உள்ளடக்குகின்றது. காத்தன்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்கான கழிவுநீர் அகற்றல் முறைமையின் அபிவிருத்தி தொடர்பில் 2012 கார்த்திகை 26 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்ட, தே.நீ.வ.வ.சபையினால் தொழில் நுட்ப மற்றும் நிதியியல் முன்மொழிவுகளுக்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதற்கு பிரதி பலிப்புக்காட்டும் வகையில், இக்கருத்திட்டத்தை பொறுப்பேற்பதற்கு Hunan Construction Co. விருப்பம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் 13,308 சாக்கடை இணைப்புகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 11,407 மில்லியனாகும்.

# திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்

## 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் பணிகள்

**திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவின் மேற்கு உப பிரிவு பின்வரும் கருத்திட்டங்களின் திட்டமிடல் பணிகளை மேற்கொண்டது.**

• களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11 க்கான முன்மொழிவுக்கான வேண்டுகோள் (RFP)ஆவணங்களைத் தயாரித்தல்உத்தேச களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11, நாளொன்றுக்கு 180,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, தற்போதுள்ள உள்வாங்கு நிலையத்தின் விரிவாக்கம், சர்ச்ஹில் நீர்த் தேக்கத்துக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை பம்பி செய்கின்ற 1200 மி.மீ. விட்டமும் 2 கி.மீ. நீளமும் கொண்ட பிரதான குழாய், கடவத்தையிலிருந்து ஏக்கல வரை நீரை அனுப்புகின்ற 19.1 கி.மீ. நீளமும் 800 மி.மீ. விட்டம் கொண்ட குழாய், பியகமவுக்கான 4.4 கி.மீ. நீளமும் 1000 மி.மீ. விட்டத்தையும் கொண்ட பிரதான பம்பிக் குழாய், 1.1 கி.மீ. நீளமும் 800 மி.மீ. விட்டத்தையும் கொண்டு களனி ரயர் சந்திக்கான பம்பிக் குழாய், KRB உள்வாங்கு நிலையத்தின் ஆற்றின் கீழ் பகுதிக்கான 800 மி.மீ. விட்டத்தைக் கொண்ட 3 PE குழாய்கள் மற்றும் முதலீட்டுச் சபை வலயத்துக்கான 9.6 கி.மீ. நீளமும் 500 மி.மீ. விட்டத்தையும் கொண்ட PE குழாய்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.



• கொழும்பு மாவட்ட கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டத்தின் பக்கேஜ் 1,2 மற்றும் 3க்கான 03 விலைக் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல்.

• அம்பதலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி யிலிருந்து எளிஹவுஸ் நீர் தேக்கத்துக்கான 1200 மி.மீ. விட்டத்தைக் கொண்ட பம்பிக் குழாய்கள், கொத்தட்டுவயிலிருந்து மாளிகாகந்த நீர்த் தேக்கத்துக்கான 1200/1000 மி.மீ. விட்டத்தைக் கொண்ட பம்பிக் குழாய்களுக்கான விலைக் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல், இங்கிரிய மற்றும் ஹந்தபான்கொட நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான RFP ஆவணங்கள், தே.நீ.வ.வ.சபையின் தலைமை அலுவலகத்தின் எல்லை வேலிகள், மழைநீர் வடிகால் முறைமை மற்றும் தே.நீ.வ.வ.சபையின் தலைமை அலுவலகத்தின் நில வடிவமைப்பு வேலைகள்.

• அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1 க்கான RFP ஆவணங்களை தயாரித்தல், மகா ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11 க்கான திட்டமிடல் (JICA நிதியளிப்பிலான கிழக்கு மாகாண நீர் வழங்கல் திட்டங்களின் கீழ்) மற்றும் உத்தேச முல்லைத்தீவு நீர் வழங்கல் திட்டத்துக் கான சாத்தியவள அறிக்கையை தயாரித்தல். 22,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நில நீர்த் தேக்கத்தை நிர்மாணித்தல், ஜுபிலி தொடக்கம் வெல்லவத்தை வரை 1000 மி.மீ. அனுப்பல் குழாய்களை இடுதல், மாற்றீட்டு நீர் வழங்கல் மூலமாக கொத்தட்டுவ முறைமையிலிருந்து 800 மி.மீ. அனுப்பல் குழாய்களை இடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஜுபிலி முறைமையின் விரிவாக்கத்திற்கான சாத்தியவளக் கற்கையை தயாரித்தல்.

## 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு மீளாய்வு வேலைகள்

• லபுகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு

## 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட விபரமான வடிவமைத்தல்கள்:

• தலைமை அலுவலக வளவில் ஐந்து மாடி அலுவலகக் கட்டிடத்துக்கான விபரமான வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அலுவலக பிரதேசம், கேட்போர்கூடம், நூலகம், உணவுச்சாலை மற்றும் ஏனைய சேவை வசதிகளை இக் கட்டிடம் உள்ளடக்கியுள்ளது. கட்டடத்தின் மொத்த பிரதேசம் 3,240 சதுர அடிகளாகும். அலுவலகக் கட்டடத்தின் கட்டிடக்கலை வடிவமைப்பு, கட்டமைப்பு வடிவமைப்பு, சேவை வடிவமைப்பு, கொள்வனவு வழங்கல் வேலைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய வேலைகள் வடிவமைப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் BOI க்கான அனுப்பல் நீடிப்பு, வலையமைப்பு மாதிரியைத் தயாரித்தல், கொழும்பு மாவட்ட கிழக்கு நகரங்களுக்கான நீர் வழங்கல் கருத்திட்ட பக்கேஜ் 01 ஒப்பந்தத்துக்கான விநியோக மற்றும் ஊட்டல் குழாய்களின் வடிவமைப்பு, வலையமைப்பு மாதிரி, விநியோக மற்றும் ஊட்டல் குழாய்களின் வடிவமைப்பு, வரைதல்கள், கொழும்பு மாவட்ட கிழக்கு நகரங்களுக்கான நீர் வழங்கல் கருத்திட்டம் பக்கேஜ் 3 ஒப்பந்தத்தின் கீழான உள்நாட்டு வங்கி நிதியளிப்புகளுக்கான அளவுப் பத்திரங்கள், 1000 மி.மீ. விட்டமும் 8 கி.மீ. நீளமும் கொண்ட DI அனுப்பல் குழாய்களின் வடிவமைப்பு , 18,000 கன மீற்றர் கொண்ட நிலத் துக்கம் மற்றும் ஏனைய சிவில் வேலைகள், கொழும்பு மாவட்ட கிழக்கு நகரங்களுக்கான நீர் வழங்கல் கருத்திட்டம் பக்கேஜ் 2 ஒப்பந்தத்தின் கீழான உள்நாட்டு வங்கி நிதியளிப்புகளுக்கான வரைதல்களை தயாரித்தல் மற்றும் அளவுப் பத்திரங்கள், அம்பதலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து எளிஹவுஸ் நீர் தேக்கத்துக்கான 1000 மி.மீ. விட்டத்தைக் கொண்ட பம்பிக் குழாய்கள் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.

## பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகள் (நிதி மூலங்கள், பெறுபேறுகள் ஆகியன)

திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் பிரிவில் பகுதிகளாக பிரித்தல் வேலைகளின் வழங்கல் மற்றும் பொருத்தல்களுக்கான பெறுகை வேலைகள் மற்றும் மேம்பாட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

## தெற்கு/கிழக்கு பிரிவு 2014 இல் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் பணிகள்

• களனி கங்கையில் உள்வாங்கு நிலையத்தைக் கொண்டுள்ள ருவன்வெல்ல நீர் வழங்கல் திட்டத்துக்கான மதியுரை வேலைகள் மற்றும் வடிவமைப்பு கட்டுமான வேலைகளுக்கான RFP ஆவணங்களைத் தயாரித்தல், நாளொன்றுக்கு 4000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 03 நீர் கோபுரங்கள், 01 நில நீர்த் தேக்கம், கொலொன்ன நீர் வழங்கல் கருத்திட்டத்தின் பனாமுர நில நீர் தேக்கம் அமைந்துள்ள இடத்தில் நீர் சிந்துதலை நிறுத்துவதற்கான விலைக் கேள்வி ஆவணங்கள், தெனியாய, கிரிந்த, பிட்டிகல நீர் வழங்கல் திட்டங்களின் நீர் தர மேம்பாட்டுக்கான முன்மொழிவுகள் மற்றும் பந்தகிரிய நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாடு.

## 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு மீளாய்வு வேலைகள்

• இது மொனறாகல, புத்தள, கும்புக்கன ஆகிய பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கான ஒக்கம்பிட்டிய மற்றும் புத்தளவில் உள்ள உள்வாங்கு நிலையம், நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி (நாளொன்றுக்கு 6000 கன மீற்றர்), 3 நில நீர்த் தேக்கங்கள் (2000, 450 மற்றும் 650 கன மீற்றர்), சுத்திகரிக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப் படாத பிரதான அனுப்பல் குழாய்கள் (GDPE – 17 கி.மீ.), இயந்திரவியல் மற்றும் மின்னியியல் வேலைகள், அலுவலக கட்டிடம் மற்றும் விடுதிகள் ஆகியவற்றை மொனறாகல-புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் வடிவமைப்பு மீளாய்வு உள்ளடக்கியுள்ளது.



• இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகளை உள்ளடக்கியதான பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல நீர் வழங்கல் கருத்திட்டத்தின் தெமோதர நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான (நாளொன்றுக்கு 15,000 கன மீற்றர்) ஆரம்ப மற்றும் இறுதி வடிவமைப்பு அறிக்கைகளுக்கான வடிவமைப்பு மீளாய்வு. உத்தேச கருத்திட்ட பிரதேசமானது பதுளையில் 22 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும், ஹாலிஎலவில் 8 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் எல்லவில் 17 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்குகின்றது.

• களுகங்கையில் உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 13000 கன மீற்றர் கொள்ளளவுடனான நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 2500 கன மீற்றர் கொண்ட நீர்த் தேக்கம், சுத்திகரிக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்படாத பிரதான அனுப்பல் குழாய்கள் மற்றும் அலுவலக கட்டிடத்தை உள்ளடக்கிய இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டத்தின் வடிவமைப்பு மீளாய்வு

• கொலொன்ன – பலாங்கொட நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 1 இன் 7,000 கன மீற்றர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி, உள்வாங்கு நிலையம், நில நீர்த் தேக்கங்கள், விநியோகக் குழாய்கள் மற்றும் அனுப்பல் குழாய்களின் வடிவமைப்பு மீளாய்வு.

## 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட விபரமான வடிவமைப்புகள்

• ஈச்சிலம்பற்று நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து சேருநுவர ஊட்டல் குழாய் களுக்கான பம்பிக் குழாய்களின் வடிவமைப்பு, அம்பாறையின் கட்டம் 111 இன் சேவை வழங்கப் படாத பிரதேசங்களுக்கான நீர் வழங்கல் திட்டங்களுக்கான குழாய் தேவைப்பாடுகளுக்கான மீதமுள்ள குழாய்களுக்கான வடிவமைப்பு வரைதல் கள் தயாரிக்கப்பட்டன. இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டத்தின் (185 கி.மீ.) விநியோக முறைமையின் விபரமான வடிவமைப்பு, வரைதல் களை தயாரித்தல், அளவுப் பத்திரங்கள் மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்கள்.

• கிரிந்தி ஓயா நீர் வழங்கல் திட்டத்தின் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நீர் தரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் நாளொன்று 6000 கன மீற்றர் வரை கொள்ளளவை மேம்படுத்துவதற்குமான விபரமான வடிவமைத்தல்.

## வடக்கு/ வடமத்திய/ வடமேல் பிரிவு

திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவின் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் உப பிரிவு பின்வரும் கருத்திட்டங்களின் வடிவமைப்பு வேலைகளை மேற்கொண்டது.

## தொடுவான்கொடி நீர் வழங்கல் திட்டம்

தொடுவான்கொடி நீர் வழங்கல் கருத்திட்டத்தின் (JICA நிதியளிப்பின் கீழான கிளிநொச்சி புனரமைப்பு நீர் வழங்கல் திட்டம்) திட்டமிடலானது, விநியோக முறைமையின் மேலதிக 45 கிலோ மீற்றரை திட்டமிடுகின்றது (JICA நிதியளிப்பின் கீழான கிளிநொச்சி புனரமைப்பு நீர் வழங்கல் திட்டம்).

## தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம்

நன்கொடையாளரான கொரிய எக்சீம் வங்கியுடன் சேர்ந்து திட்டமிடல் மற்றும் இணைப்பாக்க வேலைகளை மேற்கொள்வதோடு, தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான மேற்பார்வை மதியுரையாளர்களை தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்களைத் தயாரித்தல் (செலவு அண்ணளவாக ரூபா 351 மில்லியன்). மற்றும் தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டத்தின் சிவில் மற்றும் இயந்திரவியல், மின்னியல் வேலைகளுக்கான வடிவமைத்துக் கட்டியெழுப்புகின்ற ஒப்பந்தம் (செலவு அண்ணளவாக ரூபா 8,600 மில்லியன்)

## 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு மீளாய்வு வேலைகள்

• குருணாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டத்தின் அனுப்பல் குழாய்கள், விநியோக முறைமை மற்றும் அணைக் கட்டமைப்பின் கருத்தியல் ரீதியிலான வடிவமைப்பு மற்றும் விபரமான வடிவமைப்பு மீளாய்வு மற்றும் அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 1 க்கான கருத்தியல் வடிவமைப்பு, நடைமுறை வடிவமைப்பு, அனுப்பல் மற்றும் விநியோக வலையமைப்பு ஆகிய கருத்திட்ட மதியுரையாளரால் மேற்கொள்ளப்பட்டது.

• யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் கருத் திட்டத்தின் கருத்தில் வடிவமைப்பு மற்றும் விபரமான வடிவமைப்பின் மீளாய்வு மற்றும் விலைக் கேள்வி ஆவணங்களின் மீளாய்வு.

• ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக் கப்படுகின்ற யாழ்ப்பாண கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டத்தின் அனுப்பல் மற்றும் விநியோக வலையமைப்பின் மீளாய்வு மற்றும் நீர் உள்வாங்கு நிலையம், சுத்தி கரிக்கப்படாத நீர் அனுப்பல் மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி ஒப்பந்த பக்கேஜின் பெறுகைகள் ஆவணங்கள் மற்றும் வடிவமைப்பு, வழங்கல் மற்றும் கருத்தியல் வடிவமைப்பு.

## 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விபரமான வடிவமைப்புகள்

• தொடுவான்கொடி நீர் வழங்கல் திட்டத்துக்கான அனுப்பல் குழாய்கள், விநியோக முறைமை, 50 கன மீற்றர் கோபுரம் மற்றும் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு, JICA நிதியளிப்பின் கீழான கிளிநொச்சி புனரமைப்பு நீர் வழங்கல் கருத்திட்டத்திற்கான 45 கிலோ மீற்றர் விநியோக முறைமை.

## 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆவணப்படுத்தல் வேலைகள்

தரநியமத்துடன் கூடிய விலைக் கேள்வி ஆவணங்கள், தரநியமம், மாதிரிகள், ஆவணங்களின் பூர்வாங்க தகைமைகள், தொழிலநுட்ப சுற்றறிக்கைகளை மற்றும் சபைப் பத்திரத்தை வரைவு செய்தல் ஆகியவற்றின் தயாரித்தலையும் இற்றைப் படுத்தலையும் ஆவணப்படுத்தல் பிரிவு மேற்கொள்கின்றது.

2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்த விடயங்களின் சுருக்கம் பின்வருமாறு:

புதிய தரநியமங்களுடன் கூடிய 2 விலைக் கேள்வி ஆவணங்கள், முன்மொழிவு வேண்டுகோளுக்கான 2 புதிய தர நியமங்கள், தரநியமங்களுடன் கூடிய 51 விலைக் கேள்வி ஆவணங்களின் திருத்தம் ஆகியவற்றைத் தயாரித்தல், 2 புதிய மாதிரிகளை தயாரித்தல், 2 புதிய பூர்வாங்க தகைமை ஆவணங்களை தயாரித்தல், தொழில்நுட்ப சுற்றறிக்கைகளின் வரைவு மற்றும் சபை பத்திரத்தைத் தயாரித்தல், 400,000 சேவை இணைப்புகளை வழங்குவதன் மூலம் சேவை உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கான 18 விலைக் கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கலாக 22 விலைககேள்வி ஆவணங்களைத் தயாரித்தல்.

மேற்படி செயற்பாடுகளுக்கு மேலதிகமாக ஆவணப்படுத்தல் உப பிரிவானது விலைக் கேள்வி ஆவணங்களை மீளாய்வு செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் மீளத் ஸ்தாபிக்கப்பட்ட தரநியம விலைக் கேள்வி மீளாய்வுக் குழுவினதும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கொள்வனவு வழங்கல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான செயலகமாகவும் செயற்படுகின்றது. தரநியம விலைக் கேள்வி மீளாய்வுக் குழு 11 கூட்டங்களை நடத்தியது. மேலும் ஆவணப்படுத்தல் உப பிரிவானது திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவினால் நடத்தப்படுகின்ற மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்கான செயலகமாகவும் செயற்பட்டு வருகின்றது.
திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவின் ஆவணப்படுத்தல் பிரிவின் கீழ் தொழிற்படுகின்ற வடிவமைப்புக் கைநூலின் இற்றைப்படுத்தல் உப பிரிவு தே.நீ.வ.வ.சபையின் நடைமுறை.·. வடிவமைப்புக் கைநூலின் இற்றைப்படுத்தலை.·. தயாரித்தலை மேற்கொள்கின்றது. 2014 ஆம் ஆண்டினுள் திட்டமிடல் வடிவமைப்பு கைநூல் மீளாய்வுக் குழுவின் (PDMRC) வழிகாட்டல் மற்றும் அறிவுரையின் கீழ் பின்வரும் வேலைகளை மேற்கொண்டது.

• PDMRC, PI கைநூலை மீளாய்வு செய் தது – கருத்திட்ட திட்டமிடல், சாத்தியவளம் மற்றும் திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன.
• பின்வரும் கைநூல்களுக்காக வடிவமைப்பு /நடைமுறை கைநூல் தயாரிப்புக்கான குழு நியமிக்கப்பட்டது.

I) D3 கைநூல் - நீர் தரம் மற்றும் சுத்திகரிப்பு
ii) D4 கைநூல் - நில நீர்
iii) D5 கைநூல் - நீர் வழங்கல் மற்றும் சாக்கடை வடிவமைப்பின் இயந்திரவியல் மின்னியல் மற்றும் காரணித் தோற்றப்பாடுகள்
iv) P 10 – குழாய் திருத்தங்கள்

• D3 கைநூலின் முதலாவது வரைவின் அத்தியாயங்கள் PDMRC யினால் மீளாய்வு செய்தல் பூர்த்தி செய்யப்பட்டது.
• D4 கைநூல் - 75% பூர்த்திசெய்யப்பட்டது.
• தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, ஆரம்பித்தல் மற்றும் கையளித்தல் ஆகியவற்றுக்கான கைநூல் மற்றும் D2 கைநூலின் முழுமையான பகுதிகள்; PDMRC யினால் மீளாய்வு செய்யப்பட்டது.

## 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட அளவு மதிப்பீட்டுப் பணிகள்

அளவுப் பணிகளானது தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற அளவுப் பத்திரத்தின் அனைத்து வடிவமைப்பு வேலைகளையும் தயாரித்தல், பொறியியலாளரின் மதிப்பீடுகளைத் தயாரித்தல், கட்டணப் புத்தகம், வேலை விடயங்கள் பற்றிய விலையிடல்களுக்கான வேலை நியதிகளைத் தயாரிப்பதற்கான நீர் மற்றும் சாக்கடை வேலைகள் பற்றிய கற்கை, கருத்திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட பொறியியலாளரின் மதிப்பீடுகளை மீளாய்வு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

2014 ஆம் ஆண்டினுள் மேற்படி உப பிரிவானது 51 அளவுப் பத்திரங்கள், உள்நாட்டு நிதியளிப்பு ஒப்பந்தங்களுக்கான 49 பொறியியலாளர் மதிப்பீடு கள், வெளிநாட்டு நிதியளிப்பு ஒப்பந்தங்களுக்கான 3 பொறியியலாளர் மதிப்பீடுகள், பகுதியளவு சுத்தி கரிக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான வடிவமைத்து கட்டியெழுப்புகின்ற கருத்திட்டத் துக்கான செலவு முன்மொழிவுகள் ஆகியவற்றை தயாரித்த அதேவேளை நீருக்கான வருடாந்த அறவீட்டுப் புத்தகம் 2014 மற்றும் சாக்கடைக்கான வருடாந்த அறவீட்டுப் புத்தகத்தை தொகுத்து விநியோகித்தல்.

# சாக்கடைப் பிரிவு

## அபிவிருத்திச் செயற்பாடுகள்

### 2014 ஆம் ஆண்டினுள் கழிவு நீர் அகற்றல் முறைமைக்கான திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பணிகளின் தோற்றப்பாடு

நாட்டின் பல பாகங்களிலும் கழிவு நீர் அகற்றல் முறைமைகள் பலவற்றை ஆரம்பிப்பதற்காக இலக் கிடப்பட்ட திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பணிகளைப் பொறுத்தவரை 2014 ஆம் ஆண்டை முக்கியத்துவம் வாய்ந்ததொரு ஆண்டாக குறிப்பிட லாம். கதிர்காமம் புனித நகரம், அம்பாந்தோட்டை புதிய நகரம், காலி, ஸ்ரீ ஜயவர்தனபுர-கோட்டே பிரதேசம், மஹரகம-பொரலஸ்கமுவ, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், காத்தான்குடி, மட்டக்களப்பு மற்றும் மாத்தறை ஆகிய பிரதேசங்களில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை குருணாகல் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டத்தின் நடை முறையிலுள்ள சாக்கடைக் கருத்திட்டம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம், மற்றும் கண்டி கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டம் ஆகியவற்றுக்கு தேவைப்பட்ட வடிவமைப்பு உள்ளீடுகளுக்கான தொழில்நுட்ப உதவிகளை நீடித்தல். இலங்கை வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகத்திற்குச் சொந்தமான, தம்புள்ளையில் உள்ள பயிற்சி நிலையத்தின் கழிவுநீர் அகற்றல் முறைமைக்கான திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பணிகள் மற்றும் கொழும்பு மற்றும் சுற்றிலுமுள்ள பல்வேறு அமைவிடங் களிலுமுள்ள உலக கூட்டுப்பங்களிப்பு உதவிக் கருத்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டினுள் வெற்றி கரமாக மேற்கொள்ளப்பட்டன.

கேள்விப்பத்திர ஆவணங்கள் மற்றும் முன் மொழிவுகளுக்கான அளிப்புகள் கிடைத்தமையால் மேற்படி முக்கியமான நகரங்களின் ஒருசில கழிவு நீர் அகற்றல் முறைமைகள் தொடர்பில் முன்மொழிவு களுக்கான வேண்டுகோள் வழங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டினுள் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் அளிப்புகளுக்கான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மேலும், பாதுகாப்புத் தலைமையகம், மஹரகம புற்றுநோய் நிறுவனம் போன்ற பாரிய நிறுவனங்களின் கழிவு நீர் அகற்றல் வசதிகளின் அபிவிருத்திக்கு திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு - சாக்கடை பிரிவு பங்களிப்புச் செய்தது.

### 2014 ஆம் ஆண்டினுள் பாரிய குழாய்வழி கருத்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் வேலைகளின் விடயப்பரப்பு

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே கழிவு நீர் அகற்றல் முறைமை தொடர்பில் கிடைத்த முன்மொழிவுக்கான வேண்டுகோள் அளிப்பு, கருத்திட்டக் குழுவுக்கும் (PC) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவு வழங்கல் குழுவுக்கும் (SCAPC) இடையிலான பல சுற்றுப் பேச்சுவார்த்தைக ளின்போது மதிப்பீடு செய்யப்பட்டது. சாக்கடைக் கருத்திட்டத்தில் முதற்தடவையாக ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே கருத்திட்டத்திற்கு கருத்திட்ட விடயமொன் றாக நுண்-சுரங்க விடயப் பரப்பு சேர்க்கப்பட்டது. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே கருத்திட்டத்தை பொதுவான கடல் குழாய் வழியுடன் கூடியதாக 2 கட்டங்களாக பிரிப்பதற்கு திட்டமிடப்பட்டதோடு, இரண்டு கட்டங்க ளுக்குமாக ஆண்டினுள் செலவுத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. முந்திய அனுபந்தத்தையும் இணைத்துக்கொண்டு கருத்திட்டத்துக்கான முன் மொழிவுக்கான வேண்டுகோள் தயாரிக்கப்பட்டது.

குருணாகல் நீர் மற்றும் சாக்கடைக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பரிசோதனைகள் மற்றும் விபரமான வடிவமைப்புகள் நடைபெற்று வருகின்றன.
இரத்மலானை/மொரட்டுவை மற்றும் ஜா-எல/ஏக்கலை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம் கட்டம் 11 இற்கான சாத்தியவளக் கற்கை மற்றும் செலவு மதிப்பீட்டின் திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டதோடு, கருத்திட்ட மதிப்பாய்வுக் குழு மற்றும் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதோடு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. கருத் திட்டத்தின் கட்டம் 1 தயாரிக்கப்படுகின்றபோது முழுக் கருத்திட்டத்திற்குமான மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டது. கட்டம் 11 இற்கான கருத்திட்ட முன்மொழிவின் வரைவு JICA நிதியளிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் நீர் மற்றும் சாக்கடைக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பரிசோதனைகள் மற்றும் விபரமான வடிவமைப்புகள் நடைபெற்று வருகின்றன.

இரத்மலானை / மொரட்டுவை மற்றும் ஜா-எல / ஏக்கலை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம் கட்டம் 11 இற்கான சாத்தியவளக் கற்கை மற்றும் செலவு மதிப்பீட்டின் திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்ட தோடு, கருத்திட்ட மதிப்பாய்வுக் குழு மற்றும் சபையின் அங்கீகாரம் பறப்பப்பட்டதோடு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் கட்டம் 1 தயாரிக்கப்படுகின்றபோது முழக் கருத்திட்டத்திற்கு மான மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டது. கட்டம் 11 இற்கான கருத்திட்ட முனுமொழிவின் வரைவு JICA நிதியளிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கதிர்காம புனித நகர பிரதேசத்தின் கழிவு நீர் சேகரிப்பு மற்றும் அகற்றல் முறைமையின் தரமுயர்த்தலை நடைமுறைப்படுத்துவதற்கான PAC/ NPD மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதோடு ஒப்பந்தம் M/s STRABAG க்கு வழங்கப்பட்டது. கருத்திட்டம் 2014 ஆவணியில் ஆரம்பிக்கப்பட்டதோடு, ஆரம்ப வடிவமைப்பு வேலை கள் பூர்த்தியடைந்துள்ளன. விபரமான வடிவமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.
றுகுனு பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து மின் பொறியியல் நிறுவக/ கற்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதோடு விரைவாக பூர்த்தியடையவுள்ளது.

தெஹிவலை-கல்கிசை கருத்திட்டத்தின் பம்பி நிலையத்துக்கான ஒரு காணி தவிர்ந்த ஏனைய அனைத்து காணிகளும் அடையாளம்காணப்பட்டு வேலைகளை ஆரம்பிப்பதற்காக ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. தெஹிவல கல்கிசை மாநகர சபை பிரதேசத்தின் குழாய்வழி சாக்கடை உள்ளடக்கத்தின் விஸ்தரிப்புக்கான PAC மற்றும் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதோடு NPD அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. உத்தேச பம்பி நிலையத்துக்கான காணிகள் அடை யாளம்காணப்பட்டதோடு காணி கொள்ளல் மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. அத்துடன் கருத்திட்டத்துக்கான RFP கோரப்பட்டுள்ளது. EIA கற்கை ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, மதியுரை ஒப்படையை மொரட்டுவை பல்கலைக்கழகத்துக்கு கையளிப்பதற்கான தீர்மானம் DPC யினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதுளை நகர பிரதேசத்துக்கான கழிவுநீர் சேகரிப்பு, சுத்திகரித்தல் மற்றும் அகற்றல் முறைமைக்கான சாத்தியவளக் கற்கை பூர்த்தி செய்யப்பட்டது. PAC அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதோடு, சபை அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. கருத்திட்டத்திற்கான IEE கற்கை மேற்கொள்ளப்படவுள்ளது. பம்பி நிலையத் திற்கும் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்குமான காணிகளை அடையாளம்காணல் நடைபெற்று வருகின்றது.

காத்தான்குடிக்கு கழிவு நீர் சேகரிப்பு அகற்றல் கருத்திட்டத்துக்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. கருத்திட்டத்துக்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளதோடு, இரண்டு தரப்பினர்க ளுக்கும் மத்தியில் உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டது. கருத்திட்டத்துக்கான கடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகின்றது. காணிகளை அடையாளம்காண்பதற்கான கள விஜயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, பம்பி நிலையத் துக்கான அனைத்து காணிகளும் அடையாளங் காணப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான காணியை அடையாளம் காணல் நடைபெற்றுவருகின்றது. IEE (ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை) க்கான ஒப்பந்தம் ஏற்கனவே பேராதனை பல்கலைக்கழகத்துக்கு கையளிக்கப் பட்டுள்ளதோடு, கற்கை நடைபெற்று வருகின்றது.

காலி மற்றும் நீர்கொழும்பு கழிவு நீர் அகற்றல் கருத்திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீடு EML ஆலோசகர்களுக்கு கையளிக்கப்பட்டதோடு கள வேலைகளும் ஆய்வுப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டன. காலி மற்றும் நீர்கொழும்புக்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுக் கற்கை அறிக்கையின் வரைவு அநேகமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டி யுள்ளது. சுத்திகரிப்புப் பொறித்தொகுதியைச் சேர்த் துக்கொள்வதற்காக முன்மொழிவுக்கான வேண்டு கோள் திருத்தப்பட்டு விலைக் கேள்வியாளர்களுக்கு வழங்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் விலைக் கேள்விகள் கிடைத்தன. மொத்த மதிப்பீட்டுச் செலவு திருத்தப்பட்டதோடு திருத்தப்பட்ட விடயப்பரப்புக்கும் கடலுக்கு வெளியிடுகின்ற நீண்ட குழாய்க்குப் பதிலாக கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை சேர்த்துக்கொள்ளலுடன்கூடிய மொத்த மதிப்பீட்டுச் செலவுக்கும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது. காலி மாநகர சபையினதும் நீர்கொழும்பு மாநகர சபையினதும் சாத்தியவளக் கற்கைகள் நிதியளிப்புக்காக AFD க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிலாபம், புத்தளம் கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம் M/s CCOEC-GSE க்கு கையளிக்கப்பட்டதோடு, கடன் பேச்சவார்தைகள் நடைபெற்று வருகின்றன. EIA கற்கை நடைபெறவுள்ளது.

மஹரகம-பொரலஸ்கமுவ கழிவுநீர் அகற்றல் கருத்திட்ட மதிப்பீடுகள் திருத்தப்பட்டதோடு M/s CCOEC-GSE யினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது திருத்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றது. உத்தேச மஹரகம-பொரலஸ்கமுவ கழிவுநீர் அகற்றல் முறைமைக்கான EIA மற்றும் காணி கொள்ளல் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பு கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத் துக்கான சாத்தியவள அறிக்கை தயாரிக்கப்பட்டது. கருத்திட்டத்துக்கான PAC மற்றும் சபை அங்கீகாரம் பெறப்பட்டது. NPD அங்கீகாரம் எதிர்பார்க்கப் படுகின்றது. பம்பி நிலையம் மற்றும் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான அடையாளம்காணப்பட்ட காணியின் சரியான அமைவிடம் RSC (கிழக்கு) இன் உதவியோடு தயாரிக்கப்படவுள்ளதோடு, அது நடைபெற்று வருகின்றது.

தெஹிவளை-கல்கிசை குழாய்வழி சாக்கடை உள்ளடக்கத்தின் நீடிப்புக்கான சாத்தியவளக் கற்கை பூர்த்தி செய்யப்பட்டதோடு, சபை அங்கீகாரம் பெறப்பட்டது. விடயப்பரப்பு பற்றிய கூட்டங்கள் நடத்தப்பட்டதோடு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனைய ஏற்புடைய முகவராண்மைகளுடன் களத்தைப் பார்வையிடுதல் பூர்த்தி செய்யப்பட்டது.

கம்பஹா கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்தின் சாத்தியவளக் கற்கை நடைபெற்று வருகின்றது.

அம்பாந்தோட்டை கழிவுநீர் அகற்றல் கருத் திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீடு நடைபெற்று வருகின்றது. காணி கொள்ளல் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. கடன் தொடர்பான பேச்சு வார்த்தைகள் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் பெறல் நடைபெற வேண்டிய நிலையிலுள்ளது.

மாத்தறை கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமைக்கான சாத்தியவளக் கற்கை ஆரம்பிக்கப்பட்டதோடு, PAC சபை மற்றும் ஹேு அங்கீகாரம் பெறப்படவேண்டியுள்ளது.

AFD யுடனான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், நீர் கொழும்பு மாநகரசபை, காலி மாநகர சபை மற்றும் களனிய-பேளியகொட பிரதேசங்க ளுக்கான கழிவுநீர் அகற்றல் முறைமைக்கு SHIFT 1 மற்றும் 2 (இலங்கையின் தெற்கு நகரங்களுக்கான துப்புரவேற்பாட்டு மற்றும் சுகாதார முன்னெடுப்புகள்) என்ற இரண்டு கட்டங்களின் கீழ் நிதியளிப்பதற்கு இணக்கம் தெரிவித்தனர். காலி மற்றும் நீர்கொழும்புக்கான திட்டங்களை SHIFT 1 உள்ளடக்கும். அவையாவன: நீர்கொழும்பு மாநகர சபைக்கான கழிவுநீர் அகற்றல் முறைமையை (WWDS) நடைமுறைப்படுத்தல், காலி மாநகர சபை மற்றும் களனிய-பேளியகொடை பிரதேசத்துக்கான ஹுஹுனுஞ வேலைகளை தயாரித்தல். SHIFT 2 காலி மாநகர சபை மற்றும் களனிய-பேளியகொடை பிரதேசத்துக்கான WWDS ஐ நடைமுறைப்படுத் தலை உள்ளடக்கும். SHIFT 1 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும். சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் பம்பி நிலையத்துக்கான காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு காணி கொள்ளல் நடைபெற்று வருகின்றது.

## 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறையிலுள்ள கழிவு நீர் கருத்திட்டங்களின் வடிவமைப்பு மீளாய்வு வேலைகள்

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம், உலர் வலய ADB 5வது கருத்திட்டத்தின் துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறுகள், குருணாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டத்தின் துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறுகள் மற்றும் கதிர்காம புனித நகர துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் ஆகிய நடைமுறையிலுள்ள மூன்று வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களின் விபரமான வடிவமைத்தல்களை மீளாய்வு செய்வதி லும் சிறப்பியல்பாக்கப்பட்ட தொழில்நுட்ப உதவி களை வழங்குவதிலும் திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் பிரிவு ஈடுபட்டது.

இரத்மலான/மொரட்டுவ கட்டம் 1 க்கான சூரியசக்தி வண்டல் சேறு உலர்த்தல் மேடையின் வடிவமைப்புப் பணிகள் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவின் சாக்கடைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டதோடு நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

.

## 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விபரமான வடிவமைத்தலுடன் கூடியதான மீள்செறிவூட்டத்தக்க சாக்கடைக் கருத்திட்டங்கள்

மீள்செறிவூட்டத்தக்க சாக்கடைக் கருத்திட்டங்களைப் பொறுத்தவரை திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவின் சாக்கடைப் பிரிவு அக்குரகொடயிலுள்ள பாதுகாப்புத் தலைமையகம், மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரி, தம்புளையிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றில் கழிவுநீர் அகற்றல் முறைமை, கொலொன்னாவ மேம்பாட்டு வேலைகள், கரவனெல்ல ஆதார வைத்தியசாலை, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதி ஆகியவற்றின் சாக்கடை வலையமைப்பு மற்றும் ஹிம்புட்டு உயன வீடமைப்புத் திட்டம், ரத்தொழுவ வீடமைப்புத் தொகுதி மற்றும் மோதரவில கைத தொழில் வலயம் ஆகியவற்றின் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளின் புனரமைப்பு ஆகியவற்றை மேற்கொண்டது. மேலே குறிப்பிட்ட ஒருசில திட்டங்கள் நடைபெற்று வருகின்ற அதேவேளை ஏனையவற்றின் விபரமான அளவுப் பத்திரங்கள் மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதோடு ஆவண மதிப்பாய்வு மற்றும் கேள்விப்பத்திரம் கோரல் நடைபெற்று வருகின்றது. சிவனொளிபாத மலைக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றலின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு கையளிக்கப்பட்டதோடு, அது நடைமுறைப்படுத்தல் கட்டத்தில் உள்ளது.2014 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுப் பகுதியில் மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியின் உள்ளக வலையமைப்பின் வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உள்ளக கழிவுநீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் வடிகாலமைப்பு முறைமையின் புனரமைப்புக்கான கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்டது.

சிவனொளிபாத மலைக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றலின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு கையளிக்கப்பட்டதோடு, அது நடைமுறைப்படுத்தல் கட்டத்தில் உள்ளது.

2014 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுப் பகுதியில் மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியின் உள்ளக வலையமைப்பின் வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உள்ளக கழிவுநீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் வடிகாலமைப்பு முறைமையின் புனரமைப்புக்கான கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்டது. பம்பி நிலையத்தின் நிர்மாணிப்பு, புற்றுநோய் ஆஸ்பத்திரியிலிருந்து இரத்மலான/மொரட்டுவை சுத்திகரிப்பு முறைமை வரை பம்பிக் குழாய்கள் வழங்குதல் மற்றும் இடுதல், கதிரியக்க சுத்திகரிப்புக் கழிவுநீருக்கான அயடீன் தாமதப்படுத்தல் தாங்கியின் நிர்மாணிப்பு ஆகியவற்றுக்காக முன்னர் கையளிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் நிர்மாணிப்பு வேலைகள் முடிவுறுத்தப்பட்டன. தம்புள்ளையிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை பூர்த்தி செய்யப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. கொலொன்னாவ சாலமுள்ள கருத்திட்டம் - தற்போதுள்ள கொலொன்னாவ வலையமைப்பை சாலமுள்ளவுக்கு இணைக்கின்ற மேம்பாட்டுத் திட்டத்தின் விபரமான வடிவமைப்பு நடைபெற்று வருகின்றதோடு அரசாங்கத் தொழிற்சாலைக் காணி வீடமைப்புத் தொகுதி, கரவனெல்ல ஆதார வைத்தியசாலை அகற்றல் முறைமை – தற்போதுள்ள கழிவுநீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமைக்கான விபரமான வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டதோடு, நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி மற்றும் இராணுவ முகாமுக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் வசதிகளின் வடிவமைப்பு – விபரமான வடிவமைப்பு பகுதியளவு பூர்த்திசெய்யப்பட்டுள்ள அதேவேளை ஆஸ்பத்திரிக்கான பொறித்தொகுதியை வெளிவாரி நிதியத்துடன் மூன்றாம் தரப்பொன்று நிர்மாணித்தது. மேம்பாட்டுக்காக சுத்திகரிப்புப் பகுப்பாய்வும் ஆலோசனையும் வழங்கப்பட்டது.

**மீள்செறிவூட்டத்தக்க சாக்கடைக் கருத் திட்டங்களுக்கான தொழில்நுட்ப முன்மொழி வுகள் தயாரிக்கப்பட்டன.**

உனவட்டுன சுற்றுலா விடுதியின் கழிவுநீர் அகற்றல் முறைமை (WWDS) – ஆரம்ப முன்மொழிவு அபிவிருத்தி செய்யப்பட்டது. ரத்தொழுகம வீடமைப்புத் திட்டத்தில் - குறுகிய கால முன் மொழிவு மற்றும் நடுத்தர கால முன்மொழிவுக்கான PAC மற்றும் சபை அங்கீகாரம் பெறப்பட்டதோடு, குறுகிய மற்றும் நடுத்தர கால முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. நீண்ட கால முன் மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் நடைபெற்று வருகின்றது.

**ஏனைய உற்பத்தித்திறன் மேம்பாட்டு செயற் பாடுகள்**

தே.நீ.வ.வ.சபையின் சாக்கடைப் பிரிவானது, ISO தர முகாமைத்துவ நிலைமையை பெறுவதற்காக தற்போது ஆலோசனைச் சேவையை நடை முறைப்படுத்தி வருகின்றது. திடட்மிடல் மற்றும் வடி வமைப்புப் பிரிவும் ஆவணப்படுத்தல் முறைமையை மேம்படுத்துதல் மற்றும் புதிய ஆவணப்படுத்தல் முறைமையின் மூலம் நடைமுறை மேம்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவு முழுமொத்த சாக்கடைப் பிரிவுகளுடனும் சேர்ந்து 2015 ஆம் ஆண்டில் ISO தர முகாமைத்துவ நிலைமையைப் பெறுவதற்கு எதிர்பார்க்கின்றது.

# பிராந்திய உதவி நிலையங்கள்

| மாகாணம்/பி.உ.நி. | இணைப்புகள் |
|---|---|
| மத்திய | 224,217 |
| கிழக்கு | 163,349 |
| வட மத்திய | 91,900 |
| வடமேல் | 64,030 |
| வடக்கு | 12,189 |
| சப்பிரகமுவ | 90,267 |
| தென் | 276,334 |
| ஊவா | 76,064 |
| மேல் - மத்திய | 404,731 |
| மேல் - வடக்கு | 221,045 |
| மேல் - தெற்கு | 207,872 |
| மொத்தம் | **1,831,998** |



## பிராந்திய உதவி நிலையங்கள்

தே.நீ.வ.வ.சபையின் 11 பிராந்திய உதவி நிலையங்களிலிருந்து புதிய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப் படுகின்றன. கருத்திட்ட மீளாய்வுக் குழுவின் பிரதிநிதிகள் என்ற வகையில், பிராந்திய உதவி நிலையங்களின் பணியாளர்கள் புதிய கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறையாக்கல் நடைமுறைகளை அண்மித்திருந்து இணைப்பாக்கம் செய்கின்றனர். அத்துடன் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சாக்கடைத் திட்டங்களை அவர்கள் தொழிற்படுத்தியும் பராமரித்தும் வருகின்றனர். உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வருவாயற்ற நீரைக் குறைத்தல், வலுசக்தி முகாமைத்துவம் மற்றும் நிறுவன அபிவிருத்திப் பணிகள் அத்துடன் பிராந்திய உதவி நிலையங்களின் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத்துறை ஆகியன ஏற்புடைய பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளடக்கப்படாதுள்ள ஏனைய சில முக்கியமான தகவல்கள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## மேல் - மத்திய

மேல் மத்திய அலுவலகமானது கொழும்பு நகரம், கோட்டே மற்றும் மஹரகம பிராந்தியங்களை உள்ளடக்குகின்றது. 2014 ஆம் ஆண்டு காலத்தினுள் மேல் மத்திய பிராந்திய உதவி நிலையத்தில் பல விசேடமான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சிங்கள - தமிழ் புத்தாண்டு மற்றும் தை 01 புத்தாண்டு விழாக்கள், வெசாக் மற்றும் பொசன் விழாக்கள் ஆகிய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. பன போதனை நிகழ்ச்சித்திட்டம், கிரிக்கெட் போட்டிகள், கண் பிணி சிகிச்சை ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன பிராந்திய உதவி நிலையத்தின் (மேல்-மத்தி) நலன்புரிச் சங்கத்தால் பணியாள் தொகுதி அங்கத்தவர்களுக்காக நடத்தப்பட்டது.

பிராந்தியத்தினுள் (RSC-WC) வருவாயற்ற நீர் குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடத்தப்பட்டதோடு, கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீர் 46.1% க்கு குறைக்கப்பட்டது.

## குழாய் நீடிப்புகள்

கடுவெல, கோட்டே, கொலொன்னாவ, பத்தரமுல்ல 30.01 கி.மீ. மற்றும் மஹரகம 30.01 கி.மீ. குழாய் நீடிப்புகள் மற்றும் பொதுக் குழாய் மேற்பாடு.

ஹன்வெல்ல நீர் வழங்கல் திட்டம் - ஹைலெவல் வீதி நெடுகிலும் விரிவாக்க குழாய் இடல் வேலைகள். குழாய்களின் மொத்த நீளம் 5.2 கி.மீ.

கொடகம மேம்பாடுகள் - தற்போதுள்ள கிளைக்கு புறம்பான மேம்பாடுகள் மற்றும் ஹைலெவல் வீதி நெடுகிலும் ஏறத்தாழ 1.2 கி.மீ. நீளத்திற்கு 225மி.மீ. விட்டத்தை தரம் கொண்ட uPVC 1000 குழாய்களை இடுதல். கருத்திட்ட செலவு ரூபா 39 மில்லியன். பௌதீக முன்னேற்ம் 85%.

ஜல்தர-ரணால நீர் வழங்கல் திட்டம் கட்டம் 1 படிநிலை 11 – ஆடிகல கிழக்கு, ஆடிகல மேற்கு மற்றும் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் படவல மற்றும் பானலுவ கிராம அலுவலர் பிரிவுகளின் ஒரு பகுதி இக்கருத்திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படுகின்றது. கருத்திட்ட செலவு ரூபா 283 மில்லியன். கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## கொழும்பு நகரம்

களு கங்கை நீர் வழங்கல் திட்டம் கட்டம் 1 படிநிலை 2 பக்கேஜ் 8A யின் கீழ் 160 மி.மீ. மற்றும் 110 மி.மீ. கொண்ட புதிய PVC குழாய்கள் 45 கி.மீ. நீளத்துக்கு இடப்பட்டன. மொத்தம் 39 கி.மீ. நீளக் குழாய்களின் அழுத்தம் பரிசோதிக்கப்பட்டது. பிரதான வீதி நெடுகிலும் 410 இணைப்புகள் மாற்றப் பட்டன. 758 நீர் மானிகளும் மாற்றப்பட்டுள்ளன. இறுதியாக 400 இணைப்புகள் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவுக்கு கையளிக்கப்பட்டது.

களு கங்கை நீர் வழங்கல் திட்டம் கட்டம் 1 படிநிலை 2 பக்கேஜ் A யின் கீழ் கொம்பனித்தெரு பிரதேசத்தில் 2.7 கி.மீ. நீளத்திற்கு புதிய PVC குழாய்கள் இடப்பட்டன. மேற்படி கருத்திட்டத்தின் கீழ் குத்தகைக் காணிகளில் 1033 இணைப்புகள் மாற்றப்பட்டன.

மெட்ரோ கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காலிமுகச் சுற்றுவட்டத்திலிருந்து வெள்ளவத்தை வரை 7 கி.மீ. நீளத்திற்கு புதிய PVC குழாய்கள் இடப்பட்டன. புதிதாக இடப்பட்ட குழாய்களுக்கு 810 இணைப்புகள் மாற்றப்பட்டன. மேற்படி வீதியில் அனைத்து பழைய குழாய்களும் கைவிடப்பட்டன.

மெட்ரோ கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் லிபர்ட்டி சுற்றுவட்டத்திலிருந்து டுப்ளிகே'ன் வீதி நெடுகிலும் 4 கி.மீ. நீளத்திற்கு புதிய PVC குழாய்கள் இடப்பட்டன. புதிதாக இடப்பட்ட குழாய்களுக்கு 350 இணைப்புகள் மாற்றப்பட்டன. மேற்படி வீதியில் அனைத்து பழைய குழாய்களும் கைவிடப்பட்டன.

## கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புர வேற்பாட்டு செயற்பாடுகள்

தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பின் (CWT) கீழான சமுதாய முகாமைத்துவ நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பு வேலைகள். புனரமைப்பு வேலைகளுக்கான நிதியம் தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பில் (CWT) இருந்து கிடைத்தது.

- இரண்டு ஆன CMWSS, கடுகொட CMWSS மற்றும் பின்னவல CMWSS களுக்கான புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

- 12 CMWSS களுக்கான 14 பம்பிகள் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டன. ஒரு CMWSS க்கான பம்பி வழங்கல் மற்றும் பொருத்தலுக்கான கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்டது. 9 CMWSS களுக்கான 14 பம்பிகளை வழங்கல் மற்றும் பொருத்தலுக்கான விலைக் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

ஐந்து CMWSS களுக்கு மொத்த நீர் வழங்கல் வழங்கப்பட்டது.

## SACOSAN 2014

இந்நிகழ்ச்சித்திட்டம் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் சேர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. அமைச்சினால் 200 நலன்பெறுனர்கள் இனங் காணப்பட்டனர். நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் 60% ஆகும்.

## மேல் - தெற்கு

மேல் தெற்கு பிராந்திய உதவி நிலையமானது தெஹிவலை, இரத்மலானை மற்றும் மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவுகளையும் களுத்துறை மாவட்டத்தையும் உள்ளடக்குகின்றது. 2014 ஆம் ஆண்டினுள் பிராந்திய உதவி நிலையத்தில் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. தை 01 ஆம் திகதி பிரித் ஓதும் வைபவம், புது வருடம், வெசாக், பொசன் விழாக்கள் ஆகிய வி஁ேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. கண் பிணி சிகிச்சை ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன பிராந்திய உதவி நிலையத்தின் (மேல்-தெற்கு) நலன்புரிச் சங்கத்தால் பணியாட்டொகுதி அங்கத்தவர்களுக்காக நடத்தப்பட்டது. 2014 உலக நீர் தினத்தின் கீழ் மிகச் சிறந்த அலுவலகப் போட்டியில் RSC (W-S) 2 ஆம் இடத்தைப் பெற்றது.

2014 ஆம் ஆண்டு காலத்தினுள் வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் பல பிராந்தியத்தினுள் (RSC-WS) மேற்கொள்ளப்பட்டதோடு, களுத்துறை பிராந்தியத்தினுள் வருவாயற்ற நீர் 5.98% ஆல் குறைக்கப்பட்டது. தெஹிவலை பிராந்தியத்தினுள் 1.67% ஆல் மற்றும் பாணந்துறை-ஹொரனை பிராந்தியத்தினுள் 1.69% ஆல் குறைக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டினுள் சில கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் உள்ளிட்ட பல பிரதேசங்களில் நீர் தர கண்காணிப்பு மற்றும் நீர் பாதுகாப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, நான்கு நீர் வழங்கல் திட்டங்களில் (போம்புவல-பிலமினாவத்த, மத்துகம, பாணந்துறை வலயம் 02 மற்றும் நிமலகம-இங்கிரிய) மற்றும் இரண்டு கிராமிய நீர் வழங்கல் திட்டங்களில் (உக்கல்பட மற்றும் பஹல குடலிகம) நீர் பாதுகாப்புத் திட்ட மொடியுல்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

இவற்றிற்கு மேலதிகமாக, 105 கி.மீ. நீளத்திற்கான குழாய் நீடிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு, இது களுத்துறை பிராந்தியத்தில் 41 கி.மீற்றரையும், பாணந்துறை - ஹொரனை பிராந்தியத்தில் 60 கி.மீற்றரையும், தெஹிவலை பிராந்தியத்தில் 4 கி.மீற்றரையும் உள்ளடக்குகின்றது. ஆண்டு முழவதி லும் பல மீள்செறிவூட்டல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டத்தின் 3.5 பில்லியன் இணைப்புக்கள் மேம்பாட்டின் கீழ் துரித குழாய் இடல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் புதிய இணைப்புகளை RSC (W-S) வழங்குகின்றது.

2014 ஆம் ஆண்டினுள் பிரதான வரவு செலவுத்திட்ட நிதியத்தைப் பயன்படுத்தி களுத்துறை, மக்கொன சந்தியிலிருந்து பேருவளை நீர் நிலையம் வரை 3.5 கி.மீ. நீளத்திற்கு 600 மி.மீ.- 630 மி.மீ. விட்டத் தையுடைய DI/PE குழாய்களை இடுதல் பூர்த்தி செய்யப்பட்டதோடு, உலக வங்கி நிதியளிப்பின் கீழ் மெலிபன் சந்தியிலிருந்து நல்லுருவ வரை காலி வீதி நெடுகிலும் 18 கி.மீற்றருக்கு 225 மி.மீ. விட்டமுடைய uPVC குழாய்களை பதிலீடு செய்கின்ற கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. மேலும் 2014 ஆம் ஆண்டினுள் RDA, PRDA மற்றும் மாநகர சபை வீதிகளில் மேலும் பல குழாய் பதிலீடு செய்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

**மேல் - வடக்கு**

கட்டுநாயக்க – சீதுவ நீர் வழங்கல் திட்டம் 2014 மாசி 05 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு, உடுமாப்பிட்டிகம நீர் வழங்கல் திட்டம் 2014 மார்கழி 05 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

AC குழாய்களைப் பதிலீடு செய்தல், விநியோக முறைமையில் அறிக்கையிடப்பட்ட கசிவுகளைத் திருத்துதல் DI/CI வால்வுகள் மற்றும் தேய்வடைந்த வால்வுகளை பதிலீடு செய்தல், நீர் பாய்ச்சல் மானிகள், மொத்த மானிகளை பொருத்துதல், சவுன்டர்ஸ் பிளேஸில் நில நீர்த் தேக்கத்தின் மற்றும் நீர்கொழும்பு நீர் வழங்கல் திட்டத்தின் கசிவை திருத்துதல் ஆகியன 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளில் சில ஆகும். நீர் கொழும்புப் பிரதேசத்தில் வருவாயற்ற நீர் குறைப்பு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டில் மதிப்பிடப்பட்ட மொத்தம் 29 DMA களில் 19 DMA கள் தாபிக்கப்பட்டன. RSC (மேல் வடக்கு) அலுவலகத்தில், ஜா-எல பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தில், ரத்தொழுவ OIC அலுவலகத்தில் மற்றும் கம்பஹா முகாமையாளர் அலுவலகத்தில் WAM அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. WAM நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக விநியோக முறைமையிலான வளிக் கலப்பு வார்ப்பு வேலை நடைபெற்று வருகின்றது.

ரத்தொழுகமவின் பின்னோக்கி நீர்ப்பாய்ச்சல் மீட்பு முறைமையின் மேம்பாடு, பம்புகுளியவில் உள்ள நீர் கொழும்பு உற்பத்திப் பொறித்தொகுதி மற்றும் நீர்கொழும்பு விசைப் பம்பி நிலையத்தில் வலுசக்தி மேம்பாட்டு மின் உறைகலன்களை பொருத்துதல் ஆகியவற்றின் மூலம் ஆண்டு பூராவும் பல சக்தி சேமிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பிராந்தியத்தின் தொழில்சார் தகைமையைப் பெற்ற பொறியியலாளர்களுக்கு இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் (IESL) கூட்டிணைந்த அங்கத்துவ அங்கீகாரத்திற்கான பயிற்சி பெறப்பட்டது. பிரதேச பொறியியலாளர் (களனி) அலுவலகம், சர்ச்ஹில்லில் அமைந்துள்ள இரண்டு விடுதிகள் மற்றும் பாதுகாப்பு அலுவலகத்தை புதுப்பித்தல், நீர் சுத்திகரிப்பு தொடர்பில் பயிற்சி/விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல், திறந்த அலுவலகம், நீர் பாதுகாப்புத் திட்டம், கிராமிய நீர் வழங்கல் மற்றும் தொழில் நிலையத்திலேயே பயிற்சியளித்தல் ஆகியன ஒருசில நிறுவன ரீதியிலான அபிவிருத்திச் செயற்பாடுகளாகும்.

ஏனைய உற்பத்தித்திறன் மேம்பாட்டுச் செயற் பாடுகளின் கீழ் டிஜிட்டல் கருவிகள், அழுத்த மானிகள், நீர்ப் பாய்ச்சல் மானிகள், இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லக்கூடிய மின் உற்பத்தி இயந் திரங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் ஆகியவற்றுக்கான கொள்வனவுக் கட்டளை அனுப்பல், நிமிர்வு நிலையிலான விசையாழி பம்பிகள், உள்வாங்கு நிலையங்களுக் கான துளையிடப்பட்ட குழிகளில் அமிழ்த் தக்கூடியதான பம்பிகள் ஆகியவற்றுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படல் ஆகியன மேற்கொள் ளப்பட்டன.

மினுவன்கொட நீர் வழங்கல் திட்டம், திம்பிரி கஸ்கட்டுவவில் உள்ள பொலிஸ் கல்லூரி ஆகியவற்றில் குழாய்களை இடுதல், OCH மற்றும் கண்டி வீதியில் குழாய்களை மீள இடம்பெறச் செய்தல் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட மீள்செறிவூட்டல் வேலைகளாகும்.

மூலதன நிதியளிப்புக் கருத்திட்டங்களின் கீழ் கட்டுநாயக்க - சீதுவ, ரத்துபஸ்வல மற்றும் உடமாப்பிட்டிகம குழாய் இடுதல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. திவுலபிட்டிய நீர் வழங்கல் திட்டம் மற்றும் கிரிதர நீர் வழங்கல் திட்டத்திக்கு விரிவான வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பம்புகுளிய நீர் வழங்கல் திட்டத்துக்கான களஞ்சியம் மற்றும் வேலைத்தளம், கடவத்த OIC அலுவலகம் ஆகியவற்றை நிர்மாணித்தல் பிராந்தியத்தில் நடைபெற்ற புனரமைப்பு மற்றும் களஞ்சிய மேம்பாடுகளின் முன்னேற்றமாகும்.

புதிய நீர் வழங்கல் திட்டங்கள், துப்புரவேற்பாட்டு வசதிகளின் மேம்பாடு, பம்பிகளைப் பொருத்துதல் போன்ற கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பம்புகுளிய மற்றும் ரத்தொழுகம நீர் வழங்கல் திட்டங்களில் குளோரீன் மட்டுப்படுத்தல் முறைமைக்காக NaOH தாங்களின் கசிவுகளை திருத்துதல் ஆகியன RSC (மேல் - வடக்கு) ஆல் மேற்கொள்ளப்பட்ட ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகளாகும்.

பொறியியலாளர்களின் மதிப்பீட்டின்படி 2014 ஆம் ஆண்டினுள் RSC (மேல்-வடக்கு) இல் 105 கிலோ மீற்றர்களுக்காக நேரடி உழைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 218 மில்லியனாகும். உண்மையான செலவு ரூபா 123 மில்லியனாகும் என்பதோடு சபையினால் சேமிக்கப்பட்ட தொகை ரூபா 95 மில்லியன் ஆகும்.

## தெற்கு

சுகாதார நிகழ்ச்சித்திட்டம், “சாதகமான சிந்தனை” விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம், களச் சுற்று லாக்கள், பெருந்தோட்டத்துறை நிகழ்ச்சித்திட்டம், கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான ஒருசில விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய பல விசேட நிகழ்ச்சிகள் 2014 ஆம் ஆண்டினுள் பிராந்திய உதவி நிலையத்தில் இடம்பெற்றன. நீர் மானிகளை மீள இடம்பெறச் செய்தல் மற்றும் பழுதடைந்த மானிகளை முத்திரையிடல், புதிய இணைப்பு நடைமுறைகளை மேம்படுத்தல், போதியளவு துல்லியத்தன்மையுடன் கூடியதாக வருவாயற்ற நீரை அளவிடுதல், கசிவுகளைக் குறைத்தல், விநியோக மேம்பாடு, பயன்படுத்தப் படுகின்ற பொருட்களின் தரத்தை உறுதி செய்தல், சட்டவிரோத இணைப்புகளைத் துண்டித்தல் ஆகியன ஆண்டு பூராவும் மேற்கொள்ளப்பட்ட ஒருசில வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளாகும்.

மேலும், 2014 ஆம் ஆண்டினுள் பல சக்தி சேமிப்புச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. புதிய உயர்த்தப்பட்ட பம்பி நிலையங்களுக்கு VFD drive ஐ அறிமுகப்படுத்தல், புதிய பம்பி நிலையத்தி லிருந்து பழைய பம்பி நிலையத்திற்கு கம்பிகளை இடுதல், காலி நீர் வழங்கல் திட்டத்தின் வக்வெல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் வலுசக்திக் காரணித் திருத்தங்கள் ஆகியன சக்தி சேமிப்பு நடவடிக்கைகளுக்கான சில உதாரணங்களாகும்.

நீர் தரக் கண்காணிப்பு, நீர் பாதுகாப்புச் செயற் பாடுகள் மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியன வகமுல்ல நீர் வழங்கல் திட்டம், தங்காலை நீர் வழங்கல் திட்டம், கிரிந்த-புஹுல்வெல்ல நீர் வழங்கல் திட்டம், மாத்தறைக் குழும நீர் வழங்கல் திட்டம் மற்றும் பிட்டிகல நீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டன. மேலும், காலி பிராந்தியத்தில் 16.6 கி.மீ., மாத்தறை பிராந்தியத்தில் 16 கி.மீ., அம்பாந்தோட்டை பிராந்தியத்தில் 73 கி.மீ. உள்ளடங்கலாக மொத்தம் 105.6 கி.மீ. குழாய் நீடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஹக்மன நீர் வழங்கல் திட்டம், கதிர்காமம் நீர் வழங்கல் திட்டம், கோனபீனுவல நீர் வழங்கல் திட்டம் ஆகியன மாவட்டத்தினுள் நிர்மாணிப்புக் கட்டத்தின் கீழ் உள்ள ஒருசில கருத்திட்டங்களாகும். ஹக்மன நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தியடைந்தன.

## வட மத்திய

வட மத்திய மாகாணத்தில் 2014.12.31 வரை 91,900 இணைப்புகளை வழங்கி, 29 நீர் வழங்கல் திட்டங்கள் இயங்கி வருகின்றன. 2014 ஆம் ஆண்டினுள் மாத்திரம் 5,988 இணைப்புகள் வழங்கப்பட்டன.

உலக நீர் தின நிகழ்ச்சித்திட்டத்தின்போது அநுராத புரம் பிராந்தியக் களஞ்சியங்கள், பொலனறுவை யிலுள்ள கிராமிய நீர் வழங்கல் அலகு, துருவில நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் பொலனறுவை மாவட்ட பொறியியலாளர் அலுவலகம் ஆகியவற்றுக்கு 1வது இடம் வழங்கப்பட்டது. வர்த்த கப் பிரிவு மற்றும் தலாவ நீர் வழங்கல் திட்டம் ஆகிவற்றுக்கு உலக நீர் தின நிகழ்சித்திட் டத்தின்போது 3வது இடம் வழங்கப்பட்டது.

24 திட்டங்களின் நீர் தர பரிமாணங்கள் SLS நிய மத்துக்கமைய காணப்பட்டது. வடமத்திய மாகாணத் தின் வட பகுதியிலுள்ள அனைத்து திட்டங்களும் நில நீர் மூலங்களையும் மல்வத்து ஓயாவின் மேற்புற நீரையும் வழங்கிய போதிலும், சில நீர் தர பரிமாணங்கள் அங்கீகரிக்கப்பட்ட மட்டத்தை விட (உதாரணமாக, காரத்தன்மை, வன்தன்மை, புளோரைட் போன்றவை) உயர் நிலையில் உள்ளன. வரட்சிக் காலத்தில் கிணறுகளிலிருந்து பெறப் பட்டுகின்ற நீர் போதியதாயில்லாமையால் அநேகமான நீர் வழங்கல் திட்டங்களில் 24 மணிநேர நீர் வழங்கலை உறுதிசெய்ய முடியாதுள்ளது. துருவில நீர் வழங்கல் திட்டத்துக்கான நீர் பாதுகாப்பு திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. கல்லேல்ல நீர் வழங்கல் திட்டத்துக்கான நீர் பாதுகாப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பணிகளுக்கு ஏற்புடைய பணியாளர்கள் இனங்காணப்பட்டு ஆரம்பப் பயிற்சி வழங்கப்பட்டது. காலாண்டு அடிப்படையில் வாவிகளில் கன உலோகம் மற்றும் அல்கீகளுக்கான நீர் தரப்பகுப்பாய்வு உள்ளடங்கலாக அடிப்படை பௌதீக, இரசாயன, நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் பிராந்தியம் பூராவும் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வுகூடங்களை மேம்படுத்தல் மற்றும் பிராந்திய களஞ்சியங்களின் திருத்த வேலைகள் போன்ற நிறுவன அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. திஸ்ஸவெவ மற்றும் தம்புத்தேகமவில் இரண்டு பக்கேஜ் பொறித்தொகுதிகள் ஸ்தாபிக்கப்பட்டன. மானியிடப்படாத இணைப்புகளை ஒழுங்குமுறையாக்கல், பழுதடைந்த மானிகளை பதிலீடு செய்தல், சட்டவிரோத இணைப்புகளை ஒழுங்குமுறையாக்கல், கசிவுகளைக் குறைப்பதற்காக பொருத்தமான உபகரணங்கள்

மற்றும் துணைப்பாகங்களைப் பயன்படுத்தல், வால்வுகளை பொருத்துதல் மற்றும் வால்வு அறைகளை நிர்மாணித்தல் ஆகிய வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு நிதியளிப்பின் கீழ் வட மத்திய பிராந்தியத்தில் 52 கி.மீ. குழாய் நீடிப்பு மற்றும் இடைவெளி நிரப்பல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் கிராமிய நீர் வழங்கல் அலகுகளும் மேம்படுத்தப்பட்டன.

நோய்க்காரணி கண்டறியப்படாத சிறு நீரக நோயாளர்கள் (CKDu) அதிகளவில் அறிக்கையிடப்பட்டுள்ள அநுராதபுரம் மாவட்டத்தின் ரம்பாவ, மதவாச்சி, கெபிதிகொல்லாவ, பதவிய மற்றும் பொலனறுவை மாவட்டத்தின் திம்புலாகல, மெதிரிகிரிய ஆகிய ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் CKDu தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் கீழ் வட மத்திய பிராந்தியத்தில் 20 RO பொறித்தொகுதிகள் பொருத்தப்பட்டன. அநுராதபுரம் மாவட்டத்தில் மழை நீர் சேகரிப்பு முறைமையை வழங்குவதன் ஊடாக 1136 குடும்பங்கள் உள்வாங்கப்பட்டன, பவுசர் மூலமான நீர் வழங்கல் முறைமையின் ஊடாக சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்காக 450 PE நீர்த் தாங்கிகள் இடம்பெறச்செய்யப்பட்டன. கிணறுகளை பரிசோதித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,584 கிணறுகளின் நீர் மாதிரிகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. CKDu விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 சித்திரையில் பாடசாலை நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதோடு, பொருத்தமான கொள்ளளவைக் கொண்ட RO பொறித்தொகுதிகள் வழங்கப்பட்டு 103 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டன. CKDu நிகழ்ச்சித்திட்டத்தின் பெரும் பகுதியாக அநுராதபுரத்தில் 19.9 கிலோ மீற்றர் மற்றும் பொலனறுவை மாவட்டத்தில் 0.44 கிலோ மீற்றர் குழாய் நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலைகளுக்கு சமாந்திரமாக பாடசாலை விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், சமுதாய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை ஸ்தாபித்தல் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டன.

துறைவாரியான திட்டமிடல் பிரிவின் மூலம் ஒருசில கருத்திட்ட மதிப்பாய்வு அறிக்கையில் தயாரிக்கப்பட்டன. தம்புத்தேகம நீர் வழங்கல் திட்டத்துக்கான கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்டதோடு, அநுராதபுரம் வடக்கு பெரும்பாக IWSP மற்றும் அநுராதபுரம் தெற்கு (கட்டம் 11) IWSP ஆகியவற்றுக்கான கேள்விப்பத்திரம் பேச்சுவார்த்தைக் கட்டத்தில் உள்ளது. எப்பாவல, கலென்பிந்துனுவெவ, பலுகஸ்வெவ மற்றும் பொலனறுவை கிழக்கு நகரங்களின் நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான பூர்வாங்க சாத்தியவள அறிக்கை அங்கீகாரத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ராஜாங்கனயாய நொச்சியாகம நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான பூர்வாங்க சாத்தியவள அறிக்கையை தயாரித்தல் பூர்த்தியடைந்துள்ளதோடு, கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவிலிருந்தான அங்கீகாரம் பெறப்பட வேண்டியுள்ளது.

நில நீர் பிரிவு 44 நீரியல் பரிசோதனைகளையும், 90 சாத்தியவள கற்கைகளையும், 60 கைப்பம்பி புனரமைப்புகளையும், 150 கிணறு நீர் பாய்ச்சி துப்புரவு செய்தல்களையும், 60 HPTW துளையிடல்களையும் 60 PWs துளையிடல்களையும் மேற்கொண்டது.

மெதிரிகிரிய, சேவாகம, பெந்திவெவ மற்றும் தம்மன்கடுவ பிரதேசங்களுக்கு பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான RFPP தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. CKD நிதியளிப்பின் கீழ் திரம்பனே, ஓயாமடுவ, கெபிதிகொல்லாவ, கெகிராவ, ஹிங்குரக்கொட மற்றும் பதவிய பிரதேசங்களுக்கான பாரிய நீடிப்புகளுக்கான கேள்விப்பத்திர ஆவணங்களைத் தயாரித்தல் பூர்த்தியெப்பட்டு கையளிக்கப்படவுள்ள அதேவேளை, இஹல பிசோகொட்டுவவுக்கான கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்டது. இவ்வாண்டினுள் RSC (வட மத்திய) மூலதன நிதியத்தின் கீழான அனைத்து பெறுகைகள் வேலையையும் பூர்த்தி செய்ததோடு மெதிரிகிரிய, மின்னேரிய மற்றும் பரசன்கஸ்வெவ பிரதேசங்களுக்கான சிவில், இயந்திரவியல் மற்றும் மின்னியல் ஒப்பந்தங்கள் பலவற்றையும் பூர்த்தி செய்ய முடியுமாயிருந்தது. இவை, நீர் சுத்திகரிப்புக் கட்டமைப்புகள், களஞ்சியக் கோபுரங்கள், அனுப்பல் மற்றும் விநியோக குழாய் இடல் வேலைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக, புனரமைப்பு நிதியளிப்பின் கீழ் ஒருசில ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

2014 ஆம் ஆண்டினுள் ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏழு மற்றும் 02 நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஐந்து நடாத்தப்பட்டன.

## வடமேல் மாகாணம்

2014 மார்ச் மாதத்தில் தயட்ட கிருள நிகழ்ச்சித் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. CKDu நிகழ்ச்சித் திட்டம் 2014 புரட்டாதி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டின் இறுதியளவில் 90% பூர்த்தி செய்யப் பட்டது. பொல்பித்திகம மற்றும் மஹவ பிரதேச செயலாளர் பிரிவுகளில் CKDu நோயாளர்களுக்கு மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை வழங்குதல் பூர்த்தி செய்யப்பட்டது. குருணாகல், நிகவெரட்டிய, அலவ்வ, மாஹோ, பொல்கஹவெல, கல்கமுவ, உடகம மற்றும் அம்பன்பொல தவிர்ந்த ஏனைய அனைத்து திட்டங்களும் நீர் தரம் பற்றிய பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதோடு, புத்தளம் மாவட்டத்தின் நாத்தன்டிய, தங்கொட்டுவ, ரஹமத்நகர் மற்றும் காக்கபள்ளி திட்டங்கள் உரிய தரத்தில் காணப் படுகின்றன. சிலாபம், புத்தளம் மற்றும் ஆணமடுவ விலுள்ள சுத்திகரிப்பு வேலைகளுக்கு பாரியளவி லான மேம்பாடுகள் தேவைப்படுகின்றன. ஆணமடுவ, புத்தளம், சிலாபம், நாத்தண்டிய மற்றும் உடப்புவு நீர் வழங்கல் திட்டங்களில் போதியளவிலான நீர் இன்மையால் நீர் வழங்கலை பராமரித்தல் பெரும் சவாலாக உள்ளது. நீர் கிடைப்பனவை உறுதி செய்யும் பொருட்டு சிலாபம் மற்றும் புத்தளம் ADB 5வது கருத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தினுள் வருவாயற்ற நீர் குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, பிராந்திய உதவி நிலையத்தில் ஆண்டினுள் பெறப்பட்ட சராசரி வருவாயற்ற நீர் 12% ஆக காணப்பட்டது. சக்தி சேமிப்பை முன்னிட்டு வாரியபொலவில் பம்பிகளை மாற்றீடு செய்தலும், ரம்படகல, அலவ்வ மற்றும் பொல்கஹவெல வில் பம்பிகளை மாற்றீடு செய்வதற்கான கேள்விப் பத்திரம் கையளித்தலும் மேற்கொள்ளப்பட்டது. பிராந்திய உதவி நிலையத்தில் குழாய் பொருத்துனர்கள் மற்றும் தொழில்நுட்ப செய்நிரலாளர்களுக்கு வாடிக்கையாள தொடர்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. ஆண்டு இறுதி முன்னேற்ற கூட்டத்திற்கு சமாந்திர மாக உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டதோடு, "தேசிய உற்பத்தித்திறன் விருதை" பெறும் குறிக்கோளுடன் உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

நீர் பாதுகாப்புத் திட்டத்தை கணக்காய்வு செய்வதற் காக ஏழு மதிப்பீட்டாளர்களில் இருவர் RSC யினால் தெரிவு செய்யப்பட்டது. கழிவு நீர் மாதிரிகளுக்கான "BOD பகுப்பாய்வு" க்கான புதிய ஆய்வுகூடப் பரிசோதனை RSC யில் ஆரம்பிக்கப்பட்டதோடு குருணாகல் ஆய்வுகூடத்திற்கு ISO 17025 நடைமுறை முன்மொழியப்பட்டது.

கொட்டகெலே, தெதுருநாதிகம, பல்லெஹொரம்புவ, கலதாரய, ஹபரலகஸ்ஹின்ன, நுகடிவல புராண விஹாரை, வில்கமுவ மற்றும் நஹகொடமட கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான முன்மொழிவுகளும் அளவைப் பத்திரங்களும் தயாரிக்கப்பட்டன. கிரிபாவ, கல்கமுவ, மஹவ மற்றும் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாடசாலை விழிப் புணர்ட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமுதாய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப் பட்டன.

குருணாகல் மாவட்டத்தில் 131 கி.மீ. மற்றும் புத்தளம் மாவட்டத்தில் 66 கி.மீ. குழாய் நீடிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிராந்தியத்தில் வெள்ளப் பெருக்கு/வரட்சிக்கு முகம்கொடுக்கும் பொருட்டு இரண்டு பவுசர்களும் பிளாஸ்ரிக் தாங்கிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டன. வெள்ளப் பெருக்கு ஆபத்துக்கு உள்ளாகக்கூடியதால் உள்வாங்கு நிலையங்களுக் கான மேலதிக பம்பிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பிராந்தியத்தில் வெள்ளப் பெருக்கு நிலைமையின்போது நீர் வழங்கல் திட்டங்களில் எஞ்சுகின்ற குளோரினை பராமரிப்ப தற்கான தொழிற்பாட்டுத் திட்டமொன்றும் உள்ளது.

மூலதன நிதியளிப்பின் கீழ் மஹவ/ நிக்கவெரட்டிய/ வாரியபொல/ ஒரு பாரிய கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதோடு, திவுலகல நீர் வழங்கல் திட்டம் 88% பூர்த்தி செய்யப்பட்டது மற்றும் இப்பாகமுவ, தம்பதெனிய/கிரிஉல்ல நீர் வழங்கல் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆணமடுவ, மாகந்துர-பன்னல, தங்கொட்டுவ நீர் வழங்கல் திட்டங்களுக்கான முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் தயாரிக்கப்பட்டதோடு, கலகெதர-மாவத்தகம, மெல்சிறிபுர, கல்கமுவ மற்றும் அலவ்வ – பொல்கஹவெலவுக்கான முன்மொழிவுகள் உள்நாட்டு வங்கி நிதியளிப்பின் கீழ் தயாரிக்கப் பட்டது. கலகெதர – மாவத்தகம நீர் வழங்கல் கருத் திட்டம் நவெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

## மத்திய




சர்வதேச மாநாடு – 2014

2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் RSC (மத்திய) இல் வழமையாக நடைபெறுவது போன்று சமய செயற்பாடுகள் நடைபெற்றன. புது வருட விழா வைபவம், “வெசாக் தான சாலை” மற்றும் வெசாக் விளக்குகளை காட்சிப்படுத்தல், மருத்துவ முகாம், இரத்த தான முகாம் ஆகியன பணியாளர்களின் முனைப்புமிக்க பங்குபற்றுதலுடன் நடத்தப்பட்டது. கண்டி பெரும்பாக நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் மத வழிபாட்டு அறையொன்று நிர்மாணிக்கப் பட்டது. நலன்புரிச் சங்கத்தின் மூலம் ரிடிகலவுக்கான வருடாந் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டது.

2014 ஆம் ஆண்டினுள் கண்டியில் நடத்தப்பட்ட மிக முக்கியமான செயற்பாடு யாதெனில், 2014 ஆவணி 22 தொடக்கம் 24 வரை பல்லேகெலே, சர்வதேச பௌத்த கல்லூரியில் நடத்தப்பட்ட “நீர், சமுதாய அபிவிருத்தி மற்றும் சுபீட்சம் - 2014, தொடர்பிலான 3வது சர்வதேச மாநாடு” ஆகும். இதற்கு சமாந்திர மாக கண்டி நகர மத்தியில் கண்காட்சியொன்றும் நடத்தப்பட்டதோடு, இது கலாசார நிகழ்ச்சி யொன்றுடன் நிறைவு பெற்றது.

மேலும், பிரான்ஸ் நிதியளிப்பின் கீழான மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம், உள்நாட்டு வங்கி நிதியளிப்பின் கீழான லக்கல புதிய நகரம், வில்கமுவ - ஹீங்கங்க மற்றும் பஹத்ஹேவாவெட்ட நீர் வழங்கல் கருத்திட்டங்கள் ஆகியன 2014 ஆம் ஆண்டின் பிந்திய பகுதியில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாண்டின் இறுதியில் மழைக் காலத்தினுள் பாரதெக (கம்பொல), தெல்தெனிய மற்றும் ஹன்தானையில் பல மண் சரிவுகள் நடைபெற்றதன் பெறுபேறாக குழாய்களுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டன. எதிர்பாராத வெள்ளப் பெருக்கின் காரண மாக பல்கலைக் கழகத் திட்டத்தில் இருந்த பம்பி சேதமடைந்தது. நாஉல நாளாந்த குளத்தின் திருத்த வேலைகள் காரணமாக பாவனையாளர்களுக்கு துளையிட்டு அமைக்கப்பட்ட குழிகளிலிருந்து நீர் வழங்கப்பட்டது. மேலும், நீர் மூலங்கள் தொடர் பிலான பிரச்சினைகள் காரணமாக உத்தேச கந்தபொல நீர் வழங்கல் கருத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளின் கீழ் குழாய் வெடிப்புகளைக் குறைப்பதற்காக இனங் காணப்பட்ட இடங்களில் உயர் தரத்திலான கருவிகளைக் கொண்டு கசிவுகளை கண்டுபிடித்தல், கசிவுத் தரவுத்தள தயாரிப்புகள், GIS வரைபடங்களை பயன்படுத்தி பிரதான பம்பி வெடிப்புகளை இற்றைப்படுத்தல், காற்று வால்வுகள், அழுத்தக் குறைப்பு வால்வுகள் மற்றும் போல் வால்வுகளை பொருத்துதல் ஆகியன மேற் கொள்ளப்பட்டன. மேலும், வில்கமுவ பிரதேசத்தில் CKDu பிரச்சினையை தீர்ப்பதற்காக குறுகிய கால முன்மொழிவுகளின் கீழ் புதிய பவுசர் இடங்கள் நிர்மாணிக்கப்பட்டன, 302 பிளாஸ்ரிக் நீர் தாங்கிகள் வழங்கப்பட்டன, பம்பிகள் மற்றும் 12 குளோரினிடல் கருவிகள் பொருத்தப்பட்டன, சமுதாய அடிப்படை யிலான அமைப்புகளுக்கு 8 RCL தொகுதிகள் வழங்கப்பட்டன. நடுத்தர கால முன்மொழிவுகளின் கீழ் பக்கேஜ் பொறித்தொகுதி நிர்மாணிப்புகள் மற்றும் அனுப்பல் பிரதான குழாய்களை இடுதல் நடைபெற்று வருகின்றது. சக்தி சேமிப்புக்கான தீர்வு நடவடிக்கையாக அலுவலகம் மற்றும் சுற்றுவட்டக வெளிகளில் புளொரசன்ற் மின் குமிழிகளுக்கு பதிலாக CFL/LED மின் குமிழிகள் பதிலீடு செய்யப்பட்டன.

RSC (மத்தி)யில் புதிய கிராமிய நீர் வழங்கல் திட்ட அலகொன்று திறக்கப்பட்டதோடு, இந்த அலகு உலக நீர் தின போட்டியில் 3வது இடத்தை பெற்றது. தே.நீ.வ.வ.சபையில் CBOகளை பதிவு செய்தல் மற்றும் நீர் மானிகளை திருத்துதல் தொடர்பில் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. நெட்வோடர் அமைப்பினால் நடத்தப் பட்ட “துப்புரவேற்பாடு மற்றும் மழை நீர் சேகரிப்பு” தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கான விழிப் புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவி கிராமிய நீர் வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்டது. CBO களுக்கு 23 குளோரினீடல் கருவிகள், 06 குவிமைய பம்பிகள், 01 அமிழ்த்தக் கூடிய பம்பி, 01 நீர் அகற்றல் பம்பி ஆகியன கையளிக்கப்பட்டன. ஹந்தான உருவல பிரதசத்தில் புதியதொரு துப்புரவேற்பாட்டு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. CBO மற்றும் ஏனைய அமைப்புகளின் வேண்டுகோளின் பேரில் புனரமைப்பு வேலைகள்,

ரன்டம்பே மீன்பிடிக் கிராமமம் மற்றும் தலாது ஓயா – படகொல்ல பிரதேசம் ஆகியவற்றுக்கான சிறிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள், வலுவூட்டப்பட்ட சீமெந்து தாங்கிகள், ஈர்ப்பு விசைக் குழாய்கள் ஆகியவற்றுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. மேலும், இவ்வாண்டினுள் அபிவிருத்திப் பிரிவின் கீழ் 20 கிணறுகள் விசைநீரலம்பல் செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டதோடு 56 கைப்பம்பி குழாய்க் கிணறுகள் புனரமைக்கப்பட்டன.

உலக நீர் தின போட்டியின்போது 2014 ஆம் ஆண்டுக்காக மிகச் சிறந்த தே.நீ.வ.வ.சபை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியாக மீவதுர நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி தெரிவு செய்யப்பட்டது. நீர் பாதுகாப்புத் திட்டம் தொடர்பிலான ஆவணமொன்று தயாரிக்கப்பட்டதோடு, மீவதுரவில் உள்ள நீர் மூலத்தின் கழிவு நீரகற்றலுக்கான நீரேந்து பிரதேசத்தில் ஏற்புடைய அதிகாரிகளுடனான கள விஜயமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

RDA நிதியின் கீழ் ரிகில்லகஸ்கட, ராகல/வலபனே மற்றும் மாத்தளை A 9 வீதியில் வீதி விஸ்தரிப்பின் காரணமாக குழாய் களை இடமாற்றுதல் மற்றும் இணைப்புகளை மாற்றுதல் நடைபெற்றது. மீள்செறிவூட்டல் நிதியின் கீழ் கிராகடுவ நீர் வழங்கல் திட்டத்தில் வலுவூட்டப்பட்ட சீமெந்து தாங்கிகளை நிர்மாணித்தல் மற்றும் பம்பிகளைப் பொருத்துதல் நடைபெற்றது. “Prime Lands” நிதியின் கீழ் ஹரகம நீர் வழங்கல் திட்டத்தில் குழாய்கள் இடப்பட்டன.

மூலதன நிதியளிப்பின் கீழ் குண்டசாலை, மாரஸ்ஸன, மாத்தளை, பலாபத்வல, தலவகெலே நீர் வழங்கல் திட்டங்களில் உள்வாங்கு நிலைய மேம்பாடுகள், சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மேம்பாடுகள், விநியோகக் குழாய் மேம்பாடுகள் மற்றும் இயந்திரவியல் , மின்னியல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. நில்லம்பேயில் குளோரீன் தொட்டியை நிர்மாணித்தல், ஹில் நீர்த் தேக்கத்திற்கு வேலியிடல், குளோரீனிடல் நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் தொலுவயில் குளோரீனிடல் கருவியை வழங்குதல் மற்றும் பொருத்துதல், கம்பொலவத்தையில் அலம் இடும் தொகுதியை முறைமையை வழங்குதல் மற்றும் பொருத்துதல், எரிவாயு மூலம் குளோரீனிடல் கருவியை திருத்துதல் மற்றும் புஸ்ஸல்லாவயில் உள்ள உள்வாங்கு நிலையத்தை துப்புரவு செய்தல், கிராகடுவ வாவியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் குழாய் இடுதல், பொல்கொல்ல பணியாளர்களுக்கான விடுதியை புதுப்பித்தல் ஆகியன புனரமைப்பு நிதியத்தின் கீழ் இவ்வாண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டன.

மழைக் காலம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து, அனர்த்த முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டதோடு, எந்தவொரு கஷ்ட நிலைமைக்கும் முகம்கொடுக்கும் பொருட்டு இருபத்து நான்கு மணித்தியாலமும் அழைத்தவுடன் கடமையாற்றக்கூடிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். முன்கூட்டித் தயாராதல், வெள்ளப் பெருக்கினாலும் மண் சரிவினாலும் ஏற்படக் கூடிய சேதங்களை, குறைந்தவொரு நேரத்தில், நீர் வழங்கலில் குறைந்த பட்ச இடையூறுகளுடன் கூடியதாக திருத்தியமைப்பதற்கு உதவியாக அமைந்தது. மேற்படி காலகட்டத்தினுள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பவுசர் மூலம் நீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், வரட்சி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மெதிரிகிரிய பிரதேச சபையில் 49 கைப்பம்பி குழாய்க் கிணறுகள் புனரமைக்கப்பட்டன.

எரிவாயு மூலம் குளோரீனிடும் கருவியை தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், புதியவர்களுக்கான பழக்கப்படுத்தல் மற்றும் குழுக்களை கட்டியமைத்தல் பற்றிய பயிற்சி, இணையம் மற்றும் மின்னஞ்சல் முகாமைத்துவம், GIS, நீர் பாதுகாப்புத் திட்டம், நேர முகாமைத்துவம், அளவு மதிப்பீடு, பாதுகாப்பு, புதிய இணைப்புகள், பிரச்சினைத் தீர்வு மற்றும் கணணி பராமரிப்பு ஆகியன 2014 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்டன.

### சப்பிரகமுவ

கேகாலை மற்றும் இரத்தினபுரி பிராந்தியங்களிலும் சப்பிரகமுவ பிராந்திய உதவி நிலையத்திலும் பல விசேட நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. உலக நீர் தினம், பல இடங்களில் நடமாடும் சேவைகள், கிரிக்கெட் போட்டித்தொடர், வருடாந்த சுற்றுலா மற்றும் ஒன்று கூடல் ஆகியன விசேட நிகழ்ச்சிகளில் சில ஆகம்.
விநியோக மேம்பாடு, கட்டுக் குழாய்களை பதிலீடு செய்தல், பழுதடைந்த வால்வுகளை மாற்றுதல், புதிய வால்வு அறைகளை நிர்மாணித்தல், குழாய்களை பதிலீடு செய்தல், இணைப்புகளை மாற்றுதல் ஆகிய பல வருவாயற்ற நீர் குறைப்பு செயற்பாடுகள் பிராந்திய உதவி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பழைய பம்பிகளுக்குப் பதிலாக புதிய பம்பிகளை பதிலீடு செய்தல், மின்சாரக் கட்டணத்தை சேமிக்கும் பொருட்டு பம்பி இயக்க நேரங்களைக் கட்டுப்படுத்தல், இரத்தினபுரி மற்றும் கேகாலை பிராந்தியத்தியங்களில் அனைத்து பம்பி நிலையங்களிலும் தடுப்புப்ப பராமரிப்புக்கள் ஆகிய பல

சக்தி சேமிப்பு செயற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டன.

பிராந்திய அலுவலகங்களில் அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கரு மற்றும் "5S" நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலாக பிராந்தியத்தினுள் முற்றும் பிராந்திய உதவி நிலையத்தினுள் உற்பத்தித்திறன் மேம்பாட்டு செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இரத்தினபுரி மற்றும் கேகாலை பிராந்தியங்களின் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளில் தர முகாமைத்துவ முறைமையின் (QMS) நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. இது பிராந்தியத்திலுள்ள நாளொன்றுக்கு 10,000 கன மீற்றருக்கும் மேற்பட்ட கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு ISO 9001 – 2008 சான்றிதழைப் பெறுவதற்காகும்.

பிராந்தியத்தில் நீர் பாதுகாப்புத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலும் 2014 ஆம் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டது. எஹலியகொட நீர் வழங்கல் திட்டம் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கான முன்னோடிக் கருத்திட்டமாகும். மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எஹலியகொடவில் சர்வதேச மாநாடு நடாத்தப்பட்டது.

2014 ஆம் ஆண்டினுள் பிராந்தியத்தின் ஆய்வு கூடங்களுக்கான அங்கீகாரமும் ஆரம்பிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டினுள் கேகாலை பிராந்தியத்தில் 21 கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் இரத்தினபுரி பிராந்தியத்தில் 24 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களை உள்ளடக்கியவாறு ஒருசில கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு தொழில்நுட்ப ரீதியில் உதவியளிக்கப்பட்டது. மேலும், இரத்தினபுரி (12 கி.மீ.), கேகாலை (16 கி.மீ.) உள்ளடங்கலாக மொத்தம் 28 கி.மீ. குழாய் நீடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

பிராந்தியத்தில் CBO திட்டங்களிலிருந்து தரவு சேகரித்தல், CBO திட்டங்களின் நீர் தரப் பரிசோதனைகள் ஆகியன 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொளப்பட்ட ஏனைய ஒருசில செயற்பாடுகளாகும்

## ஊவா

ஹாலிஎல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை ஆரம்பித்து வைத்தல், பதுளை-ஹாலிஎல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், அட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம், முத்துகண்டிய நீர் வழங்கல் கருத்திட்டம், புத்தள – மொனறாகல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டுதல் ஆகியன 2014 ஆம் ஆண்டினுள் நடைபெற்ற ஒருசில விசேட நிகழ்வுகளாகும். 2014 ஆம் ஆண்டின் வரட்சிப் பருவகாலத்தில் சில நீர் வழங்கல் திட்டங்கள் பாதிக்கப்பட்டதோடு, பவுசர்கள் மூலம் நீர் வழங்கல், பிளாஸ்ரிக் தாங்கிகளை விநியோகித்தல், வலய நீர் வழங்கல் ஆகியவாறு நீர் வழங்கலுக்கான துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சில திட்டங்களில் நீர் தரப் பிரச்சினைகள் மேலெழுந்ததோடு, கலங்கிய தன்மையைக் குறைப்பதற்காக உள்வாங்கு நிலையங்களில் தடைகளை அகற்றுதல், காரத்தன்மையைக் குறைத்தல், சிறிய நீர் வழங்கல் திட்டங்களில் குளோரீனிடல் பொறிகளை பொருத்துதல் மற்றும் இரண்டு பொதிகளைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறிகளை அமைத்துப் பொருத்துதல் ஆகிய தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், சக்தி சேமிப்பு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அறவீட்டு முறையை மாற்றியமைத்து மின்சார செலவைக் குறைத்தல், பம்பி நிலையங்களில் தடுப்புப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் உச்சக்கட்ட நேரங்களில் பம்பிகள் இயக்கப்படுவதைத் தவிர்த்தல் ஆகியன இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட சில சக்தி சேமிப்புச் செயற்பாடுகளாகும். கட்டுக் குழாய்களைப் பதிலீடு செய்தல் மற்றும் பழைய குழாய்களை மீள இடுதல் ஆகியன பிராந்திய உதவி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளாகும். ஒக்கம்பிட்டிய மற்றும் ஹாலிஎலவில் பொதி முறையிலான சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் நீர் தர மேம்பாடு உறுதி செய்யப்பட்டது. மேலும், ஏழு தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள், ஐந்து தொழில்நுட்பமற்ற நிகழ்ச்சித்திட்டங்கள், இரண்டு கணணிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆறு சமுதாய அடிப்படை அமைப்புகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆறு பாடசாலை விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக 26 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டினுள் நீர் பாதுகாப்புத் திட்டத்தின் முன்னேற்றமும் திருப்திகரமானதாக காணப்பட்டது.

2014 ஆம் ஆண்டுக்காக மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களுக்காக மொத்தம் ரூபா 200 மில்லியன் பெறுமதியான கிராமிய நீர் வழங்கல் திட்ட கருத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டதோடு,

இக்கருத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மொனறாகலை மாவட்டத்தில் கிரிஇப்பன்வெவ இடதுபுறம், புதுருவகல விஹாரை, ருஹுஹுனுதனவ்வ நீடிப்பு, முத்துகண்டிய, ஒக்கம்பிட்டிய, கங்கொட ஹாவ, கொல்லதெனிய, மாளிகாவில விஹாரை, பல்லெவெல கோவிந்தபுர, குமாரகம, குக்குரம்பொல, சியம்பலாண்டுவ குழிக் கிணறை நிர்மாணித்தல், வெல்லவாய 3ஆம் கட்டம், சமுதாய அடிப்படை யிலான அமைப்புகளுக்கு குறைந்த செலவிலான குளோரீனிடல் பொறிகளை வழங்குதல், சமகிபுர, கொவுல் ஆர வடக்கு மற்றும் பதுளை மாவட்டத்தில் போகொட, மாகுல் எல, சின்னமாளிகாதென்ன, கலஉட, ரஹன்கல, கெட்டவல, பல்கஹதென்ன, லுனுகல, பெலகன்வெவ, நயாபெத்த பெருந் தோட்டம், ரத்கிந்த, எலதழுவ நீடிப்பு, கொலதென்ன, பதலயாய, கந்தான மற்றும் ராஹுபொல ஆகியன அத்தகைய நீர் வழங்கல் திட்டங்களாகும்.

பண்டாரவெல பிராந்தியத்தில் 55 கி.மீ. மற்றும் மொனறாகலை பிராந்தியத்தில் 95 கி.மீ. குழாய் நீடிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. காரணம் கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட (CKDu) பிரதேசங்களுக்கு சமையல் மற்றும் குடிப்பதற்கான நோக்கத்திற்காக மாத்திரம் பாதுகாப்பான குடிநீர் பவுசர் மூலம் வழங்கப்பட்டது. கிராந்துருகோட்டே CKD பிரதேசங்களில் குழாய் நீடிப்பு வேலைகள் நடைபெற்ற வருகின்றன. .

## வடக்கு

கிளிநொச்சி மாவட்டம் தவிர, 2014.12.31 வரை 11,400 இணைப்புகளுக்கு நீர் வழங்கி, 27 நீர் வழங்கல் திட்டங்கள் மாகாணத்தினுள் இயங்கி வருகின்றன. 2014 ஆம் ஆண்டினுள் மாத்திரம் 2,500 இணைப்புகள் வழங்கப்பட்டன.

பிராந்திய உதவி நிலையத்தின் நில நீர் பிரிவு மூலதன வரவு செலவுத்திட்டம், நிறுவனங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து கிடைத்த நிதியைக் கொண்டு 126 நீரியல் பரிசோதனைகளையும், 78 கிணறு துளையிடலையும், 38 HPTW பெருத்துதல்களையும் 101 HPTW திருத்தங்களையும் 27 கிணறு நீர் பாய்ச்சி துப்புரவு செய்தல்களையும் மேற்கொண்டது.

வட மாகாணத்தின் அனைத்து திட்டங்களும் நில நீர் மூலங்களிலிருந்து நீர் வழங்குவதன் காரணமாக, சில நீர் தர பரிமாணங்கள் அங்கீகரிக்கப்பட்ட SLS மட்டத்தை விட (உதாரணமாக, காரத்தன்மை, வன்தன்மை போன்றவை) உயர் நிலையில் உள்ளன. வரட்சிக் காலத்தில் கிணறுகளிலிருந்து பெறப்பட்டுகின்ற நீர் போதியதாயில்லாமையால் அநேகமான நீர் வழங்கல் திட்டங்களில் 24 மணிநேர நீர் வழங்கலை உறுதிசெய்ய முடியாதுள்ளது. அராலி நீர் வழங்கல் திட்டத்துக்கான நீர் பாதுகாப்பு திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. முருங்கன் நீர் வழங்கல் திட்டத்துக்கான நீர் பாதுகாப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பணிகளுக்கு ஏற்புடைய பணியாளர்கள் இனங்காணப்பட்டு ஆரம்பப் பயிற்சி வழங்கப்பட்டது. சக்திப் பொறித் தொகுதியிலிருந்தான எண்ணெய்யின் காரணமாக சுன்னாகத்தில் எண்ணெய் மாசாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலநீரின் நீர் தரத்தை தீர் மானிப்பதற்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டமை உட்பட பிராந்தியம் முழுவதிலும் சில நீர் தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தில் காசாளர் கருமபீடத்தை ஸ்தாபித்தல், ஆய்வுகூட மேம்பாடுகள், நில நீர் அலுவலகம் மற்றும் பிராந்திய உதவி நிலைய அலுவலகத்தின் திருத்த வேலைகள் போன்ற நிறுவன அபிவிருத்தி வேலைகள் மேற்கொள் ளப்பட்டன. வவுனியாவில் தற்போதுள்ள தனியாள் விடுதியின் 1வது மாடியை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டது.

தலைமை அலுவலகத்தின் ஏற்புடைய பிரிவுகளுக்கு பாவனைக்கு உதவாத மற்றும் பாவிக்கப்படாத பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டதன் மூலம், கையிருப்பு மட்டம் குறைக்கப்பட்டது. மேலும், முகாமைத்துவத்தை இலகுபடுத்தும் பொருட்டு நில நீர் மற்றும் தொழிற்பாட்டு, பராமரிப்பு பொருள் கையிருப்புகள் வேறுபடுத்தப்பட்டன. வவுனியா பிராந் திய முகாமையாளர் அலுவலகம் வினைத்திறன்மிக்க அலுவலக முகாமைத்துவம் மற்றும் உற்பத்தி மற்றும் மேம்பாடு தொடர்பில் 3வது இடத்தைப் பெற்றது. அநேகமான அலுவலகங்களில் அலுவலக கோப்பிடுதல் முறை மேம்படுத்தப்பட்டது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள விழாக்கள் தொடர்பில் மடு ஆலயம் மற்றும் திருகேதீஸ்வரம் கோவில் ஆகியவற்றுக்கு விசேட நீர் வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வரட்சிக் காலத் தில் மன்னார், கிளிநொச்சி மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களுக்கு நீர் வழங்கல் ஏற்பாடு செய்யப்பட்டது. வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கற்கை மேற்கொள்ளப்பட்டு CKDu பாதிப்புக்கு உள்ளாகிய பிரதேசங்கள் இனங்காணப் பட்டன. முன்னிலைப்படுத்தல் பட்டியல் தயாரிக்கப்பட்டது. GKWSSP உதவியுடன் நீர்க் குழாய் தொழில்நுட்பவியலாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மற்றும் யாழ்பபாணம் ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் கிராமிய நீர் வழங்கல் அலகுகள் ஸ்தாபிக்கப்பட்டன. மன்னாரில் 5 கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மானிகள் இல்லாதிருந்த இணைப்புகளை ஒழுங்கு முறையாக்கல், பழுதடைந்த மானிகளை பதிலீடு செய்தல், சட்டவிரோத இணைப்புகளுக்கான ஒழுங்கு விதிகள், நீர் கசிவை குறைப்பதற்காக பொருத்தமான கருவிகள் மற்றும் துணைப்பாகங்களை பயன்படுத்தல், வால்வுகள் மற்றும் வால்வு அறை களை பொருத்துதல், சீர்குலைந்துள்ள குழாய்களை பதிலீடு செய்வதற்கான ஆரம்ப வேலைகள் போன்ற வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏறத்தாழ 18.8 கி.மீ. குழாய் நீடிப்புகள் மற்றும் இடைவெளி நிரப்பல்கள் மேற்கொள்ளப்பட்டன. மீள்செறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மன்னாரில் BOI கருத்திட்டத்தின் கீழ் 7 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் இடப்பட்டன.

முளங்காவில், கொக்கிலாய், ஆனைவிழுந்தான், கல்லாறு, ஜயபுரம், வளைப்பாடு, காந்திநகர் ஆகிய புதிய திட்டங்களுக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான ஒருசில கருத்திட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டது. பண்டாரவெளி, அறிவியல்நகர், முல்லைத்தீவு நகர நீர் வழங்கல் திட்டங்கள் ஆகிய திட்டங்களுக்கான சில கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான 400,000 இணைப்புகள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப பல இணைப்புகளை மேம்படுத் துவதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. மேலும், உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டத்தின் கீழ் அராலி, இருபாலை, செட்டிக்குளம், தலைமன்னார் மற்றும் கோம்பாவில் பிரதேசங்களின் இணைப்புகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் வடிவமைக்கப் பட்டுள்ளதோடு, கேள்விப்பத்திரம் கோரப்பட்டு, மதிப் பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு, முன்நடவடிக்கைக ளுக்காக காத்திருக்கின்றது. இது பூர்த்தியடையும் போது 10,000 இணைப்புகள் வழங்கப்படும்.

வட மாகாணத்தில் வர்த்தகப் பிரிவொன்றை தாபிக்கும் பொருட்டு, உள்ளகத்திலேயே நீர் கட்டண பட்டியல்களை அச்சிடுவதற்கான மத்திய அச்சு இயந்திரமொன்றை பொருத்துதல் உள்ளடங்கலாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## கிழக்கு

பிராந்திய உதவி நிலையம் - கிழக்கு அலுவலகத்தில் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு (O&M) செயற்பாடுகள் அம்பாறை, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை என்றவாறு நான்கு பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டது. பிராந்திய வளவுகளில் டெங்கு நுளம்புகள் பரவுதலைத் தடுப்பதற்கான சிரமதானம், நீர் பாதுகாப்பு, CKDu ஆகியவை தொடர்பிலான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் புதிய பவுசர்களை கையளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் ஆகியன பிராந்திய உதவி நிலையங்களில் மேற்கொள்ளப் பட்டன. மர நடுகை, சில இடங்களில் நடமாடும் சேவைகள், சுதந்திர தின விசேட நிகழ்வுகள் ஆகியனவும் பிராந்திய உதவி நிலையத்தில் ஒழுங்குசெய்யப்பட்டது.

RDA மற்றும் தே.நீ.வ.வ.ச. இணைப்புக் கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. வரட்சிக் காலத்தில் திருக்கோவில் நீர் வழங்கல் திட்டத்தில் நீரின் அளவு போதியதாயில்லாமை மற்றும் கந்தளாய் நீர்த் தேக்கத்தில் நீரின் அளவு போதியதாயில்லாமை இனங்காணப்பட்டதோடு, அல்லையில் (மகாவலி) மேலுமொரு நீர் மூலம் இனங்காணப்பட்டதன் மூலம் தீர்வு வழங்கப்பட்டது. 2014 மார்கழி வெள்ளப் பெருக்கின்போது அதிக கிணறுகள் மாசடைந்தமை, வரட்சிப் பருவகாலத்தில் கல்லாறு நீர் வழங்கல் திட்டம் நாவிதன்வெளி நீர் வழங்கல் திட்டத்தில் நீர் தரப் பிரச்சினை ஆகியன 2014 ஆம் ஆண்டினுள் எதிர்நோக்கிய ஒருசில பிரச்சினைகளாகும் என்பதோடு அனைத்து பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்பட்டன.

காற்று நிரப்பப்பட்ட வால்வுகள், வண்ணாத்தி வால்வுகள் மற்றும் கொண்டுவட்டுவானுக்கான சுலுசு வால்வுகள் ஆகியவற்றை கொள்வனவு செய்தல், வால்வு அறைகளை உயர்த்துதல், பதியதலாவ நீர் வழங்கல் திட்டத்தில் உள்வாங்கு நிலைய மேம்பாடு, கொண்டுவட்டுவான் தொடக்கம் நிந்தவூர் BPS வரையிலான பம்பிக் குழாய்களின் பாதுகாப்புக்காக DI குழாய்களை இடுதல், DI குழாய்களை வழங்குதல், அக்கரைப்பற்று பிராந்தியத்தில் நிந்தவூர் மற்றும் இறக்காமத்தில் மொத்த மானிகளைப் பொருத்துதல் மற்றும் வால்வு அறைகளை நிர்மாணித் தல், மட்டக்களப்பு பிராந்தியத்தில் துறைநீலாவனை க்கான குழாய்களுக்கான DI பொருத்துதல்கள் மற்றும் விசேடங்களை வழங்குதல், திருகோணமலை பிராந்தியத்தில் வால்வு அறைகளை

உயர்த்துதல் மற்றும் நிர்மாணித்தல், அமிழ்த்தக் கூடிய நீர் பம்பிகள் மற்றும் மின் உற்பத்தி இயந்திரங்களை கொள்வனவு செய்தல், வால்வு அறைகள் மற்றும் மொத்த மானி அறைகளை உயர்த்துதல் மற்றும் நிர்மாணித்தல், மொத்த மானிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல், மொத்த மானி வால்வு அறைகளை நிர்மாணித்தல், அமிழ்த்தக்கூடிய நீர் பம்பிகள் மற்றும் நீர் அகற்றல் பம்பிகளை கொள்வனவு செய்தல் என்பன திருக்கோயில் பிராந்திலும் சிறிய மற்றும் பாரிய கசிவுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.

அக்கரைப்பற்று பிராந்தியத்தில் ரூபா 21,612.00 செலவில் ஐந்து சக்தி சேமிப்பு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அம்பாறை, மட்டக் களப்பு மற்றும் திருகோணமலை பிராந்தியங்களில் VSD பம்பி முறைமையின் தொழிற்பாட்டுச் செலவைக் குறைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டன. அத்துடன் சக்திக் கணக்காய்வு வேலைகள், மின் குமிழ்களைப் பதிலீடு செய்தல், பம்பிகளைப் பதிலீடு செய்தல், சக்திக் காரணிகளை மேம்படுத்தல், இரட்டைப் பம்பிகளுக்கும் பதிலாக ஒற்றைப் பம்பிகளை பயன்படுத்தல், அத்துடன் தொழிற்பாட்டுச் செலவைக் குறைத்தல் ஆகியன 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஒருசில சக்தி சேமிப்புச் செயற்பாடுகளாகும்.

அனைத்து பிராந்தியங்களிலும் பிராந்திய களஞ்சியப் பொருப்பாளர்களும் கிரயக் கணக்காளர்களும் பொருட் கையிருப்பு உறுதிப்படுத்தலின்போது ஒவ் வொரு பொருட் கையிருப்பையும் கண்காணிக் கின்றனர் என்பதோடு, மிகைக் கையிருப்பை பயன் படுத்துவதற்கும் கையிருப்பை குறைந்த மட்டத்தில் பேணிவருவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றனர்.

WHO நிதி ஒதுக்கீட்டின் கீழ் நீர் தர முகாமைத்து வம், நீர் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடசாலை மற்றும் கிராம மட்டத்தில் CKDu விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் ஆகியன நடத்தப்பட்டன.

அனைத்து பொறித்தொகுதிகளுக்குமான ISO சான்றுப்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் அனைத்து திட்டங்களுக்குமான உற்பத்தித்திறன் ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதோடு 2014 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது.

அம்பாறை பிராந்தியத்தில் சூரியபொக்குன மற்றும் புஸ்ஸலவின்ன கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாடு மற்றும் புனரமைப்பு, சந்துன்புர, லிஹினியாகம மற்றும் மாவனவெல விநியோக புனரமைப்பு மற்றும் திருகோணமலை பிராந்தியத்தில் பக்மீகம நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் CKDu வினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் மற்றும் கிராமங்க ளில் RO பொறித்தொகுதிகளை பொருத்துதல் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுதாய உட் கட்டமைப்பு செயற்பாடுகள் ஆகியனவும் ஆரம்பிக் கப்பட்டன.

மொத்தம் 84 கிலோ மீற்றர் நீளத்திற்கு குழாய் நீடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அம்பாறை, அக்கறைபற்று, மட்டக்களப்பு மற்றும் திருகோண மலை பிராந்தியங்களில் முறையே 6 கி.மீ., 7 கி.மீ., 43 கி.மீ. மற்றும் 28 கி.மீ. குழாய் நீடிப்பு வேலைகள் நடைபெற்றன. உள்நாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களின் கீழ் கந்தளாய் நீர் வழங்கல் திட்டம், தெஹியத்தகண்டிய நீர் வழங்கல் திட்டம் மற்றும் வான்-எல நீர் வழங்கல் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அம்பாறை, அக்கறைபற்று, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் வர்ல்ட் வி'ன் மற்றும் UNICEF மீள்செறிவூட்டல் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குழாய் நீடிப்புகள் மற்றும் புதிய இணைப்புகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டன.

உள்நாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களின் கீழ் வான்-எலவில் விநியோக மற்றும் அனுப்பல் குழாய் நீடிப்பு, கோபுர நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டது. கந்தளாய் தொடக்கம் தம்பலகாமம் வரையிலான பிரதான அனுப்பல் குழாய், கந்தளாய் நீர் வழங்கல் திட்டம், தெஹியத்தகண்டிய நீர் வழங்கல் திட்டம், வான்-எல நீர் வழங்கல் திட்டம் ஆகியன நடைபெற்று வருகின்றன.

அம்பாறை, அக்கறைபற்று, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பிராந்தியங்களில் பம்பிகளை பதிலீடு செய்தல், விநியோக மேம்பாடு, கட்டிட மறுசீரமைப்பு, குழாய் நீடிப்பு மற்றும் CIPC செயற்பாடுகள் போன்ற புனரமைப்பு வேலைகள் ரூபா 130.50 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் தெஹியத்தகண்டிய, மகாஓயா நீர் வழங்கல் திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிளம்பத்து மற்றும் மூதூர் நீர் வழங்கல் திட்டம் ஆகியன வெள்ளப் பெருக்கு காரணமாக சேதமடைந்தன.

# ஆண்டறிக்கை 2014
# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

2010.12.14 ஆம் திகதிய PED 55 ஆம் இலக்க வழிகாட்டல்களுக்கமைய முகாமைத்துவச் சபைக்கு உதவுதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நோக்கமாகும்.
குழவின் குறித்துரைக்கப்பட்ட வகிபாகம் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

- கணக்காய்வுக் குழுவானது உள்ளகக் கணக் காய்வாளர்கள் மற்றும் அவர்களது விளைதிறனின் பக்கச்சார்பின்மையை தொடர்ந்து மீளாய்வு செய்யத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

- கணக்காய்வுக் குழுவானது நிறுவனத்தின் துணை நிறுவனங்களின் ஏற்புடைய பிரச்சினைகள் ஏதெனும் இருப்பின் அவற்றையிட்டும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- கணக்காய்வுக் குழுவின் செயல் நியதிகளை பணிப்பாளர்கள் சபை வழங்குதல் வேண்டும்.

- ஏற்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டத் தேவைப் பாடுகளுக்கு இணங்க நிதியியல் அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்வதற் கான சபையின் மேற்பார்வைப் பணிக்கு கணக் காய்வுக் குழு உதவுதல் வேண்டும்.

- கணக்காய்வுக் குழுவானது, அனைத்து ஏற்புடைய விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், மீளாய்வு மற்றும் கண்காணிப்பின்போது தொடர்ச்சியாக கடைப்பிடிக் கப்படுவதென்பதை உறுதி செய்வதற்கு சபைக்கு உதவுதல் வேண்டுமென்பதோடு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்களில் சபைக்கு சிபாரிசுகளைச் செய்தலும் வேண்டும்.

- கணக்காய்வுக் குழுவானது பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் சபைக்கு உதவுதல் வேண்டும்.

> "1999 நவெம்பர் 19 ஆம் திகதிய பீஎப்/பீ.ஈ/3 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க, தே.நீ.வ.வ.ச.யின் முகாமைத்துவச் சபையின் இணக்கப்பாட்டுடன், 590 ஆம் இலக்க சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 2965(பீ) இலக்க சபைத் தீர்மானத்தின் ஊடாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது."

**2014 ஆம் ஆண்டினுள் குழு பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது,**

| | |
|---|---|
| 01. திரு. ஏ.கே. செனெவிரத்ன | - சபை உறுப்பினர் - குழுவின் தலைவர் |
| 02. திரு. கே.டீ. காமினீ குணரத்ன | - உப தலைவர் |
| 03. திரு. பீ.டபிள்யு.ஆர். பாலசூரிய | - பொது முகாமையாளர் |
| 04. திரு. டி. தொட்டவத்த | - மேலதிக பொ.மு. (நிதி) |
| 05. திரு. ஜீ.கே. இத்தமல்கொட | - மேலதிக பொ.மு. (ம.வ.மு.) |
| 06. திரு. டீ.யு. சுமனசேகர | - மேலதிக பொ.மு. (கூட்டுறவுச்சேவைகள்) (2014 ஜுலை வரை) உறுப்பினர் |
| 07. திரு. டபிள்யு.பி.ஜீ. பர்னாந்து | - மேலதிக பொ.மு. (கூட்டுறவுச்சேவைகள்) (2014 ஆகஸ்ட் முதல்) |
| 08. திரு. ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன | - பிரதி பொ.மு. (உ.க.) |
| 09. திரு. பி.டபிள்யு.டீ. லசந்த | - கணக்காய்வு அத்தியட்சகர் |
| 10. திருமதி எஸ்.டபிள்யு. குணவர்தன | - பிரதம உள்ளக கணக்காய்வாளர் |
| 11.திருமதி டபிள்யு.பி. சந்தமாலி த சில்வா | - சபையின் செயலாளர் - குழுவின் செயலாளர் |

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 06 தடவைகள் கூடியதோடு கலந்துரையாடிய விடயங்களில் பின்வருவன முக்கியமானவைகளாகும்.

I. செயற்படாத பேரேட்டு நிலுவைகளை மீளிணக்கம் செய்தல்.
ii. 2012 மற்றும் 2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று.
iii. துடீஐஊ நிதியளிப்பிலான வருவாயற்ற நீர் குறைப்புக்கான புதிய கருத்திட்டங்களின் மூலதனமாக்கப்படாத தொகை
iv. இணைத்தின் ஊடான களஞ்சிய முகாமைத்துவ முறைமை
v. கருத்திட்ட கணக்குகளிலான தாமதங்கள் மற்றும் கருத்திட்ட நிதியியல் நடைமுறைக் கையேடு
vi. 2010, 2011, 2012, 2013 ஆண்டறிக்கை
vii. 2011, 2013 (2வது பகுதி) உள்ளகக் கணக்காய்வு மீளாய்வு
viii. 2015 ஆம் ஆண்டின் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு வரவு செலவுத்திட்டம்
ix. கூட்டாட்சி
x. MPA வழிகாட்டல்

# நிதி நிலைமை அறிக்கை


124 நிதி நிலைமைக் கூற்று

125 விரிவான வருமானக் கூற்று

126 உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று

127 காசுப்பாய்ச்சல் கூற்று

154 நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்





Rs

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## நிதி நிலைமைக் கூற்று

2014 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்புகள் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா<br>மீண்டும் கூறப்பட்ட மீதி |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 15 | **109,865,635,167** | 107,458,091,203 |
| கற்பனைச் சொத்துக்கள் | 16 | **52,964,022** | 102,025,883 |
| செயற்பாட்டிலுள்ள மூலதன வேலைகள் | 17 | **149,059,338,602** | 121,418,014,631 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 18 | **22,810,677** | 31,008,001 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **259,000,748,468** | 229,009,139,718 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| செயற்பாடற்ற சொத்துக்கள் | | **117,895,068** | 117,895,068 |
| பொருளிருப்புகள் | 19 | **5,623,798,032** | 3,876,757,449 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 20 | **5,544,274,105** | 5,388,788,826 |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | 21 | **9,530,557,311** | 4,286,653,401 |
| முதலீடுகள் | 22 | **244,262,510** | 340,970,189 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் | 23 | **2,756,518,649** | 1,879,876,757 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **23,817,305,676** | 15,890,941,691 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **282,818,054,144** | 244,900,081,409 |
| **உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| **உரிமை மூலதனம்** | | | |
| அரசாங்க திணைக்களத்திடமிருந்து கையேற்ற சொத்துக்கள் | 24 | **185,480,387** | 185,480,387 |
| உத்தியோகத்தர் நலன்புரி நிதியம் | 25 | **15,239,298** | 15,101,490 |
| நிறுத்திவைத்த இலாபங்கள் | | **(10,814,258,221)** | (12,240,036,367) |
| அரசாங்க மானியங்கள் | 26 | **88,161,757,133** | 81,069,995,266 |
| மூலதன மானியங்கள் | 27 | **151,974,122,319** | 129,350,331,843 |
| **உரிமை மூலதனம்** | | **229,522,340,916** | 198,380,872,619 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| பெறவேண்டிய கடன்கள் | 28 | **37,715,434,998** | 32,146,717,058 |
| ஏனைய பிற்போட்ட பொறுப்புகள் | 29 | **2,194,044,137** | 2,152,117,268 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | **39,909,479,134** | 34,298,834,326 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 30 | **6,961,191,773** | 5,246,171,344 |
| செலுத்த வேண்டிய கடன் மூலதனம் | | **3,440,617,294** | 4,470,617,294 |
| செலுத்த வேண்டிய கடன் வட்டி | | **2,912,497,278** | 2,431,658,078 |
| செயற்பாடற்ற பொறுப்புகள் | | **71,927,749** | 71,927,749 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **13,386,234,094** | 12,220,374,464 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | **282,818,054,144** | 244,900,081,409 |

**டி. தோட்டாவத்தை**
**மேலதிக பொது முகாமையாளர் (நிதி)**

**கே.ஏ. அன்சார்**
**தலைவர்**

**பி. டபிள்யூ. ஆர். பாலசூரிய**
**பொது முகாமையாளர்**

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 6 முதல் 28 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள கொழும்பு

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## விரிவான வருமானக் கூற்று

2014 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | பாதீடு 2014 ரூபா | உள்ளபடியானது 2014 ரூபா | உள்ளபடியானது 2013 ரூபா |
|---|---|---|---|---|
| வருமானம் | 7 | 18,733,888,000 | **18,710,049,680** | 17,216,624,417 |
| விற்பனைக் கிரயம் | 8 | (10,993,514,984) | **(11,325,829,471)** | (10,156,774,994) |
| **மொத்த இலாபம்** | | 7,740,373,016 | **7,384,220,209** | 7,059,849,424 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் | 9 | 2,475,745,000 | **1,390,066,559** | 1,195,405,502 |
| நிர்வாகச் செலவினம் | 10 | (6,311,835,016) | **(5,985,331,888)** | (5,832,372,763) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 11 | (490,000,000) | **(334,370,432)** | (559,425,320) |
| **செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | | 3,414,283,000 | **2,454,584,449** | 1,863,456,843 |
| நிதி வருமானம் | 12 | 145,000,000 | **213,239,303** | 225,687,464 |
| நிதிக் கிரயம் | 13 | (1,237,834,000) | **(1,242,530,161)** | (1,039,762,873) |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | | 2,321,449,000 | **1,425,293,591** | 1,049,381,435 |
| வருமான வரி ஒதுக்கீடு | 14 | (60,000,000) | **(53,113,301)** | (47,466,069) |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | | 2,261,449,000 | **1,372,180,290** | 1,001,915,366 |
| **ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம்** | | | | |
| மீள்மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம் | | - | 53,710,538 | - |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | **2,261,449,000** | **1,425,890,828** | **1,001,915,366** |

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 7 முதல் 28 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

**உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று**

2014 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | அரசாங்க திணைக்களத் திடமிருந்தான சொத்துக்கள் | அரசாங்க மானியம் | மூலதன மானியம் | உத்தியோகத்தர் நலன்புரி நிதியம் | திரட்டிய இலாபம் / நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **2013 ஜனவரி 01 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை** | 185,480,387 | 77,931,820,155 | 116,361,732,845 | 14,415,579 | **(13,466,806,100)** | **181,026,642,866** |
| முன்னைய ஆண்டுச் சீராக்கல் - | - | - | - | - | | |
| சொத்துக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல் | | | | - | 256,835,393 | 256,835,393 |
| சொத்துக்களை கண்டறிவதற்கும் அகற்றுவதற்குமான பெறுமானத்தேய்வுச் சீராக்கல் | - | - | - | | (30,084,394) | (30,084,394) |
| 2013 ஆண்டிற்கான தேய்மானம் மீண்டும் முதல் நிலைக்கு கொண்டு வரப்பட்டது | | | | | 945,040 | 945,040 |
| புனர்வாழ்வு மற்றும் கட்டுமான பணிகள் | | | | | (7,412,230) | (7,412,230) |
| மானியம் ஒன்றுபிரட்டல் | | | | | 74,750 | 74,750 |
| 2013 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட மீதி | **185,480,387** | **77,931,820,155** | **116,361,732,845** | **14,415,579** | **(13,246,447,541)** | **181,247,001,425** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | - | - | 1,001,915,366 | 1,001,915,366 |
| வருடத்தினுளான வரவுகள் /மாற்றங்கள் | - | 3,138,175,111 | 12,988,598,998 | - | - | 16,126,774,109 |
| பணிக்குழாம் நலன்புரி நிதிக்கு மாற்றுதல் | - | - | - | 685,911 | (685,911) | - |
| அபத்தளெ கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுத் திருத்தம் | | | | | 12,046,391 | 12,046,391 |
| சரக்கு சரிபார்பு திருத்தம் | - | - | - | - | (51,136,985) | (51,136,985) |
| சொத்துக்களை கண்டறிவதற்கும் அகற்றுவதற்குமான பெறுமானத்தேய்வுச் சீராக்கல் | | | | | 43,683,984 | 43,683,984 |
| மானியம் ஒன்றுபிரட்டல் | | | | | 588,330 | 588,330 |
| 2013 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட மீதி | 185,480,387 | 81,069,995,266 | 129,350,331,843 | 15,101,490 | (12,240,036,367) | 198,380,872,619 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | | | | | 1,425,890,828 | 1,425,890,828 |
| ஆரம்ப மீதி சரிசெய்தல் 9233.'.536.'.1 ஆர் சி இலக்கம்-2678 | | | | | 25,126 | 25,126 |
| வருடத்தினுளான வரவுகள் /மாற்றங்கள் | | 7,091,761,866 | 22,623,790,477 | | | 29,715,552,343 |
| பணிக்குழாம் நலன்புரி நிதிக்கு மாற்றுதல் | | | | 137,808 | (137,808) | - |
| **2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை** | **185,480,387** | **88,161,757,133** | **151,974,122,319** | **15,239,298** | **(10,814,258,221)** | **229,522,340,916** |

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 6 முதல் 31 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

-4-

**காசுப்பாய்ச்சல் கூற்று**

2014 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் /(நட்டம்) | | **1,425,293,591** | 1,049,381,435 |
| ***சீராக்கலிற்கானது*** | | | |
| வட்டி வருமானம் | 12 | **(213,239,303)** | (225,687,464) |
| நிலையான சொத்து கைதவிர்ப்பில் இலாபம் /(நட்டம்) | | **(3,922,353)** | (14,647) |
| பெறுமானத் தேய்வு | 10.2 | **2,730,436,009** | 2,587,035,099 |
| தொட்டுனரமுடியாத சொத்துக்களின் ஒன்றுபிரட்டல் | 10.2 | **293,841** | - |
| பெறுமானத் தேய்விற்கான திரட்டிய இலாபம் | 10.2 | **(699,693,512)** | (590,253,350) |
| ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாடு | 29.1 | **227,136,696** | 241,659,234 |
| ஆரம்ப மீதி சரிசெய்தல் | | **25,126** | - |
| வட்டிச் செலவினம் | 13 | **1,242,530,161** | 1,039,762,873 |
| தொழிறிபடு மூலதன மாற்றங்களிற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | 4,708,860,256 | 4,101,883,179 |
| பொருளிருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | | **(1,747,040,583)** | (607,663,128) |
| கடன்பட்டோர், பெறவேண்டியவை மற்றும் வைப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | | **(5,402,599,585)** | (1,264,090,309) |
| கடன்கொடுத்தோர் மற்றும் ஏற்பாடுகளில் அதிகரிப்பு)/ குறைவு | | **1,756,947,297** | 335,176,667 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு | | (683,832,614) | 2,565,306,409 |
| செலுத்திய வரி | 14 | **(53,113,301)** | (47,466,069) |
| செலுத்திய பணிக்கொடை | | **(227,136,696)** | (241,659,234) |
| **செயற்பாட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(964,082,611)** | **2,276,181,106** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் / பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| நிலையான சொத்துக்கள் மற்றும் நடைபெறும் வேலைகளில் முதலீடு | | **(31,619,414,419)** | (21,594,999,438) |
| ஏனைய நிதிச் சொத்துக்களின் பற்றுதல் | | **8,197,324** | 6,810,864 |
| கைதவிர்ப்பு சொத்துக்களிற்கான விற்பனை இலாபம் | | **7,995,275** | 51,000 |
| பெறப்பட்ட முதலீட்டு வருமானம் | | **216,449,698** | 240,834,475 |
| முதலீடுகளின் (முதலீடு) / பற்றுதல்கள் | | **96,707,679** | (328,628,877) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்/ (பயன்படுத்தலில்) இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(31,290,064,442)** | **(21,675,931,977)** |
| **நிதி நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| முன்னைய ஆண்டின் போதான அரசாங்க மானியம் | | **7,768,323,405** | 5,147,344,801 |
| முன்னைய ஆண்டின் போதான மூலதன மானியம் | | **23,177,800,979** | 13,530,554,067 |
| புதிய கடன்கள் | | **5,569,216,314** | 4,213,780,952 |
| கடன் திருப்பிச் செலுத்தல்கள் | | **(1,030,498,375)** | (200,741,478) |
| செலுத்திய வட்டி | | **(1,871,942,868)** | (1,376,381,658) |
| திறைசேரி நிதிகள் ஊடாக வற் கொடுப்பனவுகள் | | **(482,110,508)** | (1,909,195,386) |
| | | **33,130,788,947** | 19,405,361,298 |
| **காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு** | | **876,641,893** | 5,610,428 |
| **ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்** | | **1,879,876,757** | 1,874,266,329 |
| **ஆண்டு இறுதியிலுள்ள் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்** | | **2,756,518,649** | **1,879,876,757** |

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 6 முதல் 28 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

**2014 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டு**

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

## 1. திரட்டிய தகவல்கள்

### 1.1 பொதுவானவை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 1974 இன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரச்சட்டதின் கீழ் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட நியதிச்சட்டச் சபையொன்றாக உள்ளது. சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இரத்மலானை, காலி வீதியில் அமைந்துள்ளதுடன் வியாபாரத்தின் பிரதான அமைவிடம் அதே இடத்தில் அமைந்துள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது (என்டபிள்யூஎஸ்&டிபீ) நீர் வழங்கல் அமைச்சின் மேற்பார்வையின் கீழான நிறுவனமொன்றாக உள்ளது.

### 1.2 பிரதான நடவடிக்கைகள்

சமுதாயத்திற்கான சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரை தயார்செய்து விற்பனை செய்யவதே சபையின் பிரதான நடவடிக்கைகளாக உள்ளது.

நாடு முழுவதும் சுத்திகரிக்க்பபட்ட குடி தண்ணீரை விருத்தி செய்து இலங்கையை சிறந்த நாடாக கட்டியொழுப்புவதே தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குறிக்கோள்களாக உள்ளது.

## 2. தயாரிப்பு அடிப்படை

### 2.1 நிதிக்கூற்றுக்களின் இணக்கம்

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்டவாறு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

2011 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆணடும் மற்றும் அவ்வாண்டு வரையும் உள்ளடக்கிய சகல காலமும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது அதன் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்) அமைய தயாரித்திருந்தது.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

2012 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்க தயாரிக்கப்பட்டிருந்தது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை எப்படி எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ் ஐ பின்பற்றியது பற்றி தகவல் 7 ஆவது குறிப்பை பார்க்கவும்.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிதிக் கூற்றுக்கள் ரூபா வில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்ப்பிடப்பட்டவற்றைத் தவிர சகல பெறுமதிகளும் அண்ணளவாக ஆயிரத்திற்கு (ரூபா 000) குறிப்பிடப்பட்டது.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

**3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு**

**3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களானது கிரயம், திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டிய பெறுமதிகுறைப்பு நட்டங்கள் என்வற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஏதாவது பிரமாணம் அங்கீகாரம் செய்கின்ற போது ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி மீளளிப்பு கிரயத்திலும் நீண்டகால நிர்மாண செயற்திட்டங்களிற்கான கடன்பெறல் கிரயங்களிலும் என்பவற்றை அத்தகைய கிரயங்கள் உள்ளடக்குகிறது. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முக்கிய பகுதிகள் ஒரேயளவு இடைவெளிகளில் மீள்நிரப்பப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது. தேசிய நீர்வழங்ல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அவற்றினை இதன்படி குறிப்பாக பாவணைக் காலம் மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றுடன் தனித்தனியான சொத்துக்களாக அத்தகைய பகுதிகளாக அடையாளப்படுத்துகிறது. அவ்வாறே, பிரதான பரிசோதனைகளை செயற்படுத்தும் போது அதன் கிரயம் பிரமாண அங்கீகாரங்களை திருப்திசெய்கையில் மாற்றீடாக பொறி மற்றும் உபகரணங்களின் தொகையை மேற்கொள்கையில் அங்கீகரிக்கின்றது. ஏனைய சகல திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்கள் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டது.

நிதியேற்பாடுகளிற்கான பிரமாண அங்கிகாரங்களை செய்கையில் உரிய சொத்துக்களின் கிரயத்தில் அதன் காலத்தின் பின்னர் சொத்தொன்றின் தரகு குறைப்பதற்காக எதிபார்க்கப்பட்ட கிரயத்தின் தற்போதைய பெறுமதியை உள்ளடக்குகிறது.

**3.1.1 பெறுமானத்தேய்வு**

பின்வருமாறு சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலத்திற்கு மேலாக நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகிறது.

| **ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்** | |
|---|---|
| கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு | 1.67% - 2% |
| சுத்திகரிப்பு பொறி மற்றும் உபகரணங்கள் | 5 % |
| சேவைகள் மற்றும் மொத்த தண்ணீர் அளவைமானி | 10% |
| பரிமாற்ற பொறி மற்றும் விநியோகக் குழாய்கள் | 1.67% |
| உபகரணங்கள் | 10% |
| தளபாம் மற்றும் பொருத்திகள் | 10% |
| கணனிகள் உபபாகம் மற்றும் கையடக்க தொலைபேசிகள் | 20%- 33.3% |
| மோட்டார் வாகனங்கள் | 10%- 20% |
| குத்தகையுடமை வாகனங்கள் | 14.3 % |

**3.1.2 முதலீட்டு ஆதனம்**

உடமையாளருக்கு சொந்தமான வதிவிடத்தை இன்னொருவருக்கு மாற்றுகின்ற ஆதனத்தை பயன்படுத்தும் போது முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலீட்டு ஆதனமானது திரண்ட பெறுமானத்தேய்வு கழித்த கிரயத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

**3.1.3 செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி**

மூலதனமாக்கப்படாத மற்றும் ஆண்டினுள் செலவிடப்பட்ட மூலதனச் செலவு ஆகியவை செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி எனக் குறித்துக்காட்டப்படுவதுடன், ஆண்டினுள் மூலுதனமாக்கப்பட்ட மற்றும் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் உடைமைகள் யாவும் சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களாக மாற்றியமைக்கப்படும்.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

**3.1.4 குத்தகை**

ஒழுங்கமைப்புள்ளதா அல்லது அதனைக் கொண்டுள்ளதா எனவும், பரிசோதனை திகதியில் பொருள்களை அடிப்படையாக ஒழுங்கமைப்புகள் கொண்டுள்ளதா எனவும், குறித்த சொத்தொன்றோ அல்லது சொத்துக்களோ பயன்படுத்துவதில் ஒழுங்கமைப்புக்களை நிறைவேற்றலில் தங்கியுள்ளதா அல்லது சொத்துப் பயன்பாட்டு உரிமை ஒழுங்கமைப்புக்களையோ ஒப்படைக்கின்றதா எனவும் நிர்ணயித்தல், அவ்வாறே, குறிப்பிடத்தக்க ஒழுங்கமைப்புக்களில் அவ்வுரிமை வெளிப்படையாக இருக்கவில்லை.

**3.1.5 கற்பனைச் சொத்துக்கள்**

கையேற்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பு கிரயத்தில் தனித்தனியாக அளவிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆரம்ப அங்கீகாரம் கற்பனைச் சொத்துக்கள் திரண்ட கிரக் கழிப்பனவு மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே, ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்திக் கிரயங்கள் தவிர்ந்தவை மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் செலவினங்கள் ஆண்டில் ஏற்பட்டிருந்த செலவினத்தில் வருமானக் கூற்றில் தாக்கமேற்படுத்தியது.

**3.1.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிரயங்கள்**

ஆராய்ச்சிக் கிரயங்கள் ஏற்பட்டதாக செலவழிக்கப்பட்டன. தனிப்பட்ட செயற்திட்டங்கள் மீது அபிவிருத்திச் செலவினங்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செய்முறைப் பயிற்சியளிக்க முடிந்த போது கற்பனைச் சொத்துக்களாக அடையாளம் காணப்பட்டிருந்தன.

- சொத்துக்கள் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கொ கிடைக்கும் என்று கற்பனைச் சொத்துக்களை முழுமையாக்குகின்ற தொழில்நுட்ப சாத்தியவள அறிக்கை.
- முழுமையாக்குவதற்கான அதன் செயல்திட்டமும் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ அதன் இயலுமை.
- சொத்துக்கள் எதிர்காலத்தில் எப்படி பொருளாதார நலன்களை ஏற்படுத்தும்.
- சொத்துக்களை முழுமையாக்குவதற்கு வளங்களின் கிடைப்பனவு
- அபிவிருத்தியின் போது உண்மைத்தன்மையான செலவினத்தை அளவிடுவதற்கான இயலுமை.

சொத்தாக பின்வரும் ஆரம்ப பெறுதி குறைப்பு அபிவிருத்திச் செலவினம், சொத்துக்களை கிரயக் கழிவின் திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி முழுமையாக்கும் போது சொத்துக்களின் தீர்ப்பனவு ஆரம்பிக்கின்றதுடன் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக கிடைத்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நன்மைகளின் காலத்திற்கு மேலாக தீர்க்கப்பட்டிருந்தது. கடன் தீர்ப்பனவு விற்பனைக் கிரயத்தில் பதியப்பட்டுள்ளது. அபிவிருத்திக் காலத்தின் போது சொத்துக்கள் வருடாந்த பெறுமதிக் குறைப்பிற்காக பரீட்சிக்கப்பட்டது.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

**3.1.7 நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியில் சொத்துக்கள் கட்டாயமாக பெறுமதி குறைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படடுள்ளதா எனவும், குறிப்பாக அவ்வாறு இருக்கையில், அல்லது கையேற்கப்பட்ட சொத்துக்களிற்காக வருடாந்த பெறுமதிக் குறைப்பு பரீட்சிப்பின் போது, சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மதிப்பிடுகின்றது. சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை சொத்துடமையாளருடைய அல்லது விற்றுக் காசு உருவாக்குகின்ற பிரிவினுடைய (சிஜீயூ) சந்தைப் பெறுமதி கழித்த பயன்பாட்டுக் கிரயங்கள் மற்றும் அதன் பெறுமதி உயர்வாகவுள்ளமையால் தனிப்பட்ட சொத்தாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இல்லையேல், ஏனைய சொத்துக்களிலிருந்து தனித்துவப்படுபவையா அல்லது சொத்துக்களின் தொகுதி பெருமளவு தனித்துவமாக உள்ளதா என காசுப்பாய்ச்சல் கூற்றில் அச்சொத்துக்கள் உருவாக்கியிருக்கவில்லை. சொத்துக்கள் அல்லது சீஜீயூ இன் முற்கொண்டுவரும் தொகை அதன் அறவிட வேண்டிய தொகையை விஞ்சியிருந்தது. சொத்துக்கள் மெறுமதி குறைத்து மதிப்பிட கருத்திற்கொள்ளப்பட்டதுடன் அதன் அறவிட வேண்டிய தொகை பதிவழிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு பெறுமதி மதிப்பிடுகையில், எதிர்காலத்தில் மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் பணப்பெறுமதி மதிப்பிடுகையில் தற்போதைய சந்தைப் பெறுமதி தாக்கம் மற்றும் சொத்துக்களிற்கான குறிப்பிடத்தக்க ஆபத்துக்களென வரிக்கு முன்னரான கழிப்பனவை பயன்படுத்துவதன் மூலம் அவர்களுடைய தற்போதைய பெறுமதிக்கு கழிவுவழங்கப்படுகின்றன. விற்பனை செய்வதற்கு நியாயபெறுமதி குறைவு கிரயங்களை நிர்ணயிக்கையில், அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கிற்கு எடுக்கப்படுகின்றன. அதேவேளையில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இனங்காண முடியாதுள்ளது. முறையான பெறுமதியிடல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**3.2.1 பொருளிருப்புக்கள்**

பொருளிருப்புக்களின் மதிப்பு கிரயத்தில் பதியப்படுவதுடன் தேறிய உண்மையான பெறுமதி ஏதாயினும், பழுதடைந்தவற்றிற்கான நிலுவை படிகளை செய்த பின்னர் குறைவாக உள்ளவற்றுடன் மெதுவாக அசையும் விடயங்கள் முதல் வந்து முதல் செல்லல் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டிருந்தது. தேறிய உண்மையான பெறுமதி சாதாரண வியாபாரத்தின் போது, முழுமையாக்கலின் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கழிப்பனவு மற்றும் அவசியமான விற்பனைகளைச் செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கிரயங்கள் என்பவற்றின் விற்பனை விலையை மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளிருப்பின் அளவீடு

**3.2.2 பொருளிருப்பின் கிரயங்கள்**

**மூலப் பொருட்கள்**

ஏதாவது இடைநேர் செலவினங்களுடன் சேர்த்து கொள்வனவுக் கிரயம்

**ஏனைய இருப்புக்கள்**

கிரயம் நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் அமைந்துள்ளது.

**3.3 காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்**

காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் கையிலுள்ள காசு, இடைப்போக்கிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் நிலுவையாகவிருக்கின்ற தேறிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளது.

**நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்**

**4 பொறுப்புக்கள், ஏற்பாடுகள் மற்றும் உரிமை மூலதனம்**

**4.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்பு**

**4.1.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்புக்கள் (எஜ்கேஏஎஸ் 19)**

**(அ) பிற்போட்ட நலத் திட்டம்- பணிக்கொடை**

இலங்கை கணக்கீட்டு நியம இல. 19 எல்கேஎஸ் 19) உடன் இணங்கி சகல ஊழியர்களும் சேவையாற்றிய முதலாவது ஆண்டிலிருந்து ஓய்வூதிய பணிக்கொடைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) ஓய்வூதிய நலக் கிரயம்**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டமொன்று செயற்படுகின்றதுவரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கிரயங்கள் செயற்படுத்தப்பட்ட கடன் முறை பிரிவு பயன்படுத்துவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்திற்கான உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விரிவான வருமானத்தில்

அவை ஏற்பட்டிருந்த காலத்தில் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது. அத்தகை உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் நிறுத்திவைத்த இலாபங்களிலும் உடனடியாக அனுமதிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டங்ளிற்கு மீள வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வரையறுக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் நன்மைகளாக வரையறுக்கப்பட்டிருந்த இதுவரையான சராசரி காலத்தினை விட நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. கடந்த சேவைக் கிரயங்கள் பின்வரும் உள்ளடக்கங்களின் அல்லது மாற்றங்களிற்கு அல்லது ஓய்வூதிய திட்டத்திற்கு ஏற்கனவே நன்மைகளை வைத்திருந்தால் உடனடியாக அனுமதிக்கப்பட்டிருந்தன.

வரையறுக்கப்பட்ட நலச் சொத்து அல்லது பொறுப்பு வரையறுக்கப்பட்ட நல கடமைப் பொறுப்புக்களின் (பெறுமதி உயர்ந்த தர ஒன்றிணைந்த பிணைகளின் அடிப்படையில் கழிவு வீதம் பயன்படுத்துகின்றது) தற்போதைய பெறுமதியைக் கொண்டுள்ளது. கடமைப்பொறுப்புக்களில் திட்டச் சொத்துக்களின் கழிவு அனுமதிக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் மற்றும் கடமைப்பொறுப்புக்களிலுள்ள சொத்துக்களின் நியாயப் பெறுமதி தீர்ப்பனவு செய்யவேண்டியுள்ளது. திட்டச் சொத்துக்கள் நீண்ட கால ஊழியர் நலன்புரி நிதியம் அல்லது தரமதிப்பீட்டு காப்புறுதி கொள்கைகள் என்பவற்றின் மூலம் இடம் பெற்றிருந்த சொத்துக்கள் உள்ளன. திட்டச் சொத்துக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கடன்கொடுத்தோருக்கு கிடைத்திருக்கவில்லை அல்லது அவை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு நேரடியாக செலுத்த முடிந்திருக்கும். ஏதாவது அங்கீகரித்த நிர்ணயித்த நலன்புரிச் சொத்துக்கள் ஏதாவது அங்கீகரிக்கப்பட்டிருக்காத கடந்த சேவைக் கிரயங்களிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் திட்டத்திலிருந்தான மீளளிப்பிலிருந்து கிடைத்த ஏதாவது பொருளாதார நன்மைகளின் தற்போதைய தொகை அல்லது திட்டத்திற்கு எதிர்காலத்தில் பங்களிப்பை குறைத்தல் என்பன மூலம் மீளமைக்கப்பட்டிருந்தது.

**(இ) நிர்ணயித்த பங்களிப்புத் திட்டங்கள்- ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி**

ஊழியர்கள் உரிய நியதிச்சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு அமைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பஙகளிப்புகளிற்கு தகுதியுடையவர்கள். சபையானது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்களாக முறையே 12 % மற்றும் 3 % ஐ பங்களிப்புச் செய்கின்றது.

## நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

### 4.2 ஏற்பாடுகள்

பொதுவானது

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது நடந்துமுடிந்த நிகழ்வின் விளைவாக சட்ட அல்லது நிர்ணயிப்புகளை மீறியிருந்த போது (சட்டம் அல்லது கட்டளைச்சட்டம்) ஏற்பாடுகளை அனுமதித்திருந்தது. ஐந்தொகையில் ஏற்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மற்றும் பொருளாதார நலன்களின் வெளியீடு அதன் இலாபத் தன்மை மீறல்களை சரிசெய்வதற்கு வேண்டுகை செய்ய வேண்டிதுடன் உண்மையான மதிப்பீடொன்றினை மீறிய தொயினையும் செய்ய முடியும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சில அல்லது சகல ஏற்பாடுகளையும் எதிபார்க்கப்படுகின்ற போது மீள்நிதியிடப்பட வேண்டியிருந்தது. உதாரணமாக, காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் மீள்நிதியிடல் சொத்துக்களை புறம்பாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது, ஆனால், குறித்த சில மீளளிப்புகள் நிலைக்குத்தாக மாத்திரமுள்ளது. நிதிறேப்பாடுகளுடன் தொடர்புபட்ட செலவினம் ஏதாவது தேறிய மீளளிப்பினை வருமானக்கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.3 அரசாங்க மானியங்கள்

மானியங்கள் பெறப்பட வேண்டியதுடன் சகல நிபந்தனைகளுடன் இணங்கியிருக்க வேண்டுமென பொருத்தமான காப்பீடு உள்ள அரசாங்க மானியங்கள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மானியங்கள் செலவினங்களுடன் தொடர்புபடுகின்ற போது, இழப்பீடு வழங்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கிரயங்களே செலவழிக்கப்பட்டுள்ளதென குறித்த காலத்திற்கு மேலாக முறையான அடிப்படையில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது. மானியங்கள் சொத்துக்களுடன் தொடர்புபடுகின்ற போது தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்திற்கு மேலாக சமமான தொகைகளில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பணமல்லாத மானியங்கள் பெறப்படுகின்ற போது, சொத்துக்கள் மற்றும் மானியங்கள் நியமத்தொகையில் பதியப்படுவதுடன் சமமான வருடாந்த தவணைப் பணங்கள் மூலம் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் நலனின் இழப்பீட்டு மாதிரியில் எதரிபார்க்கப்பட்ட பயன்பாட்டு காலத்திற்கு மேலானவை இலாபம் அல்லது நட்டங்ளிற்கு விடுவிக்கப்பட்டது. கடன்கள் அல்லது சிற்சில உதவிகள் தற்போதைய பொருத்தமான சந்தை வீதத்திற்கு கீழான வட்டி வீதத்துடன் அரசாங்களால் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்டன. இச் சாதகமான வட்டியின் தாக்கம் அரசாங்க மானியமாக தொடர்புபடுத்தப்பட்டது.

### 5. வருமான கூற்று

வருமானக்கூற்று சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, செலவின முறையின் செயற்பாடு பின்பற்றப்பட்டுள்ளது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயலாற்றலின் நிகழ்வுகள் நியாயமாக சமர்ப்பிக்கின்றது.

### 5.1.1 வருமான அங்கீகரிப்பு

“அரசாங்கம் கடன்களிற்கும் துணைநிலைக் கடன்களிற்கும் இணைக்கப்பட்ட மானியங்கள் மற்றும் ஏனைய உதவிகளுடன் சேர்த்து கடன் திட்டங்களை வழங்கியிருந்த மூலதன வழங்குநர்களின் தனியொரு பங்குதாரராக உள்ளது. ஆகவே, அரசாங்கம் வழங்கியிருந்த அதே நிபந்தனைகளின் அடிப்படையில் கடன்கள் வழங்குகின்ற போட்டி அமைப்புக்கள் இருக்கவில்லை. எனவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன் திட்டங்களின் வட்டி வீதங்களின் சந்தை வீதத்தைப் பெறமுடியாதிருந்தது” என இது தொடர்பில் சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(v) நிலையான சொத்துக்களாகப் பெறப்பட்ட ரூபா 39 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியங்கள் மீளாய்வாண்டின் போது திரட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 47.3 மில்லியன் கூட்டு மொத்த தொகையான நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் வருமானக் கணக்குகளின் கீழ் காட்டப்பட்ட வரவு மீதிகள் மற்றும் ரூபா 24.1 மில்லியன் கூட்டு மொத்த தொகையான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் செலவினக் கணக்குகளின் கீழ் காட்டப்பட்ட செலவு மீதிகள் அசாதாரணமாக காணப்பட்டதுடன் அத்தகையவாறு மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிவிளைவுகள் மற்றும் நிதி நிலைமைகள் சிதைவடைந்திருந்தது.

(ஆ) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட புதிய நீர் வழங்கல் இணைப்புகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், தண்ணீர் நுகர்வோர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 14.9 மில்லியன் தொகையான மாதாந்த தவணைப் பணங்கள் புதிய இணைப்பு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாத்திரம் செலவுவைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 363 மில்லியன் கிரயத்தில் ஸ்பானிஸ் சுனாமி வசதிகள் நிதியத்தை பயன்படுத்தி மொரட்டுவை, பாணந்துறை மற்றும் நீர்கொழும்பிற்காக குடி தண்ணீர் சுத்திகரிப்பு வசதிகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணச் செயற்திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கடல் நீர் சுத்திகரிப்பு பொறி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் அத்தகையவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 109,865.63 மில்லியன் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (பிபிஈ) அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. வசதியானது கொள்ளளவில் உள்ள பிரச்சனைகள் காரணமாக 2010 யூலையில் இருந்து செயற்பாட்டில் இருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2010 முதல் 2014 வரையான காலத்திற்காக மின்சாரம், மோட்டார் வாகனங்களின் வாடகைக்கமர்த்தல் மற்றும் உபகரணங்களிற்கான சேவை உடன்படிக்கைகள் என்பவற்றிற்காக ரூபா 14.8 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 331.86 மில்லியன் கிரயத்தில் நீரிறைக்கும் இயந்திரத்தின் உதிரிப் பாகங்களின் இருப்புக்கள் முன்னைய ஆண்டின் போது நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு இதன்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதில், ரூபா 47.26 மில்லியன் பெறுமானத்தேய்வு சாட்டுதல்களின் மீளாய்வாண்டின் போது ரூபா 11 மில்லியன் தொகை மாத்திரம் திருத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும், அந்த சொத்துக்களின் உரிய கிரயம் முன்னைய ஆண்டு சீராக்கல்கள் போல் திருத்தப்பட்டிருக்காததுடன்

அத்தகையவாறு ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் மீதி மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு முறையே ரூபா 331.86 மில்லியன் மற்றும் ரூபா 36.26 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஆறு பிராந்திய அலுவலகங்களால் பயன்படுத்தப்பட்டிருந்த இரண்டு காணிகள், மூன்று ஆய்வுகூடங்கள், ஒரு கட்டமைப்பு, இரண்டு மொத்த மீற்றர்கள், மூன்று தளபாட விடயங்கள், மற்றும் ஐந்து கணணிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பூர்த்தியாக்கப்பபட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 38.24 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) மீள்சுழற்சி வேலைகளின் கீழ் 20 திட்டங்கள் 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டு வாடிக்கையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 20 மில்லியன் தெளிவுபடுத்தப்படாத மீதிகள் அந்த திட்டங்கள் தொடர்பில் மீள் சுழற்சி வாடிக்கையாளர் முற்பணக் கணக்கில் அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களிற்கு முற்கொண்டுவரப்பட்ட இருப்பு மீதிகள் ரூபா 5,300.38 மில்லியனாக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான பௌதீக மெய்மையாய்வு மீதி ரூபா 5,360.13 மில்லியனாக இருந்தது. எனவே, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இருப்பு மீதி ரூபா 59.75 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலைக்கும் மூன்று வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையில் அவதானிக்கப்பட்ட ரூபா 10,969.57 மில்லியன் தேறிய வித்தியாசம் இருந்த போதிலும் இது இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதி 149,059.34 மில்லியன் அவற்றில் உள்ளடங்கிய எதிர்மறையான மீதிகள் காரணமாக ரூபா 650,382 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 129.1 மில்லியன் பெறுமதியான இரண்டு வெளிவாரி செயற்திட்டங்கள் மற்றும் மூன்று பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான செலவினம் மற்றும் ரூபா 159.1 மில்லியன் கிரயத்திலான

மூலதனமாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தெளிவுபடுத்தப்படாமல் நடைபெறும் வேலையில் இருந்தது.

(ஓ) 64 செயற்திட்டங்கள் தொடர்பில் நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 1,588 மில்லியன் கூட்டு மொத்த தொகையான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்களை செய்யும் நோக்கில் புலனாய்வு செய்யப்படாமல் மூன்று முதல் ஏழு ஆண்டுகள் வீச்சிலான காலப்பகுதிக்கு மேலாக மாற்றமடையாது இருந்தது.

(ஔ) ரூபா 3,667.39 மில்லியன் தொகையான 109 நீர் வழங்கல் செயற்திட்டங்களின் பூர்த்தியாக்கப்பட்ட கிரயம் மற்றும் நியமிக்கப்பட்டவை மூலதனமாக்கப்படாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலைகளில் இருந்தது.

(க) ரூபா 669.1 மில்லியன் தொகையான நடைபெறும் வேலைகள் தொடர்புபட்டிருக்காத செலவினம் இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தின் நடைபெறும் வேலையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(கா) 72 நீர் வழங்கல் திட்டங்களின் நிர்மாணங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பிலான ரூபா 14.19 மில்லியன் வரவு மீதிகள் மற்றும் ரூபா 13.47 மில்லியன் செலவு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் முறையற்ற விதத்தில் காட்டப்பட்டிருந்தது.

(கி) ரூபா 14,705.34 மில்லியன் தொகையான நீர் வழங்கல் திட்டங்களிற்காக இலங்கை அரசாங்கத்தால் பெறப்பட்ட 17 வெளிநாட்டு கடன்களிற்கான துணைநிலை கடன் உடன்படிக்கைகள் திறைசேரியுடன் கைசாத்திடப் பட்டிருக்காததுடன் இதன் விளைவால், அத்தகைய கடன் மற்றும் மானிய பகுதிகள் கணக்காய்வில் தனித்தனியாக இனங்காண முடியாதிருந்தது. மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அந்த கடன் மீதிகள், மானியங்கள், மானியங்களின் திரட்டு மற்றும் வட்டிச் செலவினம் மற்றும் அவற்றின் பொறுப்புக்கள் என்பவற்றின் உண்மைத்தன்மை மற்றும் முழுமைகள் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

இது தொடர்பில் சபையின் தலைவர் “தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை துணைநிலைக் கடன்களை ஒழுங்கு செய்வதற்கு திறைசேரிக்கு இதனை அறிவித்திருந்தது, ஆனால், எங்களுடைய வேண்டுகைக்கு சாதகமான பதிலை அளித்திருக்கவில்லை. எனவே, சபையானது

இந்த ஐயவினாவிற்கு பதிலளிக்கும் நிலையில் இருக்கவில்லை" என குறிப்பிட்டிருந்தார்.

(கீ) 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா 955.22 மில்லியன் கூட்டு மொத்த தொகையான கீழ் குறிப்பிட்ட செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட கடன்களில் செலுத்த வேண்டிய வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்திட்டத்தின் பெயர் | செலுத்த வேண்டிய வட்டித் தொகை | உரிய காலப்பகுதி |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | |
| யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டம் | 873.3 | 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டின் முதலாவது அரைப்பகுதி |
| அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பற்ற பகுதிகளிற்காக ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம்- கட்டம் III | 77.24 | 2010 மற்றும் 2012 |
| வருமானமற்ற தண்ணீர் (என்டபிள்யூஎஸ்டிபீ) பொறியியல் கற்கை / பிரதான திட்டத்தின் ஆலோசனை சேவைகள் மீதான செயற்திட்டம் | 4.68 | 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டின் முதலாவது அரைப்பகுதி |

மேலும், வருமானமற்ற தண்ணீர் (என்ஆர்டபிள்யூ) பொறியியல் கற்கை / பிரதான திட்டத்தின் ஆலோசனை சேவைகள் மீதான செயற்திட்டம் தொடர்பில் 2013 ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்காக செலுத்த வேண்டிய வட்டியும் மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(கு) உள்ளபடியான வட்டிக் கொடுப்பனவுகளிற்கும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட் வட்டிக் கொடுப்பனவுகளிற்கும் இடையில் ரூபா 17.36 மில்லியன் ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(கூ) மீள்சுழற்சி வேலை தொடர்பில் ரூபா 23.48 மில்லியன் வரவு மீதி 2014 திசெம்பர் 31 இல் அவதானிக்கப்பட்டது, ஆதலால், வாடிக்கையாளர் முற்பண மீதி நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கெ) முறைமைத் தவறு காரணமாக ரூபா 4.5 மில்லியனால் காகிதாதி இருப்புக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(கே) ரூபா 37.53 மில்லியன் தொகையான மீள்சுழற்சி வேலைகள் தொடர்பில் ஏற்பட்ட நிர்மாணக் கிரயத்தின் அறவிட வேண்டிய மீதிகள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் முற்பண்களிற்கு எதிராக சரிசெய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் முறையற்ற விதத்தில் காட்டப்பட்டிருந்தது.

(கை) திம்பிரிகஸ்கட்டுவ பொலிஸ் நிலைய மீள்சுழற்சி திட்ட வேலைக்காக ரூபா 4 மில்லியன் செலவினம் ஏற்பட்டிருந்த போதிலும் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 2 மில்லியன் மாத்திரம் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.2.3 இனங்காணப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர், ஏனைய கடன்பட்டோர்களின் மற்றும் கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்குகள் பட்டியல் என்பவற்றில் காட்டப்பட்ட தொகைகளுக்கு இடையில் முறையே ரூபா 1,181.38 மில்லியன், ரூபா 106.4 மில்லியன் மற்றும் ரூபா 101.17 மில்லியன் தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) எட்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 826.25 மில்லியன் நடைமுறை வேலை மீதிகள் பிராந்திய ஆதார நிலையத்தால் (ஆர்எஸ்சீ) சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் காட்டப்பட்ட நேரொத்த மீதியுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் ரூபா 30.40 மில்லியன் தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மூலதன நடைபெறும் வேலை மீதிகள் ஆறு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டறங்களிற்காக பிராந்திய ஆதார நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளில் காட்டப்பட்ட

மூலதனமாக்கல் தொகையுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, ரூபா 32.69 மில்லியனான தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) களுத்துறை, கண்டி மற்றும் அநுராதபுரம் பிராந்தியங்களினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீள்சுழற்சி வேலைகளின் பெறுமதிக்கும் உரிய பட்டோலைகளில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 3.97 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும், நிதிக்கூற்றில் காட்டப்பட்ட தொகைக்கும் உரிய முற்பணக் கணக்கு பட்டோலையில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 759,187 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) விற்பனைகளிலிருந்தான வருமானம் தொடர்பான தகவல்கள் சபையின் வர்த்தகப் பிரிவால் பேணப்படுகின்றன. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுத் தொகைக்கும் அளவை மானிகள் விற்பனை, மொத்த வழங்கல் மற்றும் பவுசர் வழங்கல் என்பவற்றின் உரிய பிரிவுகளால் பேணப்பட்ட பதிவேடுகளிலுள்ள தொகைக்கும் இடையில் முறையே ரூபா 57 மில்லியன், ரூபா 276,000 மற்றும் ரூபா 2.4 மில்லியன் ஆன குறிப்பிடத்தக்களவு வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) களுகங்கை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் என்பவற்றில் காட்டப்பட்ட கடன் வட்டிக்கு இடையில் ரூபா 886,102 ஆன இணக்கம் செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னமும் இனங்காண வேண்டியிருந்த நிதி நிலமைக்கூற்றிலுள்ள நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட இனங்காணப்படாது நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 236.23 மில்லியன் மற்றும் ரூபா 190.26 மில்லியனாக உள்ளன.

அதற்கு மேல், செயற்பாடற்றவையாக ஏற்கனவே வகைப்படுத்தப்பட்ட பல மீதிகள் உள்ளதுடன் ரூபா 7,263.59 மில்லியன் கூட்டு மொத்த தொகையான ஏனைய இனங்காணப்படாத மீதிகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்தது.

(ஆ) 1996 முதல் 2004 வரையான காலத்திலிருந்து கணக்குகளில் இருக்கின்ற ரூபா 37.75 மில்லியன் மொத்தமான இனங்காணப்படாத மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் இரண்டு சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்குகளின் வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 11 மில்லியன் மற்றும் ரூபா 43.2 மில்லியன் தொகை மூன்று ஆண்டுகளிற்கு மேலான காலமாக தெளிவுபடுத்தப்படாமல் இருந்தது. உள்ளக காசு மாற்ற கட்டுப்பாட்டுக் கணக்கு ஆண்டின் இறுதியில் தெளிவுபடுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,028,061 மற்றும் ரூபா 232,146 ஆன வரவு மற்றும் செலவு மீதிகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(ஈ) இனங்காணப்பட்டு தீர்க்கப்படாமல் நீண்ட காலமாக இரத்தினபுரி மற்றும் மாத்தறை பிரதேசங்களின் கணக்குகளில் ரூபா 2.17 மில்லியன் மொத்தமான இனங்காணப்படாத மீதிகள் இருந்தது.

### 2.2.5 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 முதல் 2006 வரையான காலப்பகுதி மற்றும் 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 5.33 மில்லியன், ரூபா 6 மில்லியன் மற்றும் ரூபா 3.19 மில்லியன் தொகையான கொடுக்க வேண்டிய பெறுமதி சேரி வரி 2015 திசெம்பர் 31 வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் சபையின் தலைவர் வேண்டுகை கடிதம் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு தெளிவுபடுத்தலிற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது" இதற்கான பதில் இன்னமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை" குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) ரூபா 1,295.09 மில்லியன் கூட்டு மொத்த தொகையான வியாபார கடன்பட்டோர், கடன்பட்டோர் சேகரிப்புகள், கழிவகற்றல் கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கொழும்பு மாநகர சபை கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்படாமல் 3 ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ), மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (பிஆர்டிஏ) மற்றும் நகர சபைகள் என்பவற்றில் சபையால் வைத்திருந்த ரூபா 17.93 மில்லியன் குறுகிய கால வைப்பு மீதிகள் 1999 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாது இருந்தது.

(ஈ) 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் முந்திய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 19.61 மில்லியன் தொகையான முற்பணம் 2015 யூலை இறுதி வரையும் தீர்க்கப்படாதிருந்ததுடன் அவற்றின் அறவீட்டிற்கு எவ்வித நடவடிக்கையும் சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) காணி சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2010 முதல் 2012 வரையான காலத்தின் போது ரூபா 2.17 மில்லியன் தொகையான அத்தகைய காணியின் சுவீகரிப்பிற்காக வழங்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1999 முதல் 2013 வரையான காலத்தின் போது ஒப்பந்தகாரரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 47.54 மில்லியன் முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) 1995 முதல் 2009 வரையான காலத்தின் போது கொள்வனவுகளிற்காக உத்தியோகத்தர்கள் மற்றும் அமைப்புகளிற்கு வழங்கப்பட்ட ரூபா 248,165 தொகையான முற்பணங்கள் 2015 யூலை இறுதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வாரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா மில்லியன் | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | குறுகிய கால பிணை வைப்பு மீதிகள் | 26.67 | விரிவான பட்டியல் |
| (ஆ) | செலுத்தப்படாத வெளியீட்டு பெறுமதி சேர் வரிகள் (மூன்று பிராந்திய அலுவலகங்கள்) | 27.22 | செலுத்தாமைக்கான காரணங்கள் |
| (இ) | பெறுமதி சேர் வரிக் கணக்கிலுள்ள வரவு மீதி (மேல் மத்திய பிராந்திய ஆதார நிலையம்) | 9.36 | தீர்க்காமைக்காமைக்கான காரணங்கள் |
| (ஈ) | மீள்சுழற்சி வேலைகளிற்கான வாடிக்கையாளர் முற்பணங்கள் | 2.73 | விரிவான பட்டியல் |
| (உ) | 57 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் காலாண்டு மற்றும் அரையாண்டு வட்டி- | - | கணிப்பீட்டு முறை |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் நீண்ட கால நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதி - ஏடிபீ | 20.71 | செலுத்தாமைக்கான காரணங்கள் |
| (எ) | 30 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயங்கள் | 29,010 | அமைச்சரவை தீர்மானம் |
| (ஏ) | கொழும்பு வடக்கு நகர நீர் வழங்கல் செயற்திட்டம் (பொதி-01) மற்றும் றுகுணுபுர நீர் வழங்கல் திட்டம் உள்நாட்டு வங்கி கடன்களால் செய்யப்பட்டது. என்பவற்றின் கிரயம் | 6,808.97 | கேள்வி மதிப்பாய்வு அறிக்கைகள் மற்றும் ஒப்பந்தகாரர் தெரிவு தொடர்பான விபரங்கள் |

## 2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பவற்றிற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை<br>8.3.9 ஆம் பிரிவு | (i) சமுதாய மற்றும் தண்ணீர் சேவைகளின் மீது மூன்றாவது சர்வதேச கருத்தரங்கின் செலவுகளை செய்வதற்காக ஐந்து வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்து ரூபா 9.4 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | | எவ்வாறாயினும், இந்த செலவினம் செயற்திட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக உள்ளதுடன் மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக செயற்திட்ட நிதிகளை பயன்படுத்துவதற்கு பொது திறைசேரி செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | 8.3.9 ஆம் பிரிவு | (ii) பதினொரு மோட்டார் வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் அனுமதிப்பத்திர புதுப்பித்தல் மற்றும் காப்புறுதிக் கொள்கைகள் என்பவற்றிற்காக ரூபா 1,108,564 ஏற்பட்டிருந்தது. |
| | 8.3.9 ஆம் பிரிவு | (iii) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ஏழு ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார்கள் |
| (இ) | நிதிப்பிரமாணம் 387 | 8 நடைமுறை கணக்குகள் தொடர்பில் காசுப் புத்தகத்தில் ரூபா 96.47 மில்லியன் மொத்தமான மேலதிக பற்று மீதிகள் அவதானிக்கப்பட்டது. |
| (ஈ) | சபையின் களஞ்சிய முகாமைத்துவ வழிகாட்டி | சபையின் அங்கீகாரம் பெற்ற பின்னர் 3 மாதங்களிற்குள் பழுதடைந்த பொருட்கள் அகற்றப்பட்டோ அல்லது அழிக்கப்பட்டோ இருக்க வேண்டும். ஆனால், ரூபா 14.66 மில்லியன் பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளை விட அதிகமான காலம் இருப்பில் இருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,049.39 மில்லியன் நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,425.29 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 375.9 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அளவைமானி விற்பனை வருமானம் மற்றும் புதிய இணைப்புக்களின் வருமானம் என்பவற்றின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு நிதிவிளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

#### 3.1.1 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | முரண் | |
|---|---|---|---|---|
| | 2014<br>ரூபா மில்லியன் | 2013<br>ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| வருமானம் | 18,710.05 | 17,216.62 | 1,493.43 | 8.67 |
| விற்பனைக்கிரயம் | (11,325.83) | (10,156.77) | (1,169.06) | 11.51 |
| **மொத்த இலாபம்** | **7,384.22** | **7,059.85** | **324.37** | **4.59** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் | 1,390.07 | 1,195.41 | 194.66 | 20.78 |
| நிர்வாகச் செலவினம் | (5,985.33) | (5,832.37) | (153.90) | 2.64 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | (334.37) | (559.43) | 225.06 | 40.23 |
| **செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **2,454.59** | **1,863.46** | **591.13** | **34.55** |
| நிதி வருமானம் | 213.24 | 225.69 | (12.45) | -5.52 |
| நிதிக் கிரயம் | (1,242.53) | (1,039.76) | (202.77) | 19.50 |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **1,425.3** | **1,049.39** | **375.91** | **35.82** |
| வரி | (53.11) | (47.47) | (5.64) | 11.88 |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | **1,372.19** | **1,001.92** | **370.27** | **36.96** |

15

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த இலாபம் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 4.59 சதவீதம் மற்றும் 20.78 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 40.23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இந்த சாதகமான தாக்கம் 2.64 சதவீதத்தால் நிர்வாகச் செலவினம் மற்றும் 19.5 சதவீதத்தால் நிதிக்கிரயம் அதிகரித்தமையை முகாமை செய்வதற்கு போதிய வலுவை வழங்கியிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான ரூபா 709,319 பங்களிப்பு 2014 ஆம் ஆண்டில் 0.69 சதவீதத்தால் குறைவடைந்திருந்த அதேநேரம், 2013 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான தேறிய இலாபம் ரூபா 100,759 ஆனது 2014 ஆம் ஆண்டில் ரூபா 136,019 இற்கு அதிகரித்திருந்ததுடன் 35 சதவீத அதிகரிப்பை வெளபடுத்தப்படுகின்றது.

(இ) 2013 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 44.74 ஆன இலாபம் 2014 ஆம் ஆண்டில் 1.77 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், 2013 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 26.24 ஆன உற்பத்திக் கிரயம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 27.56 இற்கு அதிகரித்திருந்ததுடன் 5 சதவீத அதிகரிப்பை வெளிப்படுத்துகின்றது.

## 3.2. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 செயலாற்றல்

(அ) நிதிச் செயலாற்றல்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுத் திறைசேரியின் ஊடாக சபையால் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன் மீதி மொத்தச் சொத்துக்களின் ரூபா 41,156 மில்லியன் அல்லது 14.55 சதவீதம் ஆகும். கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையிலுள்ள கடன் தவணைப் பணம் ரூபா 6,353 மில்லியனானதுடன் இதன்படி தாமதத்திற்காக செலுத்தப்பட்ட மேலதிக வட்டி ரூபா 245 மில்லியனாகும்.

| ஆண்டு | நிலுவையிலுள்ள கடன் தவணைப் பணம் | | | உரிய திகதியில் வட்டி செலுத்தப்படாமைக்கு செலுத்தப்பட்ட மேலதிக வட்டி |
|---|---|---|---|---|
| | முதல் கொடுப்பனவு | வட்டி | மொத்தம் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2014 | 1,078 | 2,349 | 3,427 | - |
| 2013 | 1,005 | 563 | 1,568 | 60 |
| 2012 | 990 | - | 990 | 119 |
| 2011 | 368 | - | 368 | 66 |
| **மொத்தம்** | **3,441** | **2,912** | **6,353** | **245** |

**(ஆ) மீள்சுழற்சி வேலைகளின் அமுலாக்கல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீள்சுழற்சி வேலைகள் ஒரு ஆண்டினைவிட குறைந்த அதாவது குறுகிய காலத்திற்குள் பூர்த்தியாக்க வேண்டியிருந்த வேலைகளாகும். எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு மேலாக கையேற்கப்பட்ட 130 மீள்சுழற்சி வேலைகள் தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 419.33 மில்லியன் கூட்டு மொத்த தொகையான முற்பணம் எவ்வித மாற்றமும் இல்லாமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், தனிப்பட்ட வேலைகள் சம்பந்தப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் தாமதங்களிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) 2010 முதல் 2014 வரையான காலத்திலிருந்து முற்பணங்களாக ரூபா 39.14 மில்லியன் தொகை பெறப்பட்ட போதிலும் 11 மீள்சுழற்சி வேலைத் திட்டங்களின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டு இறுதிவரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) சுத்தமான நீரின் உற்பத்தி மற்றும் விநியோகம்**

சபையானது 2013 ஆம் ஆண்டின் 547 மில்லியன் கனமீற்றர் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டின் போது 575 மில்லியன் கனமீற்றர்

சுத்தமான தண்ணீரை உற்பத்தி செய்திருந்ததுடன் இது 4.85 சதவீத அதிகரிப்பை காட்டியது. மீளாய்வாண்டு இறுதியில் வழங்கப்பட்ட தண்ணீர் வழங்கல் இணைப்புக்களின் எண்ணிக்கை 124,251 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் அதனை ஒப்பிடும் போது 3.35 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

**(ஈ) வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)**

வருமானமற்ற நீர் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் இனங்காணப்பட்டு தனியாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் அது, சாதாரண கிரயமாக கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளிற்கான வருமானமற்ற நீர் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| தண்ணீர் உற்பத்தி (கன மீற்றர்) | 547.99 | 547.0 | 525.6 | 490.0 | 469.0 |
| தண்ணீர் நுகர்வு (கன மீற்றர்) | 410.92 | 381.6 | 368.5 | 344.5 | 321.5 |
| வருமானமற்ற தண்ணீர் (கன மீற்றர்) | 137.07 | 165.4 | 157.1 | 145.5 | 147.5 |
| தண்ணீர் உற்பத்தியின் சதவீதமாக வருமானமற்ற தண்ணீர் | **28.24** | **30.24** | **29.89** | **24.64** | **31.45** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டில் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட நீரின் அளவில் நீர்க்கசிவு, சட்ட விரோத இணைப்புக்கள், நீர் இலவசமாக வழங்கல் மற்றும் நிர்வாக காரணங்கள் என்பவற்றினால் வருமானமற்ற நீர் 28.24 சதவீதத்தைப் பிரதிதித்துவப்படுத்திய அதேநேரம் 2014 இல் கொழும்பு நகரத்தின் வருமானமற்ற நீர் பகுதி 46.65 சதவீதமாக இருந்தது.

(ii) சபையானது சட்ட விரோத இணைப்புக்களைக் குறைப்பதற்கும், பிரதான நீர் விநியோக குழாய்களில் தற்காலிக தடங்கலை திருத்தும் நடைமுறையை விரைவுபடுத்துவதற்கும் கடந்த காலங்களில் சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் 2011 ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் வருமானமற்ற நீரின் வீதம் 3.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த கொழும்பு நகரத்தின் பிரதான நீர் விநியோக முறைமைகளைப் நவீனப்படுத்துவத்தற்கான தேவை ஏற்பட்டதால் அந்த நோக்கத்திற்கான திட்டங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்துவதற்காக சபையின் கவனம் அவசரமாக கோரப்படுகின்றது. தற்போது இது தொடர்பாக இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்படும் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும், பிரதான நீர்க் குழாய்களின் போதிய மீள்நிர்மாணம் அதிலிருந்து அடையப்பட்டிருக்கவில்லை.

நீர்க் கசிவுகள் காரணமாக மாற்றப்பட வேண்டிய பிரதான நீர் விநியோகக் குழாய்கள் இதுவரை இனங்காணப்பட்டிருக்கவில்லை. பாரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மிக மெதுவான மட்டத்திலேயே நகர்ந்திருந்தன.

(iv) கொழும்பு நகரைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்காக சபையின் கவனம் போதாமலிருந்ததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளும் சாத்தியமற்றவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) ரூபா 3,100.17 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவினத்துடன் 6 செயற்திட்டங்கள் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்கு தொடங்கப்பட்டிருந்த போதிலும் கருத்திற்கொள்ள வேண்டிய குறைவு இனங்காண முடியாதிருந்தது.

**(உ) கழிவுநீர் முறைமை**

நகரங்களில் கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்கான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான தேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சேர்ந்ததாக இடம்பெற்ற நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. அத்தகைய வசதிகளை வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிரிவில் போதிய முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. கழிவு நீரகற்றும் வசதிகளின் வழங்கல், ஒரு தேசியக் கொள்கையாக சனத்தொகையின் 7 சதவீதமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதன் எய்தலை பரிசோதிப்பதற்கான தகவல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

மீதிக்கும் கணனி மயப்படுத்தப்பட்ட பொருளிருப்பு முறைமை மீதிக்கும் இடையில் ரூபா 9.60 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானமற்ற தண்ணீர் உற்பத்தி 164,078 கன மீற்றர்களாக இருந்தது. அந்த வருமானமற்ற தண்ணீரின் மொத்த நேர் செலவினம் அண்ணளவாக ரூபா 1,291.29 மில்லியனானதுடன் இது சபைக்கு நட்டமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(உ) ஒரு மாதத்தின் மதிப்பிடப்பட்ட விலைப்பட்டியல் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவு செவ்வையின் பிரகாரம், 11,004 புதிய இணைப்புக்களில் 8,795 மதிப்பிடப்பட்ட விலைப் பட்டியல்கள் செயற்பாடற்ற தண்ணீர் அளவை மானிகளிற்காக வழங்கப்பட்டது என வெளிப்பட்டது. ஆகவே, தண்ணீர் அளவை மானிகள் நியம தரத்தில் இருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2008 இல் வழங்கப்பட்ட சுவீடிஸ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவராண்மையால் (எஸ்ஐடிஏ) நிதியளிக்கப்பட்ட மொறட்டுவ/ இரத்மலானை மற்றும் ஜா - எல / எக்கல கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்தின் ஒப்பந்தமானது ஒப்பந்தகாரரின் வங்கி வங்குரோத்து காரணமாக 2013 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டமானது மேற்குறித்த ஒப்பந்தகாரர் தொடர்பில் வெளிநாட்டு வங்கியொன்றிடமிருந்து செயலாற்றல் பிணைமுறி மற்றும் பிடித்துவைத்தல் பிணைமுறி ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் உள்நாட்டு வங்கியொன்றிடமிருந்து சான்றுபடுத்தலைப் பெறுவதற்கு 2006 இன் கொள்வனவு கைநூலிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. இதன்விளைவால், செயற்திட்டமானது ஐ.அ.டொலர் 9.06 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி மற்றும் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 7.96 மில்லியன் பெறுமதியான பிடித்துவைத்தல் பிணைமுறி என்பன காசாக்குவதற்கு தவறியிருந்தது. மேற்குறிப்பிட்ட தவறு காரணமாக, செயற்திட்டமானது உள்நாட்டு சட்ட செயற்பாடுகளைப் பெறுவதற்கு முயற்சிக்காதிருந்ததுடன் சர்வதேச சட்டச் செயற்பாடுகளிற்குள் நுழைவதற்கான சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்திலிருந்து சபைக்கான நட்டம் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் அதன் பொறுப்பாண்மையை 2015 யூலை 31 இறுதி வரையும் நிர்ணயித்திருக்கவில்லை.

**(ஊ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளிற்காக அதிகமான செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அதிகமான பாரிய மட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டக் காலங்களை நீடித்தமையின் விளைவாக மேலதிக வேலைகள் மற்றும் விலை அதிகரிப்புக்கள் காரணமாக கிரயங்கள் மிக உயர்வாக ஏற்பட்டிருந்தது.

(ii) சீரான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்காக பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.2.2. முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சபையானது காகாபள்ளிய நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக தண்ணீர் கோபுரம் மற்றும் உத்தியோகபூர்வ வதிவிடம் என்பவற்றினை நிர்மாணிப்பதற்கு 1994 மே மாதத்தில் 0.3895 ஹெக்டயர் காணியொன்றினை கொள்வனவு செய்திருந்தது. செயற்திட்டமானது 9.5 பேர்ச் காணியை பயன்படுத்தி பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதி காணி 2015 திசெம்பர் 31 வரையும் பிரதேச சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மானிப்பாய் கட்டுடை பகுதியில் இரண்டு காணிகள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் பிரதேச அலுவலகம் மற்றும் கட்டுடை குளம் நிர்மாணிக்கும் நோக்கில் 2010 இல் தொடங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், காணி கொள்வனவு 2015 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, 2010 முதல் 2014 வரையான காலத்தின் போது ரூபா 6.17 மில்லியன் முதல் ரூபா 9.52 மில்லியன் வரை மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்திருந்தது.

(இ) ரூபா 3.2 மில்லியன் செலவினம் ஏற்பட்டு தாபிக்கப்பட்ட புதிதாக அறிமுகப்படுத்திய கணனிமயப்படுத்திய பொருளிருப்பு முகாமைத்துவ முறைமை ஊடாக போதுமான தகவல்களை பெறத்தவறியமை காரணமாக பிரதான களஞ்சியத்திலுள்ள (சீ பிரிவு) டிஐ குழாய்கள் தொடர்பில் இருப்பு பேரேட்டு

### 3.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 11.34 மில்லியன் பெறுமதியான நீர் அளவை மாணிகள் மற்றும் ரூபா 39.92 மில்லியன் பெறுமதியான டிஐ குழாய்கள் நீண்ட காலமாக அசையாத மற்றும் மெதுவாக நகருபவையாக பிரதான களஞ்சியத்தில் இருந்தது.

(ஆ) சபைக்கு சுனாமி மானியத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா 24.18 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் எவ்வித நோக்கங்களிற்காகவும் பயன்படுத்தாமல் நீண்ட காலமாக பிரதான களஞ்சியத்தில் இருந்தது.

(இ) ரூபா 368 மில்லியன் பெறுமதியான அசையாத இருப்புக்கள் மற்றும் ரூபா 328 மில்லியன் பெறுமதியான மெதுவாக நகரும் இருப்புக்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களில் இருந்ததுடன் இது சபையின் மொத்த இருப்புக்களின் பெறுமதியில் 12.39 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரூபா 9.9 மில்லியன் பெறுமதியான கைவிடப்பட்ட இருப்புக்கள் மற்றும் ரூபா 4.14 மில்லியன் பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் அவற்றின் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 3.2.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 17.95 மில்லியன் தொகையான இடைப்போக்கிலுள்ள சரக்கின் மீதி புலனாய்வு செய்யப்படாமல் இரண்டு ஆண்டு காலத்திற்கு மேலாக இருந்தது.

(ஆ) சபையானது பொதுத் திறைசேரியின் விசேட அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் சார்பில் சபையால் ஏற்பட்ட மேந்தலைச் செலவினமாக செயற்திட்ட பதவியணியின் மொத்த மாதாந்த சம்பளங்களிலிருந்து 20 சதவீதம் சாட்டுதல் செய்திருந்தது. மீளாய்வாண்டின் போது கழிக்கப்பட்ட அவ்வாறான மொத்த மேந்தலைச் செலவினம் ரூபா 444.44 மில்லியனாக இருந்தது.

(இ) அனுமதிக்கப்பட்ட வீதங்களின் அடிப்படையில் தொழில்சார் தகைமையுடைய உத்தியோகத்தர்களால் கிரய மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளூர் வங்கி கடன்களால் நிதியளிக்கப்பட்ட 5 நீர் வழங்கல் செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட ஆரம்ப கிரயம் ரூபா 15,286 மில்லியனால் அல்லது 122 சதவீதத்திற்கும் 338 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் அதிகரித்திருந்தது.

(ஈ) சபை பணிப்பாளர்களிடமிருந்து முன்னங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக அமைச்சரவையின் அங்கீகாரத்தில் ரூபா 15,746 மில்லியனால் 6 நீர் வழங்கல் செயற்திட்டங்களின் ஆரம்ப கிரயம் அதிகரித்திருந்தது.

(உ) ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 8,400 மில்லியன் கிரயத்திலான 4 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் தொடர்பில் உள்நாட்டு வங்கிகளுடன் கடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியால் நிதியளிக்கப்பட்ட வருமானமற்ற தண்ணீர் செயற்திட்டம் (எஸ்எல்-66) வெற்றியளித்திருக்காததுடன் பின்னர் செயற்திட்டமானது இரத்துசெய்யப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட ரூபா 172 மில்லியன் ஆலோசனைக் கட்டணம் கொழும்பு பெரும்பாக புனரமைப்பு செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எனவே, இது சபைக்கு நட்டத்தை விளைவித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) களுத்துறையில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி மற்றும் நடுரகேன காணி என்பவற்றில் நீரிறைக்கும் இயந்திரம் பொருத்துவதற்கு சபையால் ரூபா 3.88 மில்லியன் தொகையான முற்பணங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 வரை அவற்றில் ஏற்பட்ட மேந்தலைச் செலவினம் ரூபா 833,350 தொகை மாத்திரம் பெறப்பட்ட முற்பணங்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் ஏற்பட்ட நேர் செலவினங்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகளை இணக்கம் செய்தல்

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) நாளேட்டுப் பதிவுகளின் கணக்கீடு மீதான கட்டுப்பாடு

(உ) செயற்திட்ட நிர்வாகமும் செயலாற்றல் மீளாய்வும்

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

AAT - கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்
ACTA - உயர் நிர்மாணிப்புப் பயிற்சிக் கல்லூரி
ADB - ஆசிய அபிவிருத்தி வங்கி
ADSL - Asymmetric Digital Subscriber Line
AFD - பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை
AG - அரசாங்க முகவர்
AGM - உதவிப் பொது முகாமையாளர்
ANZ - அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து
AusAID - சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய முகவராண்மை
BASL -
BOQ - அளவுப் பட்டியல்
BOI - முதலீட்டுச் சபை
BMICH - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
CAPC - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவு வழங்கல் குழு
CBO - சமூக மைய நிறுவனங்கள்
CD - இறுவட்டு
CEA - உள்ளடக்க புளோரசன்ற் விளக்கு
CESMM - முகாமைத்துவ சிவில் பொறியியல் நியமம முறை
CETRAC - நிர்மாணிப்பு உபகரண பயிற்சி நிலையம்
CHOGM - பொதுநலவாய நாட்டுத் தலைவர்கள் கூட்டம்
CI - வார்ப்பு இரும்பு
CIoB - இலங்கை கட்டமைப்பாளர் நிறுவனம்
CKDu - நோய்க் காரணி கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய்
CMC - கொழும்பு மாநகர சபை
CMWSS - 67
CP - கூட்டிணைந்த திட்டம்
CPS - சுன்னாகம் வலுசக்தி நிலையம்
cu.m. - கன மீற்றர்
DANIDA - டென்மார்க் சர்வதேச அபிவிருத்தி முகவர்
DE - மாவட்ட பொறியியலாளர்
Dev. - அபிவிருத்தி
Dewats - பன்முகப்படுத்தப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை
DGM - பிரதி பொது முகாமையாளர்
DI - முலாம் பூசப்பட்ட இரும்பு
DMA -
DMAS - மருத்துவ உதவிச் சேவைத் திணைக்களம்
DS - பிரதேச செயலாளர் அலுவலகம்
DSD - பிரதேச செயலாளர் பிரிவு
DZUWSP - உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம்
EA - பொறியியல் உதவியாளர்
EFIC - ஏற்றுமதி நிதி மற்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
EIA - சக்தித் தகவல் நிர்வாகம்
ERD - வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
FDA - பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை
FFP - வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்கள்
FIDIC - மதியுரைப் பொறியியலாளர்கள் சர்வதேச சம்மேளனம்
GCWWMIIP - கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
புமுறுளுஞீ கண்டி பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம்
GIS - புவியியல் தகவல் முறைமை
GM - பொது முகாமையாளர்
GN - கிராம உத்தியோகத்தர்
GND - கிராம உத்தியோகத்தர் பிரிவு
GOSL - இலங்கை அரசாங்கம்
GPOBA - வெளியீட்டு அடிப்படையிலான உதவி தொடர்பான உலக பங்காளர்
GPS - உலகளாவிய இடம் அறியும் முறைமை
Gr. - தரம்
GT - பட்டப் பயிற்சிபெறுனர்
GW - நில நீர்
HDPE - உயர் கன பொலி எதிலீன்
HNDE - உயர் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா
HPTW - கைப்பம்பி குழாய்க் கிணறு
HRM - மனித வள முகாமைத்துவம்
IESL - இலங்கை பொறியியலாளர் நிறுவனம்
HSBC - ஹொங்கொங் அன்ட் சாங்ஹய் பேங்க்
IA - உள்ளகக் கணக்காய்வு
ICTA - தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை
IDH - உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆள்
IDP - உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர்
IEE - மின் பொறியியலாளர் நிறுவனம்
IFRC - சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனம்
IHE - நீர்க் கல்வி நிறுவனம்
IIESL - இலங்கை கூட்டிணைந்த பொறியியலாளர் நிறுவனம்
IT - தகவல் தொழில்நுட்பம்
IMS - பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை

IP - இணையத்தள ஒழுங்குமரபு
ITBC -இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு
ITEC - இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார
IWSS - மேம்படுத்தப்பட்ட நீர் பாதுகாப்பு மற்றும் துப்புரவேற்பாடு
IWSP -
JBIC - சர்வதேச கூட்டுறவுக்கான யப்பான் வங்கி
JFRP - வறுமைத் தணிப்புக்கான யப்பான் நிதியம்
JICA - யப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர்
JMC - ஜாய்பூர் மாநகர கூட்டிணைப்பு
KCC - கண்டி நகர மத்தி
KfW - மீளமைப்புக்கான கடன்
KMC - கண்டி மாநகர சபை
KMnO4 - பொட்டேசியம் பர்மங்கனீசு
KOICA - கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை
KRB - களனி வலது கரை
km - கிலோ மீற்றர்
LA - உள்;ராட்சி சபை
LCD - Liquid Crystal Display
LED - Light Emitting Diode
LKR - இலங்கை ரூபாய்
LS - நேர்குத்தான மதிப்பாய்வு
m - மீற்றர்
M - மில்லியன்
M&E - இயந்திரவியல் மற்றும் மின்னியல்
MC - மாநகர சபை
MD&T - மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி
mg/l - மில்லி கிறாம்/லீற்றர்
MGD - ஒரு நாளைக்கு மில்லியன் கலன்
MIS - முகாமைத்துவ தகவல் முறைமை
mm - மில்லி மீற்றர்
MPDT - Marker Production Doubling Time
MOU - புரிந்துணர்வு ஒப்பந்தம்
MS - MicroSoft
MWSD - நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு
NaOH - சோடியம் ஹைட்ரொக்சைட்
NC - வட மத்திய
NAITA - தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
NaOCL - சோடியம் ஹைபொகுளோரைட்
NAS - தேசிய விஞ்ஞான கல்லூரி
NCWT - தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பு
NDT - தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NEP - WASH – New England Power Wash
NGO - அரச சார்பற்ற அமைப்பு
NHDA - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
NIBM - தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்
NSS -
NLDS - தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை
NL&DB - தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை
NPD - தேசிய திட்டமிடல் திணைக்களம்
Nr - எண்ணிக்கை
NRW - வருவாயற்ற நீர்
NWSD - தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை
NWP - வட மேற்கு மாகாணம்
OCH - வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை
ODA - உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி
O&M - தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு
OIC - நிலையப் பொறுப்பதிகாரி
P&A -ஆளணியும் நிர்வாகமும
P&D -திட்டமிடலும் வடிவமைப்பும் -
PAC - கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு
PAY - வேதனக் கொடுப்பனவு முறைமை
PD - கருத்திட்ட பணிப்பாளர்
PDMRC - திட்டமிடல், வடிவமைப்பு கைநூல் மீளாய்வுக் குழு
PE - பொலி எதிலீன்
PEIC - கருத்திட்ட பொறியியல் மற்றும் நிறுவன மதியுரை
PLC - Programing Logic Control
PPTA - கருத்திட்ட ஆதன தொழில்நுட்ப உதவியாளர்
PRDA - மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
PS - பிரதேச சபை
PSC - கருத்திட்ட செயற்படுத்துகைக் குழு
PVC - Polivinyl Chloride
PWD - அரச வேலைத் திணைக்களம்
PWs - உற்பத்தித்திறன் கிணறுகள்

RCL - Resident Chlorine Lend
R&D - ஆராய்சியும் அபிவிருத்தியும்
RDA - வீதி அபிவிருத்தி அதிகார சபை
RFP - முன்மொழிவுக்கான வேண்டுகோள்
RSC - பிரதேச உதவி நிலையம்
RSC (WN) -பிரதேச உதவி நிலையம் - மேல் வடக்கு
RSC (NC) - பிரதேச உதவி நிலையம் - வட மத்திய
RSC (N) - பிரதேச உதவி நிலையம் - வடக்கு
RWS - கிராமிய நீர் வழங்கல்
SCADA - மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு பெறுதல்
S/E - தெற்கு/கிழக்கு வலயம்
SACOSAN - துப்புரவேற்பாடு பற்றிய தென் ஆசிய மாநாடு
WSP - வழங்கல் கருத்திட்டம்/ நீர் பாதுகாப்புத் திட்டம்
WSS - நீர் வழங்கல் திட்டம்
WTP - நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி
WWDS - கழிவுநீர் அகற்றல் முறைமை
WWTP - கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி
SEC - அரச பொறியியல் கூட்டுத்தாபனம்
SEK - சுவீடன் குரோனா
SIDA - சுவிடன் சர்வதேச அபிவிருத்தி முகவர்
SLS - இலங்கை தரக் கட்டளை
SLSI - இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனம்
S&M - சிறிய மற்றும் நடுத்தர
SMS - குறுகிய செய்திச் சேவை
SWTP - சமூக வேலை பரிசோதனை தயார்படுத்தல்
T&C - கேள்விப்பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தம்
TA - தொழில்நுட்ப உதவி
TCE - மொத்த மதிப்பீட்டுச் செலவினம்
TEC - கொழும்பு கிழக்கு நகரங்கள்
TNC - கொழும்பு வடக்கு நகரங்கள்
TOT - பயிற்றுவிப்பவர்களை பயிற்றுவித்தல்
TP - சுத்திகரிப்புப் பொறித்தொகுதி
TSC - கொழும்பு தெற்கு நகரங்கள்
TWIS - விஞ்ஞானத்தில் இவ்வாரம்
UC - நகர சபை
UDA - நகர அபிவிருத்தி அதிகாரசபை
UFW - கணிப்பிற்குட்படாத நீர்
UNICEF - ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் கல்வி நிதியம்
UNOPS - கருத்திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள்
UoC - கொழும்பு பல்கலைக்கழகம்
UoP - பேராதனை பல்கலைக்கழகம்
uPVC - ரீஏஊ குழாய்கள்
USA - ஐக்கிய அமெரிக்கா
USAID - சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க உதவிகள்
USD - ஐக்கிய அமெரிக்க டொலர்
USS - குறைந்தளவு சேவை வழங்கப்படுகின்ற குடியிருப்பு நீர் வழங்கல்
VPN - Virtual Private Network
VSD - Variable Speed Drive
WAM - நீர் ஆதன முகாமைத்துவம்
WASH - நீர், துப்புரவேற்பாடு மற்றும் சுகாதாரம்
WATSAN - நீர் மற்றும் துப்புரவேற்பாடு
WHO - உலக சுகாதார நிறுவனம்
W/N - மேல்/வடக்கு வலயம்
WQS - நீர் தரக் கண்காணிப்பு
WS - நீர் வழங்கல்
WS&S - நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு

# அடிப்படைத் தகவல்கள்

## நிறுவனத்தின் பெயர்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
(தே.நீ.வ.வ.ச.)

## சட்ட வடிவம்

அரசாங்கத்திற்குச் சொந்தமானதொரு நியதிச்சட்ட சபையாகும்.

## கூட்டிணைக்கப்பட்ட திகதி

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தே.நீ.வ.வ.ச. சட்டமான பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1974.03.01 ஆம் திகதி

1992 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தே.நீ.வ.வ.ச. (திருத்தச்) சட்டத்தின் மூலம் 1992.03.11 ஆம் திகதி சட்டம் திருத்தப்பட்டது.

## வரிப் பதிவு இலக்கம்

4090 31820

## VAT பதிவு இலக்கம்

4090 31820 7000

## தொடர்புகளுக்கு , தலைமை அலுவலகம்

காலி வீதி, இரத்மலானை, இலங்கை
தொலைபேசி : +94 11 2638999 (உடனடி)
+94 11 2637194, +94 11 2611589
தொலை நகல் : +94 11 2636449
மின் அஞ்சல் : gm@waterboard.lk
இணையத் தளம்: www.waterboard.lk

## வழிகாட்டல் அமைச்சு

நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு

## அழைப்பு நிலையம்

1939 (24 மணி நேரமும்)

## பாவனையாளர் சேவைப் பிரிவு, தலைமை அலுவலகம்

+94 11 2623623 (கடமை நேரத்தில்)

## வங்கியாளர்

இலங்கை வங்கி

## கணக்காய்வு

பிரதி பொதுமுகாமையாளர் (உள்ளக கணக்காய்வு)
அரச கணக்காய்வுப் பிரிவு

## பணிப்பாளர் சபை

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி – தலைவர்(2014.04.11 வரை)
பொறியியலாளர் ஆர்.டபிள்யு.ஆர். பிரேமசிறி – தலைவர் (2014.04.17 தொடக்கம்)
திரு. கே.டீ. காமினீ குணரத்ன - உப தலைவர்
திரு. என்.பீ. திப்பட்டுமுனுவ - செயற்பாட்டு பணிப்பாளர்
மருத்துவர் பீ..ஜீ. மஹீபால – சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - சுகாதார அமைச்சு
திரு. ஏ.கே. செனெவிரத்ன – மேலதிக பணிப்பாளர் நாயகம், வரவு செலவுத்திட்ட திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு
பொறியியலாளர் எஸ். பனாவென்னகே - பணிப்பாளர் நாயகம்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், ஆர்தர் சீ. கிளார்க் நிறுவனம்
திரு. டபிள்யு.ஜீ. பிரேமலால் - சிரேட்ட உதவிச் செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு (2014.06.05 வரை)
திரு. எஸ்.ஏ.எம்.எல். குணதிலக்க - சிரேஷ்ட உதவிச் செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு (2014.07.07 தொடக்கம்)

## பணிப்பாளர் சபைச் செயலாளர்

திரு. கே.கே. சந்திரசிறி

## சிரேஷ்ட முகாமைத்துவம்

பொறியியலாளர் டீ.டபிள்யு.ஆர். பாலசூரிய – பொது முகாமையாளர்
பொறியியலாளர் ஜீ.ஏ. குமாரரத்ன - (சாக்கடை)
பொறியியலாளர் டீ.எஸ.டீ. ஜயசிறிவர்தன – (தெற்கு/ கிழக்கு)
பொறியியலாளர் கே.ஆர். தேவசுரேந்திர – (நீர் வழங்கல் கருத்திட்டம்)
பொறியியலாளர் டீ. தொடவத்த (நிதி)
பொறியியலாளர் என்.எம்.எஸ். காலிங்க (மேல்)
திரு. ஜீ.கே. இத்தமல்கொட (மனித வள முகாமைத்துவம்)
பொறியியலாளர் டீ.யூ. சுமனசேகர (வடக்கு / மத்தி)
பொறியியலாளர் ஜோர்ஜ் (கொள்கை, திட்டமிடல்)
பொறியியலாளர் டபிள்யு.பீ.ஜீ. பர்னாந்து (கூட்டிணைந்த சேவை)

## பிரிவுகளின் பிரதி பொதுமுகாமையாளர்கள்

பொறியியலாளர் (திருமதி) கே.ரீ.பீ. பர்னாந்து - (கருத்திட்ட இணைப்பாக்கம்)
பொறியியலாளர் எஸ்.ஜீ. ஜயவர்தன (சாக்கடை)
பொறியியலாளர் ஆர்.எச். ருவினிஸ் (திட்டமிடல், வடிவமைப்பு)
பொறியியலாளர் எஸ்.ஜீ.ஏஜ. ராஜ்குமார் (அபிவிருத்தி)
பொறியியலாளர் சீ,ஆர். பெரேரா (உற்பத்தி – மேல்)
பொறியியலாளர் எஸ்.சுமனவீர (கூட்டிணைந்த திட்டமிடல்)
பொறியியலாளர் டபிள்யு.ஏ.என். விக்கிரமதுங்க (இயந்திரவியல், மின்னியல்)
பொறியியலாளர் ஜீ. சந்திரசேன (தகவல் தொழில்நுட்பம்)
செல்வி எம்.எம்.எஸ். பீரிஸ் (நிதி)
செல்வி ஏ.பி. சிறிமா டி சில்வா (கிரயம்)
திரு. ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன (உள்ளக கணக்காய்வு)
செல்வி டபிள்யு.ஏ.சீ. சிறியாணி (மனித வளம்)
திருமதி என்.வை.எஸ். அபேகுணவர்தன (கைத்தொழில் உறவு)
திரு. ஆர்.எம்.ஏ. பண்டார (வழங்கல்)

## மாகாணங்களின்/பிராந்திய உதவி நிலையங்களின் பிரதி பொதுமுகாமையாளர்கள்

பொறியியலாளர் டபிள்யு.பீ.ஜீ. பர்னாந்து - (மேல் - மத்திய)
பொறியியலாளர் எம்.கே. ஹப்புஆரச்சி - (மேல் - தெற்கு)
பொறியியலாளர் கே.ஜே.வீ.ஏ. பெரேரா (கிழக்கு)
பொறியியலாளர் (திருமதி) எம்.கே. பண்டார - (மேல் - வடக்கு)
பொறியியலாளர் எல்.எல்.ஏ. பீரிஸ் - (மத்திய)
பொறியியலாளர் எம்.ஐ.ஏ. லத்தீப் - (ஊவா)
பொறியியலாளர் என்.ஈ.எம்.எஸ்.பீ. ஏக்கநாயக்க (வட மத்திய)
பொறியியலாளர் டீ.யு. சுமனசேகர (வட மேல்)
பொறியியலாளர் டீ.எப்.எஸ். த எப். குணவர்தன (வடக்கு)
பொறியியலாளர் ஆர்.ஏ.பீ.எஸ். மெண்டிஸ் (சப்பிரகமுவ)

## கருத்திட்ட பணிப்பாளர்களாக செயலாற்றுகின்ற பிரதி பொதுமுகாமையாளர்கள்

பொறியியலாளர் (திருமதி) சீ.ஜே.டீ. பெரேரா - (களு கங்கை நீர் வழங்கல் கருத்திட்டம் - படிநிலை 1 கட்டம் 11)
பொறியியலாளர் ஜே.ஆர்.பி. நெதுரன் - (ஆ.அ.வ. நிதியுதவி ஐந்தாவது கருத்திட்டம்)
பொறியியலாளர் ஆர். குலநாத (இரத்மலான - மொரட்டுவ மற்றும் ஜா-எல – ஏக்கல பிரதேசங்களுக்கான கழிவுநீர் அகற்றல்)
பொறியியலாளர் பீ.எஸ். விஜேமான்ன (கொழும்பு பெரும்பாக புனரமைப்புக் கருத்திட்டம்)